INSURANCE BOARD OF SRI LANKA

# ஒழுங்கமைப்பில் பூரணத்துவம்...

ஆண்டறிக்கை 2013

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் | 2 |
| தலைவியின் செய்தி | 4 |
| சபையின் அங்கத்தினர்கள் | 6 |
| சபை அங்கத்தினர்களின் விபரத்திரட்டு | 7 |
| சிரேஷ்ட முகாமைத்துவக் குழு | 9 |
| ஊழியர் குழாம் | 10 |
| பொதுவான மீளாய்வு | 14 |
| புள்ளிவிபர மிளாய்வு | 19 |
| தொழிற்பாட்டு மீளாய்வு | 50 |
| நிதி நிலமையின் கூற்று | 70 |
| முழுமையான வருமானக் கூற்று | 71 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 72 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று | 73 |
| கணக்கீட்டு கொள்கைகள் | 74 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 76 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 83 |
| கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய விடயங்களுக்கு சபையின் பதில் அளிப்பு | 87 |
| பின்னிணைப்பு I | 92 |
| பின்னிணைப்பு II | 93 |
| அருஞ்சொல் விளக்கம் | 95 |

# ஒழுங்கமைப்பில்
# பூரணத்துவம்...

காப்புறுதி தொழிலின் அபிவிருத்தியுடன் உடனிணைந்ததாக ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளில், மாற்றங்கள் கொண்டு வரப்பட்ட அதே சந்தர்ப்பத்தில், ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர் எனும் அடையாளக் குறியீட்டு அந்தஸ்தை அடையும் எமது தூர நோக்கிலும் நாங்கள் தொடர்ந்தும் கவனம் செலுத்தினோம்.

விதிமுறைகள் அடிப்படையிலான மூலதன ஆட்சியிலிருந்து, இடர், அடிப்படையிலான மூலதன (RBC) ஆட்சிக்கு மாற்றம் அடைந்ததன் காரணமாக, 2013 ஆம் ஆண்டில், காப்புறுதி ஒழுங்கமைப்பில் ஒரு புதிய திருப்பத்திற்கான சமிக்ஞை செய்யப்பட்டது.

சாதகமாக இருந்த பேரண்ட பொருளாதார சூழலும், வடிவமைக்கப்பட்ட ஒழுங்கமைப்பு அணுகுமுறையும், காப்புறுதி தொழில் அதன் முக்கியமான வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்வதற்கு துணையாக இருந்தன.

இதற்கமைய, அடுத்துவரும் ஆண்டுகளுக்கான எமது வழிகாட்டும் வரைபடம் மிகத் தெளிவாக இருப்பதுடன், எமது இலக்குகளை நோக்கி ஊக்கத்துடன் முன்னேறி செல்ல முடியும் எனும் நம்பிக்கையையும் எமக்கு அளித்து உள்ளது.

## தொலை நோக்கு

ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் அடையாளக் குறியீட்டாளர்களாக இருப்பது.

## பணி

காப்புறுதி தொழிலின் அபிவிருத்தியை ஒழுங்கமைப்பு செய்வதிலும் மேற்பார்வை செய்வதிலும், எளிமையாக்குவதிலும் ஈடுபடும் அதே நேரம், காப்புறுதி வைப்பாளர்களின் உரிமைகளை பாதுகாப்பதும்.

# ஆண்டின் முக்கிய நிகழ்வுகள்

- 21 காப்புறுதி கம்பனிகள்
- 59 காப்புறுதி தரகர்கள்
- 38,896 காப்புறுதி முகவர்கள்
- காப்புறுதி குறித்த விழிப்புணர்வு 690 கிராம சேவகர் பிரிவுகளை எட்டியது
- இடர் அடிப்படையிலான மூலதன (RBC) வீதி பரிசோதனை பூர்த்தி அடைந்ததுடன், வரைச்சட்டம் இறுதியானது
- வேறுபடுத்தும் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டன

## காப்புறுதி தொழிலின் செயலாற்றல்

| | 2013 | 2012 | மாற்றம் % |
|---|---|---|---|
| மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ. பில்லியன்) | 94.48 | 87.17 | 8.39 |
| மொத்த சொத்துகள் (ரூ. பில்லியன்) | 356.56 | 315.82 | 12.90 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (மொ.உ.உ.) % சத வீதத்தில் ஊடுருவல் | 1.09 | 1.15 | (5.22) |
| காப்புறுதியின் அடர்த்தி (ரூபா) | 4,612.76 | 4,288.23 | 7.57 |

## சபையின் செயலாற்றல்

| | 2013 | 2012 | மாற்றம் % |
|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (ரூ. பில்) | 1.78 | 1.62 | 9.9 |
| செஸ் வருமானம் (ரூ. மில்) | 245.74 | 236.53 | 3.9 |
| வருடாந்த கட்டணம் (ரூ. மில்) | 70.08 | 61.04 | 14.8 |

## ரூபா. 356.56 பில்லியன்

காப்புறுதி தொழிலின் மொத்த சொத்துகள்

## ரூபா. 94.48 பில்லியன்

காப்புறுதி தொழிலின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

# தலைவியின் செய்தி



காப்புறுதி தொழிலின் வளர்ச்சி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றினை முன்னெடுத்து செல்வதற்கு பேண வேண்டிய பாதுகாப்பு, உறுதி மற்றும் திறமை ஆகியவற்றை எய்துவதற்கு வலுவான ஒழுங்கமைப்பு ஒன்றும் மேற்பார்வை அமைப்பு முறை ஒன்றும் அத்தியாவசியமாகும். ஒழுங்கமைப்பாளர்களாகிய நாங்கள், “ஆசியாவின் காப்புறுதி ஒழுங்கமைப்பாளர்களின் அடையாளக் குறியீட்டாளர்களாக இருப்பது” எனும் எமது தொலை நோக்கை நிறைவேற்றும் வகையில் முன்னோக்கி நகர்வதை உறுதி செய்யும் எமது நீண்ட கால மூலோபாய நோக்கத்தை அடைவதில் எமது கவனத்தை தொடர்ந்து செலுத்துகின்றோம்.

2013 ஆம் ஆண்டில் காப்புறுதி தொழிலில் காணப்பட்ட முன்னேற்றம் குறித்து நான் திருப்தி அடைகின்றேன். காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைபாளர்கள் என்ற வகையில், சந்தைப்படுத்தலில் சக்தியூட்டும் அதிகாரிகளாக இருப்பதற்கு முயற்சி செய்வதுடன், தொழிலின் ஆரோக்கியமான அபிவிருத்தி மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பாளர்கள் எனும் இரண்டையும் வழங்கும் கடப்பாட்டினையும் நாங்கள் கொண்டிருக்கின்றோம்.

### பொருத்தமான பொருளாதார சூழலும், காப்புறுதி தொழிலின் செயலாற்றலும்

காப்புறுதி தொழில் உள்ளடங்களாக. பேரண்டப் பொருளாதாரத்தின் மூலாதாரங்கள் குறித்த ஆழ்ந்த அறிவும், புரிதலும் பயன் உறுதிமிக்க வர்த்தக நடவடிக்கை ஒன்றிற்கு அத்தியாவசியமான பின்னணியாகவுள்ளன. 2013 இல் 7.2% இனால் இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. இது நாட்டை மீளவும் உயர் வளர்ச்சியின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது. அத்துடன் நாடு முழுவதிலும் செயற்பட்டுவரும் துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் காரணமாக அடுத்து வரும் 2-3 ஆண்டுகளில் உயர்வான பொருளாதார வளர்ச்சியை எய்தும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இது காப்புறுதி தொழிலுக்கும் நன்மை அளிக்கக் கூடிய ஒரு சகுணமாக தென்படுகின்றது.

5 ஆண்டுகளுக்கும் மேலாக ஒற்றை ஸ்தான இலக்கத்தில் வீக்க நிலைமையை பேண முடிந்தது பாராட்டத்தக்க ஒரு சாதனையாகும். வீக்க நிலமையின் மட்டம், டிசம்பர் 2013 இல் 4.5% மாக மிகவும் குறைந்து காணப்பட்டது. இதன் விளைவாக, சராசரி பிரஜையின் ஆகக்கூடிய வருமானம் அதிகரிக்கும் ஆகையால், காப்புறுதி தொழிலுக்கு இது வரவேற்கத்தக்க ஒரு சத வீதமாக காணப்பட்டது. அத்துடன் மேலதிகமாக 2013 இல் தலா மூலதன வருமானம் ஐ.அ.டாலர் 3280 களினால் அதிகரித்ததும், எமது தொழிலுக்கு நேரடியான வாய்ப்பாக அமைந்தது.

2013 இல் மாற்ற முடியாத விதி முறைகளுக்கு அமைவாக ரூபா 7,312 மில்லியன் வளர்ச்சியை ஆயுள் மற்றும் ஆயுள் அல்லாத காப்புறுதி தொழில் ஊடாக பதிவு செய்து, காப்புறுதி தொழிலில் ஒட்டு மொத்த, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக (GWP) ஏறத்தாழ ரூ. 94.485 மில்லியனை (ஐ.அ.டாலர் ஏறத்தாழ 730 மில்) எய்த முடியுமாயிருந்தது.

மேலும், கடந்த நான்கு ஆண்டுகளில் காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்தன. 2013 இல் முன்னைய ஆண்டைவிட மாற்ற முடியாத விதிக்கு அமைவாக காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள் ரூபா 40,749 மில்லியனால் அதிகரித்தது.

### முக்கிய சாதனைகள்

மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின் போது, இலங்கை காப்புறுதி சபை ஈடுபட்ட முக்கிய ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளில், விதி முறைகளின் அடிப்படையில் அமைந்த மூலதன ஆட்சியில் இருந்து இடர் அடிப்படையில் அமைந்த மூலதன மாதிரிக்கு மாற்றமடைந்ததும் ஒன்றாகும். 2013 இன்

# தலைவியின் செய்தி

நடுப்பகுதியில், காப்புறுதி கம்பனிகளின் பங்கேற்றலுடன் 2012 செப்டம்பரில் ஆரம்பிக்கப்பட்ட இடர் அடிப்படையிலான மூலதன வரைபுச் சட்டத்தின் வரைவின் வீதி பரிசோதனையை நாங்கள் பூர்த்தி செய்ய முடிந்தது. அதே சமயத்தில் “ஏசியா இன்ஸ்யூரன்ஸ்” உடன் கூட்டிணைந்து இடர் அடிப்படையிலான மூலதனம் குறித்த சர்வதேச கருத்தரங்கு ஒன்றை நாங்கள் ஒழுங்கு செய்தோம். கண்காணிப்பாளர்களுக்கான ஒழுங்கமைப்பு விதிகள் கண்காணிக்கப்படுவதை, மேலும் முன்னேற்றுவதற்காகவும். காப்புறுதி தொழிலை கட்டியெழுப்புவதற்கு தேவைப்படும் திறனாற்றல்கள் மற்றும் தகைமைகளில் உதவுவதற்காகவும், உலக வங்கியுடன் மீளாய்வு ஒன்றையும் மற்றும், மற்றுமொரு கருத்தரங்கையும் நடத்தியது. பூர்த்தி செய்யப்பட்ட பாதுகாப்பு பரிசோதனையின் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையிலும் காப்புறுதி தொழிலின் அனுபவத்திற்கு அமையவும், இடர் அடிப்படையிலான மூலதன வரைச் சட்டம் பூர்த்தி செய்யப்பட்டதுடன். அடுத்துவரும் 2 ஆண்டுகளுக்கு ஒன்றிற்கு ஒன்று இணையாக பங்கேற்பதற்கு உதவும் வகையில், குறிப்பிடப்பட்ட நேரத்தில் காப்புறுதி தொழிலுக்கு அவை வழங்கப்பட்டன.

வேறுபடுத்தலுக்கான தேவைப்பாட்டினை பொருத்தவரையிலும், இலங்கை காப்புறுதி சபையும், காப்புறுதி தொழில் பிரதிநிதிகளும் கூட்டாக இணைந்து தயாரித்த வழிகாட்டல்களை பின்பற்றி 12 கலவை (Composite) காப்புறுதி கம்பனிகளும். அவற்றின் வேறுபடுத்தலுக்கான உத்தேச மாதிரிகளை சமர்ப்பித்தன. புதிதாக உருவாக்கப்படும் காப்புறுதி கம்பனிகளை பதிவு செய்யும் போது, காப்புறுதி வைப்பாளர்களினது பாதுகாப்பையும், வெளிப்படைத் தன்மையையும் கருத்திற் கொண்டு, இலங்கை காப்புறுதி சபை, உத்தேச பிரேரணைகளை பகுப்பாய்வு செய்வதை ஆரம்பித்துள்ளது. வேறுபடுத்தும் செயன்முறையின் போது காப்புறுதி கம்பனிகள் அதிகளவான வரி தாக்கத்தை எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனவே நாங்கள். நிவாரணம் பெறுவதற்கு அளித்த ஆதரவில் வெற்றி பெற முடியுமாக இருந்தது. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளர்களுக்கு இலங்கை காப்புறுதி சபையினால் செய்யப்பட்ட கோரிக்கையின் காரணமாக, 2014 இற்கான வரவு செலவு திட்ட பிரேரணைகளில், வேறுபடுத்தலை அதிகரிக்கும் வகையில், கம்பனிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்ட வேண்டும் எனும் எமது பிரேரணையும் உட்சேர்க்கப்பட்டது. இது தொடர்புடைய, அனைத்து காப்புறுதி கம்பனிகளுக்கும், சந்தேகத்திற்கு இடமின்றி மிகப்பெரிய நிவாரணமாக அமைந்தது.

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பை பொருத்தவரை காப்புறுதி வைப்பாளர்களிடமிருந்தும் பொது மக்களிடமிருந்தும். எமக்கு கிடைக்கின்ற அனேக முறைப்பாடுகள் குறித்தும் நாங்கள் விசேட கவனம் செலுத்துகின்றோம். அவற்றை தீர்த்து வைப்பதற்கும் இயலுமான பொழுதெல்லாம் நிவாரணம் வழங்குவதற்கும் நாங்கள் முயற்சிக்கின்றோம். இந்த நடைமுறைகளை நாங்கள் செயற்படுத்தவும் எளிமையாக்கவும் முறைப்படுத்தவும் ஆண்டின்போது முறைபாடுகளை கையாளும் கையேடு ஒன்றை நாங்கள் தயாரித்தும் அறிமுகப்படுத்தியும் இருக்கின்றோம்.

பிரிவு செயலக மட்டத்திலிருந்து. மாவட்ட செயலக மட்டத்திற்கு சந்தை அபிவிருத்தியையும். விழிப்புணர்வை உருவாக்கும் நடவடிக்கைகளையும் நாங்கள் விரிவுபடுத்தினோம். இதனால் பெருமளவிலான எமது மக்களுக்கு சேவை அளிக்கக் கூடியதாக எமக்கு எட்டக்கூடிய தூரத்தையும் மற்றும் பாதுகாப்பையும் பரவலாக்க இயலுமானது. பிரிவு செயலகம் மற்றும் கிராமிய மட்டங்களில் உள்ள ஏனைய பொதுத்துறை அதிகாரிகள் ஆகியோர் அளித்த பாரிய ஆதரவின் காரணமாக, இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் மாபெரும் வெற்றி அடைந்தன.

செயற்பாடுகள் மற்றும் ஒட்டு மொத்த திறமைகளை முன்னேற்றுவதன் மூலம், உச்ச பெறுபேறுகளை எய்துவதற்காக 2013 இல் உள்ளக நிர்வாகம் உள்ளடங்களாக. இலங்கை காப்புறுதி சபையின் ஸ்தாபக கட்டமைப்பு மீள வடிவமைக்கப்பட்டது.

### சவால்களும் முன்னோக்கி செல்வதும்

காப்புறுதி தொழில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து, காப்புறுதியின் ஊடுறுவலை முன்னேற்றவது ஒரு சவாலாகவே இருந்து வந்துள்ளது என்பதுடன். அபிவிருத்தி அடைந்து வரும் பொருளாதாரங்கள் என வகைப்படுத்தப்பட்டு உள்ள எம்மைப் போன்ற நாடுகளிலும் இச்சவால் தொடர்ந்து நிலவி வருகின்றது. அபரிமிதமான மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணமும், சொத்து வளர்ச்சியும் காணப்பட்ட போதிலும் இலங்கையின் காப்புறுதி ஊடுறுவல் (மொ.உ.உயின் சதவீதத்தில்) இன்னமும் 1.10% மாகவே தொடர்ந்து குறைவடைந்து இருக்கின்றது. சனத்தொகையின் 12% இனர் மட்டுமே காப்புறுதி காப்பை பெற்றுள்ளதாக ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. கிராமிய மற்றும் நகரப் பகுதிகளில் வாழும் ஏறத்தாழ 75% இனரை பொருத்தமான உற்பத்திகள் மற்றும் பயனுறுதியுள்ள வழிமுறைகளூடாக இன்னமும் சென்று அடைய வேண்டியுள்ளது. எனவே, 20 மில்லியன் சனத் தொகையைக் கொண்ட நாட்டில் ஊடுருவலை அதிகரிப்பதற்கு பரந்த அளவிலான சாத்தியக் கூறுகள் இன்னமும் காணப்படுகின்றன.

காப்புறுதிக்கான தேவை அதிகமாக உள்ள சமூகத்தினருக்கு பாதுகாப்பை வழங்குவதற்காகவும், அவர்களின் வளர்ச்சியை விருத்தி செய்வதற்கும் காப்புறுதி தொழிலின் சிறிய காப்புறுதி துறையை விரிவாக்குவதில் மேலும் அதிகமாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சில காப்புறுதி கம்பனிகள் நுண் காப்பறுதி உற்பத்திகளை வழங்குகின்றன ஆயினும், அவற்றின் உள்ளடக்கத்தை பொருத்தவரையிலும். அவை முழுமையான காப்பிற்கு போதுமானதாக இல்லை.

இந்த சூழ்நிலையின் கீழ் தற்போதுள்ள சிறிய காப்புறுதி வழங்குனர்கள் தொடர்பாகவும், நாட்டிற்குள்ளும், ஏனைய வெளிநாடுகளிலும், முறை சார்ந்ததும். முறை சாராததுமான துறைகளில் கிடைக்கக் கூடிய உற்பத்திகள் தொடர்பாகவும் இலங்கை காப்புறுதி சபை தகவல்களை சேகரிக்கின்றது. இந்த குழுக்கள் அனைத்தையும் ஒரு அரங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கும், ஏலவே திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் அவர்களின் அனுபவங்கள் மற்றும் பங்கேற்றலுடன் சிறிய காப்புறுதி துறைக்கென கொள்கை ஒன்றை உருவாக்கும் நடவடிக்கை திட்டமொன்றை முறைப்படுத்துவதிலும், ஒழுங்கமைப்பதிலும் இத் திட்டம் ஈடுபடும்.

பொது மக்கள் மத்தியில் ”காப்புறுதி” குறித்த அறிவையும், விழிப்புணர்வையும் முன்னேற்றும் நோக்கத்துடன் தீவு முழுவதும் பரவலாக விழிப்புணர்வை உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நாங்கள் தொடர்ந்தும் செயற்படுத்துவோம். காப்புறுதி உற்பத்திகளை வாங்குவதற்கு முன்னர். காப்புறுதி காப்பீட்டு நிபந்தனைகள் குறித்து நன்கு அறிந்திருப்பது மிகவும் அத்தியாவசியமானது என காப்புறுதி வைப்பாளர்களை நம்ப வைப்பது உண்மையாகவே ஒரு சவாலாக இருக்கின்றது.

காப்புறுதி வைப்பாளர்களுக்கு குறிக்கப்பட்ட நேரத்தில், காப்பீட்டு ஆவணங்கள் வழங்கப்பட வேண்டும் என அனைத்து காப்புறுதி கம்பனிகளுக்கும், இலங்கை காப்புறுதி சபை பணிப்புரைகளை (இல. 2/2013) வழங்கியுள்ளதுடன், ஒரு வாரத்திற்குள், ஆவணம் கிடைக்கப்பெற்றமைக்கான கடிதத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். எவ்வாறாயினும் ஒரு கோரிக்கை தொடர்பான பிரச்சினை ஒன்று உருவாகும் வரை அல்லது உருவானால் அன்றி காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரும் ஆதனங்களை கவனமாக பார்வையிடுகின்றனர் என்பதற்கான எவ்வித உத்தரவாமும் இல்லை. எமது எதிர்கால விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில். இந்த விடயம் குறித்து மேலும் கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்படும்.

2013 ஆம் ஆண்டு, ஒரு வெற்றிகரமான ஆண்டாக இருந்தது. 2014 இதை விட சிறப்பான ஆண்டாக இருக்கும் என நாங்கள் நம்புகின்றோம். 2014 ஆம் ஆண்டிற்கான எமது அவதானமும், வழிகாட்டும் வரைபடமும் மிகவும் தெளிவாக உள்ளன.


நிதியும் திட்டமிடலும் அமைச்சின் செயலாளர் அளித்த இடையறாத வழி நடத்தலுக்கும், சபையின் அங்கத்தினர்கள் அளித்த பெறுமதி மிக்க பங்களிப்பு மற்றும் ஆதரவு என்பவற்றிற்கும் நன்றி கூறுகின்றேன். இலங்கை காப்புறுதி சங்கம் உள்ளடங்கலாக, காப்புறுதி தொழிலின் பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் அவர்கள் அளித்த ஒத்துழைப்பிற்கும் எம்முடன் அவர்கள் பேணி வரும் நல்லுறவிற்கும் நன்றி கூறுகின்றேன்.

முன்னால் பணிப்பாளர் நாயகம் மற்றும் புலனாய்வுத்துறை பணிப்பாளர் உள்ளடங்கலாக அர்ப்பணிப்புடன் செயற்படும் இலங்கை காப்புறுதி சபையின் பணியாட்கள் அனைவரும் ஆண்டின் போது அவர்கள் அளித்த பங்களிப்பிற்கு உளமார்ந்த நன்றிகளை தெரிவிக்க இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்கின்றேன். எதிர்வரும் காலத்தில் இலங்கை காப்புறுதி சபையின் மூலோபாயங்களை செயற்படுத்த பணியாட் குழுவினர் முற்றிலும் தயாராக உள்ளனர் என நான் நம்புகின்றேன்.

**இந்ராணி சுகததாச**
*தலைவி*
*3 நவம்பர் 2014*

# சபை அங்கத்தினர்கள்






1. **திருமதி இந்ராணி சுகததாச**
   தலைவி

2. **திரு. பி. டி. டப்ளியு. ஆனந்த சில்வா**
   அங்கத்தினர்

3. **திரு. நலின் ஆட்டிகல**
   அங்கத்தினர்

4. **திரு. சமந்த குமாரசிங்க**
   அங்கத்தினர்

5. **திரு. எஸ். ஆர் ஆட்டிகல**
   அங்கத்தினர்

6. **திரு.டி. என். ஆர் சிறிவர்தன**
   அங்கத்தினர்

# சபை அங்கத்தினர்களின் விபரத்திரட்டு

**திருமதி இந்ராணி சுகததாச** 2010 மே மாதத்தில் இருந்து சபையின் தலைவியாக பதவி வகிக்கின்றார். கொழும்பு மியுசியஸ் கல்லூரியில் கல்வி பயன்ற இவர், கொழும்பு பல்கலைக்கழகத்தில் சமூக விஞ்ஞான பட்டம் பெற்ற பட்டதாரி என்பதுடன். அவஸ்திரேலியாவின் மெல்பன், மொனாச் (Monash) பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டப் பின்படிப்பு (MBA/MPA) பட்டமும் பெற்றுள்ளார். ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தினால். கௌரவமிக்க ஹோர்பட் எச் ஹம்ப்ரே பெ(f) லோசிப் (Fulbright) விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் உறுப்பினர் காலத்தின் போது நியுயோர்க்கின் சிட்டி யூனிவர்சிட்டி (City University) யிலும் சேர்ந்திருந்தார்.

திருமதி சுகததாச 1977 இல் இலங்கை நிர்வாக சேவையின் அங்கத்தினராக திட்ட அமுலாக்கல் அமைச்சில் தனது பணியை ஆரம்பித்தார். 35 ஆண்டுகளுக்கும் அதிகமாக பொதுத்துறையில் அவர் ஆற்றிய கௌரவமிக்க பணிகளில் பணிப்பாளர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம். பணிப்பாளர் மகளிர் பணியகம், செயலாளர். சிறுவர் அபிவிருத்தியும், மகளிர் அதிகாரமும் அமைச்சு, செயலாளர், பெருந்தோட்டத் துறை கைத்தொழில், அமைச்சு மற்றும் தலைவர் பிணையங்களும். பரிவர்த்தனையும் ஆணையம் எனும் பதவிகளும் உள்ளடங்கும்.

திருமதி சுகததாச, வெளிநாடுகளுக்கு அனேக தூதுக் குழுக்களின் இலங்கைக்கான பிரதிநிதியாக சென்றுள்ளதுடன். சர்வதேச அரங்குகள் பலவற்றில் பங்கேற்பாளராகவும் இருந்துள்ளார்.

தற்போது, அவர் தேசிய அபிவிருத்தி வங்கி பிஎல்சி மற்றும் களுபோவிட்டியான தேயிலை தொழிற்சாலை லிமிடட்இன் பணிப்பாளர் சபைகளில் அங்கத்தினராகவும் இருக்கின்றார். முதலீட்டுச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, இலங்கை தேயிலை சபை, மத்திய சுற்றாடல் அதிகார சபை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தேசிய இளைஞர் மன்றம், பெருந்தொட்ட முகாமைத்துவத்தின் தேசிய நிறுவனம் மற்றும் தேயிலை, ரப்பர், தென்னை ஆராய்ச்சி நிறுவனங்கள் என்பவற்றின் சபைகளிலும் பணியாற்றி உள்ளார்.

2013இல் அவுஸ்த்ரேலியன் அலுமினி எக்சலன்ஸ் அவார்ட் (Australian Alumini Excellence Award) உள்ளடங்களாக, நாட்டின் பொதுத் துறை சேவை மற்றும் பல்வேறு துறைகளில் தலைமைத்துவம் என்பவற்றிற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை அவர் பெற்ற அனேக பாராட்டுதல்களின் ஊடாக அறியக் கூடியதாக உள்ளது.

**திரு. எஸ். ஆர் ஆட்டிகல** இலங்கை மத்திய வங்கியின் சிரேஷ்ட பொருளியலாளராவர். இவர் தேசிய சேமிப்பு வங்கியின் பணிப்பாளராகவும், பதில் தலைவராகவும் இலங்கை வங்கியின் சபையின் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். 2011 இன் இறுதி வரையிலும் நிதியும் திட்டமிடலும் அமைச்சின் அரசிறைக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும், பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளராகவும் பணி புரிந்துள்ளார்.

தற்போது அவர் திறைசேரியின் பிரதி செயலாளராக இருக்கின்றார். தேசிய சேமிப்பு வங்கியின் சபையின் பணிப்பாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணையகத்தின் சபையின் அங்கத்தினர் மற்றும் உச்ச நீதிமன்ற தொகுதியின் முகாமைத்துவ சபை என்பனவற்றிலும் சேவையாற்றுகின்றார். திரு. ஆட்டிகல, கொழும்பு பல்கலைக் கழகத்தில் இருந்து கணிதத் துறையில் பி.எஸ்சி. விஞ்ஞானப் பட்டமும், ஐக்கிய இராச்சியத்தின் வார்விக் பல்கலைக் கழகத்திலிருந்து பொருளியல் துறையில் எம்.ஏ. பட்டமும் பெற்றிருக்கின்றார்.

**திரு. பி. டி. டப்ளியு. ஆனந்த சில்வா** இவர் 31 ஆண்டுகள் இலங்கை மத்திய வங்கியில் கடமை ஆற்றி உள்ளார். மத்திய வங்கியில் அவரது 31 ஆண்டு கால பதவியின் போது, அபிவிருத்தி நிதி திணைக்களம், பொருளாதார ஆய்வு திணைக்களம் மற்றும் வங்கி மேற்பார்வையாளர் திணைக்களம் என்பவற்றில் பணிபுரிந்துள்ளார். நாணயக் கொள்கை, வங்கி மேற்பார்வை, ஸ்திரமான நிதியியல் அமைப்பு, நாணயமாற்று வீத கொள்கை, வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் சென்மதி நிலுவை ஆகிய துறைகளிலும், திரு. சில்வா விரிவான அனுபவத்தை பெற்றுள்ளார். தற்போது இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுனராக இருக்கின்றார். யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திலிருந்து பி.எஸ்சி முதல் வகுப்பு பட்டம், ஐக்கிய அமெரிக்காவின் அயோவா பல்கலைக்கழக்கதிலிருந்து எம்.ஏ. பட்டம், ஐக்கிய அமெரிக்காவின் அலினோல்ஸ் பல்கலைக்கழகத்தில் இருந்து எம்.எஸ்சி பட்டம் ஆகியவற்றை பெற்றுள்ளார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் வருகை தரும் விரிவுரையாளராகவும், மத்திய வங்கியினால் நடாத்தப்படும் அனேக உயர் மட்ட கற்கை நெறிகளுக்கான ஆய்வாளராகவும் இருக்கின்றார்.

இலங்கை கடன் தகவல் பணியகத்தின் தலைவர் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தின் தலைவர், இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் பணிப்பாளர், இலங்கை காப்பறுதி சபையின் பணிப்பாளார், “அப்பி வெனுவென்” அப்பி நிதியத்தின் பணிப்பாளர், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் தரப்படுத்தல் உறுதி சபையின் அங்கத்தினர் மற்றும் வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் (West Coast Power (Pvt) Ltd. இன் பணிப்பளர் ஆகிய பதவிகளில் திரு. சில்வா தற்போது சேவை ஆற்றுகின்றார்.

**திரு. டி. என். ஆர் சிறிவர்தன** பேராதனை பல்கலைக்கழகத்தில் புவியியல் பி.ஏ. (கௌரவம்) பட்டம், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் இருந்து சட்டத்துறையில் பட்டம் (LLB) மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட எல்எல்.எம் பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் பதிவு செய்யப்பட்ட மாணவர், எனும் பட்டங்களை பெற்றுள்ளார். தொழிற் துறையில் இவர் ஒரு சட்டத்தரணியாவார். திரு. சிறிவர்தன, கம்பனிகள்

# சபை அங்கத்தினர்களின் விபரத்திரட்டு

அதியட்சராக 1988 இல் கம்பனிகள் பதிவு திணைக்களத்தில் இணைந்து, 2001 இல் கம்பனிகளின் உதவி பதிவாளராக பதவி உயர்வு பெற்றார். கம்பனிகளின் பதிவாளர் நாயகமாக இவர் நியமனம் பெற்றார் (காபாந்து கடமை) திரு. சிறிவர்தன, இலங்கை பட்டய கணக்காய்வாளர் நிறுவனத்தின். வெளியிலிருந்து வருகை தரும் அங்கத்தினராகவும். இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தினராகவும் பணி ஆற்றினார்.

**திரு. சமந்த குமாரசிங்க** பேராதனை பல்கலைக்கழகத்தின் இரசாயனவியல் பட்டதாரியும், ஐக்கிய அமெரிக்காவின். பொஸ்டன் ஹவாா்ட் பிஸ்னஸ் ஸ்கூல் (Havard Business School of Boston) இன் பழைய மாணவருமான அவர், 1993இல் அவரது தொழில் முயற்சியாளர் பணியினை ஆரம்பித்தார்

இலங்கையில் முதல் தரத்தில் இருக்கும் மூலிகை அழகு சாதன பொருளான "நேச்சர்ஸ் ஸீக்ரட் (Nature's Secrets) உள்ளடங்களாக அவர் மேற்கொண்டுள்ள அனேக முன்னோடி கருத்திட்டங்கள் அவரின் திறமைக்கு எடுத்துக் காட்டாகும். இந்த அழகு சாதன வர்த்தக குறியீட்டை உலக அளவில் ஒரு வர்த்தக குறியீடாக கட்டி எழுப்புவதற்கும் அவர் திட்டமிட்டிருக்கின்றார். 2007 ஆம் ஆண்டிற்கான புகழ் பெற்ற தொழில் முயற்சியாளர் எனும் ஆண்டு விருது இவருக்கு வழங்கப்பட்டது. அத்துடன் 2009/2010 ஆம் ஆண்டுகளில் ஜனாதிபதியின் வரி விதித்தல் ஆணையத்தின் அங்கத்தினராகவும் சேவை ஆற்றினார்.

**திரு. நலின் ஆட்டிகல** தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் 30 ஆண்டுகளுக்கும் அதிகமான அனுபவம் வாய்ந்தவர். கூட்டாண்மை கம்பனிகளின் நிபுணராகவும் அனுபவமிக்க சந்தையாளாளராகவும் இவர் இருக்கின்றார். நீண்ட காலம் பயன்படுத்தப்படக் கூடிய நுகர்வோர் உற்பத்திகள். மின்சார உற்பத்தி பொருட்கள், கைத்தொழில் பொருட்கள் எப்எம்சிஜி (FMCG) மற்றும் சேவைகள் துறை எனும் பல்வேறுபட்ட துறைகளின் தொழில் வகைகளில் அவர் சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ ஆலோசகர், பயிற்றுவிப்பாளர் மற்றும் விரிவுரையாளராக ஈடுபட்டுள்ளார். அத்துடன் அவர் தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு அனேக வெற்றிகரமான கம்பனி திட்டமிடல்கள், வேலைப் பட்டறைகளுக்கான மூலோபாய திட்டமிடல்கள் ஆகியவற்றையும் நடத்தியுள்ளார்.

மூலாதார தொழில் முயற்சி மன்றத்தின் தலைவர், கொழும்பு பல்கலைக் கழக கவுன்சிலின் அங்கத்தினர், எப்சிசிஐஎஸ்எல் (FCCISL) இன் சிரேஷ்ட கவுன்சில் அங்கத்தினர், இலங்கை சந்தைப்படுத்தல் நிருவனத்தின் முன்னால் தலைவர் (SLIM) இலங்கை தேசிய விளையாட்டு கவுன்சிலின் தலைவர், படக்காட்சியும், நடனம், பாட்டு, நாடக கலைகளுக்கான பல்கலைக்கழகத்தின் கவுன்சில் அங்கத்தினர். குடும்பக் கட்டுப்பாட்டு சங்கத்தின் சபை அங்கத்தினர். குடும்பக் கட்டுப்பாட்டு சங்கத்தின் சமூக சந்தைப்படுத்தல் கருத்திட்டத்தின் தலைவர், அம்பாந்தொட்ட 2018 (பிரைவட்) லிமிடட் இன் பிரதம நிறைவேற்று அதிகாரி, EU, OXFAM - GB இனால் நிதியிடப்பட்ட கருத்திட்டத்தின் தேசிய கருத்திட்ட பணிப்பாளர், மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையினால் ஆரம்பிக்கப்பட்ட எக்ஸ்போ 2012 இற்கான பிரதம ஆலோசகர் எனும் பதவிகளையும் வகித்துள்ளார்.


தற்போது பிரதேச மற்றும் தொழில் பயிற்சி ஆணையத்தின் அங்கத்தினராகவும். இலங்கை கணக்கீடும் தரப்படுத்தலும் நிறுவனத்தின் அங்கத்தினராகவும் இலங்கை வர்த்தகமும் கைத்தொழிலும் மன்ற சம்மேளத்தின் (Fedaration of Chamber of Commerce & Industries) செயலாளர் நாயகம்/பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் மற்றும் முகாமைத்துவ ஆலோசகராகவும் சந்தைப்படுத்தல் நிபுணராகவும் இருக்கின்றார்.

பயணங்கள் மற்றும் சுற்றுலாவிற்கு முதன் முறையாக ஜனாதிபதி விருதுகள். முதன் முறையாக இலங்கையில் சா்வதேச படகுக் காட்சி (SAPOG) மற்றும் தென் ஆசிய விளையாட்டுகள் SAG போன்றவை, அவரது முகாமைத்துவ திறமைகளை பயன்படுத்தி அனைத்து நிகழ்ச்சிப் பொறுப்புக்களினதும், நிர்வாக நிபுணராக அவர் இலங்கையில் வழி நடத்திய ஒரு சில மைல்கல் நிகழ்ச்சிகளாகும்.

அவர் நடுவர்கள் சபைகளின் தலைவராகவும் பணியாற்றி உள்ளார். பயணங்கள் மற்றும் சுற்றுலாவிற்கான ஜனாதிபதி விருதுகள் (PATT) தேசிய ஏற்றுமதிகள் விருதுகள் (NCE), ஆண்டின் இலங்கையின் தொழில் முயற்சியாளர் (FCCISL) உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் (SLBFE) தேசிய உணவு பொருட்கள் விருதுகள் (SLFPA) தேசிய தரப்படுத்தல் விருதுகள் (SLSI), (ஆண்டின் மகளிர் தொழில் முயற்சியாளர் மற்றும் அவை போன்ற வேறு நிகழ்ச்சிகளின் பல்வேறு நடுவர் சபைகளிலும் அங்கத்தினராக சேவை ஆற்றி உள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு






1. **திருமதி தமயந்தி பர்னாந்து**
   *(பணிப்பாளர் சட்டம்)*
2. **திரு. நிஹால் ராமநாயக்க**
   *(பணிப்பாளர் கண்காணிப்பு)*
3. **திருமதி சமரி ஏக்கநாயக்க**
   *(உதவி பணிப்பாளர் கண்காணிப்பு)*
4. **திரு. ராஜன் நிருபசிங்கம்**
   *(உதவி பணிப்பாளர் சட்டம்)*
5. **திருமதி. சாயா வித்தானவாசம்**
   *(பணிப்பாளர் நிதி மற்றும் நிர்வாகம்)*

# ஊழியர் குழாம்



### முன்வரிசை


1. திருமதி. கௌசாலி தயாரத்ன
2. திருமதி. கோகிலா சிறிவர்தன
3. செல்வி. துசாரி விஜேகுணவர்தன
4. திருமதி. பிரயங்கி டி. சில்வா
5. திருமதி. லக்மலி அல்கம
6. திருமதி. பவித்ரா புஞ்சிஹேவா

### நடு வரிசை

7. திரு. கபில திலக்கரத்ன
8. திருமதி. வீணா டினேக்கா
9. திருமதி. சந்திமா கம்புறுகமுவ
10. செல்வி. உபலக்ஷி ரணசிங்க
11. திருமதி. உபேந்திரா செனவிரத்ன

### பின் வரிசை

12. திரு. எதிராஜ் ஸ்ரீகாந்தன்
13. திரு. சந்திமா லால் குமார
14. திரு. எச். பி. அசங்க
15. திரு. சரத் உதயங்க



# ஊழியர் குழாம்



## முன் வரிசை


1. திரு. பிம்சார விஜேசிங்க
2. திருமதி. சியாமளி அத்தநாயக்க
3. திருமதி. சத்துரி பண்டார
4. திருமதி. லசந்தி தொட்டஹேவா
5. திருமதி. திலினி வாகிஸ்ட
6. திருமதி. ருவினி லியனகே
7. திருமதி. டெசிகா ரத்நாயக்க

## நடுவரிசை

8. திரு. லக்ஸ்மன் விஜேசிங்க
9. திருமதி. தனுஜா அந்தனி
10. திருமதி. மல்ஹாரி விக்ரமசிங்க
11. திருமதி. சசினி வத்சலா
12. திருமதி. சரிகா வத்துஹேவ
13. திரு. சமன் சேனாதீர

## பின் வரிசை

14. திருமதி. சுஜீவா ரணசிங்க
15. திரு. லக்மால் களுபோவில
16. திரு. சரித்த விக்ரமசிங்க
17. திருமதி. ஷனிகா நாணயக்கார



# மீளாய்வுகள்


பொதுவான மீளாய்வு **14**
புள்ளிவிபர மீளாய்வு **19**

தொழிற்பாட்டு மீளாய்வு

- மேற்பார்வை மீளாய்வு 50
- ஒழுங்கமைப்பு மீளாய்வு 54
- புலனாய்வு சார்ந்த மீளாய்வு 59
- சந்தை அபிவிருத்தியும் மற்றும் வெளியக உறவுகளும் மீளாய்வு 62
- நிர்வாக மீளாய்வு 65
- நிதியியல் மீளாய்வு 66

# பொதுவான மீளாய்வு

## சட்டத்தின் நிர்வாகம்

### சட்டவாக்கம்

காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாக்கும் நோக்கத்துடன், இலங்கையில் காப்புறுதி வியாபாரம் நேர்மையுடனும் தொழில் சார்ந்ததாகவும், விவேகமாகவும் நிர்வகிக்கப்படுவதை உறுதி செய்வது சபையின் நோக்கமாகவும் பொறுப்பாகவும் உள்ளது.

2000 ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதி தொழில் சட்டத்தின் ஒழுங்கமைப்பு முறைமைகள், காப்புறுதி கம்பனிகள் காப்புறுதி தரகு கம்பனிகள் (காப்புறுதி தரகர்கள் மற்றும் நட்டங்களை சீராக்குபவர்கள் ஆகியோருக்கு ஒழுங்கமைப்புடனும் மேற்பார்வையுடனும் தொடர்புடைய சட்ட பூர்வமான வரம்புகளை வழங்குகின்றது.

காப்புறுதி தொழிலை வலுப்படுத்துவதற்கு சட்டத்திற்குள் அனேக திருத்தங்கள் உட்சேர்க்கப்பட்டது. இந்த அறிக்கையின் ஒழுங்குபடுத்தல் மீளாய்வில், ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட சட்ட சீர் திருத்தங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

### சந்தை கட்டமைப்பு

#### காப்புறுதியாளர்கள்


சட்டத்தின் 12 ஆம் பிரிவிற்கு அமையவும், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஏற்பவும், சட்டத்தின் கீழ், அத்தகைய வர்த்தகத்தை பதிவு அல்லது பதிவு செய்ய கருதும் எந்த ஒரு நபரும் அத்தகைய பதிவினை மேற்கொள்ளாதிருப்பாராயின் இலங்கையில் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள முடியாது.

சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கு அமைவாக, இலங்கையில் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு ஆர்வமுடைய ஒருவர், 2007 இன் 7ஆம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் பொதுக் கம்பனி ஒன்றில் ஒன்றிணைந்திருக்க வேண்டும் என்பதுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நியமத் தேவைகள் அனைத்தையும் பூரணப்படுத்தியதன் பின்னர் காப்புறுதி தொழிலின் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ் காப்புறுதியாளராக பதிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

ஆண்டின் இறுதி அன்றுள்ளவாறு சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர்களாக 22 கம்பனிகள் பதிவு செய்துள்ளன. எவ்வாறாயினும் 21 கம்பனிகளே செயற்பட்டுக் கொண்டிருக் கின்றன. சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட பதிவு நீக்கம் 2009 இலிருந்து தொடர்ந்து நீடிக்கின்றது. வியாபாரத்தை கொண்டு செல்வதற்கு பதிவு செய்துள்ள காப்புறுதி வர்த்தக கம்பனிகளின் வகைகளை வரைபடம் 01 காண்பிக்கின்றது. 21 காப்புறுதி கம்பனிகளில், நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தையும், பொதுவான காப்புறுதி வர்த்தகத்தையும் மேற்கொள்ளும், கலவை காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்யப்பட்ட 12 கம்பனிகளில் நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 3 கம்பனிகளும், பொதுவான காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்ள பதிவு செய்து கொண்ட 6 கம்பனிகளும் உள்ளடங்கும்.

*வரைபடம் 01*

***காப்புறுதி வழங்குனர்களினால் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி வர்த்தகத்தின் வகைப்படுத்தல்கள்***





#### காப்புறுதி தரகர்கள்

2007 இன் 7ம் இல. கம்பனிகள் சட்டத்தின் கீழ் உட்சேர்க்கப்பட்ட ஒரு கம்பனி காப்புறுதி தரகர் எனப்படுவதுடன், காப்புறுதி தரகர் வர்த்தகத்தை மேற்கொள்வதற்காக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. காப்புறுதி வழங்குனர், காப்புறுதி வைப்பாளர் அல்லது காப்புறுதி ஒன்றை பிரேரிப்பவர்கள் அல்லது மீள் காப்புறுதி செய்பவர்களுக்கு அல்லது ஒரு காப்புறுதி கம்பனியுடன் அவர்கள் சார்பாக காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி கம்பனியிடமிருந்து தரகுப் பணத்தை அல்லது தரகு எனும் கொடுப்பனவு ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் காப்புறுதி வியாபாரத்திற்கு இடையீட்டாளர்களாக காப்புறுதி தரககர்கள் செயற்படுகின்றனர்.

ஆண்டிறுதியின் போது 59 கம்பனிகள் காப்புறுதி தரகர்களாக பதிவு செய்யப்பட்டிருந்தன. சொல்லப்பட்ட கம்பனிகளில், 40 கம்பனிகள் நீண்ட காலம் மற்றும் பொதுவான காப்புறுதி தரகு வர்த்தகம் இரண்டிலும் பதிவு செய்திருந்த அதே நேரம் 19 கம்பனிகள் பொது காப்புறுதி தரகு வர்த்தகத்தில் மட்டும் பதிவு செய்தன. வரைபடம் 02, ஆண்டின் போது காப்புறுதி தரகர்கள் மேற்கொண்ட காப்புறுதி தரகு வர்த்தகத்தின் வகைப்படுத்தல்களை காண்பிக்கின்றது.

*வரைபடம் 02*

***காப்புறுதி தரகர்களினால் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதி தரகு வர்த்தகத்தின் வகைப்படுத்தல்கள்***



# பொதுவான மீளாய்வு

### காப்புறுதி முகவர்கள்

சட்டத்தின் கீழ் காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர் ஒருவருடன், காப்புறுதி முகவராக பதிவு செய்து கொள்ளும் தனியாளர்கள், அத்தகைய காப்புறுதி வழங்குனர் அல்லது காப்புறுதி தரகர்களுடன் தரகை நோக்கமாகக் கொண்டு காப்புறுதி வியாபாரத்தை பதிவு செய்வதற்கான தகைமைகள் சபையினால் நிர்ணயிக்கப்படும்.

2011இன் 3 ஆம் இல. காப்புறுதி தொழில் ஒழுங்கமைப்பின் (திருத்தச்) சட்டம் (திருத்தச் சட்டம்) தனி நபர்கள் தவிர்ந்த ஏனையவர்களையும் காப்புறுதி முகவர்களாக தொழிற்பட அனுமதிக்கின்றது. அத்துடன் பதிவு செய்வதற்கான தகைமைகளை குறிப்பிடும் விதிமுறைகளும் வரைவு செய்யப்பட்டுள்ளன.

சட்டத்தின் 34 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி முகவர்கள் முக்கிய விநியோக ஊடகமாக இருப்பதுடன், இவர்களுடாக காப்புறுதி வழங்குனர்கள் காப்புறுதி வியாபாரத்தை தேடிப் பெற்றுக் கொள்ளுகின்றனர்.


காப்புறுதி வழங்குனர்களினால் வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைவாக இந்த ஆண்டின் போது காப்புறுதி முகவர்களாக சேர்க்கப்பட்ட தனிநபர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 15,606 ஆகவிருந்தது. இது கடந்த ஆண்டின் (12.604) உடன் ஒப்பிடும் போது 23.82% அதிகரிப்பாகும்.

இந்த ஆண்டின் இறுதியில், காப்புறுதி வழங்குனர்களை பிரதிநிதித்துவப் படுத்திய காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை ஏறத்தாழ 38,635, இது கடந்த ஆண்டின் (36,801) உடன் ஒப்பிடும் போது 4.98% அதிகரிப்பாகும்.

அட்டவணை 03 காப்புறுதி வழங்குனர்களுடன் பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி முகவர்களை காண்பிக்கின்றது.

***வரைபடம் 03***

***காப்புறுதி வழங்குனர்களுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி முகவர்கள்***




2013 ஆம் ஆண்டிற்கு, ஏறத்தாழ 261 காப்புறுதி முகவர்கள் காப்புறுதி தரகுக் கம்பனிகளுடன் பதிவு செய்திருந்தனர்


அதற்கமைய, 2013 ஆம் ஆண்டிற்கான காப்புறுதி முகவர்களின் மொத்த எண்ணிக்கை, ஏறத்தாழ 38,896 ஆகும்.

### கம்பனியின் அந்தஸ்தும் மூலதன மாற்றங்களும்

காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடும் காப்புறுதி வழங்குனர்களில் 07 கம்பனிகள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டன. அவையாவன சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ, ஏஐஏ(AIA) இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி, யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சீ, ஏசியன் அலையன்ஸ் பிஎல்சி, எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி, அமானா டக்பாபுல் பிஎல்சீ, மற்றும் ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சீ பட்டியலிடப்பட்டதும், பட்டியலிடப் படாததுமான காப்புறுதி வழங்குனர்களின் சதவீதத்தை அட்டவணை 04 காண்பிக்கின்றது.

***வரைபடம் 04***

***பட்டியலிடப்பட்ட/பட்டியலிடப்படாத காப்புறுதி வழங்குனர்களின் நிலைமை***




பெப்ரவரி 2016 அன்று அல்லது அதற்கு முன்னர் 1987 இன் 36 ஆம் இல இலங்கையின் பிணையங்களும் பரிவர்த்தனையும் ஆணையகத்தின் கீழ், உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் தற்போதுள்ள காப்புறுதி வழங்குனர் பட்டியலிடப்பட்டிருக்க வேண்டும் எனும் தேவைப்பாட்டை திருத்தச் சட்டம் கொண்டுள்ளது. எனவே கலவையான காப்புறுதி கம்பனிகள், திருத்தச் சட்டத்திடம் இருந்து பட்டியல் ஒன்றை பெப்ரவரி 2015 அன்று அல்லது அதற்கு முன்னர் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் அதன் வியாபாரம் இரண்டு வெவ்வேறு கம்பனிகளாக வேறாக்கப்பட வேண்டும்.

வேறுபடுத்தலை சுமூகமாக செயன்முறைப் படுத்துவதற்காக இலங்கை காப்புறுதி சங்கத்துடன் சபை மிகவும் நெருக்கமாக பணியாற்றுகின்றது.

திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன் பின்னர் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யும் புதிய கம்பனி ஒன்றிற்கு சபையின் உரிமம் வழங்கப்பட்ட மூன்று ஆண்டு காலத்திற்குள், 1987 இன் 36 ஆம் இல இலங்கை பிணையங்களும், பரிவர்த்தனைகளும் ஆணையத்தின் கீழ் உரிமம் பெற்ற பங்கு பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட வேண்டிய தேவையுள்ளது.

# பொதுவான மீளாய்வு

2011 ஜுன் மாதத்திற்கு முன்னால் காப்புறுதி வழங்குனராக பதிவு செய்யப்பட்ட பங்கு மூலதனத்தை செலுத்தியுள்ள கம்பனி ஒன்றிற்கு 2015 பெப்ரவரி 11 அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வியாபாரத்தின் ஒவ்வொரு வகைப்படுத்தலுக்கும் மிகக் குறைந்தது ரூபா ஐந்நூறு மில்லியனை அதிகரிக்க வேண்டிய தேவை சபைக்கு உள்ளது.

2011 ஜுன் மாதத்தை தொடர்ந்து பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி கம்பனிகள், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத பங்கு மூலதனத்தை செலுத்தியுள்ளனர்.

காப்புறுதி வழங்குனர்களுக்கு இடர் அடிப்படையிலான மூலதன விதிகளை அறிமுகப்படுத்தும் செயன்முறையிலும் சபை ஈடுபடுகின்றது. இந்த புதிய விதிமுறைகள் தற்போது செயற்படும் கடன்தீர் எல்லை விதிகளுக்கு மாற்றீடாக வைக்கப்படுவதுடன், 2016 ஆம் ஆண்டில் இருந்து செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் ஆணை வழங்கப்பட்டது.

காப்புறுதி தரகர்களைப் பொறுத்த வரையிலும், 2014 டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி தரகராவதற்கு ரூபா 2 மில்லியன் ஐந்நூறாயிரத்திற்கு குறையாத தொகையை பங்கு மூலதனத்தில் செலுத்தப்பட்ட தொகையாக கம்பனி ஒன்று வழங்க வேண்டும் என்பது சபையின் தேவைப்பாடாகும்

### காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து ஒரு செஸ் தீர்வை (Cess)

சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் ஒன்றை உருவாக்குவதற்கு செஸ் தீர்வை ஒன்றை ஏற்படுத்துமாறு கட்டளை ஒன்று கௌரவ நிதியும் திட்டமிடலும் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டது. 2002 ஜுலை 09இல் 1244/5 ஆம் இல. வர்த்தமாணி அறிவித்தலின்படி, நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.2%, மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த நிகர காப்புறுதி கட்டணத்தின் 0.4% மும் காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. 2003 ஜனவரியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து செஸ் சேகரிப்பு ஆரம்பமாகியதுடன், 2013 ஆம் ஆண்டிற்கான செஸ் சேகரிப்பு தொகை ரூபா 246 மில்லியனாகவும் இருந்தது. அட்டவணை 01 செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் என்பவற்றின் அசைவை காண்பிக்கின்றது.

### காப்புறுதி வைப்பாளரிள் பாதுகாப்பு நிதியம்

சட்டத்தின் 103 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி வழங்குனர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட செஸ் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் வைப்பு செய்யப்படுகின்றது. காப்புறுதி வைப்பாளர்களுக்கும், உத்தேச காப்புறுதி வைப்பாளர்களுக்கும் நன்மை அளிக்குமாயிருப்பின் பின்வரும் நோக்கங்களுக்காக இந்த நிதியம் பயன்படுத்தப்படலாம்.


(அ) பொதுமக்கள் மத்தியில் காப்புறுதி தொழில் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதில் ஏற்படக்கூடிய செலவினம் மற்றும் காப்புறுதி தொழிலை அபிவிருத்தி செய்வதில் ஏற்படக்கூடிய ஏனைய செலவினங்களை தீர்த்தல்.

(ஆ) சபையின் அதிகாரங்கள், நடவடிக்கைகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றை பிரயோகிப்பது, கடமையாற்றுவது மற்றும் செயற் படுத்துவதினால் ஏற்படக்கூடிய செலவினத்தை தீர்த்தல்.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் வரவில் இருக்கும் தொகை அரசாங்க பிணையங்களில் முதலீடு செய்யப்படும். 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு நிதியத்திற்கு திரண்ட தொகை ரூபா 1,778 மில்லியனாகும். இது முன்னைய ஆண்டைவிட 9.62% அதிகரிப்பாகும். (ரூபா 1,622 மில்லியன்)

*அட்டவணை 01*

***செஸ் மற்றும் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம்***




### காப்புறுதி தீர்வை

பொதுக் காப்புறுதி வியாபாரத்தின் எந்தவொரு வகுப்பு தொடர்பிலும் தற்போது எவ்வித தீர்வைகளும் இல்லை. மோட்டார் காப்புறுதி, தீ அபாய காப்புறுதி, தொழிலாளர் நட்ட ஈட்டுக் காப்புறுதி என்பவற்றிற்கு இருந்த தீர்வைகள் முறையே 2002 ஜனவரி 1, 2005, 2007 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு நீக்கப்பட்டன.

### சட்டத்தின் பிரயோகத்திற்கான விதி விலக்குகள்

சட்டத்தின் 12 (3) ஆம் பிரிவிற்கு அமைவாக, சட்டத்தின் ஏற்பாடுகள், 1999 இன் 20 ஆம் இலக்க விவசாயம் மற்றும் கமத்தொழில் காப்புறுதி சட்டம், 1978 இன் 15 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபன சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம் 1996 இன் 17 ஆம் இலக்க சமூக பாதுகாப்பு சபை சட்டத்தின் கீழ் சமூக பாதுகாப்பு சபையாக ஸ்தாபிக்கப்பட்டது. இவற்றிற்கு சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படுவதில்லை.

### தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் (NITF)

2006 இன் 28 ஆம் இல. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்தி (NITF சட்டம்) னால் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சபை தாபிக்கப்பட்டு திருத்தச் சட்டத்தினால் சபையின் நோக்கெல்லையின் கீழ் கொண்டு வரப்பட்டது.

தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதிய சட்டத்திற்கு அமைவாக நிதியும் திட்டமிடலும் அமைச்சினால் பேணப்பட்டு வந்த வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்கான நிதியை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம்

# பொதுவான மீளாய்வு

உட்சேர்த்துக் கொண்டது. வேலை நிறுத்தம், கலவரம், சிவில் அமைதியின்மை மற்றும் காப்புறுதி இடர்களுக்கு எதிராக தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் சார்பான காப்புறுதி காப்புகளை வழங்கும் காப்புறுதி வழங்குனர்கள் அவற்றின் மீது சேகரிக்கும் தவணைக் கட்டணங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் வைப்புச் செய்ய வேண்டும்.

2007 இன் 27 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட சட்டத்திற்கு அமைவாக, பொது காப்புறுதி வியாபாரம் தொடர்பாக பதிவு செய்துள்ள காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் மீள் காப்புறுதி செய்ய வேண்டும். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்துடன் மீள் காப்புறுதி செய்ய விரும்பும் பொறுப்பின் மீது 50% இற்கு மேற்படாத சதவீதம் ஒன்றை மீள் வாக்குறுதி செய்யும் தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலேயுள்ள ஏற்பாட்டிற்கு அமைவாக 2013 ஜனவரி 1 இலிருந்து நடைமுறைக்கு வருமாறு, நிதியும் திட்மிடலும் அமைச்சரினால் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டளைக்கு ஏற்ப, மீள் காப்புறுதி ஒப்பந்தங்கள் மற்றும் சாதுரியமான மீள் காப்புறுதி ஒழுங்குகள் என்பனவற்றிற்கு காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் குறிப்பிட்டதொரு சதவீதத்தை அளிக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளனர். இந்த சதவீதம் 1 ஜனவரி 2013 இல் இருந்து 20% இல் இருந்து 30%மாக அதிகரிக்கப்பட்டது.

### ஏனைய தொடர்புடைய விடயங்கள்

### வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் (NCRS)

வீதி பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சில் போக்குவரத்து அமைச்சின் நோக்கெல்லையின் கீழ், வாகன போக்குவரத்து சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டது. வாகன காப்புறுதியை வழங்குகின்ற ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும் வீதிப்பாதுகாப்பு நிதியத்திற்காக மூன்றாந் தரப்பு காப்புறுதி கட்டணங்களின் 1% யைப் பங்களிப்பு செய்ய வேண்டும். வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய கவுன்சிலின் சபையில் காப்புறுதி சபை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கிடையிலான கவுன்சில் (IRIC)

இலங்கை மத்திய வங்கியினால் ஒழுங்கமைப்பு நிறுவனங்களுக்கு இடையிலான கவுன்சில் தாபிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் ஆளுணரினால் தலைமை தாங்கப்படும் இந்த உயர்மட்ட குழு, நிதிச் சந்தைகளின் முறைமையான அபிவிருத்திக்கு பொருத்தமான கொள்கை வழிகாட்டல்கள் அமைக்கப்படுவதை உறுதி செய்வதிலும், நிதியியல் அமைப்புகள் அனைத்தினதும் நலன்களை கருத்திற் கொண்டு, நிதியியல் ஒழுங்கமைப்பு முகவராண்மைகள் யாவும் ஒருங்கிணைந்து, தகவல்களை பரிமாறிக் கொள்வதிலும் ஈடுபடும். ஒழுங்கமைப்பு நிருவனங்களுக்கிடையிலான கவுன்சிலில் சபையும் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

### இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

இலங்கை காப்புறுதி சங்கம் (IASL) 1989 இல் நிறுவப்பட்டது. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் சபையில் அங்கத்தினராவதற்கு தகுதி பெறுவார்கள். தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் அங்கத்தினர்கள் தவிர்ந்த ஏனைய காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் இலங்கை காப்புறுதி சங்கத்தின் அங்கத்தினர்கள் ஆவர்.

இலங்கை காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பிரதம நிறைவேற்று அதிகாரிகளை கொண்டுள்ள இலங்கை காப்புறுதி சங்கத்தின் நிறைவேற்றுக் குழு, சங்கத்தின் நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த முகாமைத்துவத்திற்கு பொறுப்பாகவிருக்கும். அத்துடன் பின்வரும் குழுக்கள் அவற்றுடன் தொடர்புடைய விடயங்களில் நிறைவேற்றுக் குழுவிற்கு தமது பரிந்துரைகளை செய்வதிலும் உதவும்.

- ஆயுள் காப்புறுதி மன்றம்
- பொது காப்புறுதி மன்றம்
- நிதி தொழில்நுட்ப உப-குழு
- சட்ட ஆலோசனை மன்றம்
- மனிதவள உப-குழு
- தகவல் தொழில்நுட்ப உப-குழு
- சந்தைப்படுத்தலும் விற்பனையும் மன்றம்

இலங்கை காப்புறுதி சங்கத்தின் முக்கிய நோக்கங்கள்:-

1. காப்புறுதி வழங்குனர்களின் உறுப்பினர்கள் மற்றும் காப்புறுதி செய்யும் பொது மக்களின் பொதுவான ஈடுபாடுகளையும் நலன்களையும் பாதிக்கும் விடயங்கள் குறித்து ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள் வதற்காக காப்புறுதி வழங்குனர்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டுதல்.
2. காப்புறுதி வியாபாரத்தில் சீரான, சிறந்த நடைமுறைகள் மற்றும் உயர் விழுமிய தராதரங்களை பேணி ஊக்குவிப்பதன் மூலம் காப்புறுதி செய்யும் மக்கள் மத்தியில் நம்பிக்கையை விருத்தி செய்வது.
3. பொதுமக்கள் மத்தியில் காப்புறுதியின் தேவை மற்றும் மதிப்பு தொடர்பான விழிப்புணர்வை கட்டியெழுப்புவது.
4. சட்டம்/ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் என்பவற்றை கண் காணிப்பது மற்றும் தொழிலின் ஸ்திரத்தன்மையையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய அதிகாரிகளுடன் பிரதிநிதித்துவங்களை செய்வது.
5. ஏனைய நாடுகளின் காப்புறுதி பிரயோகங்களையும் உத்திகளையும் மீளாய்வு செய்வதும் மற்றும் பரீட்சிப்பதும் அவற்றில் இலங்கையின் சந்தைக்கு பொருத்தமான சிறந்த பிரயோகங்களை கடைப்பிடிப்பதும்.
6. கல்வி மற்றும் பயிற்சியினூடாக காப்புறுதி துறையில் தொழிலில் திறமையை ஊக்குவித்து, உத்வேகமான முறையில் உதவியளித்து மேம்படுத்துவதும், இந்நோக்கத்திற்காக வகுப்புகள், மாநாடுகள், கருத்தரங்குகள், மன்றங்கள், உசாவுகைகள், செயலமர்வுகள் மற்றும் கூட்டங்களை ஏற்பாடு செய்வதும்.

# பொதுவான மீளாய்வு

### இலங்கை காப்புறுதித் தரகர்கள் சங்கம் (SLIBA)

இலங்கை காப்புறுதியாளர் தரகர் சங்கமானது சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு காப்புறுதி தரகர் சங்கமாகும். சட்டத்தின் 79 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி தரகர் பதிவு செய்தலை நாடும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும், சபையினால் காப்புறுதி தரகராக பதிவு செய்யப்படும் முன்னர், இச் சங்கத்தில் அங்கத்துவம் பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதன் அங்கத்தவர்கள், இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற நடத்தை விதிகளுக்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள்.

இலங்கை காப்புறுதி தரகர் சங்கத்தின் பிரதான நோக்கங்கள்:

பொது மக்கள் மத்தியில் காப்புறுதி தரகர்களின் பங்களிப்பைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குவது,

ஏனைய அங்கத்தினர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்தி திறமைகளையும், தொழிலாற்றல்களையும் உயர் மட்டத்தில் கட்டியெழுப்புவது.

அங்கத்தினர்கள் காப்புறுதி பாடநெறிகளை பின்பற்றவும், தொழில்சார் தகைமைகளைப் பெற்றுக் கொள்ளவும் அங்கத்தினர்களை ஊக்குவிப்பதும் உதவுவதும்.

ஒழுங்கமைப்பாளர்கள், காப்புறுதி வழங்குனர்கள் மற்றும் பொதுமக்களுடன் நல்லுறவையும், பரஸ்பர நன்மைபயக்கும் உறவுகளையும் பேணுவது.

### இலங்கை காப்புறுதி நிறுவனம் (SLII)

1982ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை காப்புறுதி நிறுவனமானது இலாப நோக்கமற்ற ஒரு அமைப்பாக இருப்பதோடு காப்புறுதி வியாபாரத்தில் உள்ளவர்களின் திறமைகளையும் அறிவையும் விருத்தி செய்வது அதன் நோக்கமாகவும் உள்ளது.

இலங்கை காப்புறுதி நிறுவனத்திற்கான நிதி காப்புறுதி வழங்குனர்களின் ஆண்டு சந்தா மற்றும் அதன் உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த பங்களிப்புகளில் இருந்து கிடைக்கிறது.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் பிரதான நோக்கங்கள்:

காப்புறுதி துறையில் ஈடுபட்டுள்ள அல்லது தொழில் புரிகின்ற நபர்களிடையே அவர்கள் காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவர்களின் சொந்த நலனுக்காக மட்டுமின்றி அத்தகைய வியாபாரத்தை மிகுந்த பயனுறுதியுடன் நடத்திச் செல்லவும் தொழில் திறமையை ஏற்படுத்தி அதை பேணும் நோக்கிலும் செயற்திறன் முன்னேற்றம் பொதுவான அபிவிருத்தி என்பவற்றை ஊக்கப்படுத்துவதற்காக மத்திய அமைப்பொன்றை ஏற்படுத்தி பேணுவது.

காப்புறுதி பற்றிய அறிவை விருத்தி செய்வதற்காக டிப்ளோமா மற்றும் சான்றிதழ் தகைமைகளுக்கு இட்டுச்செல்கின்ற பாட நெறிகளை நடத்துவது அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் நிறுவனத்தினூடாக காப்புறுதியின் எந்த வொரு கிளை தொடர்பான எந்தவொரு விடயத்தைப் பற்றிய தொழில்சார் கற்கையை ஊக்குவித்து அதற்கு உதவுவதற்காக பரீட்சைகளை நடத்தவது.

தொழில்சார் விவகாரங்கள், நலன்கள். கடமைகள், ஆய்வு கட்டுரைகளை வாசித்தல் மற்றும் விரிவுரைகள் வழங்குதல் போன்ற கலந்துரையாடலுக்கான மாநாடுகள் மற்றும் கூட்டங்களை நடாத்துதல், அங்கத்தவர்களின் பட்டியல்கள், இடாப்புகள் மற்றும் பதிவுகளை தொகுப்பது.

இலங்கை காப்புறுதி நிறுவனத்தின் உறுப்பினர்கள் தொடர்பான தொழில்சார் மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டை பிரயோகிப்பதற்கும் அவர்களது நலன் மற்றும் நலநோம்புகை என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவர்களது மேம்பாட்டை வலுப்படுத்தவும், பொதுவாக காப்புறுதி மற்றும் இலங்கை காப்புறுதி நிருவனத்தின் அங்கத்தவர்களது நிலைமையை மேம்படுத்துவதற்கு இட்டுச் செல்லக் கூடியதான ஊக்குவிப்புகளை மேற் கொள்வதும்.

இலங்கை காப்புறுதி நிறுவனம் இலண்டன் பட்டய காப்புறுதி நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் இலண்டனிலுள்ள பட்டய காப்புறுதி நிறுவனம், இந்திய காப்புறுதி நிறுவனம், இந்தியாவின் காப்புறுதி கணிப்பீட்டாளர் சங்கம் போன்ற தொழிச்சார் அமைப்புகளுக்கான பரீட்சைகளையும் நிருவகித்து வருகின்றது. நிருவனமானது காப்புறுதி கைத்தொழிலில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள நபர்களுக்காக காப்புறுதியில், குறுங்கால டிப்ளோமா பாடநெறிகளையும் நடாத்தி வருகின்றது.

சபையானது காப்புறுதி முகவர்களாக நியமிக்கப்படவுள்ள வர்களுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்துவதற்கான பொறுப் பையும் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. நிறுவனமானது காப்புறுதி வியாபாரத்தின் இரு பகுதிகள் தொடர்பிலும் ஆட்சேர்ப்பு பரீட்சைகளை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றது.

### காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கம் (IAIS)

காப்புறுதி மேற்பார்வையார்களின் சர்வதேச சங்கத்தின் ஒரு அங்கத்தினர் என்ற வகையில் சபையானது காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான பிரதான காப்புறுதி கோட்பாடுகள், தகவல்கள் போன்ற வெளியீடுகளையும், வழிகாட்டிகளையும் கிரமமான முறையில் பெறுகின்றது. காப்புறுதி மேற்பார்வையாளர்களின் சர்வதேச சங்கத்தினால் பரிந்துரை செய்யப்பட்ட சில பிரதான கோட்பாடுகள் இலங்கையில் காப்புறுதி தொழிலின் சிறந்த மேலான்மை மற்றும் கண்காணிப்பிற்காக சபையினால் பின்பற்றப்படுகின்றன.

# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதி தொழில்குறித்த ஒரு கண்ணோட்டம்

2013 ஆம் ஆண்டின் போது, இலங்கையில் பொருளாதாரம் 7.3% வளர்ச்சியுடன் மிகவும் சிறப்பாக செயற்பட்டது. அத்துடன் ஆண்டிற்கு ஆண்டும் அதிகரித்தது. ரூபா 372,814 (ஐக்கிய அமெரிக்க டொலர் 3,280) ஆக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் தலா மூலதனம் உயர்வு அடைந்ததையும் அவதானிக்க முடிந்தது. காப்புறுதி தொழில் முகம் கொடுக்க வேண்டி இருந்த பல்வேறு சவால்களுக்கு இடையிலும் 2013 இல், அதன் தொழிற்பாடுகள் தொடர்ந்தும் முன்னேற்றம் அடைந்து வந்தன.

2013 இல் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் உள்ளடங்கலாக, காப்புறுதி தொழிலில் 21 நபர்கள் களத்தில் செயற்பட்டனர். அட்டவணை 01 இல் காண்பிக்கப்பட்டு உள்ளவாறு, முன்னைய ஆண்டின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமான ரூபா 87,171 மில்லியனுடன் ஒப்பிடும் போது, காப்புறுதி கம்பனிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட ஒட்டு மொத்தமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 94,483 ஆக இருந்தது. காப்புறுதி கம்பனிகளினால் உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு வேலை நிறுத்தம் கலவரம் சமூக கிளர்ச்சிகள் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றிற்கு தவணைக் கட்டணம் ரூபா 3,107 மில்லியனாகவும், அதனையும் சேர்த்து, 2013 இல் கூட்டு மொத்தமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத் தொகை ரூபா 97,590 மில்லியனாகவும் காணப்பட்டது. (2012 : ரூபா 89,410 மில்லியன்) காப்புறுதி தொழில் 2012 இல் பதிவு செய்த 11.06% உடன் ஒப்பிடும் போது 2013 இல் 8.39% மாக அது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண வளர்ச்சி வீதத்தை பதிவு செய்தது.

நீண்டகால காப்புறுதி வர்த்தகம், ஆண்டின் போது ரூபா 41,306 மில்லியனை தவணைக் கட்டண வருமானமாக பதிவு செய்து 10.22% இனால் வளர்ச்சி அடைந்தது. 2013 இல் நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் தவணைக் கட்டண வளர்ச்சி, முக்கிமாக வேறுபட்ட நட்ட உத்தரவாதம் அளித்தல் மற்றும் உற்பத்தி மூலோபாயங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டன. மூலதனங்கள், சேமிப்புகள் மற்றும் ஓய்வு பெறல்கள் என்பவற்றுடன் இணைந்த உற்பத்திகள் மீது கம்பனிகள் அதிக அவதானத்தை செலுத்தின.

கடந்த ஆண்டுகளைப் போலவே 2013 இல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் 56.28% வீத பங்குகளுடன் பொது காப்புறுதி வர்த்தகம் சந்தையில் முன்னணியில் இருந்தது. 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 49,694 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2013 இல் பொது காப்புறுதி வர்த்தகத்தின் தவணைக் கட்டண வருமானமாக ரூபா 53,177 மில்லியன் பதிவு செய்யப்பட்டது. ஆண்டிற்று ஆண்டு, பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 7.01% இனால் வளர்ச்சி அடைந்தது.

2013 ஆம் ஆண்டில், காப்புறுதி தவணைக் கட்டணம் என கூறப்படும் காப்புறுதி ஊடுருவல், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சத வீதத்தில் 1.09 ஆக இருந்தது. நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் ஊடுருவல் 2013 இல் 0.48% (2012.0.49) ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மிகக் குறைந்த அளவான வீழ்ச்சியையும் பதிவு செய்தது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக, மாற்ற முடியாத அமைவாக நீண்டகால காப்புறுதி வர்த்தகம் வளர்ச்சி அடைந்தது. ஆயினும் காப்புறுதி குறித்த பொது மக்களின் கண்ணோட்டம் விழிப்புணர்வு போதுமானதாக இல்லாதிருந்தது. கொள்கை முகாமைத்துவத்தில் நிலவிய திறமையின்மைகள் போன்ற பல்வேறு காரணங்களினால், நீண்டகால காப்புறுதி ஊடுருவல் ஒப்பீட்டு அளவில் குறைவாகவே காணப்பட்டது. 2012 இல் 0.66 யை பதிவு செய்த பொது காப்புறுதி வர்த்தகத்தின் ஊடுருவலும் 2013 இல் 0.61 ஆக குறைவடைந்ததை கவனிக்க முடிந்தது.

காப்புறுதியின் அடர்த்தி எனப்படும், மொத்த சனத் தொகையின் தவணைக் கட்டண விகிதம் கடந்த 5 ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக அதிகரித்தது. காப்புறுதியின் அடர்த்தியாக 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 4,288 உடன் ஒப்பிடும் போது 2013 இல் காப்புறுதியின் அடர்த்தி ரூபா 4,613 என பதிவு செய்யப்பட்டது.

*அட்டவணை 01*

***தவணைக் கட்டண வருமானமும் ஊடுருவலும்***

| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 24,005 | 31,152 | 35,162 | 37,477 | 41,306 |
| பொது காப்புறுதி (ரூ. மில்) | 33,548 | 35,101 | 43,329 | 49,694 | 53,177 |
| மொத்த தவணைக் கட்டண வருமானம் (ரூ. மில்) | 57,553 | 66,253 | 78,491 | 87,171 | 94,483 |
| மொத்த தவணைக் கட்டணத்தில் வளர்ச்சி வீதம் (%) | (1.06) | 15.12 | 18.47 | 11.06 | 8.39 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (ரூ. யில்)* | 4,835 | 5,604 | 6,544 | 7,579 | 8,674 |
| மொ.உ.உ. வளர்ச்சி வீதம் (%)* | 3.5 | 8.0 | 8.2 | 6.3 | 7.3 |
| ஊடுருவல் (மொ.உ.உ. இன் % இல் மொத்த தொழில் தவணைக் கட்டணம்) | 1.19 | 1.18 | 1.20 | 1.15 | 1.09 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.50 | 0.56 | 0.54 | 0.49 | 0.48 |
| ஊடுருவல் % (மொ.உ.உ. இன் % இல் பொது காப்புறுதி வியாபாரத்தின் தவணைக் கட்டணம்) | 0.69 | 0.63 | 0.66 | 0.66 | 0.61 |
| காப்புறுதி செறிவு (மொத்த தொழில் தவணைக் கட்டண வருமானம் / சனத்தொகை) (ரூ.) | 2,814 | 3,208 | 3,761 | 4,288 | 4,613 |
| ஆண்டின் மத்தியில் சனத்தொகை ('000*) | 20,450 | 20,653 | 20,869 | 20,328 | 20,483 |

**மூலகம்: குடிமதிப்பீடு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்*
*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*

2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை*

3) *2009 ஆம் ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் இருந்து நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

## காப்புறுதி கம்பனிகளின் மொத்த சொத்துகள்

அட்டவணை 02 இல் காண்பிக்கப்பட்டு உள்ளவாறு, 2012 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட ரூபா 315,817 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டின் இறுதியில் காப்புறுதி கம்பனிகள் வைத்திருந்த மொத்த சொத்துகளின் தொகை ரூபா 356,566 மில்லியனாக இருந்தது. சொத்துகளின் வளர்ச்சி வீதம் பொருளாதாரத்துடன் இணைந்த வளர்ச்சியாக 12.90% மாக தொடர்ந்தும் இருந்தது. எவ்வாறாயினும் 2012 இல் பதிவு செய்யப்பட்ட 20.81% வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டில் சொத்துகளின் வளர்ச்சி வீதம் கணிசமான அளவு குறைவடைந்தது.

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் தொகை ரூபா 217,004 மில்லியனாக இருந்தது. (2012 இல் ரூபா 190,642 மில்) எஞ்சிய சொத்துகளின் பெறுமதியான ரூபா 146,778 மில்லியன் (2012 இல் ரூபா 131,202 மில்லியன்) பொது காப்புறுதி வர்த்தகத்திற்கும் மற்றும் பங்குடமையாளர்களுக்கும் உரித்துடையதாக இருந்தது. ஆண்டிற்கு ஆண்டு, நீண்டகால காப்புறுதி வர்த்தகம் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகம் ஆகியவை முறையே 13.83% மாகவும், 11.87% மாகவும் வளர்ச்சி அடைந்தன. 2009 இலிருந்து 2013 வரையான, காப்புறுதி தொழிலின் மொத்த சொத்துகளையும், சொத்துகளின் வளர்ச்சி வீதங்களையும் வரைபடம் 01 காண்பிக்கின்றது.

***அட்டவணை 02***

**காப்புறுதி கம்பனிகளின் சொத்துகள்**

| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| நீண்டகால காப்புறுதி (ரூ. மில்) | 118,305 | 139,647 | 165,519 | 190,642 | 217,004 |
| பொது காப்புறுதியும் பங்குரிமையாளர்களும் (ரூ. மில்) | 62,740 | 82,450 | 100,192 | 131,202 | 146,778 |
| **மொத்தம்** | **181,045** | ***219,102** | ***261,412** | ***315,817** | ***356,566** |

** அட்டவணை 3 இற்கு அமைவாக, கலவை காப்புறுதி கம்பனிகளின் கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத்தல்கள் (நீண்டகாலம் மற்றும் பொது) என்பவை நீக்கப்பட்டுள்ளன.*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*


*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1. *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*
2. *2009 ஆம் ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட்இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டில் இருந்து நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை, என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*
3. *நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தின் கீழ, அலையன்ஸ் லைப், ஆர்பிகோ, எல்ஜசி ஆகியவற்றின் பங்குடமையாளர்களுக்கு உரித்தடைய சொத்துகள் அறிக்கையிடப்பட்டுள்ன.*

***வரைபடம் 01***

**காப்புறுதி தொழிலின் மொத்த சொத்துகளும் மற்றும் சொத்துகளின் வளர்ச்சி வீதமும்**




அ) மீள்தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள் ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளின் சொத்துகளின் வினியோகம்

அட்டவணை 03 மற்றும் வரைபடம் 02 ஆகியவை, 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, கம்பனிவாரியாக சொத்துகளின் வினியோகத்தைக் காண்பிக்கின்றன. பிரிவுகளுக்கு இடையிலான நிலுவையான ரூபா 7,216 மில்லியனை தவிர்த்ததன் பின்னர் காப்புறுதி கம்பனிகளுக்கு சொந்தமான மொத்த சொத்துகள் ரூபா 356,566 மில்லியனாக இருந்தது. 2013 இல் மொத்த சொத்துகளின் 40.08% யை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ரூபா 142,905 மில்லியன் சொத்துகளுடன் தொடர்ந்தும் உச்ச ஸ்தானத்தை தக்கவைத்துக் கொண்டது. காப்புறுதி வியாபாரத்தை வகுப்பு ரீதியாக நோக்கும் போது, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 36.98% சொத்துகளை நீண்டகால காப்புறுதி வியாபாரத்திலும், 42.69% சொத்துகளை பொது காப்புறுதி வியாபாரம் மற்றும் பங்குடைமையாளர்கள் ஆகியவற்றிலும் பிரதிநிதித்துவம் செய்தது.

ரூபா 81,574 மில்லியனை (22.88%) பதிவு செய்து சொத்துகளின் இரண்டாவது பெரிய உரிமையாளராக, சிலிங்கோ இருந்தது. அடுத்த இடத்தில் AIA (ரூபா 44,158 மில்லியன் 12.38%) யும் தொடர்ந்து யுஏஎல் (ரூபா 30,061 மில்லியன் 8.43%) மற்றும் ஜனசக்தி (ரூபா 18,246 மில்லியன் 5.12%) என்பவையும் இருந்தன.

மொத்த சொத்துகளின் 88.89% இற்கு அந்த ஐந்து காப்புறுதி கம்பனிகளும் உரிமையாளர்களாக இருந்த அதே நேரத்தில் எஞ்சிய 11.11% மான சொத்துகளுக்கு ஏனைய 15 காப்புறுதி கம்பனிகளும் உரிமையார்களாக இருந்தன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, அனைத்து காப்புறுதி கம்பனிகளின் சொத்துகளும் அதிகரித்திருப்பதை அவதானிக்க முடிந்தது. குறிப்பாக அலையன்ஸ் லைப் (Allianz Life) 72.06% அலையன்ஸ் ஜெனரல் Allianz Gen (38.46) மற்றும் ஏஐஜி (AIG) 36.58% என்பவற்றின் வளர்ச்சி வீதங்கள் அதிகரித்திருப்பது பதிவாகி உள்ளது.

***அட்டவணை 03***

**கம்பனி - ரீதியாக மொத்த சொத்துகளின் பகுப்பாய்வு**

| காப்புறுதி | சொத்துகளின் பங்கீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2012 (அ) | | | | | 2013 (ஆ) | | | | |
| | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி பங்குரிமையாளர் (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத் தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % | நீண்டகால காப்புறுதி (ரூ.'000) | பொது காப்புறுதி: பங்குரிமையாளர் (ரூ.'000) | கொடுக்கல் வாங்கல்களின் உள்வகைப்படுத் தல்களின் நீக்கம் (ரூ.'000) | மொத்தம் (ரூ.'000) | % |
| ஏஐஏ | 33,250,987 | 7,695,830 | 189 | 40,946,628 | 12.97 | 35,442,431 | 8,742,090 | 26,385 | 44,158,136 | 12.38 |
| ஏஐஜி | - | 877,850 | - | 877,850 | 0.28 | - | 1,198,947 | - | 1,198,947 | 0.34 |
| அலையன்ஸ் பொது | - | 1,970,061 | - | 1,970,061 | 0.62 | - | 2,727,780 | - | 2,727,780 | 0.77 |
| அலையன்ஸ் ஆயுள் | 621,738 | - | - | 621,738 | 0.20 | 1,069,784 | - | - | 1,069,784 | 0.30 |
| அமானா டக்காபுல் | 799,002 | 1,437,353 | 66,277 | 2,170,078 | 0.69 | 1,006,856 | 1,602,460 | 44,253 | 2,565,063 | 0.72 |
| ஆர்ப்பிக்கோ | 574,549 | - | - | 574,549 | 0.18 | 740,875 | - | - | 740,875 | 0.21 |
| ஏசியன் அலையன்ஸ் | 3,396,594 | 2,309,537 | - | 5,706,131 | 1.81 | 4,418,928 | 2,921,100 | - | 7,340,028 | 2.06 |
| சிலிங்கோ | 47,823,738 | 25,321,135 | 4,809,161 | 68,335,712 | 21.64 | 57,204,038 | 30,853,084 | 6,483,228 | 81,573,894 | 22.88 |
| கொண்டினன்டல் | - | 1,313,231 | - | 1,313,231 | 0.42 | - | 1,415,145 | - | 1,415,145 | 0.40 |
| கோபரேடிங் | 706,116 | 1,638,413 | 24,584 | 2,319,945 | 0.73 | 832,844 | 2,176,431 | 6,386 | 3,002,889 | 0.84 |
| எச்என்பிஏ | 3,875,310 | 3,143,968 | - | 7,019,278 | 2.22 | 4,598,540 | 3,436,137 | - | 8,034,677 | 2.25 |
| ஜனசக்தி | 6,854,363 | 9,580,533 | - | 16,434,896 | 5.20 | 7,553,509 | 10,692,654 | - | 18,246,163 | 5.12 |
| எல்ஐசி | 1,404,322 | - | - | 1,404,322 | 0.44 | 1,666,226 | - | - | 1,666,226 | 0.47 |
| லோலெக் | 125,900 | 1,808,243 | 3,814 | 1,930,329 | 0.61 | 291,199 | 2,073,617 | 6,398 | 2,358,418 | 0.66 |
| எம்பிஎஸ்எல் | 191,718 | 1,113,219 | - | 1,304,937 | 0.41 | 257,450 | 1,270,345 | - | 1,527,795 | 0.43 |
| ஓரியன்ட் | - | 928,425 | - | 928,425 | 0.29 | - | 929,206 | - | 929,206 | 0.26 |
| பீபள்ஸ் | - | 3,163,419 | - | 3,163,419 | 1.00 | - | 3,853,669 | - | 3,853,669 | 1.08 |
| சனச | 363,054 | 595,524 | - | 958,578 | 0.30 | 572,540 | 617,857 | - | 1,190,397 | 0.33 |
| எஸ்எல்ஐசி | 72,615,041 | 59,767,334 | 282,157 | 132,100,218 | 41.83 | 80,245,761 | 62,659,721 | - | 142,905,482 | 40.08 |
| யுஏஎல் | 18,039,393 | 8,537,445 | 839,915 | 25,736,923 | 8.15 | 21,103,511 | 9,607,354 | 649,778 | 30,061,087 | 8.43 |
| **மொத்தம்** | **190,641,825** | **131,201,520** | **6,026,097** | **315,817,248** | **100** | **217,004,492** | **146,777,597** | **7,216,428** | **356,565,661** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*


*குறிப்புகள்:*

1. *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*
2. *ஒவ்வொரு வகைப்படுத்தலிலிருந்தும் கிடைக்க வேண்டியவற்றின் தொகைகள் உள்வகைப்படுத்தலின் மீதிகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாக கலவை காப்புறுதி கம்பனி வகைப்படுத்தலின் நீண்டகால மற்றும் பொது காப்புறுதி வகைப்படுத்தல்.*
3. *அலையன்ஸ் ஆயுள், ஆர்பிக்கோ மற்றும் எல்ஐசி பங்குரிமையாளர்களுக்கு சொந்தமான சொத்துகள், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் அறிக்கையிடப்பட்டுள்ளன.*

# புள்ளிவிபர மீளாய்வு

*வரைபடம் 02*

**கம்பனி ரீதியாக சொத்துகளின் அவதானிப்பின் பகுப்பாய்வு 2013 டிசம்பர் 31**




**காப்புறுதி கம்பனிகளின் பங்குதாரர் நிதிகள்**

அட்டவணை 04இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு காப்புறுதி கம்பனிகளின் மொத்த பங்குரிமையாளர்களின் நிதிகள் 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட ரூபா 74,023 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 84,407 மில்லியனாக இருந்தது. இது பங்கு மூலதனமான ரூபா 20,551 மில்லியனையும் (2012: ரூபா 20,137 மில்லியன்) ஒதுக்குகளான ரூபா 63.856 மில்லியனையும் (2012: ரூபா 53,886 மில்லியன்) உள்ளடக்கியதாகும்.

2012ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மொத்த பங்குதாரர் நிதியம் 14.03% அதிகரிப்பைக் கொண்டிருந்தது. அதற்கு முக்கிய காரணமாக இருந்தது, 18.50%மாக இருந்த ஒதுக்கங்களின் அதிகரிப்பாகும். 51.94% (2012: 54.86%) வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் பெரும்பான்மையான பங்குதாரர் நிதிகளை வைத்திருந்தது. அதனைத் தொடர்ந்து சிலிங்கோ 17.81%ஐ (2012: 15.57% (வைத்திருந்தது. மேலும், 2013 இல் ரூபா 15,036 மில்லியனாக 30.48% இனால் சிலிங்கோவின் பங்குதாரர் நிதியங்கள் அதிகரிப்பு அடைந்தன. மொத்த பங்குதாரர் நிதியத்தின் முறையே 5.65% ஐயும் 5.38% ஐயும் சொந்தமாக்கிக் கொண்டிருந்த யுஏஎல் மற்றும் ஏஐஏ என்பன மூன்றாவது மற்றும் நான்காவது இடங்களைப் பெற்றன. ஆண்டிற்கு ஆண்டு முறையே 17.37% மாகவும் 12.97% மாகவும் யுஏஎல் இனதும் ஏஐஏ இனதும் பங்குதாரர் நிதியங்கள் அதிகரித்தன.

காப்புறுதி கம்பனிகளின் மொத்த பங்குதாரர் நிதியத்தில் ஜனசக்தி ரூபா 4,028 மில்லியன் (2011: ரூ. 3,376 மில்லியன்) நிதியை பதிவு செய்து, 4.77% உரிமையை பெற்றதுடன் ஐந்தாவது இடத்திலும் இருந்தது.

அலையன்ஸ் லைப், மற்றும் ஏஐஜி ஆகியவை எதிர்மறையான ஒதுக்குகளை பதிவு செய்த நிலமையிலும், 2012 உடன் ஒப்பிடும் போது இக் கம்பனிகளின் பங்குதாரர் நிதியங்கள் முறையே 68.86% மாகவும் 49.48% மாகவும் அதிரித்தது. 2013 ஆம் ஆண்டின் இறுதியில் இருபது கம்பனிகளில் ஆறு கம்பனிகள் எதிர்மறையான ஒதுக்குகளை பதிவு செய்தன.

# புள்ளிவிபர மீளாய்வு

*அட்டவணை 04*

***காப்புறுதி கம்பனிகளின் மொத்த பங்குரிமையாளர்கள் நிதிகள்***

| காப்புறுதி வழங்குனர்கள் | 2012(அ) | | 2013(ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த பங்குரிமை யாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % | பங்கு மூலதனம் (ரூ. '000) | மொத்த ஒதுக்கங்கள் (ரூ. '000) | மொத்த பங்குரிமை யாளர்களின் நிதிகள் (ரூ. '000) | % |
| ஏஜஏ | 4,017,462 | 5.43 | 300,000 | 4,238,450 | 4,538,450 | 5.38 |
| ஏஜஜி | 229,339 | 0.31 | 536,265 | (193,459) | 342,806 | 0.41 |
| அலையன்ஸ் பொது | 780,285 | 1.05 | 250,000 | 624,849 | 874,849 | 1.04 |
| அலையன்ஸ் ஆயுள் | 155,105 | 0.21 | 592,624 | (330,710) | 261,914 | 0.31 |
| அமானா டக்காபுல் | 837,987 | 1.13 | 1,250,001 | (343,269) | 906,732 | 1.07 |
| ஆர்ப்பிக்கோ | 470,459 | 0.64 | 563,000 | (46,334) | 516,666 | 0.61 |
| ஏசியன் அலையன்ஸ் | 1,424,951 | 1.93 | 1,062,500 | 667,214 | 1,729,714 | 2.05 |
| சிலிங்கோ | 11,523,688 | 15.57 | 1,324,822 | 13,710,905 | 15,035,727 | 17.81 |
| கொண்டினன்டல் | 504,078 | 0.68 | 500,000 | 67,276 | 567,276 | 0.67 |
| கோபரேடிங் | 750,943 | 1.01 | 632,020 | 360,945 | 992,965 | 1.18 |
| எச்என்பிஏ | 1,868,281 | 2.52 | 1,171,875 | 944,741 | 2,116,616 | 2.51 |
| ஜனசக்தி | 3,376,380 | 4.56 | 1,496,000 | 2,532,491 | 4,028,491 | 4.77 |
| எல்ஐசி | 508,724 | 0.69 | 500,000 | 89,632 | 589,632 | 0.70 |
| லோலெக் | 586,357 | 0.79 | 650,000 | 65,244 | 715,244 | 0.85 |
| எம்பிஎஸ்எல் | 400,851 | 0.54 | 880,724 | (481,673) | 399,051 | 0.47 |
| ஓரியன்ட் | 673,561 | 0.91 | 750,000 | (69,670) | 680,330 | 0.81 |
| பீபள்ஸ் | 863,002 | 1.17 | 600,000 | 484,881 | 1,084,881 | 1.29 |
| சனச | 377,602 | 0.51 | 352,922 | 63,789 | 416,711 | 0.49 |
| எஸ்எல்ஐசி | 40,609,497 | 54.86 | 6,000,000 | 37,837,829 | 43,837,829 | 51.94 |
| யுஏஎல் | 4,064,678 | 5.49 | 1,138,432 | 3,632,439 | 4,770,871 | 5.65 |
| **மொத்தம்** | **74,023,230** | **100** | **20,551,185** | **63,855,570** | **84,406,755** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

குறிப்புகள்:
1. *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

### பாரிய நிதித் துறைகளின் மொத்த சொத்துகளின் வினியோகம்

அட்டவணை 05 இல் காட்டப்பட்டுள்ளவாறு, 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 9,070 பில்லியன் சொத்துகளுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டின் இறுதியில் நிதி துறைகளின் மொத்த சொத்துகள் ரூபா 10,314 பில்லியனாக இருந்தது. இது 13.72% வளர்ச்சியை சுட்டிக் காட்டியது. எவ்வாறாயினும், கடந்த மூன்று ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட 17% சராசரி வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது, 2013 இல் இந்த நிதி நிறுவனங்களின் சொத்துகளின் வளர்ச்சி வீதத்தில் ஒரு குறைவு காணப்பட்டது. 2013 இல் ஏனைய வைப்புகள் பெறும் நிதி நிறுவனங்களும், சிறப்பு நிதி நிறுவனங்களும் முறையே 21.76% மற்றும் 21.10% வளர்ச்சியை பதிவு செய்தன. ஒப்பீடு செய்யும் போது வங்கித் துறை, ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள், மற்றும் காப்புறுதி கம்பனிகள் என்பவை முறையே 12.71%, 13.30% மற்றும் 12.9% எனும் மிதமான வளர்ச்சியை பதிவு செய்தன.

அட்டவணை 05 மற்றும் வரைபடம் 03 இற்கு அமைவாக, வங்கித் துறை ரூபா 7,187.5 பில்லியன் சொத்துகளை அறிக்கை இட்டது. இது பாரிய நிதி நிறுவனங்களின் மொத்த சொத்துகளின் 69.7% யை பிரதிநிதித்துவம் செய்தது. ரூபா 1,637.9 பில்லியன் சொத்துகளுடன் ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள் அதனை தொடர்ந்தன. ஏனைய வைப்புகள் பெறும் நிதி நிறுவனங்கள் மற்றும் சிறப்பு நிதி நிறுவனங்கள் ஆகியவை மொத்த சொத்துகளில் தமது பங்கை அதிகரிப்பதுடன், முறையே 7.3% மற்றும் 3.6% என பிரதிநிதித்துவம் செய்தன. காப்புறுதி கம்பனிகளின் பங்கு 3.5% மாக நிலையாக இருந்தது.

*அட்டவணை 05*

**பாரிய நிதி துறைகளின் மொத்த சொத்துகளின் பங்கீடு**

| நிதியியல் துறைகள் | சொத்துகளின் பங்கீடு | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | | 2010 | | 2011 | | 2012 (அ) | | 2013 (ஆ) | |
| | ரூ.பில்லியன் | % | ரூ.பில்லியன் | % | ரூ.பில்லியன் | % | ரூ.பில்லியன் | % | ரூ.பில்லியன் | % |
| வங்கித்துறை | 3,832.0 | 68.2 | 4,527.3 | 68.9 | 5,375.6 | 69.7 | 6,377.0 | 70.3 | 7,187.5 | 69.7 |
| ஏனைய வைப்புகள் எடுக்கும் நிதி நிறுவனங்கள் | 315.1 | 5.6 | 295.0 | 4.5 | 427.1 | 5.5 | 621.2 | 6.9 | 756.4 | 7.3 |
| விசேட நிதி நிறுவனங்கள் | 265.3 | 4.7 | 354.3 | 5.4 | 338.8 | 4.4 | 310.4 | 3.4 | 375.9 | 3.6 |
| ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்கள் | 1,022.6 | 18.3 | 1,178.7 | 17.9 | 1,305.4 | 16.9 | 1,445.6 | 15.9 | 1,637.9 | 15.9 |
| காப்புறுதி கம்பனிகள் | 181.0 | 3.2 | 219.10 | 3.3 | 261.4 | 3.4 | 315.8(அ) | 3.5 | 356.6(ஆ) | 3.5 |
| **மொத்தம்** | **5,616.0** | **100** | **6,574.4** | **100** | **7,708.3** | **100** | **9,070.0** | **100** | **10,314.3** | **100** |


*மூலகம்: இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கை 2013 காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து (சபைக்கு கிடைத்த தரவுகளின் அடிப்படையில் காப்புறுதி கம்மபனிகள் மற்றும் ஒப்பந்தம் செய்த சேமிப்பு நிறுவனங்களின் சொத்துகள் மீள் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*வரைபடம் 03*

**பாரிய நிதி துறைகளின் சொத்துகளின் பங்கீடு - 31 டிசம்பர் 2013 அன்றுள்ளவாறு**



# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளின் சந்தைப்படுத்தல் கட்டமைப்பு

காப்புறுதி கம்பனிகள் அவற்றின் சந்தைப் பங்குகளை வெல்லுவதற்கு பல்வேறு மூலோபாயங்களை கைக்கொள்கின்றன. அண்மைக் காலமாக, காப்புறுதி கம்பனிகள் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நோக்கங்களை முக்கியமாக மோட்டர் வாகன காப்புறுதி போன்ற உற்பத்திகளை மின் சேவைகளூடாக விருத்தி செய்து வருகின்றன. மேலும், குறிப்பிட்ட சில கம்பனிகள் குழுமங்களாக ஒன்று திரள்வதன் ஊடாக நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றன. வேறு சில கம்பனிகள் தமக்கு ஏற்ற பிரிவுகள் மற்றும் சிறு காப்புறுதி போன்ற துறைகளில் தமது கவனத்தை செலுத்துகின்றன.

### பணியாளர்கள்

இலங்கையின் தொழில் வாய்ப்பிற்கு, காப்புறுதி கம்பனிகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பெரிய அளவில் பங்களிப்பு செய்கின்றன. அட்டவணை 06 இற்கு அமைவாக காப்புறுதி தொழிலில் 13,764 (2012: 12,471) பணியாளர்கள் நேரடியாக பணி புரிந்தனர். பெரும்பான்மையான பணியாளர்கள் மேற்கு மாகாணத்தில் காணப்பட்டதுடன் 62.58% பிரதிநிதித்துவம் செய்தனர். அதனை தொடர்ந்து தென் மாகாணத்தில் (7.60%) ஆகவும் மத்திய மாகாணத்தில் (7.49%) ஆகவும், வட மேற்கு மாகாணத்தில் (5.44%) ஆகவும் பிரதிநிதித்துவம் செய்தனர். ஏனைய அனைத்து மாகாணங்களும், மொத்த பணியாளர்கள் தொகையின் 5% இற்கும் குறைவான பணியாளர்களையே பதிவு செய்தன.

### கிளை வலையமைப்பு

காப்புறுதி கம்பனிகளின் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 2013 இல் 1,379 (2012: 1,184) ஆக இருந்தது. பொது காப்புறுதி (389) நீண்டகால காப்புறுதி (466) மற்றும் கலவை காப்புறுதி (529) வர்த்தகம் ஆகியவற்றை மேற்கொண்ட கிளைகளும் இவற்றில் உள்ளடங்கும். மேற்கு மாகாணம் தொடர்ந்தும், காப்புறுதி தொழிலில் ஆதிக்கம் செலுத்தும் சந்தையாக இருந்து, இங்கு காப்புறுதி கம்பனிகளின் 489 கிளைகள் காணப்பட்டன. மேலும், காப்புறுதி கம்பனிகள் 195 புதிய கிளைகளை சேர்த்து தனது கிளை வலையமைப்பை விரிவாக்கியது. இவற்றில் 99 புதிய கிளைகள் மேற்கு மாகாணத்தில் அமைந்து இருந்தன. காப்புறுதி வைப்பாளர்களுக்கு காப்புறுதி வசதிகள் கிடைப்பதை முன்னேற்றுவதற்காக ஊவா மாகாணத்தை தவிர அனைத்து மாகாணங்களிலும் ஏனைய புதிய கிளைகள் பரவலாக அமைக்கப்பட்டன. 2012 இல் ஊவா மாகாணத்தில் இருந்து 79 கிளைகள் 2013 இல் 67 ஆக குறைவடைந்தது.

*அட்டவணை 06*

***2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறும் 2012 இலும் செயற்பட்ட கிளைகள் பணியாட்கள் மற்றும் முகவர்களின் எண்ணிக்கை***

| மாகாணம் | கிளைகளின் எண்ணிக்கை | | தலைமையக பணியாட்களின் உள்ளடங்கலாக பணியாட்களின் எண்ணிக்கை | | முகவர்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2012 | 2013 | 2012 | 2013 | 2012 |
| மத்திய மாகாணம் | 126 | 112 | 1,031 | 800 | 3,820 | 3,338 |
| கிழக்கு மாகாணம் | 86 | 71 | 404 | 343 | 1,773 | 1,916 |
| வட மத்திய மாகாணம் | 97 | 95 | 603 | 540 | 2,324 | 2,363 |
| வட மேற்கு மாகாணம் | 126 | 116 | 749 | 780 | 3,613 | 3,592 |
| வடக்கு மாகாணம் | 108 | 83 | 421 | 364 | 2,945 | 2,704 |
| சம்பரகமுவ மாகாணம் | 104 | 95 | 535 | 500 | 2,611 | 2,257 |
| தென் மாகாணம் | 176 | 143 | 1,046 | 948 | 4,637 | 4,080 |
| ஊவா மாகாணம் | 67 | 79 | 362 | 492 | 2,294 | 2,200 |
| மேல் மாகாணம் | 489 | 390 | 8,613 | 7,704 | 14,618 | 14,351 |
| **மொத்தம்** | **1,379** | **1,184** | **13,764** | **12,471** | **38,635** | **36,801** |

*குறிப்புகள்:*

*சபைக்கு தேவைப்படும் தகவல்கள் அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*


### காப்புறுதியாளர்களின் முகவர்கள்

2013 ஆம் ஆண்டில், காப்புறுதி சந்தையில், 38,635 (2012: 36,801) முகவர்கள் செயற்பட்டனர். நீண்டகால காப்புறுதி வர்த்தகம் முகவர்கள் மீதே பிரதானமாக தங்கியிருந்தது. 20,909 முகவர்கள் ஆயுட் காப்புறுதி உற்பத்திகளை மட்டுமே விற்பனை செய்தனர். மேலும், 13,649 முகவர்கள் ஆயுள் மற்றும் பொது காப்புறுதி உற்பத்திகள் இரண்டையும் விற்பனை செய்வதில் ஈடுபட்டனர். அதே நேரம் பொது காப்புறுதி உற்பத்திகளை மட்டுமே விற்பனை செய்வதில் 4,077 முகவர்கள் ஈடுபட்டனர்.

வரைபடம் 04, 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கிளைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு மாகாணத்திலும் செயற்பட்ட பணியாளர்கள் மற்றும் முகவர்கள் தொடர்பான விபரங்கள் என்பவற்றை வழங்குகின்றன.

*வரைபடம் 04*

***2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு கிளை வலையமைப்பு, பணியாளர்கள் மற்றும் முகவர்கள்***



# புள்ளிவிபர மீளாய்வு


### காப்புறுதி கம்பனிகளின் வினியோக வழிகள்

நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் பிரதான வினியோக வழியாக முகவர்கள் தொடர்ந்தும் இருந்தனர். 2013 இல் முகவர்கள் ஊடாக எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 91.22% மாக இருந்தது. ஏனைய வழிகள் ஊடாக எழுதப்பட்ட நீண்டகால காப்புறுதி தவணைக் கட்டணம் நேரடியான சந்தைப்படுத்தல் (5.96%) மாகவும் வங்கியுடனினைந்த காப்புறுதி (2.36%) மாகவும் மற்றும் தரகுக் கம்பனிகள் (0.46%) ஊடாகவும் பெறப்பட்டது.

நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தை போலன்றி, பொது காப்புறுதி உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு ஒன்றிற்கும் மேற்பட்ட வினியோக வழிமுறைகளை, காப்புறுதி கம்பனிகள் பயன்படுத்திக் கொள்கின்றன. வரைபடம் 05 இல் காண்பிக்கப்பட்டுள்ளதைப் போன்று, 2012 இல் நிலவிய 47.38% உடன் ஒப்பிடும் போது 2013 இன் ஒட்டு மொத்தமான மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின், நேரடி சந்தைப்படுத்தல் ஊடாக எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 50.17% இனால் உயர்வடைந்தது. மேலும் ஏனைய வினியோக வழிகளுடன் ஒப்பிடும் போது 2011 இல் இருந்து, நேரடி சந்தைப்படுத்தல் படிப்படியாக வளர்ச்சியடைந்ததையும் அது சுட்டிக் காட்டியது. முகவர்கள் தொடர்ந்தும் இரண்டாவது மிகப் பெரிய வினியோக வழியாக இருந்ததுடன், 2013 ஆம் ஆண்டில், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 22.16% மாகவும் கணக்கிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக, 2013 ஆம் ஆண்டில் தரகுக் கம்பனிகள் மற்றும் வங்கியுடனிணைந்த காப்புறுதியிலிருந்து பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்திற்கு கிடைத்த பங்களிப்பு முறையே 20.98% மற்றும் 2.44% ஆக இருந்தது.

*வரைபடம் 05*

***காப்புறுதி கம்பனிகளின் விநியோக வழிகள்***




| | நீண்டகாலம் | பொதுவான | நீண்டகாலம் | பொதுவான |
|---|---|---|---|---|
| | 2012 | | 2013 | |
| முகவர்கள் | 92.69 | 24.30 | 91.22 | 22.16 |
| தரகர்கள் | 0.52 | 21.28 | 0.46 | 20.98 |
| நேரடி | 4.89 | 47.38 | 5.96 | 50.17 |
| பன்கா இன்ஸ்யூரன்ஸ் | 1.90 | 2.66 | 2.36 | 2.44 |
| ஏனையவை | - | 4.38 | - | 4.26 |

# புள்ளிவிபர மீளாய்வு

### நீண்ட கால காப்புறுதி வர்த்தகம்

#### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டண தொகை, 2013 ஆம் ஆண்டில் ரூபா 41,306 மில்லியனாக (2012: 37,477 மில்லியன்) இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 10.22% வளர்ச்சியாக இருந்தது. ஒப்பீட்டு அளவில் 2012 ஆம் ஆண்டில் 6.58% இனால் நீண்ட கால காப்புறுதி தொழிலின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் வளர்ச்சி அடைந்தது. மேலும், நீண்டகால வர்த்தகத்தின் ஊடுருவல் மட்டம் குறைந்ததாகவே இருப்பதாக அறிவிக்கப்பட்டதாயினும் 2009 ஆம் ஆண்டிற்கும் 2013 ஆம் ஆண்டிற்கும் இடையில் 72.07% இனால், நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் அதிகரித்துக் காணப்பட்டது.

சந்தை பங்குகளில் மிகவும் சிறிய அளவிலான வீழ்ச்சி நிலவிய போதும், சிலிங்கோ நிறுவனம் நீண்டகால காப்புறுதி சந்தையில் முன்னணியில் இருந்ததுடன் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் ரூபா 11,123 மில்லியனையும் (2012: ரூபா 10,829 மில்லியன்) சந்தை பங்கில் 26.93% ஐயும் (2012: 28.90%) பதிவு செய்தது. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் 19.54% பங்குடன் சந்தையில் இரண்டாவது மிகப்பெரிய போட்டியாளராக இருந்தது. ஏஐஏ (16.62%) மும், யுஏஎல் (13.35%) மும் அதனை தொடர்ந்து காணப்பட்டன. ஏசியன் அலையன்ஸ் சந்தைப் பங்கில் 6.10% யை வென்று (2012: 5.43%) 2013 ஆம் ஆண்டில் நீண்டகால காப்புறுதி சந்தையில் தொடர்ந்தும் ஐந்தாவது இடத்தில் இருந்தது.

2012 உடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் லோலெக் (LOLC) 158.66%) ஆர்பிக்கோ (102.64%) மற்றும் அலையன்ஸ் லைப் (Alianz Life) (55.75%) அமானா டக்காபுல் (48.86%) போன்ற புதியவர்கள் இணைந்ததுடன் மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தின் கவனிக்கக் கூடிய வளர்ச்சி ஏற்பட்டது. நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் கம்பனி ரீதியான சந்தைப் பங்கை அட்டவணை 07 மற்றும் வரைபடம் 06 என்பவை விளக்குகின்றன.

*அட்டவணை 07*

**கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களும் சந்தைப் பங்கும் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2009 | | 2010 | | 2011 | | 2012(அ) | | 2013(ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ | 4,632,490 | 19.30 | 7,783,925 | 24.99 | 7,846,447 | 22.32 | 6,495,863 | 17.33 | 6,863,047 | 16.62 |
| அலையன்ஸ் ஆயுள் | 101,816 | 0.42 | 204,814 | 0.66 | 351,299 | 1.00 | 532,142 | 1.42 | 828,790 | 2.01 |
| அமானா டக்காபுல் | 207,097 | 0.86 | 240,156 | 0.77 | 303,786 | 0.86 | 364,759 | 0.97 | 542,986 | 1.31 |
| ஆர்பிக்கோ | - | - | - | - | - | - | 101,900 | 0.27 | 206,494 | 0.50 |
| ஏசியன் அலையன்ஸ் | 1,009,031 | 4.20 | 1,242,608 | 3.99 | 1,579,191 | 4.49 | 2,034,084 | 5.43 | 2,520,283 | 6.10 |
| சிலிங்கோ | 7,522,328 | 31.34 | 8,786,120 | 28.21 | 9,815,943 | 27.91 | 10,829,470 | 28.90 | 11,122,906 | 26.93 |
| கோப்பரடிவ் | 149,401 | 0.62 | 233,540 | 0.75 | 269,579 | 0.77 | 312,056 | 0.83 | 337,976 | 0.82 |
| எச்என்பிஏ | 984,866 | 4.10 | 1,084,480 | 3.48 | 1,290,367 | 3.67 | 1,500,028 | 4.00 | 2,014,547 | 4.88 |
| ஜனசக்தி | 1,431,628 | 5.96 | 1,685,409 | 5.42 | 1,871,986 | 5.32 | 2,025,075 | 5.40 | 2,150,507 | 5.21 |
| எல்ஐசி | 251,150 | 1.05 | 252,656 | 0.81 | 295,859 | 0.84 | 303,344 | 0.81 | 322,712 | 0.78 |
| லொலெக் | - | - | - | - | 51,427 | 0.15 | 106,238 | 0.28 | 274,798 | 0.67 |
| எம்பிஎஸ்எல் | 55,606 | 0.24 | 89,984 | 0.28 | 143,156 | 0.41 | 192,780 | 0.51 | 251,720 | 0.61 |
| சனசா | 61,563 | 0.26 | 73,030 | 0.23 | 128,113 | 0.36 | 203,616 | 0.54 | 283,975 | 0.69 |
| எஸ்எல்ஐசி | 4,819,860 | 20.08 | 6,009,859 | 19.29 | 6,743,073 | 19.18 | 7,369,031 | 19.66 | 8,069,964 | 19.54 |
| யுஏஎல் | 2,778,184 | 11.57 | 3,465,505 | 11.12 | 4,471,627 | 12.72 | 5,106,323 | 13.63 | 5,515,063 | 13.35 |
| மொத்தம் | **24,005,020** | **100** | **31,152,086** | **100** | **35,161,853** | **100** | **37,476,709** | **100** | **41,305,768** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **1.66** | | **29.77** | | **12.87** | | **6.58** | | **10.22** | |


*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு

***வரைபடம் 06***

**கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களின் சந்தை பங்கு - 2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நீண்டகால காப்புறுதி வியாபாரம்**





**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் உச்சத்தில் இருக்கும் ஐந்து பங்களிப்பாளர்களினதும் சந்தை பங்குகளும், ஏனைய காப்புறுதியாளர்களும் நீண்டகால காப்புறுதி வர்த்தகம்**

அட்டவணை 07 இல் காண்பிக்கப்பட்டு உள்ளவாறு, சிலிங்கோ, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், ஏஐஏ, யுஏஎல், மற்றும் ஏசியன் அலையன்ஸ் ஆகியவை சந்தையில் முதல் ஐந்து இடங்களையும் தக்க வைத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. எவ்வாறாயினும், ஏனைய பதினைந்து பேரிடம் இருந்தும் கிடைத்த உயர் மட்ட போட்டிகள், இந்த முதல் ஐந்து இடங்களிலும் இருந்து கம்பனிகளின் ஒன்று திரட்டப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சந்தைப் பங்கை குறைவு அடையச் செய்தன. 2012 இல் 84.95% மாக இருந்த சந்தைப் பங்கு 2013 ஆம் ஆண்டில் 82.54%மாக குறைவடைந்தது. வரைபடம் 07 இல் இந்த ஐந்து கம்பனிகளினதும் எனைய காப்புறுதி வழங்குனர்களினதும் சந்தைப் பங்குகளின் பகுப்பாய்வு காட்டப்பட்டு உள்ளது.

***வரைபடம் 07***

**2009 இல் இருந்து 2013 ஆம் ஆண்டு வரையான முதல் ஐந்து மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் ஏனைய காப்புறுதி வழங்குனர்களின் சந்தை பங்கு - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**




| | சிலிங்கோ | எஸ்எல்ஐசி | ஏஐஏ | யுஏஎல் | ஏசியன் அலையன்ஸ் | ஏனைய காப்புறுதியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 31.34 | 20.08 | 19.30 | 11.57 | 4.20 | 13.51 |
| 2010 | 28.21 | 19.29 | 24.99 | 11.12 | 3.99 | 12.39 |
| 2011 | 27.91 | 19.18 | 22.32 | 12.72 | 4.49 | 13.39 |
| 2012(அ) | 28.90 | 19.66 | 17.33 | 13.63 | 5.43 | 15.05 |
| 2013(ஆ) | 26.93 | 19.54 | 16.62 | 13.35 | 6.10 | 17.47 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு


**காப்புறுதி கம்பனிகளினால் உள்வாங்கப்பட்ட கோரிக்கைகள் நீண்ட கால காப்புறுதி வர்த்தகம்**

கடந்த ஐந்து ஆண்டுகளின் போதும் நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபட்ட காப்புறுதி வழங்குனர்களினால் உள்ளாக்கப்பட்ட கோரிக்கைகளை வரைபடம் 08 காண்பிக்கின்றது. 2013 ஆம் ஆண்டிற்கு கம்பனிகளால் உள்ளாக்கப்பட்ட மொத்த நீண்ட கால காப்புறுதி கோரிக்கைகளின் தொகை ரூபா 18,181 மில்லியனாக 2012 ரூபா 13,472 மில்லியன்) இருந்தது. 2012 உடன் ஒப்பிடும் போது இது 34.95% அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்தியது. முதிர்வின் கோரிக்கை தொகை ரூபா 9,728 மில்லியன் (2012: ரூபா 7,861) ஆக இருந்தது. இது மொத்த கோரிக்கைகள் 53.51% யை பிரதிநிதித்துவம் செய்தது.

2013 இன் போது கூறுகளுடன் இணைந்த ஒப்படைப்பின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. இது 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 2,824 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 5,687 மில்லியனுக்கான ஒப்படைப்பு கோரிக்கையின் விளைவாக ஏற்பட்டது. இது, 2013 ஆம் ஆண்டில் உள்ளாக்கப்பட்ட மொத்த கோரிக்கைகளின் 31.28% யை பிரதிநிதித்துவப்படுத்தியது. மரணம் தொடர்பான கோரிக்கையின் தொகை ரூபா 1,030 மில்லியனாக (2012: ரூபா 789 மில்லியன்) இருந்தது. அதே நேரம் முற்பணக் கொடுப்னவுகள், காசு போனஸ்கள், முதிர்விற்கு பின்னரான கொடுப்பனவுகள் போன்றவை உள்ளடங்களான ஏனைய கோரிக்கைகளின் தொகை 2013 இல் ரூபா 1,566 மில்லியனாகவும் (2012: ரூபா 1,921 மில்லியனாகவும்) இருந்தது.

*வரைபடம் 08*

***காப்புறுதி கம்பனிகளினால் உள்ளாக்கப்பட்ட கோரிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***




| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| ஊனமுற்றவர்களுக்கான நன்மைகள் | 38,990 | 63,296 | 31,183 | 77,717 | 169,281 |
| மரணம் | 1,150,507 | 1,073,808 | 681,111 | 789,166 | 1,030,424 |
| ஒப்படைத்தல்கள் | 2,132,216 | 2,243,555 | 2,225,506 | 2,823,924 | 5,687,033 |
| முதிர்வு நன்மைகள் | 4,841,981 | 6,441,973 | 6,242,096 | 7,860,715 | 9,728,046 |
| ஏனையவை | 1,269,225 | 1,792,890 | 1,367,512 | 1,920,859 | 1,566,340 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

**காப்புறுதி கோரிக்கைகளின் எண்ணிக்கை - நிண்டகால காப்புறுதி வர்த்தகம்**

2013 இல், நீண்ட கால காப்புறுதி கம்பனிகளினால் உள்ளாக்கப்பட்ட கோரிக்கைகள் 284,103 ஆக இருந்தது. மொத்த கோரிக்கைகளின் 46% முதிர்வடைந்த கோரிக்கைகளாக இருந்தன. மேலும் நீண்டகால காப்புறுதி கோரிக்கைகளின் மொத்த எண்ணிக்கையின் 34.90% யையும் மற்றும் 14.77% யையும் முறையே ஏனைய கோரிக்கைகளும் மற்றும் ஒப்படைப்பு கோரிக்கைகளும் பிரதிநிதித்துவப்படுத்தின. 2009 இலிருந்து 2013 ஆண்டுகள் வரையிலும் உள்ளாக்கப்பட்ட நீண்டகால காப்புறுதி கோரிக்கைகளின் எண்ணிக்கை வகைப்படுத்தல் ரீதியாகவும், புள்ளிவிபர ரீதியாகவும் அட்டவணை 08 இல் விளக்கப்பட்டுள்ளது.

*அட்டவணை 08*

***காப்புறுதி கோரிக்கைகளின் எண்ணிக்கைகள் - நீண்ட கால காப்புறுதி வியாபாரம்***

| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| ஊனமுற்றவர்களுக்கான நன்மைகள் | 441 | 628 | 569 | 578 | 7,009 |
| மரணம் | 4,423 | 5,063 | 4,328 | 4,358 | 5,278 |
| ஒப்படைத்தல்கள் | 27,150 | 25,771 | 25,661 | 24,631 | 41,976 |
| முதிர்வு நன்மைகள் | 58,265 | 87,742 | 98,363 | 102,465 | 130,692 |
| ஏனையவை | 37,685 | 42,939 | 45,885 | 51,773 | 99,148 |
| **மொத்தம்** | **127,964** | **162,143** | **174,806** | **183,805** | **284,103** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு

### நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் சொத்துகள்

நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் சொத்துகளின் சேகரிப்பு அட்டவணை 09 இலும் வரைபடம் 09 இலும் காண்பிக்கப்பட்டுள்ளது. பொறுப்புகளின் நீண்ட காலத் தன்மை காரணமாக, நீண்டகால வர்த்தகத்தின் முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அளவிலான பகிரங்கப்படுத்தல் பிரதிபலிக்கப்பட்டது. நீண்டகால முதலீட்டு சாதனங்களான முக்கியமாக அரசாங்க பிணையங்கள் மற்றும் வைப்புகள் மொத்த சொத்துகளின் 62.15% (2012: 68.16%) இற்கும் அதிகமான வீதத்தை பிரதிநிதித்துவம் செய்தன.

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறாக மொத்த சொத்துகளின் 43.33% யை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதான முதலீட்டு வகைப்படுத்தலாக, தொடர்ந்தும் அரசாங்க பிணையங்கள் மீதான முதலீடுகள் காணப்பட்டன. முன்னைய ஆண்டில் பேணப்பட்ட 51.48% பங்குடன் ஒப்பிடும்போது 2013 ஆம் ஆண்டில், மொத்த சொத்துகளில் அரசாங்க பிணையத்தின் பங்குகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்து காணப்பட்டது.

பிரதான முதலீட்டு வகைப்படுத்தல்களின் ஒன்றாக வைப்புகள் தொடர்ந்தும் இருந்தன. இது சொத்துகளின் 18.82% (2012: 16.68%) யை பிரதிநிதித்துவம் செய்தது. 2013 ஆம் ஆண்டில் நிறுவன ரீதியாக கடன் சாதனங்களை நோக்கி முதலீடுகள் நகர்த்த போக்கினை அவதானிக்க முடிந்தது. முன்னைய ஆண்டின் தொகையான ரூபா 13,286 மில்லியனுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 32.934 மில்லியன் வரை நிறுவன ரீதியான கடன் முதலீடுகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. இது மொத்த சொத்துகளின் 15.18% (2012: 6.97%) யை பிரதிநிதித்துவப்படுத்தியது.

நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் நான்காவது மிகப் பெரிய சொத்து வகைப்படுத்தலாக பங்கு மூலதனம் இருந்தது. 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 26,405 மில்லியன் தொகையையும், மிக குறைவான வீழ்ச்சியையும் இது சுட்டிக் காட்டியது. காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 6,130 மில்லியன் தொகையை கொண்டிருந்ததுடன், மொத்த சொத்துகளின் 2.82% யையும் பிரதிநிதித்துவப்படுத்தியது.

*அட்டவணை 09*

**நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் அவதானிப்பு - 2013 டிசம்பர் 31 அன்றும் மற்றும் 2012**


| | 2012(அ) | | 2013(ஆ) | |
|---|---|---|---|---|
| **சொத்துகளின் வகை** | ரூ. '000 | % | ரூ. '000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 98,146,810 | 51.48 | 94,024,169 | 43.33 |
| உரிமைப் பங்குகள் | 26,404,884 | 13.85 | 25,061,264 | 11.55 |
| நிறுவன கடன்கள் | 13,285,667 | 6.97 | 32,934,384 | 15.18 |
| காணியும் கட்டிடமும் | 5,951,450 | 3.12 | 6,129,837 | 2.82 |
| வைப்புகள் | 31,790,111 | 16.68 | 40,837,963 | 18.82 |
| யுனிட் டிரஸ்ட்ஸ் | 1,589,873 | 0.83 | 2,302,039 | 1.06 |
| தங்கத்தில் முதலீடுகள் | 31,832 | 0.02 | 29,295 | 0.01 |
| காப்புறுதி கடன்கள் | 4,678,904 | 2.45 | 5,182,399 | 2.39 |
| ஏனைய சொத்துகள் | 7,349,386 | 3.86 | 8,988,394 | 4.14 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 1,412,907 | 0.74 | 1,514,748 | 0.70 |
| **மொத்தம்** | **190,641,825** | **100** | **217,004,492** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*வரைபடம் 09*

**நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் அவதானிப்பு - 31 டிசம்பர் 2013 அன்றுள்ளவாறு**



# புள்ளிவிபர மீளாய்வு

### நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் முதலீட்டு வருமானம்

2012 மற்றும் 2013 ஆம் ஆண்டிற்கான, நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தின் சராசரி முதலீடுகள், முதலீட்டு வருமானம் மற்றும் வருவாய்கள் ஆகியவற்றை அட்டவணை 10 சுட்டிக் காட்டுகின்றது. 2013 இல் மொத்த முதலீட்டு வருமானத்தின் தொகை ரூபா 21,479 மில்லியனாக இருந்தது. 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 17,172 மில்லியனுடன் ஒப்பிடும் போது, 2013 இல் முதலீட்டு வருமானத்தின் வளர்ச்சி 25.08% மாக இருந்தது.

ஆண்டின் போது அரசாங்க பிணையங்கள் மிகவும் உயர்வான வருமானத்தை பதிவு செய்தன. இது ரூபா 11,880 மில்லியனுக்கான தொகையாக இருந்தது. வைப்புகள் மூலமான முதலீட்டு வருமானத்தின் தொகை ரூபா 5,814 மில்லியனாக இருந்தது. அத்துடன் மிக உயர்வான முதலீட்டு வருவாயாக 16.01%ஐ பதிவு செய்தது. மிகவும் உயர்வான வட்டி வீதங்கள் கிடைத்த நேரங்களின் போது, நீண்ட கால காப்புறுதி வழங்குனர்கள் உயர்ந்த வருவாய்களை தரும் வங்கி வைப்புகளில் முதலீடுகளை மேற்கொண்டதன் காரணமாக இது நிகழ்ந்தது. 2013 ஆம் ஆண்டின் போது, இத்தகைய நீண்டகால வைப்புகளிலிருந்து, கம்பனிகள் நன்மைகளை அடையக்கூடியதாக இருந்தது. மேலும் நிதி கம்பனிகளின் வைப்பில் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 164 மில்லியனுடன் ஒப்பிடும் போது வங்கி வைப்புகளில் இருந்து காப்புறுதி கம்பனிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட முதலீட்டு வருமானத்தின் தொகை ரூபா 5,650 மில்லியனாக இருந்தது. மேலும், ஆண்டிற்கு ஆண்டு வைப்புகள் வருமான வளர்ச்சியில் இருந்து பதிவு செய்யப்பட்ட தொகை 53.87% மாக இருந்தது.

நிறுவன கடன்களில், சராசரி முதலீடு குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளது. (92.80) மற்றும் 2013 இல் அதன் வருவாய் 11.07% (2012: 13.65%) மாக பதிவு செய்யப்பட்டும் உள்ளது. பங்கு சந்தை செயற்பாடுகளில் ஓரளவு மீட்சிக்கான அடையாளங்கள் காணப்பட்டதுடன் 2013 ஆம் ஆண்டில், பங்கு மூலதனம் வாய்ப்பான வருவாய்களையும் காண்பித்தது. 2013 இன் ரூபா 93 மில்லியன் மூலதன நட்டத்தின் பின்னரும், (2012: ரூபா 856 மில்லியன்) பங்கிலாப வருமானங்களின் காரணமாக ரூபா 914 மில்லியன் எனும் வாய்ப்பான மீதியை பங்கு மூலதனத்தில் இருந்து கிடைத்த வருமானம் பதிவு செய்தது.

2012 இல் ஈட்டப்பட்ட ரூபா 26 மில்லியன் இலாபத்துடன் ஒப்பிடும் போது, தங்கத்தின் விலையில் ஏற்பட்ட சரிவின் விளைவாக காப்புறுதி கம்பனிகள் 2013 இல் ரூபா 11 மில்லியனை நட்டமாக பதிவு செய்தன.

*அட்டவணை 10*

**முதலீட்டு வருமானத்தின் வகைப்படுத்தல்களும் சராசரி முதலீடுகளும் - நீண்டகால காப்புறுதி வியாபாரம்**

| வகைப்படுத்தல் | 2012(அ) | | | 2013(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 10,972,525 | 91,445,229 | 12.00 | 11,880,429 | 96,085,490 | 12.36 |
| - திறைசேரி முறிகள் | 9,137,669 | | | 9,612,859 | | |
| - திறைசேரி உண்டியல்கள் | 186,642 | | | 249,377 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 1,648,214 | | | 2,018,193 | | |
| **பங்குரிமை** | (69,948) | 24,759,142 | (0.28) | 914,353 | 25,733,074 | 3.55 |
| - மூலதன இலாபம்/நட்டம் | (855,777) | | | (92,781) | | |
| - பங்கிலாபம் | 785,829 | | | 1,007,134 | | |
| **நிறுவன கடன்கள்** | 1,636,239 | 11,986,395 | 13.65 | 2,558,858 | 23,110,025 | 11.07 |
| - தொகுதி கடன்கள் | 1,504,615 | | | 2,419,957 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 125,876 | | | 119,306 | | |
| - சொத்துகளை ஈடாக கொண்ட பிணையங்கள் | 5,748 | | | 19,595 | | |
| - அவ்வாறான ஏனைய நிதியில் பத்திரங்கள் | - | | | - | | |
| **காணிகளும் கட்டிடங்களும்** | 56,209 | 5,915,963 | 0.95 | 65,636 | 6,040,644 | 1.09 |
| **வைப்புகள்** | 3,778,232 | 28,815,685 | 13.11 | 5,813,633 | 36,314,037 | 16.01 |
| - வங்கி | 3,656,310 | | | 5,649,639 | | |
| - நிதி கம்பனிகள் | 121,922 | | | 163,994 | | |
| **யுனிட் ட்ரஸ்ட்** | 123,617 | 1,441,082 | 8.58 | 106,619 | 1,945,956 | 5.48 |
| **தங்கம்** | 25,887 | 71,374 | 36.27 | (10,968) | 30,564 | (35.89) |
| **காப்புறுதி கடன்கள்** | 17,178 | 4,463,050 | 0.38 | 25,895 | 4,930,651 | 0.53 |
| **ஏனையவை** | 632,488 | 867,219 | 72.93 | 124,374 | 943,539 | 13.18 |
| **மொத்தம்** | **17,172,427** | **169,765,139** | **10.12** | **21,478,829** | **195,133,980** | **11.01** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளில் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

*அலையன்ஸ் ஆயுள், ஆர்ப்பிகோ, எல்ஜசி என்பனவற்றின் பங்குரிமையாளர்களுக்கு சொந்தமான முதலீட்டு வருமானமும், சராசரி முதலீடுகளும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் அறிக்கையிடப்பட்டுள்ள.*

# புள்ளிவிபர மீளாய்வு


**வழங்கப்பட்ட காப்புறுதி காப்பீட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கையும் - நடைமுறையில் செயற்படுத்தப்படும் காப்பீட்டு ஒப்பந்தங்களும் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்**

2013 ஆம் ஆண்டின் இறுதியில், நடைமுறையில் இருந்த நீண்ட கால காப்புறுதி காப்பீடுகளின் மொத்த எண்ணிக்கை 2,494,899 ஆக இருந்தது. 2012 இன் இறுதியில் நடைமுறையில் இருந்த 2,348,340 காப்பீட்டு ஒப்பந்தங்களுடன் ஒப்பிடும் போது நடைமுறையில் இருந்த நீண்ட கால காப்புறுதி காப்பீட்டு ஒப்பந்தம் 2.32% மான மிகவும் மிதமான அதிகரிப்பை கொண்டு இருந்தது.

வரைபடம் 10 இல் சுட்டிக் காட்டியுள்ளவாறு, 2013 இல் 552,436 புதிய நீண்ட கால காப்புறுதி காப்பீட்டு ஒப்பந்தங்களை காப்புறுதி கம்பனிகள் வழங்கியுள்ளன. முன்னைய ஆண்டைப் போலவே, நடைமுறையில் செயற்பட்டுக் கொண்டிருந்த, காப்பீட்டு ஒப்பந்தங்களின் எண்ணிக்கை, மொத்த சனத் தொகையின் சதவீதத்தில் 12% மாக இருந்தது. அத்துடன், நடைமுறையிலிருந்த நீண்டகால காப்புறுதி காப்பீட்டு ஒப்பந்தத்தின், நடைமுறையில் இருந்த தொழிலின் சதவீதம் 2012 இல் பதிவு செய்யப்பட்ட 28.8% உடன் ஒப்பிட 0.5% எனும் மிதமான குறைவை காண்பித்தது.

*வரைபடம் 10*

***வழங்கப்பட்ட காப்புறுதி காப்பீடுகளின் எண்ணிக்கையும் மற்றும் நடைமுறையில் உள்ள காப்பீடுகளும் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்***




| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| வழங்கப்பட்டுள்ள புதிய ஆயுட் காப்பீடுகளின் எண்ணிக்கை | 468,317 | 516,139 | 526,023 | 514,516 | 552,436 |
| நடைமுறையிலுள்ள ஆயுட் காப்பீடுகளின் எண்ணிக்கை | 2,068,548 | 2,214,976 | 2,355,449 | 2,438,340 | 2,494,899 |
| மொத்த சனத் தொகையின் % வீதத்தில் நடைமுறையில் உள்ள ஆயுட் காப்பீடுகளின் எண்ணிக்கை* | 10.1 | 10.7 | 11.3 | 12.0 | 12.2 |
| தொழிலாளர்களின் % வீதத்தில் நடைமுறையில் உள்ள ஆயுட் காப்பீடுகளின் எண்ணிக்கை * | 25.6 | 27.3 | 27.5 | 28.8 | 28.3 |

** மூலகம்: ஆண்டின் மத்தியில் தொழிற்படையினரும் மற்றும் சனத்தொகையும் - குடிமதிப்பீட்டு மற்றும் புள்ளிவிபர திணைக்களம்*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*


# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதி காப்பீட்டு பின்னடைவுகள் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்

நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தில், புதிய வர்த்தகங்கள் ஒரு முக்கிய பங்காற்றுகின்றன. காப்புறுதி காப்பீடுகளின் முகாமைத்துவத்தில் நிலவிய திறமையின்மைகள், சந்தைப்படுத்தல் உத்திகள், நுகர்வாளர்களின் தேவைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால், நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தில், புதிய காப்பீடுகளின் பின்னடைவுகள் குறிப்பிடத்தக்க அளவு உயர்வாக இருந்தது. 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 552,436 புதிய நீண்டகால காப்புறுதி காப்பீடுகளில், புதிய காப்பீடுகளின் பின்னடைவு விகிதம் 19.70% மாக இருந்தது. காப்பீடுகளின் பின்னடைவுகளை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு பூர்வாங்க நடவடிக்கைகளின் மத்தியிலும், நீண்ட கால காப்புறுதி கம்பனிகளுக்கு தொடர்ந்து நிலையாக இருப்பது கடினமான வேலையாக இருந்தது. ஆண்டின் போது 367,724 (2012: 332,707) நீண்டகால காப்புறுதி வர்த்தகத்தின் காப்பீடுகளில் பின்னடைவு ஏற்பட்டது. இவற்றில் 29.60% மான காப்பீடுகள் 2013 இல் உற்பத்தியாக்கப்பட்ட புதிய வர்த்தகத்தை பிரதிநிதித்துவப்படுத்தின. 2012 இல் அறிக்கையிடப்பட்ட 13.64% உடன் ஒப்பிடும் போது, 2013 இல் நடைமுறையிலிருந்த மொத்த காப்பீடுகளின், மொத்த காப்பீட்டு பின்னடைவு 14.74% மாக இருந்தது. வரைபடம் 11, 2009 இல் இருந்து 2013 வரையிலான நீண்டகால காப்புறுதி காப்பீட்டு பின்னடைவை விபரமாகக் காண்பிக்கின்றது.

*வரைபடம் 11*

***2009 இல் இருந்து 2013 வரை காப்பீட்டு பின்னடைவுகளின் எண்ணிக்கையும் மற்றும் பின்னடைவு விகிதமும்***




| | | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|---|
| ■ | புதிய காப்புறுதி காப்பீடுகளின் தவறுதல்கள் | 94,232 | 84,413 | 82,080 | 94,936 | 108,854 |
| □ | மொத்த காப்புறுதி காப்பீடுகளின் தவறுதல்கள் | 506,005 | 432,707 | 371,196 | 332,707 | 367,724 |
| —■— | வழங்கப்பட்ட புதிய காப்புறுதி காப்பீடுகளின் புதிய காப்பீட்டு தவறுதல்களின் சதவீதம் | 20.12 | 16.35 | 15.60 | 18.45 | 19.70 |
| —□— | அமுலாக்கப்பட்ட மொத்த காப்புறுதி காப்பீடுகளின் மொத்த காப்பீட்டு தவறுதல்களின் சதவீதம் | 24.46 | 19.54 | 15.76 | 13.64 | 14.74 |

*(அ) சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு கணிப்பீட்டு வருவாய்களில் அறிவிக்கப்பட்டுள்ளவாறு*
*(ஆ) ஏற்பாட்டு இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு

**காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் நிலைமை - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்**

சபையினால், வழங்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு அமைவாக, கணிப்பீடு செய்யப்பட வேண்டிய தேவையுள்ள கடன்தீர் எல்லை தேவைப்பாட்டுடன் இணங்கி செயற்பட வேண்டும் என காப்புறுதி கம்பனிகள் கோரப்படுகின்றன. 2012 டிசம்பர் 31 மற்றும் 2013 அன்றுள்ளவாறு நீண்டகால காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் விகிதம் மற்றும் காப்பீட்டு பொறுப்புகள் என்பவற்றை அட்டவணை 11 காண்பிக்கின்றது. 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, இரண்டு காப்புறுதி கம்பனிகள் "01" எனும் தேவைப்பாடுள்ள கடன்தீர் விகிதத்தை அடைய முடியவில்லை. ஆகவே இலங்கை காப்புறுதி சபை இது தொடர்பாக அவசியமான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு பதிவு செய்யப்பட்ட ரூபா 119,214 மில்லியனுடன் ஒப்பிடும் போது, நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த காப்பீட்டு பொறுப்புகள் 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு ரூபா 130,368 மில்லியனாக இருந்தது.

*அட்டவணை 11*

***2012 டிசம்பர் 31 மற்றும் 2013 அன்றுள்ளவாறு, கம்பனி ரீதியாக கடன் தீர் நிலைபாடும் மற்றும் காப்பீட்டு பொறுப்புகளும் என்பவற்றின் பகுப்பாய்வு - நீண்டகால காப்புறுதி வியாபாரம்***

| காப்புறுதியாளர் | 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (அ) | | 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் தீர் விகிதம் | காப்புறுதி பொறுப்புகளின் பெறுமதி (அ) (ரூ '000) | கிடைக்கக்கூடிய கடன்தீர் எல்லை (ரூ.'000) | தேவைப்படும் கடன் தீர் எல்லை 5% காப்புறுதி பொறுப்பு (ரூ '000) | கடன் தீர் விகிதம் | காப்புறுதி பொறுப்புகளின் பெறுமதி (அ) (ரூ '000) |
| ஏஐஏ | 2.53 | 22,399,842 | 3,421,556 | 1,182,239 | 2.89 | 23,644,788 |
| அலையன்ஸ் ஆயுள் | 4.67 | 370,898 | 179,234 | 33,184 | 5.40 | 663,689 |
| அமானா டக்காபுல் | 3.71 | 530,026 | 54,461 | 26,928 | 2.02 | 538,568 |
| ஆர்ப்பிகோ | 41.32 | 47,568 | 63,545 | 7,673 | 8.28 | 153,458 |
| ஏசியன் அலையன்ஸ் | 1.88 | 2,857,628 | 458,470 | 184,898 | 2.48 | 3,697,969 |
| சிலிங்கோ | 10.76 | 29,176,262 | 20,933,232 | 1,629,674 | 12.85 | 32,593,476 |
| கோர்பரேடிவ் | 1.76 | 579,790 | 51,870 | 35,716 | 1.45 | 714,312 |
| எச்என்பிஏ | 2.28 | 3,332,214 | 411,966 | 201,666 | 2.04 | 4,033,316 |
| ஜனசக்தி | 4.08 | 5,087,080 | 1,789,900 | 264,268 | 6.77 | 5,285,357 |
| எல்ஜசி | 10.79 | 759,476 | 521,098 | 43,674 | 11.93 | 873,476 |
| லோலக் | 44.00 | 64,793 | (140,605) | 12,576 | *(11.18) | 251,522 |
| எம்பிஎஸ்எல் | 3.30 | 136,510 | (1,802) | 10,928 | (0.16) | 218,559 |
| சனசா | 1.69 | 330,899 | 27,719 | 26,900 | 1.03 | 537,990 |
| எஸ்எல்ஐசி | 10.14 | 39,968,188 | 26,763,191 | 2,055,326 | 13.02 | 41,106,515 |
| யுஎஎல் | 2.79 | 13,572,802 | 3,203,778 | 802,734 | 3.99 | 16,054,685 |
| **மொத்தம்** | **7.17** | **119,213,976** | **57,737,613** | **6,518,384** | **8.86** | **130,367,680** |

* *அதன் பின்னர் திருத்தப்பட்டவை*

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு

## பொது காப்புறுதி வியாபாரம்

### மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்

முன்னைய ஆண்டுகளைப் போலவே, பொதுக் காப்புறுதி வர்த்தகம் இப்போதும் காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தினாலாயே பிரதானமாக ஊந்தப்பட்டது. இது மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் 56.28% வீதமாக கணக்கிடப்பட்டு உள்ளது. 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 49,694 மில்லியனுடன் ஒப்பிடும் போது, பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 53,177 எனும் தொகையை கணக்கிட்டிருப்பதை அட்டவணை 12 மற்றும் வரைபடம் 12 என்பவை சுட்டிக் காண்பிக்கின்றன. காப்புறுதி கம்பனிகளினால் உறுதி செய்யப்பட்டுள்ளவாறு தவணைக் கட்டணங்களின் வருமானமான வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் தொகை ரூபா 3,107 மில்லியன் தொகையாக இருந்தது. அத்துடன் அதே பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் தொகை ரூபா 56,285 மில்லியனாக இருந்தது.

2013இல், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 7.01% இனால் வளர்ச்சியடைந்தது. பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், தனியார் நிர்மாணங்கள், ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் போன்ற அனேக அபிவிருத்தி நடவடிக்கைகள் இந்த வளர்ச்சியை ஊந்தித் தள்ளின. காப்புறுதி கம்பனிகளின் விரிவாக்கப்பட்ட கிளை வலையமைப்பு இதனை மேலும் வலுவாக்கியது. எவ்வாறாயினும். முன்னைய ஆண்டுகளின் 14.69% வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் மொத்த எழுதப்பட்ட வளர்ச்சி வீதம் மெதுவான வேகத்தைக் கொண்டிருந்தது.

2013 ஆம் ஆண்டில், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், ரூபா 12,786 மில்லியனாக சந்தைப் பங்கில் 24.04%யை எய்தியதுடன் சந்தையை வழிநடத்தியும் சென்றது. அத்துடன் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டிலும், பொது காப்புறுதி வர்த்தகத்தின் உச்ச இடத்தை இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தக்கவைத்துக் கொண்டது. ரூபா 10,311 மில்லியன் (2012: ரூபா 10,435 மில்) மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் மிகவும் குறைந்த அளவிலான வீழ்ச்சியையும் அனுபவித்தது. 2013 இல் இந்த இரண்டு கம்பனிகளும் ஒன்று சேர்ந்து, சந்தைப் பங்கின் 43.43% யை வைத்திருந்தன. பொது காப்புறுதி வர்த்தகத்தில் முறையே மூன்றாவது, நான்காவது ஐந்தாவது இடங்களை ஜனசக்தி (11.93%) யுஏஎல் (9.62%) மற்றும் பீபில்ஸ் (5.80%) ஆகியவை வைத்திருந்தன. 2013 இல் ரூபா 1,965 மில்லியனை (2012: ரூபா 1,397 மில்லியன்) ஐ மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் பதிவு செய்து, அலையன்ஸ் ஜெனரல் தனது இடத்தை சந்தையில் முன்னோக்கி நகர்த்திக் கொண்டது. மேலும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், சிலிங்கோ, கொண்டினென்டல், எம்பிஎஸ்எல் மற்றும் சனச எனும் ஐந்து காப்புறுதி கம்பனிகளின் சந்தை பங்கில் மிகவும் குறைந்தளவிலான குறைவை அவதானிக்க முடிந்தது.

*அட்டவணை 12*

**கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணமும் மற்றும் சந்தைப் பங்கும் - பொது காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2009 | | 2010 | | 2011 | | 2012(அ) | | 2013(ஆ) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) | தவணைக் கட்டணம் (ரூ. '000) | சந்தைப் பங்கு (%) |
| ஏஐஏ | 2,503,628 | 7.46 | 2,490,843 | 7.10 | 2,456,347 | 5.67 | 2,143,252 | 4.31 | 2,428,675 | 4.57 |
| ஏஐஜி | 879,285 | 2.62 | 890,387 | 2.54 | 942,901 | 2.18 | 819,448 | 1.65 | 880,059 | 1.65 |
| அலையன்ஸ்-பொது | 1,174,822 | 3.50 | 1,356,660 | 3.86 | 1,379,406 | 3.18 | 1,397,127 | 2.81 | 1,964,907 | 3.70 |
| அமானா டக்காபுல் | 953,798 | 2.84 | 908,756 | 2.59 | 916,754 | 2.12 | 1,125,838 | 2.27 | 1,232,433 | 2.32 |
| ஏசியன் அலையன்ஸ் | 496,749 | 1.48 | 397,789 | 1.13 | 582,257 | 1.34 | 1,133,240 | 2.28 | 1,376,657 | 2.59 |
| சிலிங்கோ | 9,081,297 | 27.07 | 8,724,292 | 24.85 | 9,558,942 | 22.06 | 10,434,917 | 21.00 | 10,311,479 | 19.39 |
| சிலிங்கோ டக்காபுல் | 28,324 | 0.08 | - | - | - | - | - | - | - | - |
| கொண்டின்டல் | - | - | 359,105 | 1.02 | 1,149,121 | 2.65 | 1,545,225 | 3.11 | 1,330,515 | 2.50 |
| கோர்பரடிவ் | 596,183 | 1.78 | 644,814 | 1.84 | 922,859 | 2.13 | 1,135,011 | 2.28 | 1,272,941 | 2.39 |
| எச்என்பிஏ | 1,130,781 | 3.37 | 1,255,190 | 3.58 | 1,623,830 | 3.75 | 1,635,306 | 3.29 | 1,767,361 | 3.32 |
| ஜனசக்தி | 4,272,926 | 12.74 | 4,324,170 | 12.32 | 5,086,207 | 11.74 | 5,773,429 | 11.62 | 6,342,546 | 11.93 |
| லோலக் | - | - | - | - | 364,735 | 0.84 | 1,295,133 | 2.61 | 1,485,521 | 2.79 |
| எம்பிஎஸ்எல் | 271,309 | 0.81 | 467,606 | 1.33 | 636,738 | 1.47 | 1,049,147 | 2.11 | 1,118,983 | 2.10 |
| ஓரியன்ட் | - | - | - | - | 1,749 | 0.00 | 308,547 | 0.62 | 355,002 | 0.67 |
| பீபல்ஸ் | - | - | 847,064 | 2.42 | 2,284,578 | 5.27 | 2,795,448 | 5.63 | 3,085,041 | 5.80 |
| சன்சா | 184,409 | 0.55 | 234,914 | 0.67 | 232,374 | 0.54 | 308,142 | 0.62 | 322,591 | 0.61 |
| எஸ்எல்ஐசி | 8,764,539 | 26.13 | 8,766,027 | 24.97 | 11,134,583 | 25.70 | 12,359,188 | 24.87 | 12,785,671 | 24.04 |
| யுஏஎல் | 3,210,217 | 9.57 | 3,433,830 | 9.78 | 4,055,443 | 9.36 | 4,436,052 | 8.93 | 5,116,966 | 9.62 |
| மொத்தம் | **33,548,266** | **100** | **35,101,447** | **100** | **43,328,824** | **100** | **49,694,450** | **100** | **53,177,348** | **100** |
| வளர்ச்சி வீதம் (%) | **(2.92)** | | **4.63** | | **23.44** | | **14.69** | | **7.01** | |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

*1) 2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*


*2) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

*3) 2009 ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிட்டிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

**வரைபடம் 12**

**கம்பனி ரீதியாக மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சந்தைப் பங்கு - பொது காப்புறுதி வியாபாரம் - (2013 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது)**





**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் உச்ச பங்களிப்பாளர்கள் ஐவரினதும், சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதியாளர்கள் - பொது காப்புறுதி வியாபாரம்**

மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் மிக உயர்ந்த பங்களிப்பாளர்கள் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் ஏனைய காப்புறுதி வழங்குனர்கள் ஆகியோரை வரைபடம் 13 சுட்டிக் காட்டுகின்றது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் ஐந்து முக்கிய பங்காளர்களாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம், சிலிங்கோ, ஜனசக்தி, யுஏஎல் மற்றும் பீபில்ஸ் என்பவை இருந்தன.

2013 ஆம் ஆண்டில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தில் 70.78% யை இவைகள் ஒன்று சேர்ந்து கணக்கீடு செய்தன. 2012 இல் பதிவு செய்யப்பட்ட 72.05% உடன் ஒப்பிடும் போது, 2013 இல், ஏனைய சிறிய போட்டியாளர்கள் அளித்த போட்டியின் அழுத்தம் காரணமாக, இந்த ஐந்து கம்பனிகளினதும் சந்தைப் பங்கில் மிகச் சிறிய அளவிலான குறைவை காண முடிந்தது. மேலும், கடந்த ஐந்து வருடங்களின் போது, சிலிங்கோவின் சந்தைப் பங்குகள் குறைந்துள்ளன. பீபில்ஸ் அதன் நான்காவது ஆண்டின் செயற்பாடுளின் போது சந்தைப் பங்கில் ஐந்தாவது இடத்தைப் பேணக் கூடியதாக இருந்தது.

**வரைபடம் 13**

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் உச்ச பங்களிப்பாளர்கள் ஐவரினதும் சந்தைப் பங்கு மற்றும் ஏனைய காப்புறுதியாளர்கள் - பொது காப்புறுதி வியாபாரம்**




| | எஸ்எல்ஐசி | சிலிங்கோ | ஜனசக்தி | யுஏஎல் | பீபல்ஸ் | ஏனைய காப்புறுதியாளர்கள் |
|---|---|---|---|---|---|---|
| 2009 | 26.13 | 27.07 | 12.74 | 9.57 | - | 24.50 |
| 2010 | 24.97 | 24.85 | 12.32 | 9.78 | 2.42 | 25.65 |
| 2011 | 25.70 | 22.06 | 11.74 | 9.36 | 5.27 | 25.87 |
| 2012(அ) | 24.87 | 21.00 | 11.62 | 8.93 | 5.63 | 27.96 |
| 2013(ஆ) | 24.04 | 19.39 | 11.93 | 9.62 | 5.80 | 29.21 |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்
(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

# புள்ளிவிபர மீளாய்வு

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகுப்பு ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வர்த்தகம்**

கடந்த ஐந்து ஆண்டுகளின் போது, தீ அபாயம், கப்பற்துறை, வாகனம் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் நானாவித வகுப்புகள் போன்றவற்றில் இருந்து உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தை அட்டவணை 13 மற்றும் வரைபடம் 14 என்பவை காண்பிக்கின்றன. 62.21% மான மிகப் பெரிய சந்தைப் பங்கை வாகனகாப்புறுதி வர்த்தகம் எய்தியுள்ளது. அதற்கு அடுத்ததாக, முறையே நானாவிதமானவையில் (22.46%) தீ அபாயம் (11.87%) மற்றும் கப்பற்துறை (3.46%) என்பவை உள்ளன.

புதிய மோட்டார் வாகனங்களை பதிவு செய்வதில் ஏற்பட்ட குறைவு, மற்றும் காப்புறுதி கம்பனிகள் இடையில் நிலவிய விலைகள் குறித்த போட்டிகள் என்பவை வாகன காப்புறுதி வியாபாரத்தை எதிர்மறையாக பாதித்துள்ளன. முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட (16.57%) இரட்டை ஸ்தான எண்ணிக்கை வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது, வாகன காப்புறுதி வியாபாரத்தின் வளர்ச்சி வீதம் (4.56%) ஆக குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.

பொது காப்புறுதி வர்த்தகத்தின் இரண்டாவது மிகப் பெரிய வகைப்படுத்தலை நானாவித வகைப்படுத்தல் பிரதிநிதித்துவம் செய்தது. நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் ஒட்டுமொத்த மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 11,943 மில்லியனாகவும் மற்றும் ஆண்டிற்கு ஆண்டு 11.44% வளர்ச்சியைக் கொண்டதாகவும் இருந்தது.

2013 ஆம் ஆண்டில் ரூபா 6,311 மில்லியனாக 16.39% இனால், தீ அபாய காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் வளர்ச்சியடைந்தது. கட்டிட நிர்மாணக் கைத்தொழில் மற்றும் பொதுவான பொருளாதார செயற்பாடுகள் என்பவற்றின் வளர்ச்சி, இந்த சாதகமான செயற்பாட்டிற்கு காரணமாக அமைந்தன. கப்பற்துறை காப்புறுதி, 2012இல் பதிவு செய்யப்பட்ட 14.28% வளர்ச்சிக்கு எதிரிடையாக, 2013 இல் 3.98% மாக எதிர்மறையான வளர்ச்சியை அனுபவித்தது.

*அட்டவணை 13*

**வகுப்புரீதியாக மொத்த எழுதப்பட்ட தவணை கட்டணத்தின் பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்**

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
| தீ அபாயம் | 7,049,399 | 5,012,443 | 5,376,094 | 5,422,347 | 6,310,911 |
| கடல் சார்ந்தவை | 1,442,729 | 1,498,832 | 1,678,027 | 1,917,570 | 1,841,345 |
| வாகனம் | 17,897,763 | 20,948,782 | 27,141,119 | 31,637,508 | 33,081,602 |
| நானாவிதம் | 7,158,375 | 7,641,390 | 9,133,584 | 10,717,025 | 11,943,490 |
| **மொத்தம்** | **33,548,266** | **35,101,447** | **43,328,824** | **49,694,450** | **53,177,348** |

| வகுப்பு | வளர்ச்சி (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| தீ அபாயம் | 3.26 | (28.90) | 7.25 | 0.86 | 16.39 |
| கடல் சார்ந்தவை | (21.01) | 3.89 | 11.96 | 14.28 | (3.98) |
| வாகனம் | (4.38) | 17.05 | 29.56 | 16.57 | 4.56 |
| நானாவிதம் | (0.40) | 6.75 | 19.53 | 17.34 | 11.44 |
| **மொத்தம்** | **(2.92)** | **4.63** | **23.44** | **14.69** | **7.01** |

| வகுப்பு | சதவீதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| தீ அபாயம் | 21.01 | 14.28 | 12.41 | 10.91 | 11.87 |
| கடல் சார்ந்தவை | 4.30 | 4.27 | 3.87 | 3.86 | 3.46 |
| வாகனம் | 53.35 | 59.68 | 62.64 | 63.66 | 62.21 |
| நானாவிதம் | 21.34 | 21.77 | 21.08 | 21.57 | 22.46 |
| **மொத்தம்** | **100** | **100** | **100** | **100** | **100** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*


2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

3) *2009 ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

*வரைபடம் 14*

***வகுப்பு ரீதியாக 2009 இல் இருந்து 2013 வரை மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணை கட்டணத்தின் பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்***




| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| கடல் சார்ந்தவை | 4.30 | 4.27 | 3.87 | 3.86 | 3.46 |
| தீ அபாயம் சார்ந்தவை | 21.01 | 14.28 | 12.41 | 10.91 | 11.87 |
| நானாவிதம் | 21.34 | 21.77 | 21.08 | 21.57 | 22.46 |
| வாகனம் | 53.35 | 59.68 | 62.64 | 63.66 | 62.21 |
| தொழில் வளர்ச்சி (பொது காப்புறுதி) | (2.92) | 4.63 | 23.44 | 14.69 | 7.01 |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

1) *2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*

2) *சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

3) *2009 ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

**நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வு**

சுகாதாரமும், அறுவை சிகிச்சையும், தனிப்பட்டவர்களின் விபத்துகள், விமானத்தின் பிரதான பாகங்கள் வங்கியாளர்களுக்கான நட்டோத்தரவாதம் தொழில்புரிபவர்களுக்கான நட்டஈட்டு காப்புறுதி, இடையிலுள்ள காசு போன்றவை, நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் பிரதான வகைப்படுத்தல்களில் உள்ளடங்கும். அட்டவணை 14, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்கான நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வை காண்பிக்கின்றது.

ஆண்டின் போது, சுகாதார காப்புறுதி வர்த்தகத்தில் சாதகமான செயற்பாடுகள் இருப்பது புலப்பட்டது. 2012 ஆம் ஆண்டின் போது பதிவு செய்யப்பட்ட ரூபா 5,075 மில்லியனுடன் ஒப்பிடும் போது, சுகாதாரமும் மற்றும் அறுவை சிகிச்சையும் பிரிவு, ரூபா 5,992 மில்லியன் தொகையை பெற்றது. மேலும் ஆண்டிற்கு ஆண்டு, நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் கூட்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், சுகாதாரமும் மற்றும் அறுவை சிகிச்சையும் பிரிவின் 48.95% ஐ பிரதிநிதித்துவம் செய்தது. மருத்தவ செலவுகளின் அதிகரிப்பு, புதிய உற்பத்திகளின் அறிமுகம், மற்றும் காப்புறுதி கம்பனிகளின் பல்வேறு வகையான சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள் என்பன அந்த வகைப்படுத்தலின், வளர்ச்சிக்கு சாதகமான செல்வாக்கை வழங்கின.

நானாவித காப்புறுதி கம்பனிகளின் கூட்டு மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணங்களின் 12.99% யை பிரதிபலிக்கும், இரண்டாவது மிகப் பெரிய வகைப்படுத்தலாக தனிப்பட்டவர்களின் விபத்துகள் உருவாகியுள்ளன. ஆண்டின்போது, 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 1,338 மில்லியனுடன் ஒப்பிடும் போது, தனிப்பட்டவர்களின் விபத்துகளுக்கான காப்புறுதி வர்த்தகம், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக ரூபா 1,590 மில்லியனை பதிவு செய்தது. விமானங்களின் பிரதான பாகங்களின் வகைப்படுத்தல் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் ரூபா 1,045 மில்லியனாக (2012: ரூபா 1,218 மில்லியன்) இருந்தது. என்பதுடன் ஆண்டின் போது, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் 14.20% இனால் குறைவடைந்து இருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

*அட்டவணை 14*

***நானாவித காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் வகைப்படுத்தல் ரீதியான பகுப்பாய்வு 2012 - 2013***

| | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூ. '000 | |
|---|---|---|
| **வகை** | **2012(அ)** | **2013(ஆ)** |
| விமானத்தின் பகுதி | 1,217,540 | 1,044,639 |
| வங்கியாளர்களின் நட்டோத்தரவாதம் | 375,910 | 332,731 |
| களவு | 306,362 | 340,075 |
| பாதுகாப்பில் உள்ள காசு உள்ளடங்களாக இடையில் உள்ள காசு | 346,582 | 385,460 |
| ஒப்பந்தகாரர்களின் இடர் | 10,855 | 40,848 |
| நேர்மைக்கான உத்தரவாதம் | 45,992 | 58,670 |
| இடையில் உள்ள பொருட்கள் | 69,127 | 73,039 |
| சுகாதாரமும் அறுவை சிகிச்சையும் | 5,075,204 | 5,992,033 |
| தனிப்பட்ட விபத்துகள் | 1,337,571 | 1,590,464 |
| உற்பத்தி பொறுப்புகள் | 39,961 | 43,726 |
| தொழில்சார் நட்டோத்தரவாதம் | 327,064 | 267,295 |
| பொது மக்களுக்கான பொறுப்புகள் | 114,144 | 112,860 |
| உரித்துடமை | 224,578 | 225,967 |
| பயண காப்புறுதி | 215,037 | 231,896 |
| டபிளியு.சி.ஐ | 366,989 | 432,511 |
| ஏனையவைகள் | 953,346 | 1,069,835 |
| **மொத்த நானாவித காப்புறுதி - மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணம்** | **11,026,262** | **12,242,049** |
| தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திற்கு, வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சியார்கள், மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் மொத்த தவணைக் கட்டணம் | (294,331) | (267,569) |
| கூட்டு காப்புறுதியாளர்களின் தவணைக் கட்டணம் | (14,906) | (30,990) |
| **காப்புறுதி தொழிலின் (கம்பனிகள்) தேறிய தவணைக் கட்டண வருமானம்** | **10,717,025** | **11,943,490** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்பு*

*நானாவித காப்புறுதி வர்த்தகத்தின், உப வகைப்படுத்தலில் தரப்பட்டுள்ள மேலே உள்ள மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் தொகைகள் கூட்டு காப்புறுதி மற்றும் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றின் தவணைக் கட்டணங்களை உள்ளடக்காது தவிர்த்து அளிக்கப்பட்டுள்ளன.*

# புள்ளிவிபர மீளாய்வு

**மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதியாளர்களினால் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்டவை - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 15 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு, 2013 ஆம் ஆண்டில் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம் ரூபா 53,177 மில்லியனாக இருந்தது. காப்புறுதி கம்பனிகளினால் பிடித்து வைத்துக் கொள்ளப்பட்ட, மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணமாக இருந்த தொகை ரூபா 44,385 மில்லியனாகும். 2013 ஆம் ஆண்டில், பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் குறிப்பிட்ட சதவீதமாக இருந்த பிடித்த வைத்தக் கொண்ட காப்புறுதி தவணைக் கட்டணம் உயர்வானதாகவும் மற்றும் 83.47% மாகவும் இருந்தது. காப்புறுதி வர்த்தகத்தின் மோட்டார் வாகன வகுப்பின் உயர்வான பிடித்து வைத்தல் விகிதம் இதற்கு பிரதான காரணமாக அமைந்தது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் 62.21% ஐ பிரதிநிதித்துவப்படுத்திய, காப்புறுதி வர்த்தகததின் மோட்டார் வாகன வகுப்பு 99.08% எனும் மிக உயர்ந்த பிடித்துவைத்தல் வீதத்தைப் பதிவு செய்தது. இது, முன்னைய ஐந்து வருடங்களின் போதும் நன்கு ஸ்திரமாக இருந்த நிலைப்பாடாகும். நானாவித காப்புறுதி வர்தகமும், ஒப்பீட்டளவில் உயர்வான பிடித்த வைத்தல் விகிதமாக 77.61% யை தொடர்ந்தும் பதிவு செய்தது. (2012: 74.32%)

நட்டங்களுக்கு எதிராக உத்தரவாதமளிக்கும் இடர்களை சமாளிப்பதற்காக, 2013 ஆம் ஆண்டில், காப்புறுதி வர்த்தகத்தின் தீ (76%) மற்றும் கடற்சார்ந்த (55%) வகுப்புகளுக்கு உயர்வான காப்புறுதி ஒப்படைப்பு வீதங்கள் வழங்கப்பட்டதை காணக்கூடியதாக இருந்தது.

*அட்டவணை 15*

***மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம், மற்றும் மீள் காப்புறுதி தவணைக் கட்டணமும், காப்புறுதியாளர்களினால் தக்க வைத்துக் கொண்டதும் - பொது காப்புறுதி வியாபாரம்***

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012(a) | 2013(b) |
| தீ அபாயம் | 7,049,399 | 5,012,443 | 5,376,094 | 5,422,347 | 6,310,911 |
| கடல் சார்ந்தவை | 1,442,729 | 1,498,832 | 1,678,027 | 1,917,570 | 1,841,345 |
| வாகனம் | 17,897,763 | 20,948,782 | 27,141,119 | 31,637,508 | 33,081,602 |
| நானாவிதம் | 7,158,375 | 7,641,390 | 9,133,584 | 10,717,025 | 11,943,490 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **33,548,266** | **35,101,447** | **43,328,824** | **49,694,450** | **53,177,348** |

| வகுப்பு | மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012(a) | 2013(b) |
| தீ அபாயம் | 5,904,806 | 4,233,236 | 4,090,136 | 4,140,877 | 4,799,516 |
| கடல் சார்ந்தவை | 892,411 | 813,665 | 847,392 | 1,326,369 | 1,014,706 |
| வாகனம் | 533,720 | 316,594 | 387,211 | 478,478 | 304,451 |
| நானாவிதம் | 1,918,389 | 2,020,031 | 2,302,942 | 2,752,627 | 2,673,807 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் நிகர மொத்தம்** | **9,249,326** | **7,383,526** | **7,627,681** | **8,698,351** | **8,792,480** |

| வகுப்பு | தக்க வைத்துக் கொண்டது (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| தீ அபாயம் | 1,144,593 | 779,208 | 1,285,958 | 1,281,469 | 1,511,395 |
| கடல் சார்ந்தவை | 550,318 | 685,167 | 830,635 | 591,202 | 826,639 |
| வாகனம் | 17,364,043 | 20,632,188 | 26,753,908 | 31,159,029 | 32,777,152 |
| நானாவிதம் | 5,239,986 | 5,621,359 | 6,830,643 | 7,964,399 | 9,269,684 |
| **மொத்த எழுதப்பட்ட காப்புறுதி தவணைக் கட்டணத்தின் மொத்தம்** | **24,298,940** | **27,717,922** | **35,701,143** | **40,996,099** | **44,384,868** |

| வகுப்பு | மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் சதவீதத்தில் தக்கவைத்துக் கொண்டது (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| தீ அபாயம் | 16.24 | 15.55 | 23.92 | 23.63 | 23.95 |
| கடல் சார்ந்தவை | 38.14 | 45.71 | 49.50 | 30.83 | 44.89 |
| வாகனம் | 97.02 | 98.49 | 98.57 | 98.49 | 99.08 |
| நானாவிதம் | 73.20 | 73.56 | 74.79 | 74.32 | 77.61 |
| **ஒட்டு மொத்த தக்க வைத்துக் கொண்ட விகிதம்** | **72.43** | **78.97** | **82.40** | **82.50** | **83.47** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*
*குறிப்புகள்:*

*1) 2010 இலிருந்து 2012 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*


*2) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

*3) 2009 ஆம் ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

*வரைபடம் 15*

***மீள் காப்புறுதி தவணைக் கட்டணமும் காப்புறுதி வழங்குனர்களினால் தக்க வைத்துக் கொண்டதும் - பொது காப்புறுதி வியாபாரம்***




*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு

**தேறிய தவணைக் கட்டண பெறுகைகள், உள்ளடக்கப்பட்ட தேறிய கோரிக்கை, தேறிய கோரிக்கைகளின் விகிதம், தேறிய செலவுகளின் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 16 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு பொது காப்புறுதி வர்த்தகத்தின் அனைத்து வகுப்புகளினதும் மொத்த தேறிய தவணைக் கட்டண பெறுகைகளாக 2012 இல் இருந்த ரூபா 38,454 மில்லியனுடன் ஒப்பிடும்போது 2013 இல் ரூபா 42,183 பில்லியனாக இருந்தது. மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின் அதிகரிப்பின் காரணமாகவும், மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணத்தின், உயர்வான தக்க வைத்துக் கொள்ளுதல் காரணமாகவும் 2013 இன், தேறிய தவணைக் கட்டண பெறுகைகளில் கவனிக்கத்தக்க அதிகரிப்பை காண முடிந்தது.

2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 61.81% உடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 58.65% மாக தேறிய கோரிக்கை விகிதம் குறைவடைந்துள்ளது. இது ஆண்டின் போது 4.09% மாக இருந்த கோரிக்கையின் உள்ளாக்கப்பட்ட அதிகரிப்புடன் ஒப்பிடும் போது, இவ் ஆண்டில் நிலவிய தேறிய தவணைக் கட்டண பெறுகையில் ஏற்பட்ட 9.70% அதிகரிப்பாகும்.

60.50% மாக அதிகூடிய கோரிக்கை விகிதத்தை மோட்டார் பதிவு செய்தது. இதனைத் தொடர்ந்து நானாவிதம் (56.25%) மாகவும் மற்றும் கடற்சார்ந்தவை (47.09%) மாகவும் பதிவு செய்யப்பட்டது. தீ காப்புறுதி வர்த்தகம் தவிர்ந்த பொது காப்புறுதி வர்த்தகத்தின் ஏனைய அனைத்து வகுப்புகளினதும் கோரிக்கை விகிதம் வீழ்ச்சி அடைந்தது.

கடந்த ஐந்து ஆண்டுகளினதும், தேறிய தவணைக் கட்டண பெறுகை, தேறிய உள்ளாக்கப்பட்ட கேரிக்கை, தேறிய கோரிக்கை விகிதத்தின் போக்குடன் சேர்ந்த தேறிய செலவினங்கள் மற்றும் தேறிய ஒன்றிணைந்த விகிதம் ஆகியவற்றை அட்டவணை 16 மற்றும் வரைபடம் 16 என்பவை பிரதிபலித்தன.

2012 இன் ரூபா 14,807 மில்லியனில் இருந்து 2013 இல் ரூபா 18,147 மில்லியனாக தேறிய செலவினங்களில் ஏற்பட்டு உள்ள அதிகரிப்பை காப்புறுதி கம்பனிகள் அனுபவித்து உள்ளன. பொது காப்புறுதி வர்த்தகத்தின் தேறிய செலவினத்தின் விகிதம் 2013 இல் 43.02% மாக இருந்தது. (2012: 38.51%) ஆண்டின் போது, கம்பனிகளின் நட்ட உத்தரவாதம் நிர்வாகம் மற்றும், முதலீடுகள் தொடர்பான செலவுகள் என்பவற்றில் ஏற்பட்டு உள்ள அதிகரிப்பை செலவினங்கள் குறித்த மீளாய்வு சுட்டிக் காட்டுகின்றது. 2012 இல் பதிவு செயயப்பட்ட 100.32% உடன் ஒப்பிடும் போது 2013 இல் 101,67% மாக தேறிய ஒன்றிணைந்த விகிதம் மிதமாக அதிகரித்திருந்தது.

*அட்டவணை 16*

***தேறிய தவணைக் கட்டண பெறுகைகள், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்***

| வகுப்பு | தேறிய தவணைக்கட்டண பெறுகைகள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
| தீ அாயம் | 1,199,158 | 1,098,186 | 1,141,591 | 1,400,808 | 1,424,130 |
| கடல் சார்ந்தவை | 580,333 | 674,476 | 802,677 | 537,073 | 833,192 |
| வாகனம் | 17,593,582 | 18,356,887 | 23,575,071 | 29,293,110 | 31,488,387 |
| நானாவிதம் | 5,200,212 | 5,282,148 | 6,298,058 | 7,222,611 | 8,437,462 |
| **மொத்தம்** | **24,573,285** | **25,411,697** | **31,817,397** | **38,453,602** | **42,183,171** |

| வகுப்பு | உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள் (ரூ.'000) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
| தீ அபாயம் | 953,478 | 529,448 | 482,646 | 505,101 | 550,497 |
| கடல் சார்ந்தவை | 221,210 | 216,143 | 232,189 | 321,077 | 392,354 |
| வாகனம் | 11,680,229 | 11,733,879 | 15,416,753 | 18,235,622 | 19,051,748 |
| நானாவிதம் | 4,166,757 | 3,091,110 | 4,160,145 | 4,705,619 | 4,745,884 |
| **மொத்தம்** | **17,021,674** | **15,570,580** | **20,291,734** | **23,767,419** | **24,740,483** |

| வகுப்பு | தேறிய கோரல் விகிதம் (%) | | | | |
|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
| தீ அபாயம் | 79.51 | 48.21 | 42.28 | 36.06 | 38.65 |
| கடல் சார்ந்தவை | 38.12 | 32.05 | 28.93 | 59.78 | 47.09 |
| வாகனம் | 66.39 | 63.92 | 65.39 | 62.25 | 60.50 |
| நானாவிதம் | 80.13 | 58.52 | 66.05 | 65.15 | 56.25 |
| **மொத்தம்** | **69.27** | **61.27** | **63.78** | **61.81** | **58.65** |

| வகுப்பு | 2009 | 2010 | 2011 | 2012(அ) | 2013(ஆ) |
|---|---|---|---|---|---|
| தேறிய செலவுகள் (ரூ.'000) | 12,907,013 | 10,058,322 | 12,105,102 | 14,807,142 | 18,146,550 |
| **தேறிய செலவுகள் விகிதம் (%)** | **52.52** | **39.58** | **38.04** | **38.51** | **43.02** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **தேறிய ஒன்றிணைந்த விகிதம் (%)** | **121.79** | **100.85** | **101.82** | **100.32** | **101.67** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

*1) 2010 இலிருந்து 2013 வரையான ஆண்டுகளில் காப்புறுதிக் கம்பனிகளின் பொது காப்புறுதியின் மொத்த எழுதப்பட்ட காப்புறுதி கட்டணங்களில் வேலை நிறுத்தம், கலவரங்கள், சிவில் கிளர்ச்சிகள், மற்றும் பயங்கரவாதம் என்பவற்றிற்கு தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தவணைக் கட்டண வருமானம் கருத்திற் கொள்ளப்படவில்லை*


*2) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

*3) 2009 ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கணக்குகளை கம்பனி சமர்ப்பிக்கவில்லை என்பதுடன் 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் தொடர்புடைய தகவல்களையும் தரவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

***வரைபடம் 16***

**தேறிய பெறப்பட்ட தவணைக் கட்டணம், உள்ளாக்கப்பட்ட தேறிய கோரல்கள், தேறிய செலவுகள், தேறிய கோரல் விகிதம் மற்றும் தேறிய ஒன்றிணைக்கப்பட்ட விகிதம் - பொது காப்புறுதி வியாபாரம்**




*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

# புள்ளிவிபர மீளாய்வு

### பொது காப்புறுதி வர்த்தகத்தின் சொத்துகளும் மற்றும் பங்குதாரர்களும்

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறாக, பொது காப்புறுதி வர்த்தகத்தின் சொத்துகளின் திரட்டலையும் பங்குடமையாளர்களையும் அட்டவணை 17 மற்றும் வரைபடம் 17 என்பவை நிரூபித்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு ஆண்டிலும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த சொத்துகள் ரூபா 146.778 மில்லியனாகவும் 11.87% இனால் வளர்ச்சி அடைவதாகவும் இருந்தது.

பொது காப்புறுதி வர்த்தகத்தின் பிரதான முதலீட்டு வகைப்படுதல்களின் கீழ் பங்கு மூலதனமும் ஒன்றாக இருந்தது. அத்துடன் ரூபா 34,519 மில்லியன் (2012: ரூபா 33,796 மில்) ஆகவும் காணப்பட்டது. மேலும் 2013 இல் பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த சொத்துகளின் 23.52% (2012: 25.76%) ஐ பங்கு மூலதன முதலீடுகள் பிரதிநிதித்துவப்படுத்தின.

அரசாங்க பிணையங்கள் 2012 இல் பதிவு செய்யப்பட்ட ரூபா 29.603 மில்லியனுடன் ஒப்பிடும் போது. 2013 இல் ரூபா 27,585 மில்லியனுக்கான தொகையாக இருந்தது. பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த சொத்துகளுக்கு, அரசாங்க பிணையங்களின் பங்களிப்பு 18.79% மாக இருந்தது. இது, 2012 இல் பதிவு செய்யப்பட்ட 22.56% உடன் ஒப்பிடும் போது மிதமான ஒரு குறைவை பிரதிபலித்தது. வைப்புகள் ரூபா 18,797 மில்லியனாகவும், மொத்த சொத்துகளின் 12.81% பங்கை பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இருந்தன. முன்னைய ஆண்டின் ரூபா 12,733 மில்லியனுக்கான தொகையுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் வைப்புகள் 47.63% இனால் வளர்ச்சியடைந்தன.

ஆண்டின் போது, நிறுவன கடன்கள், மற்றும் யுனிட் டிரஸ்ட்களிலான முதலீடுகள் அதிகரித்துள்ளன. 2012 உடன் ஒப்பிடும் போது, நிறுவன கடன்களும் மற்றும் யுனிட் டிரஸ்ட் என்பவையும் முறையே 55.34% மற்றும் 67.39% எனும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பதிவு செய்தன. வெளி நிலுவையாகவுள்ள தவணைக் கட்டணத்தின் தொகை ரூபா 12,478 மில்லியனாக இருந்தது. இது பொது காப்புறுதி வர்த்தகத்தின் மொத்த சொத்துகளின் 8.50% யை பிரதிநிதித்துவப்படுத்தின. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, இது 14.43% வளர்ச்சியாகும்.

*அட்டவணை 17*

**2012 டிசம்பர் 31 மற்றும் 2013 அன்றுள்ளவாறு, பொது காப்புறுதி வர்த்தகத்தின் சொத்துகளின் அவதானிப்பு மற்றும் பங்குரிமையாளர்கள்**

| | 2012(அ) | | 2013(ஆ) | |
|---|---|---|---|---|
| சொத்துகளின் வகை | ரூபா '000 | % | ரூபா'000 | % |
| அரசாங்க கடன் பிணையங்கள் | 29,602,514 | 22.56 | 27,585,481 | 18.79 |
| உரிமைப் பங்குகள் | 33,795,539 | 25.76 | 34,519,471 | 23.52 |
| நிறுவன கடன்கள் | 3,842,230 | 2.93 | 5,968,491 | 4.07 |
| காணிகளும் கட்டிடங்களும் | 11,900,162 | 9.07 | 11,068,119 | 7.54 |
| வைப்புகள் | 12,732,650 | 9.70 | 18,797,380 | 12.81 |
| யுனிட் டிரஸ்ட்ஸ் | 1,220,424 | 0.93 | 2,042,822 | 1.39 |
| தங்கத்தில் முதலீடுகள் | 7,130 | 0.01 | 31,214 | 0.02 |
| கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதிகள் | 6,092,051 | 4.64 | 6,658,134 | 4.54 |
| காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் இடையீட்டாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள், | 10,904,496 | 8.31 | 12,478,139 | 8.50 |
| ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள் | 3,600,510 | 2.74 | 5,167,540 | 3.52 |
| காசும் காசுக்கு நிகரானவைகளும் | 1,423,164 | 1.08 | 1,420,945 | 0.97 |
| ஏனைய சொத்துகள் | 16,080,650 | 12.26 | 21,039,861 | 14.33 |
| **மொத்தம்** | **131,201,520** | **100** | **146,777,597** | **100** |

(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு எடுக்கப்பட்ட இலக்கங்கள்

(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்

குறிப்புகள்:


1) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.

2) அலையன்ஸ் லைப், ஆர்பிகோ மற்றும் எல்ஐசி ஆகியவற்றின் பங்குடமையாளர்களுக்கு சொந்தமான சொத்துகள், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

# புள்ளிவிபர மீளாய்வு

*வரைபடம் 17*

***பொது காப்புறுதி வியாபாரத்தின் சொத்துகளின் அவதானிப்பு மற்றும் பங்குரிமையாளர்களின் சொத்துகளின் திரட்டல் - 31 டிசம்பர் 2013 அன்றுள்ளவாறு***



# புள்ளிவிபர மீளாய்வு

**பொது காப்புறுதி வியாபாரத்தின் முதலீட்டு வருமானமும் மற்றும் பங்குதாரர்களும்**

அட்டவணை 18 இல் தரப்பட்டுள்ளவாறு, 2013 ஆம் ஆண்டில் ரூபா 98,080 மில்லியன் சராசரி முதலீட்டிற்கான மொத்த முதலீட்டு வருமானம் ரூபா 7,523 மில்லியனுக்கான தொகையை பதிவு செய்தது. 2013 ஆம் ஆண்டில் மொத்த முதலீட்டு இலாபம் 7.67% மாக நிலையாக இருந்தது.

பொது காப்புறுதி வர்த்தகத்தின் பிரதான முதலீட்டு வகைப்படுத்தல்களில் ஒன்றாக பங்கு மூலதனம் இருந்த போதிலும், கடந்த இரண்டு ஆண்டுகளின் போதும், சொல்லப்பட்டதன் இலாபம், ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் (2012: 2.49%) பங்கு மூலதனத்தின் இலாபம் 4.49%மாக இருந்தது. மேலும், மொத்த பங்கு மூலதனமான ரூபா 1,534 மில்லியனை 88.41% ஐ பங்கிலாப வருமானம் பங்களிப்பு செய்தது. 2012 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூபா 552 மில்லியன் நட்டத்துடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 178 மில்லியனை இலாபமாகப் பெற்று, பங்கு முதலீடுகள், வாய்ப்பான மூலதனத்தை பதிவு செய்ததை காண முடிந்தது.

2013 ஆம் ஆண்டில் அரசாங்க பிணையங்களில் இருந்து கிடைத்த மொத்த முதலீட்டு வருமானத்தின் தொகை ரூபா 2,972 மில்லியன் ஆகும். சொல்லப்பட்டதன் இலாபம் 2012 இல் பதிவு செய்யப்பட்ட 11.41% இல் இருந்து குறைவடைந்து. 2013 ஆம் ஆண்டில் 10.39% மாக இருந்தது. முக்கியமாக திறைசேரி உண்டியல்கள் மீது செய்யப்பட்ட முதலீடுகளின் வருமானம் 2012 ஆம் ஆண்டின் ரூபா 1,537 மில்லியனில் இருந்து 2013 ஆம் ஆண்டில் ரூபா 1,374 மில்லியனாக குறைவடைந்தது.

நிறுவன ரீதியான கடன் சந்தையில் சாதகமான செயற்பாடுகள் நிலவியதற்கான சான்றுகள் தென்பட்டன. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2013 ஆம் ஆண்டில் 72.71% இனால் நிறுவன ரீதியான கடன்களில் இருந்து வருமானம் கிடைத்தது. ஆண்டின் போது பங்கிலாபங்களில் இருந்தும் வர்த்தக பத்திரங்களில் இருந்தும் கிடைத்த முதலீட்டு வருமானம் சராசரியாக 86.42% இனால் அதிகரித்தது. யுனிட் டிரஸ்ட்இன் முதலீட்டு இலாபமாக 2012 இல் பதிவு செய்யப்பட்ட 9.42% வீதத்தில் இருந்து 2013 இல் 8.88% மாக மிதமான விழ்ச்சி தென்பட்டது.

2013 ஆம் ஆண்டில் (2012: ரூபா 9,753 மில்லியன்) ரூபா 15,765 மில்லியன் தொகையை வைப்புகள் மீதான சராசரி முதலீடு காண்பித்தது. இது, வட்டி வருமானமாக ரூபா 2,021 மில்லியனை உற்பத்தி செய்ததுடன், முதலீட்டு இலாபம் 12.82% (2012: 12.90%) மாகவும் காணப்பட்டது.

***அட்டவணை 18***

***முதலீட்டு வருமானத்தின் பிரிவுகளும் மற்றும் சராசரி முதலீடுகளும், பொது காப்புறுதி வியாபாரம்***

| வகைப்படுத்தல் | 2012(அ) | | | 2013(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|
| | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) | முதலீட்டு வருமானம் (ரூ. '000) | சராசரி முதலீடு (ரூ. '000) | முதலீட்டு பெறுகை விகிதம் (%) |
| **அரசாங்க கடன் பிணையங்கள்** | 3,098,265 | 27,144,244 | 11.41 | 2,971,576 | 28,593,998 | 10.39 |
| - திறைசேரி உண்டியல்கள் | 1,537,331 | | | 1,374,429 | | |
| - திறைசேரி முறிகள் | 487,267 | | | 592,990 | | |
| - ஏனையவை (ரெப்போ) | 1,073,667 | | | 1,004,157 | | |
| **உரிமைப் பங்கு** | 762,200 | 30,616,881 | 2.49 | 1,533,601 | 34,157,505 | 4.49 |
| - மூலதன இலாபம்/நட்டம் | (552,143) | | | 177,734 | | |
| - பங்கிலாபம் | 1,314,343 | | | 1,355,867 | | |
| **நிறுவன கடன்கள்** | 467,003 | 3,764,956 | 12.40 | 806,539 | 4,905,360 | 16.44 |
| - தொகுதிக் கடன்கள் | 326,272 | | | 607,072 | | |
| - வர்த்தக பத்திரங்கள் | 95,585 | | | 179,340 | | |
| - சொத்துகளின் பேரில் அளிக்கப்பட்ட பிணையங்கள் | 35,987 | | | 11,569 | | |
| - ஏனைய அவ்வாறான நிதியியல் பத்திரங்கள் | 9,159 | | | 8,558 | | |
| **காணியும் கட்டிடங்களும்** | 4,800 | 9,883,372 | 0.05 | (27,858) | 11,484,141 | (0.24) |
| **வைப்புகள்** | 1,257,652 | 9,752,912 | 12.90 | 2,021,330 | 15,765,015 | 12.82 |
| - வங்கி | 1,121,093 | | | 1,861,977 | | |
| - நிதி கம்பனிகள் | 136,559 | | | 159,353 | | |
| **யுனிட் டிரஸ்ட்** | 105,183 | 1,116,041 | 9.42 | 144,895 | 1,631,623 | 8.88 |
| **தங்கம்** | 45,583 | 175,677 | 25.95 | (27,777) | 19,172 | (144.88) |
| **ஏனையவைகள்** | 611,039 | 944,575 | 64.69 | 101,189 | 1,523,008 | 6.64 |
| **மொத்தம்** | **6,351,725** | **83,398,658** | **7.62** | **7,523,495** | **98,079,822** | **7.67** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு இலக்கங்கள்*
*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*
*1) சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

**புதியதும், மீள் புதுப்பிக்கப்பட்டதும் மற்றும் நடைமுறையில் உள்ள காப்பீடுகளும் பற்றிய விபரம் - பொது காப்புறுதி வியாபாரம்**

அட்டவணை 19இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு, 2012 ஆம் ஆண்டில் பொது காப்புறுதி வர்த்தகத்தின் நடைமுறையில் இருந்த காப்பீடுகளின் மொத்த எண்ணிக்கையான 3,896,531 உடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டின் இறுதியில் பொது காப்புறுதி வர்த்தகத்தின் நடைமுறையில் இருந்த காப்பீடுகளின் மொத்த எண்ணிக்கை 4,255,551 ஆக இருந்தது. மொத்த நடைமுறையில் இருந்த காப்பீடுகளின் 87.51% ஐ மோட்டார் காப்புறுதி காப்பீடுகள் பிரதிநிதித்துவப்படுத்தின. நானாவிதம் (4.87%) தீ (4.57%) மற்றும் கடற்சார்ந்தவை (3.05%) என்பவை இதனை தொடர்ந்தன. 2012 இன் இறுதியில் நடைமுறையில் இருந்த காப்பீடான 168,683 உடன் ஒப்பிடும் போது, நானாவித வகைப்படுத்தலின் நடைமுறையில் உள்ள காப்பீடு 22.81% இனால் முன்னேற்றம் அடைந்தது.

ஆண்டின் போது, காப்புறுதி கம்பனிகள் 1,872,060 புதிய காப்பீடுகளை எழுதியது. இது மொத்த நடைமுறையில் உள்ள காப்பீடுகளின் 43.99% மாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது, மோட்டார் மற்றும் தீ காப்புறுதி வர்த்தகத்தின் புதிய காப்பீடுகள் முறையே 13,502 மற்றும் 2,217 இனால் குறைவடைந்தது. மறுபக்கம், 2013 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட புதிய கடற்சார்ந்த காப்பீடுகள் 7,179 இனால் அதிகரித்தது. 2012 இன் 2,180,953 காப்பீடுகளுடன் ஒப்பிடும் போது ஆண்டின் போது 2,428,197 பொது காப்புறுதி காப்பீடுகள் புதுப்பிக்கப்பட்டன.

***அட்டவணை 19***

**புதிய காப்பீடுகளின் எண்ணிக்கையும் மீள்புதுப்பிக்கப்பட்டதும் மற்றும் நடைமுறையில் உள்ளதுமான காப்பீடுகள் - பொது காப்புறுதி வியாபாரம்**

| | 2012 | | | 2013 | | |
|---|---|---|---|---|---|---|
| வகுப்பு | உத்தரவாதம் அளிக்கப்பட்ட புதிய வர்த்தகங்கள் | காப்பீடுகளை மீள புதுப்பித்தல் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ளவை | உத்தரவாதம் அளிக்கப்பட்ட புதிய வர்த்தகங்கள் | காப்பீடுகளை மீள புதுப்பித்தல் | ஆண்டின் இறுதியில் நடைமுறையில் உள்ளவை |
| தீ அபாயம் | 70,202 | 115,714 | 183,487 | 67,985 | 129,932 | 194,676 |
| கடல் சார்ந்தவை | 148,870 | 2,095 | 119,096 | 156,049 | 2,602 | 129,719 |
| வாகனம் | 1,526,510 | 1,978,158 | 3,425,265 | 1,513,008 | 2,220,775 | 3,723,988 |
| நானாவிதம் உள்ளடங்களாக WCI | 130,478 | 84,986 | 168,683 | 135,018 | 74,888 | 207,168 |
| | **1,876,060** | **2,180,953** | **3,896,531** | **1,872,060** | **2,428,197** | **4,255,551** |

*குறிப்புகள்:*
*சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

# புள்ளிவிபர மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் நிலைமை - பொது காப்புறுதி வியாபாரம்

2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறும் 2013 இலும். பொது காப்புறுதி கம்பனிகளின் கடன்தீர் விகிதங்களும் மற்றும் தொழில்நுட்ப ஒதுக்குகளும் அட்டவணை 20 இல் காட்டப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டின் 2.43 உடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 2.61 ஆக பொது காப்புறுதி வர்த்தகத்தின் சராசரி கடன்தீர் விகிதம் காணப்பட்டது. எவ்வாறாயினும், 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு கடன் தீர் எல்லையின் தேவைப்பாடுகளுடன் இணங்கி செயற்பட முடியாது இருந்தது. எனவே சொல்லப்பட்ட கம்பனி தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகளை சபை எடுத்தது. 2012 ஆம் ஆண்டில் ரூபா 33,188 மில்லியனாக பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகளின் தொழில்நுட்ப ஒதுக்குகளின் பெறுமதிப்புகள் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 35,419 மில்லியனாக இருந்தது.

*அட்டவணை 20*

**2012 டிசம்பர் 31 மற்றும் 2013 அன்றுள்ளவாறு கடன் தீர் நிலைபாடு மற்றும் தொழில்நுட்ப ஒதுக்குகளின் கம்பனி ரீதியான பகுப்பாய்வு - பொது காப்புறுதி வியாபாரம்**

| காப்புறுதியாளர் | 2012 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (அ) | | 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு (ஆ) | | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன்தீர் விகிதம் | தொழில்நுட்ப ஒதுக்குகள் (ரூ'000) | கிடைக்கக் கூடிய கடன் தீர் எல்லை (ஏஎஸ்எம்) (ரூ'000) | தேவைப்படும் கடன் தீர் எல்லை (ரூ'000) | கடன்தீர் விகிதம் (ஏஎஸ்எம்/ ஆர்எஸ்எம்) | தொழில்நுட்ப ஒதுக்குகள் (ரூ'000) |
| ஏஐஏ | 3.78 | 1,515,737 | 1,587,812 | 395,709 | 4.01 | 1,702,296 |
| ஏஐஜி | 1.79 | 304,886 | 223,992 | 97,341 | 2.30 | 399,942 |
| அலையன்ஸ்-பொது | 5.76 | 486,330 | 562,065 | 249,548 | 2.25 | 1,010,087 |
| அமானா டக்காபுல் | 1.89 | 476,582 | 420,995 | 227,176 | 1.85 | 511,409 |
| ஏசியன் அலையன்ஸ் | 2.37 | 592,088 | 576,562 | 260,425 | 2.21 | 781,103 |
| சிலிங்கோ | 1.23 | 5,190,708 | 2,442,288 | 1,841,647 | 1.33 | 5,686,878 |
| கொண்டின்டல் | 1.58 | 628,214 | 341,303 | 194,932 | 1.75 | 611,398 |
| கோர்பரடிவ் | 2.10 | 650,851 | 508,019 | 244,683 | 2.08 | 717,559 |
| எச்என்பிஏ | 3.48 | 855,641 | 1,119,244 | 287,795 | 3.89 | 924,712 |
| ஜனசக்தி | 2.24 | 3,510,174 | 1,860,757 | 1,115,908 | 1.67 | 4,103,078 |
| லோலக் | 1.23 | 883,883 | 285,865 | 273,294 | 1.05 | 1,074,318 |
| எம்பிஎஸ்எல் | 1.06 | 518,511 | 113,752 | 197,278 | 0.58 | 567,695 |
| ஓரியன்ட் | 11.67 | 165,938 | 436,971 | 55,626 | 7.86 | 150,739 |
| பீபல்ஸ் | 1.50 | 1,878,856 | 883,822 | 585,831 | 1.51 | 2,238,159 |
| சன்சா | 1.65 | 136,278 | 55,570 | 50,000 | 1.11 | 131,198 |
| எஸ்எல்ஐசி | 3.25 | 12,570,017 | 12,216,661 | 2,814,390 | 4.34 | 11,767,131 |
| யூஏஎல் | 2.33 | 2,823,314 | 1,714,780 | 827,106 | 2.07 | 3,040,948 |
| **மொத்தம்** | **2.43** | **33,188,008** | **25,350,459** | **9,718,689** | **2.61** | **35,418,650** |

*(அ) மீள் தரப்பட்ட கணக்காய்வு எடுக்கப்பட்ட இலக்கங்கள்*

*(ஆ) ஏற்பாடுகளின் இலக்கங்கள்*

*குறிப்புகள்:*

*சபைக்கு தேவைப்படும் தகவல்கள் பூரணமாக அளிக்கப்படாமையினால், தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தின் தகவல்கள் மேலேயுள்ள பகுப்பாய்வில் உள்ளாக்கப்படவில்லை.*

## காப்புறுதி தரகுக் கம்பனிகள்

### காப்புறுதி தரகுக் கம்பனிகளின் செயலாற்றல்கள்

2012 ஆம் ஆண்டில் சந்தையில் செயற்பட்ட ஐம்பத்து ஐந்து காப்புறுதி தரகுக் கம்பனிகளுடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டின் போது ஐம்பத்து ஒன்பது காப்புறுதி தரகுக் கம்பனிகள் செயற்பட்டன. அட்டவணை 21 இல் காண்பிக்கப்பட்டவாறு, 2013 ஆம் ஆண்டில், நீண்டகாலம் மற்றும், பொது காப்புறுதி வர்த்தகம் என்பவற்றில் ஈடுபட்ட காப்புறுதி தரகுக் கம்பனிகளினால் ஈட்டப்பட்ட மொத்த தரகு வருமானம் ரூபா 1,522 மில்லியனாக இருந்தது. அதற்கு அமைய, 2012 ஆம் ஆண்டில் ஈட்டப்பட்ட ரூபா 1,338 மில்லியனுடன் ஒப்பிடும் போது, தரகு வருமானம் 13.75% இனால் அதிகரித்துள்ளது. பொது காப்புறுதி வர்த்தகத்தில் இருந்து ஈட்டப்பட்ட தரகு வருமானத்தின் தொகை ரூபா 1,502 மில்லியனாகவும் மொத்த தரகு வருமானத்தின் 98.71% ஐ பிரதிநிதித்துவம் படுத்தவதாகவும் இருந்தது.

2013 ஆம் ஆண்டில், இருபத்து நான்கு காப்புறுதி தரகு கம்பனிகள் ஒவ்வொன்றும் ரூபா 10 மில்லியனுக்கும் அதிகமான தரகு வருமானத்தை உழைத்தன. அத்துடன் இந்த காப்புறுதி தரகர்கள் அனைவரும் ஒன்றாக சேர்ந்து உழைத்த தரகுத் தொகை ரூபா 1,415 மில்லியனாகவும் இருந்தது. இது ஈட்டப்பட்ட மொத்த தரகுத் தொகையின் 93.03% யை பிரதிநிதித்துவப்படுத்தியது. எஞ்சியிருந்த முப்பத்து ஐந்து காப்புறுதி தரகர்களும் ஈட்டிய தொகை ரூபா 106 மில்லியனாக இருந்தது. இது அட்டவணை 21 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு ஈட்டப்பட்ட மொத்த தரகுத் தொகையின் 6.97% யை பிரதிநிதித்துவப்படுத்தியது.

# புள்ளிவிபர மீளாய்வு

*அட்டவணை 21*

**காப்புறுதி தரகு கம்பனிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட தரகு வருமானம் - 2013**

| | | தரகு வருமானம் (ரூபா '000) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நீண்டகாலம் | | பொது | | மொத்தம் | |
| | தரகு கம்பனியின் பெயர் | ரூபா '000 | % | ரூபா '000 | % | ரூபா '000 | % |
| 1 | ஏடிஇசட் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 838 | 4.25 | 24,067 | 1.60 | 24,905 | 1.64 |
| 2 | எடிகன் ஸ்பென்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 113 | 0.57 | 69,126 | 4.60 | 69,239 | 4.55 |
| 3 | அல்பின்கோ இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 0 | - | 74,040 | 4.93 | 74,040 | 4.86 |
| 4 | எசட்லைன் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட | 0 | - | 117,012 | 7.79 | 117,012 | 7.68 |
| 5 | சி.எப்(க) இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 2 | 0.01 | 210,411 | 14.00 | 210,413 | 13.82 |
| 6 | கமர்சியல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 2,884 | 14.64 | 185,751 | 12.36 | 188,635 | 12.39 |
| 7 | டெல்மேஜ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 1,195 | 6.07 | 65,356 | 4.43 | 66,551 | 4.45 |
| 8 | ஈகுவிடி இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | 0 | - | 17,029 | 1.13 | 17,029 | 1.12 |
| 9 | ஈசாஜி கரம்ஜி & கம்பனி (பிரை) லிமிடட் | 1,532 | 7.78 | 41,532 | 2.76 | 43,064 | 2.83 |
| 10 | பி(க)ன்லே இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 3,470 | 17.61 | 136,290 | 9.07 | 139,760 | 9.18 |
| 11 | க்ளோபல் இன்ஸ்யூரன்ஸ் சேர்விஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 95 | 0.48 | 36,863 | 2.45 | 36,958 | 2.43 |
| 12 | இன்டஸ்ட்ரி & கமர்சியல் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 243 | 1.24 | 32,914 | 2.19 | 33,157 | 2.18 |
| 13 | எல்எம் & ஏ இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் ரூ கன்சல்டன்ஸ் (பிரை) லிமிடட் | 134 | 0.68 | 16,423 | 1.09 | 16,557 | 1.09 |
| 14 | லைப் பொது இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 29 | 0.15 | 17,256 | 1.15 | 17,285 | 1.14 |
| 15 | நேசன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | 749 | 3.80 | 107,854 | 7.18 | 108,603 | 7.13 |
| 16 | பயனியர் இன்ஸ்யூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | 0 | - | 20,541 | 1.37 | 20,541 | 1.35 |
| 17 | புரொகெயர் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 63 | 0.32 | 23,399 | 1.56 | 23,462 | 1.54 |
| 18 | புரடெக்சன்ஸ் & எஸ்யூரன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 12 | 0.06 | 51,362 | 3.42 | 51,374 | 3.37 |
| 19 | ரிலையன்ஸ் ஏஉஜி இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 3,375 | 17.13 | 15,258 | 1.02 | 18,633 | 1.22 |
| 20 | ரிலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 329 | 1.67 | 28,170 | 1.87 | 28,499 | 1.87 |
| 21 | சேனரட்ன இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 228 | 1.16 | 31,572 | 2.10 | 31,800 | 2.09 |
| 22 | செங்கடகல இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 0 | - | 43,789 | 2.91 | 43,789 | 2.88 |
| 23 | ஸ்ரட்டஜிக் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 13 | 0.07 | 20,315 | 1.35 | 20,328 | 1.34 |
| 24 | ஜீனித் இன்ஸ்யூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | 0 | - | 13,827 | 0.92 | 13,827 | 0.91 |
| | **உப மொத்தம்** | **15,304** | **77.69** | **1,400,157** | **93.23** | **1,415,461** | **93.03** |
| | **ஏனைய காப்புறுதி தரகு கம்பனிகள் (35)** | **4,395** | **22.31** | **101,654** | **6.77** | **106,049** | **6.97** |
| | **கூட்டு மொத்தம்** | **19,699** | **100** | **1,501,811** | **100** | **1,521,510** | **100** |

**காப்புறுதி கம்பனிகளின் முதலெழுத்துப் பெயர்கள்**

ஏஐஏ : ஏஐஏ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி (முன்னர் அவீவா என்டிபி இன்யூரன்ஸ் பிஎல்சி)
ஏஐஜி : ஏஐஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் (முன்னர் சாட்டிஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி)
அலையன்ஸ் பொது : அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட்
அலையன்ஸ் ஆயுள் : அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட்
அமானா டக்காபுல் : அமானா டக்காபுல் பிஎல்சி
ஆர்பிக்கோ : ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட்
ஏசியன் அலையன்ஸ் : ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட்
சிலிங்கோ டக்காபுல் : சிலிங்கோ டக்காபுல் லிமிடட்
சிலிங்கோ : சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி
கொண்டினன்டல் : கொண்டிநென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி
கோர்பரேடிவ் : கோர்பரேடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட்
எச்என்பிஏ : எச்என்பி அஸ்யூரன்ஸ் பிஎல்சி
ஜனசக்தி : ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி
எல்ஐசி : லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட்
லோலெக் : லோலக் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட்
எம்பிஎஸ்எல் : எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட்
என்ஐசிஎல் : நெஷனல் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட்
என்ஐடிஎப் : நெஷனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட்
ஒரியன்ட் : ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட்
பீபல்ஸ் : பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட்
சன்சா : சீமாசகித்த சனச ரக்ஷன சமாகம
எஸ்எல்ஐசி : சிறீ லங்கா இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் லிமிடட்
யுஏஎல் : யூனியன் எஸ்யூரன்ஸ் பிஎல்சி

# தொழிற்பாட்டு மீளாய்வு

## மேற்பார்வை மீளாய்வு

**காப்புறுதி கம்பனிகள்**

### 1. சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள வருவாய்களின் மீளாய்வு

**அ) வருடாந்த நியதிச்சட்ட வருமானங்களும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதியில் கூற்றுகளும், மற்றும் கணிப்பீட்டு அறிக்கைகளும்**

சட்டமுறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சகல காப்புறுதி வழங்குனர்களும், தமது நியதிச்சட்ட வருமானங்கள் மற்றும் நிதிசார் கணக்காய்வுக் கூற்றுகள் ஆகியவற்றை குறிப்பிட்ட நிதி ஆண்டின் நிறைவை அடுத்து வருகின்ற ஆறு மாதங்களினுள் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என வேண்டப்படுகின்றனர். மேலும், நீண்டகால காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுகின்ற காப்புறுதி வழங்குனர்கள். காப்புறுதி கணிப்பீட்டு அறிக்கை ஒன்றையும், மற்றும் வருடாந்த நியதிச்சட்ட வருமானங்களுடன் தொடர்புடைய சாராம்சம் ஒன்றையும் சட்டத்திற்கு அமைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

வருவாய்கள் உரிய நேரத்தில் சமர்ப்பிக்கப்படுவதை கண்காணிப்பதோடு, சட்டத்திற்கு அமைவாகவும், மற்றும் ஏனைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு ஏற்பவும் அவை சரியாகவும். மற்றும் இணங்குவிப்பாகவும் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் சபை அவற்றை பரீட்சிக்கின்றது. கணிப்பீட்டு அறிக்கைகளையும் மற்றும் சாராம்சங்களையும் மீளாய்வு செய்வதற்காக கணிப்பீட்டு நிபுணத்துவம் ஒன்றின் உதவியை சபை பெற்றுள்ளது.

வருவாய்கள் மற்றும் அறிக்கைகளின் மீளாய்வின் போது, நியதிச்சட்ட தேவைப்பாடுகளில் இருந்து விலகி சென்றது. ஏனைய முரண்பாடுகள், மற்றும் தவறுகள் என்பவை அவதானிக்கப்பட்ட போது அவற்றை நிவர்த்தி செய்யுமாறு, தொடர்புடைய காப்புறுதி வழங்குனர்களுக்கு அவை அறிவிக்கப்பட்டது. குறிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள் சரிப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்களுக்கு சபை ஆலோசனைகளை வழங்கியது. சபையின் சட்டத்தின் ஏற்பாடுகளுடனும் மற்றும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுடனும் காப்புறுதி வழங்குனர்கள் இணங்கி செயற்படுவதை உறுதி செய்வதற்காக சபையினால் பின் தொடரும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. மேலும் வருவாய்கள் மற்றும் அறிக்கைகள் மீளாய்வின் போது அவதானிக்கப்பட்ட குறிப்பிடப்பட்ட சில விடயங்களும் சபையினால் நடத்தப்பட்ட அமைவிடத்திலான பரீட்சித்தல்களின் போது கவனிக்கப்பட்டன.

**ஆ) காலாண்டு வருவாய்கள்**

சட்ட விதி முறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும், தத்தமது காலாண்டு வருமானத்தை ஒவ்வொரு காலாண்டினதும் இறுதி நாற்பத்து ஐந்து தினங்களுக்குள் சபைக்கு சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு உள்ளது. காப்புறுதி வழங்குனர்களினால் சமர்ப்பிக்கப்படும் காலாண்டு வருவாய்கள் அனைத்தையும், சபை மீளாய்வு செய்யும், அத்துடன் சட்ட விதி முறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், ஏனைய விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இசைவாகவும் அவை இருப்பதையும் உறுதி செய்யும். மேலும் காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயலாற்றுகைகளையும், நிதிசார் நிலைமை ஆகியவற்றையும், காலாண்டு வருவாய்களின் மீளாய்வுகள் ஊடாக மதிப்பீடு செய்யும். சட்ட விதி முறைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், சபையின் விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவும் மற்றும் 2006 இன் 6 ஆம் இலக்க நிதி கொடுக்கல் வாங்கள் நடவடிக்கைகளை அறிக்கையிடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் காப்புறுதி வழங்குனர்கள் இணங்குவிப்பாக செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக, காலாண்டு வருவாய்களுடன் சேர்த்து இரண்டு இணங்குவிப்பு சான்றிதழ்களையும் காப்புறுதி வழங்குனர்கள் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், காப்புறுதி வழங்குனர்கள் அனைவரும் அவர்களின் காலாண்டு வருவாய்களுடன் சேர்த்து, அவர்களின் திறமை மிக்க மீள் காப்புறுதி ஒழுங்குகள் குறித்த விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தவணைக் கட்டண வருமானம், உத்தரவாதமளிக்கப்பட்ட இலாபம், மற்றும் நீண்டகால காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகியவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு காப்புறுதி வழங்குனர்களினதும் காலாண்டு செயலாற்றல்களை மதிப்பீடு செய்வதற்காக சபை, வருவாய்களை பகுப்பாய்வு செய்தது. மேலும், இலாபத்தன்மை, செலவினங்கள் மற்றும் கோரிக்கைகள் போன்றவை குறித்த காப்புறுதி வழங்குனர்களின் காலாண்டு செயலாற்றல்களை மதிப்பிடுவதற்காக, செறிவான பகுப்பாய்வு விகிதங்களும் முன்னெடுக்கப்பட்டன.

கடன்தீர் நிலைமை, திரவத்தன்மை மற்றும் மூலதன போதுமை போன்றவை குறித்து காப்புறுதி வழங்குனர்களின் சொத்துகள் மற்றம் பொறுப்புகளின் நிலைபாடு, மற்றும் விகிதங்களை பகுப்பாய்வு செய்ததன் மூலம், காப்புறுதி வழங்குனர்கள் அனைவரினதும் நிதியியல் நிலைமைகள் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் தொடர்ச்சியாக கண்காணிக்கப்பட்டன.

சட்டவிதி முறைகளுக்கு அமைவாகவும் விதிமுறைகளும் ஒழுங்கு விதிகளும் என்பவற்றுடன் இணக்கப்பாட்டுடனும் செயற்படாததற்கான தகவல்கள் அளிக்கப்பட்ட காப்புறுதி வழங்குனர்களுக்கு, குறிக்கப்பட்ட காலகெடுவிற்குள் அவற்றை சரிப்படுத்த வேண்டும் எனும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. காப்புறுதி வழங்குனர்கள், ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளுடன் இணங்கி செயற்படுவதை கண்காணிப்பதற்கு, அவசியமான பின்தொடர் நடவடிக்கைகளையும் சபை மேற்கொண்டது.

**இ) மாதாந்த வருமானங்கள்**

2013 ஆம் ஆண்டின்போது, சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைவாக, நான்கு காப்புறுதி வழங்குனர்கள் தமது மாதாந்த வருவாய்களை சமர்ப்பித்தனர். அத்தகைய காப்புறுதி வழங்குனர்கள் மாதத்தின் இறுதியில் இருந்து பதினைந்து நாட்களுக்குள் மாதாந்த வருவாய்களை சமர்ப்பிக்க வேண்டிய தேவைப்பாட்டை கொண்டிருந்தனர். சபையின் சட்ட விதிமுறைகளும், மற்றும் ஏனைய விதிமுறைகளும் ஒழுங்கமைப்பும் என்பனவற்றுடன் இணக்கமாக, அவர்களின் செயற்பாடுகளை பரிசோதனை செய்து அவர்களின் மாதாந்த வருவாய்களை சபை மீளாய்வு செய்தது. மேலும், சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்களின் செயலாற்றல்களையும், நிதி நிலைமைகளையும் மாதாந்த அடிப்படையில் சபை தொடர்ந்து கண்காணித்தது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

ஒழுங்கமைப்பு விதிகளுக்கு இணக்கப்பாட்டுடன் செயற்படாத போதும் மற்றும் வருவாய்களில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டபோதும், குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் பொருத்தமான நடவடிக்கைகளை சபை எடுத்தது.

**ஈ) இடர் மதிப்பீட்டு சாராம்சம் (ஆர்ஏஎஸ்)**

ஒவ்வொரு ஆண்டின் மார்ச் 31 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர், காப்புறுதி வழங்குனர்கள் தமது இடர் மதிப்பீட்டு சாராம்சத்தை சபையுடன் கோவைப்படுத்த வேண்டும் எனும் தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நிறுவன ரீதியானதும் மற்றும் உரிமையாக்கப்பட்டதுமான கட்டமைப்பு, வர்த்தக விபரத் திரட்டு, சிரேஷ்ட முகாமைத்துவம், சந்தைப்படுத்தலும் மற்றும் வினியோகமும் நடைமுறைகள் கோரிக்கைகளை நிர்வகித்தல், மற்றும் இடர் முகாமைத்துவம் போன்றவை தொடர்பாக இடர் மதிப்பீட்டு சாராம்சத்தில் உள்ளாக்கப்பட்டுள்ள தகவல்களை சபை மீளாய்வு செய்ததன் ஊடாக, காப்புறுதி செயற்பாடுகளின் முழுமையான நோக்கங்களை அது பெற்றுக் கொள்ள முனைந்தது.

## 2. கடன்தீர் எல்லை விதிமுறைகளுடனான, இணங்குவிப்பை கண்காணித்தல்

காப்புறுதி வர்த்தகத்தின் கடன்தீர் எல்லை விதி முறைகளுக்கு (பொது மற்றும் நீண்டாலம்) அமைவாக, சகல காப்புறுதி வழங்குனர்களும் பொது மற்றும் நீண்டகால காப்புறுதி வர்த்தகம் இரண்டினதும், குறைந்த பட்ச தேவையான கடன்தீர் எல்லைகளை எப்போதும் பேணுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். காப்புறுதி வழங்குனர்கள் தத்தமது கடன்தீர் எல்லை கணனியாக்க கணிப்பீடுகளை, தமது மாதாந்த/காலாண்டு/வருடாந்த வருவாய்கள் ஆகியவற்றுடன் சேர்த்து சமர்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கடன்தீர் எல்லை விதிமுறைகளுடன் இணங்குவிப்பாக கணனியாக்க கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை சபை மீளாய்வு செய்து உறுதிப்படுத்தியது. கடன்தீர் கணணியாக்கங்கள் பிழையானவை என அவதானிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் கணணி ஆக்கங்களை திருத்தம் செய்து. மீளவும் சமர்ப்பிக்க வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளனர். மேலும், குறிப்பிடப்பட்ட காலக் கெடுவிற்குள், தேவைப்படும் மிகக் குறைந்தபட்ச கடன்தீர் விகிதங்களை கொண்டிராத காப்புறுதி வழங்குனர்கள், கடன்தீர் எல்லை விதி முறைகளுடன், இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் சபை, அறிவுறுத்தியுள்ளது. கடன்தீர் எல்லை விதி முறைகளுடன் காப்புறுதி வழங்குனர்கள் இணங்குவிப்பாக செயற்படுவதை உறுதி செய்வதற்காக, அவர்களின் கடன்தீர் நிலைபாடுகளை சபை தொடர்ந்து கண்காணிக்கின்றது.

## 3. முதலீட்டுக் குறிப்பீடுகளுடனான இணக்கப்பாட்டினை கண்காணித்தல்

**அ) அரசாங்க பிணையங்களில் முதலீடுகள்**

காப்புறுதி சட்டத்தின் 25 ஆம் பிரிவிற்கு அமைவாக, அரசாங்க பிணையங்களில், 20% இற்கும் குறையாத தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துகளையும் மற்றும் 30% இற்கும் குறையாத நீண்டகால காப்புறுதி நிதியையும் முதலீடு செய்ய வேண்டும் என காப்புறுதி வழங்குனர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். மாதாந்த/காலாண்டு/வருடாந்த/ அடிப்படையில், காப்புறுதி சட்டத்தின் 25 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி வழங்குனர்கள் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதை உறுதி செய்யும் முகமாக சபை அனைத்து காப்புறுதி வழங்குனர்களும், அரசாங்கத்தில் செய்யும் முதலீடுகளை மிகவும் உன்னிப்பாக கண்காணிக்கின்றது. இதற்காக, அரசாங்க பிணையங்களில் முதலீடுகளில் அறிவிக்கப்பட்டுள்ள தொகைகளின் சரித்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்படும் வைப்புக் கூற்றுகளின் அறிக்கைகளை சபை மீளாய்வு செய்கின்றதுடன், அரசாங்க பிணையங்களில் முதலிட்டு உரித்துடமைகளையும் நிச்சயப்படுத்திக் கொண்டது. மீளாய்வுகளின் போது, ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளில் இருந்து விலகிச் சென்றமை அவதானிக்கப்பட்ட போது, குறிக்கப்பட்ட காலக் கெடுவிற்குள், அவற்றை சரிப்படுத்தும் நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் மேற்கொள்ள வேண்டும் என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

**ஆ) தீர்மானங்களுக்கு அமைவான ஏனைய முதலீடுகள்**

2011 இன் மார்ச் 1 இன் தீர்மானம் 1 மற்றும் அதன் தொடர்ச்சியான திருத்தங்கள் என்பவற்றிற்கு அமைவாக, தொழில்நுட்ப ஒதுக்குகளின் சொத்துகள் மற்றும் நீண்ட கால காப்புறுதி நிதியத்தின் மீதிகள் என்பவற்றை ஒவ்வொரு காப்புறுதி வழங்குனரும் முதலீடு செய்ய வேண்டும். தீர்மானம் 1 உடன் இணங்குவிப்பாக செயற்படுவதை உறுதி செய்வதற்காக, தொழில்நுட்ப ஒதுக்குகள், மற்றும் நீண்டகால காப்புறுதி நிதியம் ஆகியவற்றின் முதலீட்டு விபரங்களை சபை மீளாய்வு செய்தது. சபையினால் குறிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்களுக்கு இணக்கப்பாடின்மைகள் அறிவிக்கப்பட்டன.

## 4. ஏனைய நிதியியல் பகுப்பாய்வுகள்

ஆண்டின் போது, குறிப்பிட்ட சில காப்புறுதி வழங்குனர்களின் புலனாய்வுகள்/முறைப்பாடுகள் ஆகியவற்றை கையாண்டதன் ஒரு பகுதியாக சபை மேலும் அதிகமான நிதியியல் மதிப்பீடுகளை மேற்கொண்டது. சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவான அக்கறை செலுத்த வேண்டிய குறிக்கப்பட்ட பிரிவுகளுடன் தொடர்புடைய விடயங்கள் குறித்து மேலதிக நிதியியல் தகவல்கள் சேகரிக்கப்பட்டதுடன் மற்றும் பகுப்பாய்வும் செய்யப்பட்டன.

## 5. காப்புறுதி கைத்தொழில் மேற்பார்வைக்கு இடர் அடிப்படையிலான முலதன (RBC) மாதிரி

2013 ஆம் ஆண்டின் போது, காப்புறுதி தொழிலுக்கான இடர் அடிப்படையிலான மூலதன மாதிரியை சபை தொடர்ந்தும் செயற்படுத்தியது. காப்புறுதி தொழிலை கவனமாக பகுப்பாய்வு செய்தது மற்றும் தற்போது நிலவும் உலக காப்புறுதி மேற்பார்வை பிரயோகங்களை மேற்கொண்டது, இவற்றின் பின்னர், 2009 ஆம் ஆண்டில் இடர் அடிப்படையிலான மூலதன கருத்திட்டத்தை சபை ஆரம்பித்தது. இதனூடாக, தற்போதுள்ள விதிமுறைகள் அடிப்படையிலான ஆட்சியில் இருந்து, இடர் உணர்வு மிகக் குறைவான மூலதன ஆட்சியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தை நிறைவேற்றியது. சபை, உலக வங்கியிடம் இருந்து உதவியை பெற்றது. அத்துடன் இடர் அடிப்படையிலான

# தொழிற்பாட்டு மீளாய்வு

மூலதன வரைச் சட்டத்தின் அபிபிவிருத்திக்கான முதற் கட்ட முன்னெடுப்பு ஆகியவற்றிற்கு உலக வங்கியின் நிபுணர்களான டெலொயிட் டூஷ் டோஹ்மசா இந்தியா (பிரைவட்) லிமிடட் (Deloitte Touche Tohmasu India (Pvt) Limited இடமிருந்து ஆரம்ப கட்ட தொழில் நுட்ப உதவியும் வழங்கப்பட்டது.

சந்தை மதிப்பீட்டு அறிக்கை, பண்பு சாாந்த அறிக்கை, அளவு சார்ந்த அறிக்கை, விதி முறைகளின் இறுதி வரைபு, மற்றும் பயிற்சி எனும் பல கட்டங்களை இடர் அடிப்படையிலான மூலதன கருத்திட்டம் உள்ளடக்கியிருந்தது. சந்தை மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பண்பு சார்ந்த அறிக்கை இரண்டும் 2010 இல் பூர்த்தியடைந்த அதே நேரம், அளவு சார்ந்த அறிக்கை 2011 ஆம் ஆண்டில் பூர்தியடைந்தது. காப்புறுதி தொழிலின் அளவு சார்ந்த அறிக்கையை அறிமுகப்படுத்துவதற்காக, உலக வங்கியுடன் கூட்டிணைந்து ஒக்டோபர் 2011 இல் சபையினால் கருத்தரங்கு ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இடர் அடிப்படையிலான மூலதன கருத்திட்டத்தின் அனைத்து கட்டங்களிலும், தமது கருத்துகளை, தெரிவிப்பதற்கான வாய்ப்புகள் தொழில் பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டன.

2012 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் இருந்து இடர் அடிப்படையிலான மூலதன வீதி பரிசோதனைகளை ஆரம்பிப்பதற்காக, ஆகஸ்ட் 2012 இல் உற்பத்தி ஆக்கங்களுடன் ஒன்றாக சேர்ந்து இடர் அடிப்படையிலான மூலதன வரைச் சட்டத்தை காப்புறுதி தொழிலுக்கு சமர்ப்பித்தது. இடர் அடிப்படையிலான மூலதன முறைப்படுத்தல் மற்றும் அளவீட்டு அலகுகள் ஆகியவை ஏற்றவாறு அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்வது இடர் அடிப்படையிலான வீதி பரிசோதனைகளை நடத்துவதன் நோக்கமாக இருந்தது. அத்துடன் தனிப்பட்ட காப்புறுதியாளர்கள் மற்றும் ஒட்டு மொத்த காப்புறுதி தொழில் ஆகியவற்றில் அதன் தாக்கத்தை அடையாளம் காண்பதற்காகவும் இருந்தது. 2012 இன் மூன்றாவது காலாண்டில் இருந்து ஆரம்பித்த வீதிப்பரிசோதனை 2013 இன் இரண்டாவது காலாண்டு வரை நீடித்தது. மேலும், சபையின் அதிகாரிகளும் காப்புறுதி தொழிலின் பிரதிநிதிகளும் பங்கேற்கும் கூட்டு பணியாற்றும் குழு ஒன்று இடர் அடிப்படையிலான மூலதனத்தை நிறைவேற்றுவதற்கென நிறுவப்பட்டது. இடர் அடிப்படையிலான மூலதனம் தொடர்பான விடயங்களை தீர்த்து வைப்பதற்கான கலந்துரையாடல்களுக்கு உதவுவது இக் குழுவின் நோக்கமாக இருந்தது. அத்தகைய கலந்துரையாடல்களின் அடிப்படையில், 2013 இல் இருந்து செயற்படக் கூடியதாக, உற்பத்தி ஆக்கங்கங்கள் மேலும் சீர்திருத்தப்பட்டன. சபையின் உட்சேர்ப்புகளுடன் சேர்த்து வீதிப் பரிசோதனையின் பெறுபேறுகள், காப்புறுதி தொழிலிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கருத்துகள் என்பவற்றின் பகுப்பாய்வின் அடிப்படையில் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில், இறுதியான இடர் அடிப்படையிலான மூலதன வரைச் சட்டம் காப்புறுதி தொழிலுக்கு வழங்கப்பட்டது. மேலும், காப்புறுதி தொழிலுக்கான, இறுதி இடர் அடிப்படையிலான மூலதன வரைச் சட்டத்தை வழங்குவதற்கும் அது குறித்த பங்கேற்பாளர்களை பயிற்றுவிப்பதற்கும், உலக வங்கியுடன் கூட்டுச் சேர்ந்தது. 2013 ஒக்டோபரில் கருத்தரங்கு ஒன்றை சபை ஒழுங்கு செய்தது. தற்போது, இறுதியான இடர் அடிப்படையிலான மூலதன வரைச் சட்டத்தின் அடிப்படையில் இடர் அடிப்படையிலான மூலதன விதிமுறைகளை செயற்படுத்தப்படுவதற்காக வரைபு செய்யப்பட்டு வருகின்றது.

## 6. அமைவிடத்திற்கான கண்காணிப்புகள்

2013 ஆம் ஆண்டின் போது காப்புறுதி கம்பனிகளின் அமைவிடங்களுக்கே சென்று ஏழு அமைவிடத்திலான கண்காணிப்புகளை சபை நடத்தியது. இத்தகைய கண்காணிப்புகளின் போது, சபையின் சட்டங்களும் மற்றும் ஏனைய விதிமுறைகளும் ஒழுங்குருத்துகைகளும் ஆகியவற்றின் ஏற்பாடுகளுடன், காப்புறுதி வழங்குனர்கள் இணங்குவிப்பாக செயற்படுகின்றனரா என்பதை மதிப்பீடு செய்வதற்காக அவர்களின் செயற்பாடுகள், முறைமைகள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றை சபை மீளாய்வு செய்தது. கம்பனிகளின் செயற்பாடுகள், முறைமைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய இன்னும் அதிகமான தகவல்களை சேகரிக்கும் நோக்கத்துடன், காப்புறுதி கம்பனிகளின் சிரேஷ்ட அதிகாரிகள், உள்ளக/வெளியக கணக்காய்வாளர்கள், மற்றும் கணிப்பீட்டாளர்கள் ஆகியோருடன் நேர்காணல்களும் நடத்தப்பட்டன. காப்புறுதி வழங்குனர்களின் பிரதிபிலிப்புகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் சீர்திருத்தத்திற்கான சபையின் பரிந்துரைகளும் இணைக்கப்பட்டு தொடர்புடைய காப்புறுதி வழங்குனர்களுக்கு, அமைவிடத்திலான கண்காணிப்பின் போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

## 7. இலங்கை மத்திய வங்கிக்கு தகவல்களை சமர்ப்பித்தல்

இலங்கை மத்திய வங்கியின் நிதியில் முறைமையின் சமநிலை பேணும் திணைக்களத்திற்கு காலாண்டு அடிப்படையில் காப்புறுதி தொழிலின் செயலாற்றுகை தொடர்பான நிதியியல் தகவல்களை சபை சமர்ப்பிக்கும். தவணைக் கட்டண வருமானங்கள், இலாபத்தன்மை, திரவத்தன்மை போன்ற காலாண்டு வருவாய்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் காப்புறுதி தொழிலின் செயலாற்றுகை மதிப்பிடப்படுகின்றது.

## 8. மீள் காப்புறுதி ஒழுங்குகள் குறித்த மீளாய்வு

காப்புறுதி சட்டத்தின் 31 (1) ஆம் பிரிவு மற்றும் 50 (1) ஆம் பிரிவுகளின் கீழ், சபையினால் வழங்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, ஒவ்வொரு ஆண்டும் முறையே மார்ச் மாதம் 15 ஆம் திகதி மற்றும் மார்ச் மாதம் 31 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர். காப்புறுதி வழங்குனர்கள். தமது மீள்காப்புறுதி காப்பீட்டு குறிப்புகள் மற்றும் ஒப்பந்தங்கள் என்பவற்றின் சான்றுதிப்படுத்திய பிரதிகளை சபைக்கு அளிக்க வேண்டும் என கோரப்படுகின்றனர். சபையினால் வழங்கப்பட்டுள்ள விகிதாசார தேவைப்பாடுகளை மீள்காப்புறுதி வழங்குனர்கள் இடம் இருந்து பெறப்பட்ட மீள்காப்புறுதி காப்பீடுகள் திருப்திபடுத்துகின்றதா என்பதை உறுதி செய்து கொள்வதற்கு, சொல்லப்பட்ட ஆவணங்களை சபை மீளாய்வு செய்யும். ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளில் இருந்து விலகிச் சென்றமை அவதானிக்கப்பட்ட சந்தர்ப்பங்களின் போது குறிக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் அவற்றை சரிப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

## 9. கலவையான காப்புறுதிகளை வேறுபடுத்தல்

காப்புறுதிச் திருத்தச் சட்டத்தின் 53வது பிரிவிற்கு அமைவாக, 2015 பெப்ரவரி மாதத்திற்குள், நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகம் இரண்டிலும் ஈடுபட்டுள்ள காப்புறுதி

# தொழிற்பாட்டு மீளாய்வு

வழங்குனர்கள் அவர்களின் கலவை காப்புறுதி வர்த்தகத்தை வேறுபடுத்தி பிரிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர். 2013 அம் ஆண்டில், வேறுபடுத்தல் நடவடிக்கைகளையும், தமது கலவை காப்புறுதிகளை வேறுபடுத்துவதற்கு கலவை காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடுவோரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளின் மாதிரிகள் தொடர்பான தகவல்களையும் சபை பரிசீலித்ததுடன், சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்களுக்கு தமது அவதானிப்புகளை அறிவிக்கவும் செய்தது.

### 10. இடர் அடிப்படையிலான மேற்பார்வை கருத்திட்டம்

சபையின் மேற்பார்வை நடவடிக்கைகளை வலுப்படுத்தும் நோக்கத்துடன், ஆண்டின்போது. உலக வங்கி மற்றும் இடர் அடிப்படையிலான மேற்பார்வையை செயற்படுத்தும் முதலாவது பூர்வாங்க கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இடர் அடிப்படையிலான மேற்பார்வை, காப்புறுதி, மீள் காப்புறுதி வழங்குனர்கள், நட்டங்களை சீராக்குபவர்கள், முதலீடுகள், முதலீடுகளுடன் இணைப்புடைய உற்பத்தி போன்ற துறைகளில் சபையின் மேற்பார்வை தகைமையை, இடர் அடிப்படையிலான மேற்பார்வை கருத்திட்டம் விருத்தி செய்யும். 2013 இன் போது, இடர் அடிப்படையிலான மேற்பார்வை கருத்திட்டத்தை முன்னெடுத்து செல்லும் நோக்கத்துடன், ஒட்டு மொத்த கருத்திட்ட திட்டம், காலக்கெடுக்கள், விநியோகங்கள் போன்றவை தொடர்பாக, உலக வங்கியின் ஆலோசகர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 11. காப்புறுதியாளர்களுக்கு விளக்கம் அளிக்கும் நிதியியல் கூற்றுகள்

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து தற்போது நடைமுறையில் உள்ள பரிந்துரைக்கப்பட்ட பிரயோகங்களின் கூற்றிற்கு பதிலீடாக விளக்கம் அளிக்கும் நிதியியல் கூற்றுகளை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் சபை ஈடுபட்டுள்ளது. இது இலங்கை நிதியில் அறிக்கையிடல் தரப்படுத்தலுக்கு சமமானதாக காப்புறுதி வழங்குனர்களின் நிதியியல் கூற்றுகள் முன்வைக்கப்படுவதை அறிவிக்கின்றது. விளக்கம் அளிக்கும் நிதியியல் கூற்றுகள், காப்புறுதி தொழிலின் நிதிசார் அறிக்கையிடல் முறைமையில் ஒரே சீரான அமைப்பினை உருவாக்கும், அத்துடன் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் தரப்படுத்தலுக்கு அமைவாக, நிதிசார் தகவல்களை அளிப்பதற்கும் உதவி செய்யும். 2013 ஆம் ஆண்டின் போது, வழிநடத்தும் குறிப்புகளுடன் சேர்ந்து விளக்கம் அளிக்கும் நிதிசார்ந்த கூற்றுகளை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்துடன், சபை ஒன்றிணைந்து செயற்பட்டது. காப்புறுதி தொழிலின் தீர்மானத்திற்கு மேலே சொல்லப்பட்டதை வழங்குவது இந்த செயற்பாட்டின் நோக்கமாக இருந்தது.

## காப்புறுதி தரகர்கள்

### 1. காலாண்டு வருவாய்கள், இடைக்கால நிதிசார்ந்த கூற்றுகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார்ந்த கூற்றுகள் என்பவற்றின் மீளாய்வு

2010 பெப்ரவரி 25 இன் 1642/16 ஆம் இலக்க (முதலாவது அனுபந்தம்) வர்த்தமாணி அறிவித்தலுக்கு அமைவாக ஒவ்வொரு காலாண்டின் இறுதியிருந்து 45 நாட்களுக்குள் காப்புறுதி தரகர்கள் தமது காலாண்டு வருவாய்கள் மற்றும் இடைக்கால நிதியில் கூற்றுகளை சபைக்கு சமர்ப்பிக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளனர். காப்புறுதி தரகர்களினால் சமர்ப்பிக்கப்படும் காலாண்டு வருவாய்களை சபை மீளாய்வு செய்கின்றது. வருவாய்களின் மீளாய்வின் போது, ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளில் இருந்து விலகல்கள் மற்றும் முரண்பாடுகள் எவையாகிலும் அவதானிக்கப்படுமாயின். சபையினால் குறிக்கப்படும் காலக் கெடுவிற்குள் அவற்றை சரிப்படுத்தும் நடவடிக்கைகளை, சம்பந்தப்பட்ட காப்புறுதி தரகர்கள் மேற்கொள்ள வேண்டும் என அவர்களுக்கு தகவல் அறிக்கப்படுகின்றது.

நிதி ஆண்டின் இறுதியிலிருந்து, ஆறு மாதங்களுக்குள், காப்புறுதி தரகர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனும் தேவைப்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது. காப்புறுதி தரகர்களின் நிதி நிலைமையை மதிப்பீடு செய்யவும் செயலாற்றலை மதிப்பிடவும், கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்றுகளை சபை மீளாய்வு செய்கின்றது. ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகளில் இருந்து விலகிச் செல்லுதல் அவதானிக்கப்பட்ட போது, சம்பந்தப்பட்ட காப்புறுதி தரகர்களுக்கு சரிப்படுத்தலுக்காக அவை தெரிவிக்கப்பட்டன.

### 2. காப்புறுதி தவணைக் கட்டண சேகரிப்புகளை கண்காணித்தல்

காப்புறுதி சட்டத்தின் 89 ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி தரகர்கள் அவர்களால் சேகரிக்கப்படும் காப்புறுதி தவணைக் கட்டணங்களை தொடர்புடைய காப்புறுதி வழங்குனர்களுக்கு. அவை சேகரிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் அனுப்ப வேண்டும். ஆண்டின் போது, காலாண்டு வருவாய்கள், மற்றும் அமைவிடத்தலான பரிசோதனைகளின் போது, மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் ஊடாக காப்புறுதி சட்டத்தின் 89 ஆம் பிரிவிற்கு அமைவாக காப்புறுதி தரகர்கள் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதை சபை உன்னிப்பாக அவதானித்தது. சொல்லப்பட்ட ஏற்பாடுகளுடன் இணங்கி செயற்படாத அத்தகைய காப்புறுதி தரகர்களுக்கு எதிராக சபை அவசியமான நடவடிக்கைகளை எடுத்தது.

### 3. அமைவிடத்திலான பரிசோதனைகள்

சபையின் சட்டங்கள் மற்றும் விதிமுறைகளும் ஒழுங்கமைப்புகளும் என்பவற்றிற்கு அமைவாக, காப்புறுதி தரகு வர்த்தகம் நடைபெறுகின்றதா என்பதை கண்காணிப்பதற்கு 2013 ஆம் ஆண்டின் போது, காப்புறுதி தரகுக் கம்பனிகளில், எட்டு அமைவிடத்திலான பரிசோதனைகளை சபை நடத்தியது. அமைவிடத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டவை சரிப்படுத்தல் நடவடிக்கைகளுக்கான பரிந்துரைகளுடனும். அவசியமான போது சபையினால் எடுக்கப்பட்ட ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட காப்புறுதி தரகர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

### 4. பதிவு செய்தல்களை புதுப்பித்தல்

2014 ஆம் ஆண்டிற்கு தமது பதிவு செய்தல்களை புதுப்பிப்பதற்காக காப்புறுதி தரகர்களிடம் இருந்து கிடைத்த விணைப்பங்களை சபை மீளாய்வு செய்தது. பதிவு செய்தல்கள் புதுப்பிக்கப்படுவதற்கு முன்னர், காப்புறுதி தரகர்களின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதியியல் கூற்றுகளையும் மற்றும் காலாண்டு வருவாய்களையும் பகுப்பாய்வு செய்வதனூடாக, காப்புறுதி தரகர்களின் நிதி நிலைமை மதிப்பிடப்பட்டது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## ஒழுங்கமைப்பு மீளாய்வு

### காப்புறுதி கம்பனிகளை பதிவு செய்தல்

ஆண்டின்போது, காப்புறுதி வழங்குனர்களாக பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை சபை பெறவில்லை. என்பதுடன் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி வழங்குனர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் 22 ஆகவே இருந்தது.

சபையுடன் பதிவு செய்து கொண்டுள்ள காப்புறுதி கம்பனிகள் அனைத்தினதும் பெயர்களை பின்னிணைப்பு I அளிக்கின்றது. அத்துடன் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள காப்புறுதி வர்த்தகத்தின் வகுப்பு/வகுப்புகளையும் தருகின்றது.

**புதிய காப்புறுதி தரகு கம்பனிகளை பதிவு செய்வதும், காப்புறுதி தரகு கம்பனிகளின் பதிவுகளை புதுப்பிப்பதும்**

ஆண்டின் போது காப்புறுதி தரகர்களாக செயற்படுவதற்கு 02 கம்பனிகளுக்கு சபையினால் பதிவு செய்தல்கள் வழங்கப்பட்டன. நீண்ட காலம் மற்றும் பொது காப்புறுதி இரண்டிலும் தரகு வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு தேவையான பதிவு செய்தல்களை இந்த இரண்டு கம்பனிகளும் பெற்றுள்ளன.

ஆண்டின் போது, 2014 ஆம் ஆண்டிற்கு பதிவு செய்தல்களை புதுப்பிக்க விரும்பிய 57 காப்புறுதி தரகுக் கம்பனிகளிடம் இருந்து சபைக்கு விண்ணப்பங்கள் கிடைத்தன. காப்புறுதி சட்டத்தின் கீழ், அவசியமான தேவைப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துடன், 2014 ஆம் ஆண்டிற்கென 56 கம்பனிகளுக்கு, பதிவுகளை புதுப்பிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது.

பின்னிணைப்பு II, சபையுடன் பதிவு செய்துள்ள அனைத்து காப்புறுதி தரகு கம்பனிகளினதும் பெயர்களை அளிக்கின்றது. அத்துடன் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள காப்புறுதி தரகு வர்த்தகத்தின் வகுப்பு/வகுப்புகளையும் தருகின்றது.

### செயற்படுத்தும் நடவடிக்கை

#### காப்புறுதி கம்பனிகள்

**இடை நிறுத்தங்கள்**

ஆண்டின் போது சபையினால் இடை நிறுத்தங்கள் எவையும் விதிக்கப்படவில்லை. எவ்வாறாயினும், 2009 ஆம் ஆண்டில் சிலிங்கோ டக்காபுல் லிமிடட் மீது விதிக்கப்பட்ட இடைநிறுத்தல் தொடர்ந்தும் அமுலில் உள்ளது.

191/09 எஸ்சி (FR) இலக்க அடிப்படை உரிமைகள் வழக்கு மீது தரப்பட்ட உயர் நீதிமன்ற கட்டளையை தொடர்ந்து, கம்பனியின் உண்மையான கோரிக்கைகளை கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்துடன், சிலிங்கோ டக்காபுல் லிமிடட்இற்கு சொந்தமான சொத்துகளை விற்பனை செய்வதற்கான நடைமுறைகளை முன்னெடுப்பதற்காக சிலிங்கோ டக்காபுல் லிமிடட் உடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் சபை ஈடுபட்டது. அதற்கு அமைவாக சிலிங்கோ டக்காபுல் லிமிடட் இன் கோரிக்கையாளர்கள் அவர்களின் கோரிக்கைகளை எழுத்து மூலமாக சபைக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்கின்ற பத்திரிகை அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்டன. தற்போது கிடைத்துள்ள பதில்கள் மீளாய்வு செய்வதிலும் உறுதிப்படுத்திக் கொள்வதிலும் சபை ஈடுபட்டுள்ளது.

**பணிப்புரைகள்**

காப்புறுதி சட்டத்தின் 37(2) ஆம் பிரிவிற்கு அமைவாக, காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு சபையினால் பணிப்புரை ஒன்று வழங்கப்பட்டது. அவர்களால் வழங்கப்பட்ட முதலீட்டு முறி காப்பீடுகளின் ஒரு சில விதிமுறைகளிலும் நிபந்தனைகளிலும் குறிப்பிடப்பட்டிருந்தவை நேர்மை அற்றதும், சமப்படுத்த இயலாததுமாக இருந்தமையால் அவற்றை திருத்துமாறு கோரப்பட்டனர்.

காப்புறுதி சட்டத்தின் 37(2) ஆம் பிரிவிற்கு அமைவாக, நியாயமானதும், சமநிலையானதுமாக அத்தகைய காப்பீட்டு ஆவணங்கள் இருக்க வேண்டும் என்பதற்கான அக்கறை காரணமாக அத்தகைய காப்பீட்டு ஆவணங்களால் காப்புறுதி ஒப்பந்தம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக, சட்டத்தின் 37(1) உப பிரிவின் கீழ் சபைக்கு அளிக்கப்படும் எந்த ஒரு காப்பீட்டு ஆவணமும் நேரடியான திருத்தங்களை கொண்டிருப்பதுடன், அத்தகைய திருத்தங்கள் அவ்வாறான ஆவணங்களில் அளிக்கப்பட்டிருப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் காப்புறுதி வழங்குனரின் கடமையாகும். காப்புறுதி வழங்குனர் ஒருவரினால் ஈடுபடுத்தப்படும், காப்புறுதி முறைமை தொடர்பாக அனேக சட்டத்திற்கு புறம்பான விடயங்கள் அவதானிக்கப்படுமாயின், அத்தகைய காப்புறுதி வழங்குனர்களின் ஸ்திரத்தன்மையையும் மற்றும் நிலையான உறுதிப்பாட்டையும் உறுதி செய்யும் நோக்கத்துடன். காப்புறுதி சட்டத்தின் 57 வது பிரிவின் கீழ் காப்புறுதி வழங்குனருக்கு சபை பணிப்புரைகளை வழங்கும்.

பொது மக்கள் அல்லது தேசிய நலங்கள் அல்லது காப்புறுதி வைப்பாளர்களின் நலன்கள் அல்லது காப்புறுதி வழங்குனரின் நலனுக்கு தீங்கு இழைப்பது போன்ற நட்டத்தை ஏற்படுத்த கூடிய முறைகளில் எந்தவொரு காப்புறுதியாளரின் அலுவல்களும் நடத்தப்படுமாயின், காப்புறுதியாளர்களுக்கு சபை பணிப்புரைகளை வழங்குவதற்கான அதிகாரத்தை சட்டத்தின் 57 வது பிரிவு வழங்குகின்றது.

சம்பந்தப்பட்ட காப்புறுதி வழங்குனர்கள் சொல்லப்பட்ட பணிப்புரைகளை கைகொள்கின்றனரா என்பதை தீர்மானிப்பதற்காக, காப்புறுதி கம்பனிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட பணிப்புரைகள் தொடர்பாக, உன்னிப்பானதும் மற்றும் தொடர்ச்சியானதுமான கண்காணிப்பு ஒன்றை சபையினால் மேற்கொள்ளப்பட்டது.

**எச்சரிக்கைகள்**

ஆண்டின் போது, காப்புறுதி வழங்குனர்களுக்கு சபையினால் எச்சரிக்கை கடிதங்கள் அனுப்பப்படவில்லை.

#### காப்புறுதி தரகு கம்பனிகள்

**எச்சரிக்கைகள்**

காப்புறுதிச் சட்டத்தின் 86(1) ஆம் பிரிவுடன் இணங்கி செயற்பட தவறியமைக்காக 05 தரகுக் கம்பனிகளுக்கு சபையினால் எச்சரிக்கை கடிதங்கள் வழங்கப்பட்டன.

# தொழிற்பாட்டு மீளாய்வு

2010 பெப்ரவரி 25 ஆம் திகதியிட்ட 1642/16 ஆம் இலக்க வர்த்தமாணி அறிவித்தலின் 7 ஆவது விதிமுறையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய காப்புறுதி சட்டத்தின் 86 (1) ஆம் இலக்க பிரிவிற்கு ஏற்ப, ஒவ்வொரு காப்புறுதி தரகு கம்பனிகளும் அதன் காலாண்டு வருவாய்களை, ஒவ்வொரு காலாண்டின் இறுதியில் இருந்தும் நாற்பத்தைந்து நாட்களுக்குள் தரகுக் கம்பனியின் பிரதம அதிகாரியும் மற்றும் பணிப்பாளரும் சபைக்கு சமா்ப்பிக்க வேண்டும் என கோரப்படுகின்றனா்.

மேலும், சட்டத்தின் 89 ஆம் பிரிவை மீறி செயற்பட்டமைக்காக 02 காப்புறுதி தரகுக் கம்பனிகளுக்கு, சபையினால் எச்சரிக்கை கடிதங்களும் வழங்கப்பட்டன.

காப்புறுதி சட்டத்தின் 89வது பிரிவு, காப்புறுதி கம்பனிகளின் சாா்பாக, காப்புறுதி தவணைக் கட்டணங்களை சேகரிக்கும் காப்புறுதி தரகுக் கம்பனிகள், அவை சேகரிக்கப்பட்ட இரண்டு வாரங்களுக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என கோருகின்றது.

2013 ஆம் ஆண்டிற்கான பதிவை புதுப்பிக்கும் விண்ணப்பப் படிவத்தில், சபைக்கு பிழையானதும், தவறாக வழிநடத்தக் கூடியதும் சாியான தகவல்களை கொண்டிராததும் உண்மையான விடயங்களை மறைத்தது மற்றும் வெளிப்படுத்த தவறியது ஆகியவற்றை அளித்தமையினால். மற்றுமொரு காப்புறுதி தரகு கம்பனிக்கும் எச்சாிக்கை கடிதம் ஒன்று வழங்கப்பட்டது.

பதிவு செய்தல் அல்லது பதிவை புதுப்பித்தலுக்கான விண்ணப்பப் படிவத்தில், சபைக்கு பிழையானதும், தவறாக வழிநடத்தக் கூடியதும், சாியான தகவல்ளை கொண்டிராததும், உண்மையான விடயங்களை மறைத்தது மற்றும் வெளிப்படுத்த தவறியது ஆகிய தகல்களை அளித்தமையினால், காப்புறுதி சட்டத்தின் 84(1) (இ) பிரிவிற்கு அமைவாக, தரகா் ஒருவருக்கு அளிக்கப்பட்ட பதிவு ஒன்றை இடைநிறுத்துவதற்கு அல்லது இரத்து செய்வதற்கு அல்லது புதுப்பித்தலுக்கான சான்றிதழ் ஒன்றை மறுப்பதற்கு சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

குறைந்தது 03 வெவ்வெறு சந்தா்ப்பங்களில் காப்புறுதி தரகா் ஒருவருக்கு சபை எச்சாிக்கைகளை வழங்கியிருக்கும் போது, காப்புறுதி சட்டத்தின் 84 (1) (டி) பிரிவிற்கு அமைவாக, அளிக்கப்பட்ட பதிவு ஒன்றை இடைநிறுத்தவதற்கு அல்லது இரத்து செய்வதற்கு அல்லது புதுப்பித்தலுக்கான சான்றிதழ் ஒன்றை மறுப்பதற்கு சபைக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

**பணிப்புரைகள்**

காப்புறுதி சட்டத்தின் 84 ஏ பிரிவிற்கு அமைவாக காப்புறுதி தரகு கம்பனி ஒன்றிற்கு சபையினால் பணிப்புரை ஒன்று வழங்கப்பட்டது. ஆகக் குறைந்த மட்ட தேறிய மூலதன தேவைப்பாடான ரூபா ஒரு மில்லியனை பேணுவதற்கான மூலதனத்தை உட்புகுத்த வேண்டும் என கம்பனிக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. இணக்கப்பாட்டிற்கு நியாயமான காலக் கெடுவும் வழங்கப்பட்டது.

சட்டத்தின் 84 வது பிரிவின் கீழ், நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவிற்கு. நடவடிக்கையின் தன்மையும், அல்லது விடுபட்டவையும் பாரதூரமானதாக இல்லாதிருக்கும் பட்சத்தில், சட்டத்தின் 84 வது பிரிவின் கீழ், இடைநிறுத்துவது, அல்லது இரத்துச் செய்வது அல்லது பதிவு செய்வதை புதுப்பிக்க மறுப்பது போன்ற நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக காப்புறுதி சட்டத்தின் 84 ஏ பிரிவின் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக, காப்புறுதி தரகா்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை சபை வழிநடத்தும்.

(அ) அத்தகைய நடவடிக்கையின் அல்லது விடுபட்டவற்றின் விளைவினால் ஏற்படக் கூடிய எந்தவொரு பலனையும் சீா்படுத்துவதும் மற்றும் சாிப்படுத்துவதும்.

(ஆ) சட்டத்தினால் சபைக்கு தரப்பட்ட எந்தவொரு பணிப்புரைகளினதும், அல்லது விதிக்கப்பட்ட நிபந்தனைகளினதும் கீழ், சட்டத்தினதும், அல்லது எந்தவொரு ஒழுங்கமைப்பினதும் அல்லது விதி முறைகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக இணங்கி செயற்படுவது.

### ஒழுங்கமைப்பு/ஆலோசனை அளவீடுகள்

1. மீள் காப்புறுதி நிறுவனம் ஒன்று அதன் தற்காலிகமான குறைந்த விகிதாசாரத்தை மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் இலங்கையின் சந்தையில் அதன் வா்த்தகத்தை தொடா்ந்து நடத்துவதற்கு உதவக் கூடியதாக அதன் விகிதாசாரத்தை முன்னேற்றுவதற்கு நியாயமான கால இடைவெளி ஒன்றை தருமாறு கேட்டுக்கொண்டது. 2013 ஆம் ஆண்டில் இருந்து காப்புறுதி வழங்குனா்களுக்கு பிரயோகிக்கவென மீள் திருத்தப்பட்ட மீள் காப்புறுதியின் விதிகள் மற்றும் நிபந்தனைகளின் தொடா்ச்சியாக இக் கோரிக்கை செய்யப்பட்டது. எவ்வாறாயினும், சபையினால் அவா்களின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேலும் 2014 ஆம் ஆண்டில் இருந்து மீள் காப்புறுதிக்கு விண்ணப்பிக்கும் போது சபையினால் வழங்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளை காப்புறுதி வழங்குனா்கள் அனைவரும் கண்டிப்பாக இணங்குவிப்புடன் செயற்படுத்த வேண்டும் எனவும் சபை அறிவித்துள்ளது.

2. மாலைதீவின் காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு மூலதனமாக முதலீடு செய்வதற்கு. காப்புறுதி கம்பனி ஒன்று சபையின் அங்கீகாரத்தை நாடியுள்ளது. கோரிக்கை செய்த கம்பனியின் மொத்த சொத்துகளின் 3.3% வீதம் முதலீட்டு தொகையாக இருந்தது.

   2005 அக்டோபா் மாதத்தின் 1414/19 ஆம் இலக்க விசேட வா்தமாணியின் 4(11) ஆம் இல. விதிக்கு அமைவாக, எந்த ஒரு தனி நபரும் அல்லது ஒரு நபரும் அவருடன் தொடா்புடைய தரப்பினரும் இலங்கைக்கு வெளியில் வைத்திருக்க அனுமதிக்கப்பட்ட சொத்துகளின் ஐந்து சத வீதத்தை (5%) விஞ்சலாகாது. இது எந்த ஒரு நேரத்திலும் (உதாரணமாக 20%) இலங்கைக்கு வெளியில் எந்த ஒரு தனி நபரும் அல்லது ஒரு நபரும் அவருடன் தொடா்புடைய தரப்பினரும் வைத்திருக்க அனுமதிக்கப்பட்டுள்ள சொத்துகளின் பெறுமதியின் 5% சதவீதமாகும். எனவே, மொத்த சொத்துகளின் 1% மாக பயனளிக்கும் தனி தரப்பினாின் சொத்துகளின் வெளிப்படுத்தல் உள்ளது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

எனவே, சொல்லப்பட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகளை விஞ்சுகின்ற காரணத்தினாலும், அத்துடன் உத்தேச முதலீடு நியாயமான முதலீட்டு வருவாயை ஈட்டுமா என்பதில் நிலவிய சந்தேகத்தின் அடிப்படையிலும் கம்பனியின் கோரிக்கைக்கு சபை அங்கீகாரம் அளிக்கவில்லை.

3. மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு துறையில் ஒத்துழைப்பு, முயற்சிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளில் ஒத்துழைப்பு, மேற்பார்வை மற்றும் ஒழுங்கமைப்பு தகவல்களை பரிமாறிக் கொள்வதில் ஒத்துழைப்பு போன்ற நோக்கங்களுக்காக சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) ஒன்றினை செய்து கொள்வதற்கான அங்கீகாரத்தை மாலைதீவின் நாணய அதிகார சபை கோரியுள்ளது. சட்டத்தின் 5 (டிடி) பிரிவு, எந்தவொரு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அதிகார சபைகளுடனும் தகவல்களை பகிர்ந்து கொள்வது தொடர்பான எந்தவொரு இரு தரப்பு அல்லது பல்தரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் ஈடுபடுவதற்கான அதிகாரத்தை சபைக்கு அளித்துள்ளது. எனவே, சபை அவர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு, மாலைதீவின் நாணய அதிகார சபையுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை செய்தது.

4. காப்புறுதி தரகுக் கம்பனி ஒன்று, அவர்கள் காப்புறுதி வர்த்தகத்தில் தரகர்களாக ஈடுபடுவதில் இருந்து தடை செய்யக் கூடியதாக காப்புறுதி சட்டத்தில் சட்ட ரீதியான ஏற்பாடு ஒன்று உள்ளதா என்றும், அத்துடன் சபையினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் (பதிவு சான்றிதழ்) மீள் காப்புறுதி வர்த்தகத்தை நடத்துவதற்கும். மற்றும் வெளிநாட்டு மீள் காப்புறுதி ஏற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு அனுமதி வழங்குகின்றதா என்பதையும் சபையிடம் விசாரித்தது. மீள் காப்புறுதி ஏற்பாடுகளுக்கு சபையினால் வழங்கப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளின் பிரகாரம், இலங்கைக்கு உள்ளும் வெளியிலும் அவர்கள் மீள் காப்புறுதி வர்த்தகத்தில் ஈடுபடுவது தொடர்பாக, இலங்கையில் பதிவு செய்துள்ள காப்புறுதி வழங்குனர்கள் மத்தியஸ்தர்களாக செயற்பட முடியுமென சபை அவர்களுக்கு தெரிவித்துள்ளது. அத்துடன் இலங்கை காப்புறுதி தரகர்கள் சங்கம் மற்றும் இலங்கை காப்புறுதி சங்கம் ஆகியவற்றிற்கும் சபையினால் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

5. காப்புறுதி கம்பனி ஒன்றினால் அவர்களின் கடன் தீர் எல்லை கணிப்பீட்டிற்கு ஏற்றுக் கொள்ளத்தக்க சொத்தாக சொல்லப்பட்ட ஆதனம் தொடர்பான புதிய குத்தகை ஒப்பந்தத்தில் அவர்கள் வேறோரு குத்தகை ஆதனத்தை ஈடாக வைப்பதற்கு அனுமதிக்குமாறு சபையின் அங்கீகாரத்தை காப்புறுதி கம்பனி நாடியது. கடன்தீர் எல்லையின் திருத்தப்பட்ட விதி முறைகளுக்கு அமைவாக, (பொது மற்றும் நீண்ட கால காப்புறுதி வர்த்தகம்) 2010 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு சுவீகரிக்கப்பட்ட குத்தகை காணிகளும் மற்றும் கட்டிடங்களும் 2013 ஏப்பிரல் 01 வரையில் மட்டுமே ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என சபை அவர்களுக்கு அறிவித்தது.

6. 2009 ஆம் ஆண்டில், காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு, அவர்கள் தமது தொடர்புடைய கம்பனிகளுக்கு, எந்த விதமான கொடுப்பனவுகளையும் செய்வதில் இருந்து தடை செய்யும் பணிப்புரை ஒன்றை சபை வழங்கியது. 2011 ஆம் ஆண்டில் தொடர்புடைய கம்பனி ஒன்றிற்கு வெளி நிலுவையாக இருந்த கொடுப்பனவுகளை கொடுத்து தீர்ப்பதற்காக சொல்லப்பட்ட காப்புறுதி கம்பனி சபையின் அங்கீகாரத்தை நாடியது. உச்சநீதி மன்னறத்தின் விசேட அனுமதியை பெற்றிருந்தால் அன்றி ஒரு சில மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு மூலதன சொத்துகள், அல்லது ஏனைய சொத்துகளை மாற்றுவதில் இருந்து, இந்த கம்பனியும் ஒரு அங்கத்தினராக இருந்த குழுமத்தில் இடம் பெற்ற கம்பனிகள் அனைத்திற்கும் தடை விதிக்கும் கட்டளை ஒன்றை உச்ச நீதிமன்றம் பிறப்பித்திருந்த காரணத்தினால் இக் கோரிக்கை சபையினால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதை சபைக்கு குறிப்பிட்டு, சொல்லப்பட்ட காப்புறுதி கம்பனி அங்கீகாரத்தை பெறுவதற்காக மீண்டும் சபையை நாடியது. எனவே, குறிப்பிட்ட சில நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்பட்ட சொல்லப்பட்ட கோரிக்கைக்கு சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

7. காப்பீடு ஆரம்பிக்கப்படட திகதியில் முழுமையான காப்புறுதி தவணைக் கட்டணத்தை பெற்றுக் கொள்ளாமல், தொடர்புடைய தரப்பினருக்கு காப்புறுதி காப்பீடுகளை வழங்குவதில் இருந்து தடை விதிக்கும் பணிபுரை ஒன்றை 2012 ஆம் ஆண்டில் காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு சபை வழங்கியது. சொல்லப்பட்ட பணிப்புரையை மீள் பரிசீலனை செய்யுமாறு, சொல்லப்பட்ட காப்புறுதி கம்பனி சபையிடம் கோரிக்கை செய்தது. கம்பனியிடம் இருந்து கிடைத்த தகவல்களை பரிசீலனை செய்ததன் பின்னர், குறிப்பிட்ட சில நிபந்தனைகளை உட்புகுத்தி சொல்லப்பட்ட பணிப்புரையை இரத்து செய்வதற்கு சபை தீர்மானித்தது.

8. திருத்த சட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய ஏற்பாடுகளுக்கு அமைவாக, பணிப்பாளர்களின் நியமனத்திற்காக காப்புறுதி கம்பனிகளினால் அளிக்கப்பட்ட அனேக விண்ணப்பங்களுக்கு சபை அங்கீகாரம் வழங்கியது.

9. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, தலைமை அதிகாரங்களை நியமிப்பதற்கான அங்கீகாரத்தை நாடிய, காப்புறுதி கம்பனிகளுக்கும் காப்புறுதி தரகு கம்பனிகளுக்கும் அளித்த அனேக விண்ணப்பங்களுக்கு சபை அங்கீகாரம் வழங்கியது.

10. கடன்தீர் எல்லை விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டாளர்களை நியமிப்பதற்கு இரண்டு காப்புறுதி கம்பனிகளுக்கு. சபை அங்கீகாரம் வழங்கியது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## ஒழுங்கமைப்பு சீர்திருத்தங்கள்

**விதி முறைகள்**

**காப்புறுதி கம்பனிகளினதும் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளினதும் முன்னராகவே செலுத்தப்பட்டுள்ள பங்கு மூலதனத்தை அதிகரிப்பதற்கான விதி முறைகள்**

2011 ஜுன் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்த காப்புறுதி கம்பனிகள், 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர் காப்புறுதி வர்த்தகத்தின் ஒவ்வொரு வகுப்புகளுக்கும், ரூபா 500 மில்லியனுக்கு குறையாத வகையில் முன்னராகவே செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் அதிகரிக்கப்பட வேண்டும் எனும் புதிய விதிமுறைகளை சபை வழங்கி உள்ளது. 2011 ஜுன் 30 யை தொடர்ச்சியாக காப்புறுதியாளர்களாக பதிவு செய்துக் கொண்ட கம்பனிகளின் ரூபா 500 மில்லியனுக்கு குறையாத, முன்னராகவே செலுத்தப்பட்ட பங்கு மூலதனங்களை கொண்டிருந்தது.

2014 டிசம்பர் 31 அன்று அல்லது அதற்கு முன்னர் ரூபா 2.5 மில்லியனுக்கு குறையாததாக முன்னராகவே செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்தை அதிகரிக்க வேண்டும் என காப்புறுதி தரகுக் கம்பனிகளை கோரும் விதிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலேயுள்ள விதிமுறைகள் காப்புறுதி சட்டத்தின் 95 ஏ பிரிவின் கீழ் எழுதப்பட்டு, 2013 மே மாதத்தின் 1809/7 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டும் உள்ளன.

**கலவையான காப்புறுதி கம்பனிகளின் வேறுபடுத்தல் தேவைப்பாடுகளுடன் இணங்கி செயற்படுவதன் தொடர்ச்சியாக முன்னராகவே செலுத்தப்பட்ட காப்புறுதி கம்பனிகளின் மீதான விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.**

காப்புறுதியாளர் ஒருவராக பதிவு செய்யும் போது ரூபா 100 மில்லியனை முன்னராகவே செலுத்திய பங்கு மூலதனமாக வைத்திருக்க வேண்டிய வேறுபடுத்தல் தேவைப்பாட்டின் தொடர்ச்சியாக, காப்புறுதி கம்பனிகளுக்கு அனுமதி வழங்கவும், அதன் பின்னர் 2015 பெப்ரவரி அன்று அல்லது அதற்கு முன்னர், ரூபா 500 மில்லியனை மூலதனமாக அதிகரிக்கவும் விதி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

**நிறுவன முகவர்களின் பதிவு செய்தல் தேவைப்பாடுகளை விசேடமாக குறிப்பிடும் விதிமுறைகள்**

காப்புறுதி கம்பனிகளிலும் மற்றும் காப்புறுதி தரகு கம்பனிகளிலும் காப்புறுதி முகவர்களாக பதிவு செய்ய இருப்பவர்களுக்கு (தனியார்கள் தவிர்ந்த) பதிவு செய்தல் தேவைப்பாடுகளை விசேடமாக குறிப்பிடும் விதிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## தீர்மானங்கள்

**2002 ஒக்டோபர் 30 இன் 11 ஆம் இலக்க சட்டத்தின் 98 வது பிரிவின் நோக்கத்திற்காக 2009 மே 25 இல் திருத்தப்பட்டுள்ளவாறும் மேலும் 2013 ஏப்பிரல் 30 இல் திருத்தப்பட்டவாறும் பொது காப்புறுதி வர்த்தகத்திற்காக உறுதி செய்யப்பட்ட அதி உச்ச தொகை தொடர்பான தீர்மானங்கள்**

2011 இன் 03 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட சட்டத்தின் 98 ஆம் பிரிவிற்கு அமைவாக, நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி வர்த்தகத்தின் கீழ் உருவாகக் கூடிய, கோரிக்கையாளர்களினால் சபைக்கு அளிக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பான குறைபாடுகளை விசாரிப்பதற்கான அதிகாரம் சபைக்கு அளிக்கப்பட்டுள்ளதுடன், நிச்சயிக்கப்பட்ட தொகை சபையினால் தீர்மானிக்கப்பட்ட குறிப்பிட்ட தொகையை விஞ்சவும் கூடாது.

2009 மே மாதத்தில் நீண்ட கால காப்புறுதி வர்த்தகத்திற்கு நிச்சயிக்கப்பட்ட அதி உச்ச தொகையாக ரூபா 100 மில்லியன் தீர்மானிக்கப்பட்டது. பொது காப்புறுதி வர்த்தகத்திற்கு நிச்சயிக்கப்பட்ட அதி உச்ச தொகையாக ரூபா 200,000 மில்லியன் தீர்மானிக்கப்பட்டது.

**காப்புறுதி கம்பனிகளின் இணங்குவிப்பு சான்றிதழ் தொடர்பான தீர்மானங்கள் - 2013 ஏப்பிரல் 30 இல் திருத்தப்பட்டவாறான 2011 மே மாதம் 31 இன் 12 ஆம் இலக்க தீர்மானம்**

காலாண்டு அடிப்படையில், காலாண்டு வருவாய்களுடன் சேர்த்து இணங்குவிப்பு சான்றிதழை சபைக்கு வழங்குவதற்கான தேவைப்பாட்டை சொல்லப்பட்ட தீர்மானம் காப்புறுதி கம்பனிகளிடம் கோரியுள்ளது.

இந்த இணங்குவிப்பு சான்றிதழ்கள், சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் மற்றும் 2006 இன் 6 ஆம் இல. நிதி கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடும் சட்டத்திற்கும் ஏற்ப காப்புறுதி கம்பனிகள் இணங்கி செயற்படுகின்றதா என்பதை சான்றுறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும்.

## சட்டத்தின் 96 ஏ பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகள்

**காப்புறுதி வைப்பாளர்களுக்கு காப்பீட்டு ஆவணங்களை வினியோகிப்பதற்காக அனைத்து காப்புறுதி கம்பனிகளுக்கும் அளிக்கப்பட்டுள்ள பணிப்புரை 2013 நவம்பர் 29 இன் 2 ஆம் இலக்க பணிப்புரை**

காப்புறுதி வைப்பாளர்களுக்கு காப்பீட்டு ஆவணங்களை விநியோகிப்பதில் சில காப்புறுதி வழங்குனர்கள் தாமதம் செய்வதை அவதானித்ததன் காரணமாக, காப்புறுதி கம்பனிகள் அனைத்திற்கும் பின்வரும் பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- காப்புறுதி வைப்பாளர் காப்பீட்டு ஆவணங்களை பெற்றுக் கொண்டுள்ளார் என்றும், பெற்றுக் கொண்டமைக்கான கடிதத்தில், காப்பீட்டு ஆவனத்தின் பற்றுச் சீட்டில் குறிப்பிட்டுள்ள திகதியும் காப்பீடு வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒரு வார காலத்திற்குள் காப்பீட்டு வைப்பாளரிடம் இருந்து எழுத்து மூலமாக காப்பீட்டை பெற்றுக் கொண்டமைக்கான ஆவனத்தை காப்புறுதி வழங்குனர் பெற்றுக் கொள்ள வேண்டும். காப்புறுதி செய்யப்பட்டது ஒரு கம்பனியாக இருக்கும் பட்சத்தில், பணிப்பாளர் அல்லது அத்தகைய கம்பனியின், கம்பனி செயலாளர் அல்லது கம்பனியின் சார்பாக காப்புறுதி ஆவணங்களை ஏற்றுக் கொள்வதற்கு கம்பனியால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டமைக்கான ஆவணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

**2014 செப்ரெம்பர் 24 அன்று திருத்தப்பட்டவாறான பணிப்புரை-புறம்பான ஒரு தலைமை அதிகாரியையும் புறம்பான ஒரு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரியையும் வைத்திருப்பதற்கு காப்புறுதி கம்பனிகள் அனைத்திற்குமான பணிப்புரை - 2013 டிசம்பர் 31 இன் 3 ஆம் இலக்க பணிப்புரை**

# தொழிற்பாட்டு மீளாய்வு

சபைக்கு வழங்கப்பட்ட 3 ஆம் இலக்க பணிப்புரைக்கு அமைவாக, காப்புறுதி கம்பனிகள் அனைத்தும் தலைமை அதிகாரி ஒருவரையும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரி ஒருவரையும் வைத்திருக்க வேண்டும் என்றும் அத்தகைய தலைமை அதிகாரி அல்லது குறித்தொதுக்கப்பட்ட அதிகாரி வேறொரு காப்புறுதி கம்பனியில் எந்தவொரு தகைமையிலும் பணி ஆற்றக் கூடாதென்றும் காப்புறுதி கம்பனிகள் அனைத்திற்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சட்டத்தின் 32(2) ஆம் பிரிவிற்கு அமைவாக மட்டுமே, காப்புறுதி வழங்குனர் ஒருவரின் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரி அதே காப்புறுதி வழங்குனரின் தலைமை அதிகாரியாகவும் செயற்பட முடியும் என மேலே உள்ள பணிப்புரை குறிப்பிடுகின்றது. அத்துடன் 2014 டிசம்பர் 10 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்பிருந்து மேலே சொல்லப்பட்ட பணிப்புரைகளுடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என பொதுவான தலைமை அதிகாரிகளையும் பொதுவான குறித்தொதுக்கப்பட்ட அதிகாரிகளையும் ஏற்கனவே வைத்துள்ள காப்புறுதி கம்பனிகளுக்கு பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன.

### சுற்றறிக்கைகள்

**காப்புறுதி கம்பனி ஒன்றின் குத்தகை காணிகள், மற்றும் சுயாதீன காணிகள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும் மதிப்பீட்டாளரின் தகைமைகள் - 2013 மார்ச் 14 ஆம் திகதியின், 30 ஆம் இலக்க சுற்றறிக்கை**

சபையின் கடன்தீர் எல்லை விதிமுறைகளின் நோக்கத்திற்காக, இலங்கையில் காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு காப்புறுதி கம்பனிகள் வைத்திருக்க வேண்டிய மதிப்பீட்டாளரின் அலகு சபையினால் குறிக்கப்பட்டிருந்தது.

**18 ஆம் இலக்க சுற்றிக்கைக்கு அமைவாக, காப்புறுதி கம்பனிகளுக்குத் தேவைப்பட்ட முற்சேர்க்கை வருடாந்த சான்றிதழை இரத்துச் செய்தல். 2013 ஏப்பிரல் 30 இன் 31 ஆம் இலக்க சுற்றறிக்கை**

காப்புறுதி கம்பனிகளின் இணங்குவிப்பு சான்றிதழ் தொடர்பான 2013 ஏப்பிரல் 30 ஆம் திகதியிட்ட 12 ஆம் இலக்க தீர்மானத்தின் திருத்தத்திற்கு ஏற்ப 2005 ஜனவரி 18 திகதியிட்ட 18 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் 2006 டிசம்பர் 22 திகதியிட்ட 18 ஆம் இலக்க சுற்றறிக்கையின் திருத்தம் ஆகியவற்றை காப்புறுதி கம்பனிகள் அனைத்தும் கைகொள்ளக் கூடாதென சபை, கோரிக்கை விடுத்துள்ளது.

**கடல் கடந்த சுகாதாரமும் மற்றும் பயண காப்புறுதியும் - 2013 அக்டோபர் 30 ஆம் திகதியிட்ட 32 ஆம் இலக்க சுற்றறிக்கை**

2013 அக்டோபர் 30 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு கடல் கடந்த சுகாதாரம் மற்றும் பயண காப்புறுதி என்பவை தொடர்பான 2002 ஜூன் 5 ஆம் திகதியிட்ட 4 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1 ஆம் இலக்க விடயத்தில் வழங்கப்பட்டிருந்த அங்கீகாரத்தை சபை இரத்துச் செய்தது.

எவ்வாறாயினும் 2002 ஜூன் 5 ஆம் திதியிட்ட 4 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 1 ஆம் இலக்க விடயம் இரத்து செய்யப்படினும், சட்டத்தின் 101 ஆம் பிரிவிற்கு அமைவாக மட்டுமே இலங்கையில் பதிவு செய்திராத அத்தகைய காப்புறுதியாளர் ஒருவர் கடல் கடந்த காப்புறுதி உரிமம் அல்லது பதிவு செய்தல் ஒன்றை பெற்றிருப்பாராயின், இலங்கையில் உள்ள எந்தவொரு நபரும், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுகாதாரம் மற்றும் பயண காப்புறுதி காப்பீட்டை பெறுவதற்கு சபை அங்கீகாரம் வழங்கியது.

i. வெளிநாடுகளுக்கு பயணம் செய்யும் நோக்கத்திற்காக

ii. வெளிநாடுகளில் தங்கியிருக்கும் காலம் வரையிலும்

iii. சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதி தரகு கம்பனிகள் ஊடாக.

2013 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் இருந்து மேலே சொல்லப்பட்ட அங்கீகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

எவ்வாறாயினும், சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகளிடம் சுகாதாரம் மற்றும் பயண காப்புறுதி காப்பீடுகள் கிடைக்காத போது, அவை சட்டத்தின் 101 ஆம் பிரிவின் கீழ் எழுத்து மூலமான அங்கீகாரத்தை சபையிடம் இருந்து பெற்றிருந்தால் மட்டுமே வெளிநாட்டு காப்புறுதி வழங்குனர்களுடன் இடம் பெறலாம்.

**காப்பீட்டு ஆவணங்களுடன் சான்றுறுதிப்படுத்திய பிரேரணை படிவம் ஒன்று, மற்றும் பிரேரணையாளரினால் மருத்துவ அதிகாரிக்கு செய்யப்பட்ட தனிப்பட்ட அறிக்கையின் சான்றுறுதிப்படுத்திய பிரதி ஒன்று (ஏதாகிலும் இருப்பின்) ஆகியவற்றை காப்புறுதி கம்பனிகள் இணைப்பது - 2013 டிசம்பர் 9 ஆம் திகதியின் 33 ஆம் இலக்க சுற்றறிக்கை.**

சட்டத்தின் 42(3) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளை சபை பிரதிபலிப்பதை தொடர்ந்து, நற்பிரயோக நடவடிக்கை ஒன்றாக, காப்பீட்டு ஆவணங்களுடன். சான்றுறுதிப்படுத்திய பிரேரணை படிவம் ஒன்றும் மற்றும் பிரேரணையாளரினால் மருத்துவ அதிகாரிக்கு செய்யப்பட்ட தனிப்பட்ட அறிக்கையின் சான்றுறுதிப்படுத்திய பிரதி ஒன்றும் ஏதாகிலும் இருப்பின் அவற்றை இணைக்க வேண்டும் என காப்புறுதி கம்பனிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

சட்டத்தின் 42(3) ஆம் பிரிவிற்கு ஏற்ப, அதன் சார்பாக காப்புறுதி கம்பனி ஒன்றிற்கு செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, காப்புறுதி வைப்பாளருக்கு அல்லது அவரின் சட்ட பிரதிநிதிக்கு அல்லது காப்புறுதியின் சட்டபூர்வமான நியமனத்தார் ஒருவருக்கு, காப்பீட்டு பிரேரணைக்கான சான்றிதப்படுத்திய பிரதி ஒன்றையும் மற்றும் பிரேரணையாளரினால் மருத்துவ அதிகாரிக்கு செய்யப்பட்ட தனிப்பட்ட அறிக்கையொன்றையும், அப்பிரதிகள் ஏற்கனவே காப்பீட்டுடன் இணைக்கப்படாதிருப்பின் காப்புறுதி கம்பனி அவற்றை வழங்கும்.

**கலவையான காப்புறுதி கம்பனிகளுக்கான வேறுபடுத்தல் மீதான வழிகாட்டல்கள்**

நீண்டகால காப்புறுதி, மற்றும் பொது காப்புறுதி வர்த்தகம் இரண்டிலும் (உதாரணமாக கலவை காப்புறுதி வழங்குனர்கள்) ஈடுபட்டிருந்த காப்புறுதி வழங்குனர்களுக்கு வேறுபடுத்தல்கள் மீதான வழிகாட்டல்களை சபை வழங்கியது. 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அல்லது அதற்கு முன்னர் திருத்தச் சட்டத்தின் 53 வது பிரிவுடன் இணங்கி செயற்பட வேண்டும் என கலவை காப்புறுதி கம்பனிகள் கோரப்பட்டுள்ளன.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## புலனாய்வு சார்ந்த மீளாய்வு

சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நியம கடப்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களினதும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்களினதும் ஈடுபாடுகளை பாதுகாக்க வேண்டியது சபையின் ஒட்டு மொத்தமான நோக்கமாகும். அதற்கமைய, காப்புறுதி வைப்பாளர்களின் ஈடுபாடுகளை பாதுகாப்பது சபையின் ஒழுங்கமைப்பு செயன் முறையை முழுமையாக்கும் ஒரு பகுதியாகும். இதனை நிறைவேற்றுவதற்காக சபைக்கு முறைபாடு ஒன்று கொண்டு வரப்படும் போது, அத்தகைய முரண்பாடுகளை சபை விசாரணை செய்யும்.

முறைப்பாட்டாளரினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்களின் விபரமான பகுப்பாய்வு மற்றும் காப்புறுதி கம்பனிகள், காப்புறுதி தரகர்கள், முகவர்கள் மற்றும் வெளியில் இருந்து வரும் ஏனைய தரப்பினர்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட சான்றுகள் என்பவையும் புலனாய்வு செயன்முறையில் உள்ளடங்கும்.

2013 ஆம் ஆண்டின்போது, மொத்தமாக 298 முறைபாடுகளை சபை பெற்றது. விசாரணை செய்யப்பட்ட அனைத்து முறைபாடுகளிலும், 278 முறைபாடுகள் 2013 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்டன. மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது பெறப்பட்ட முறைபாடுகள் அட்டவணை 01 இல் வகைப்படுத்தல் ரீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது.

***அட்டவணை 01***


***வகைப்படுத்தல் ரீதியாக பெறப்பட்ட முறைபாடுகள்***

| பொது | இல | நீண்டகாலம் | இல. | முகவர் சம்பந்தமானவை | இல. |
|---|---|---|---|---|---|
| வாகனம் | 135 | மருத்துவ செலவு | 06 | வேலைவாய்ப்பு விடயங்கள் | 09 |
| கடல் சார்ந்தவை | 02 | மரணத்திற்கான நன்மைகள் | 18 | தகைமைகள் | 13 |
| தீ அபாயம் | 10 | அங்கவீனம் | 02 | சட்டவிரோத கையாடல் | 08 |
| வேலை நிறுத்தம், கலவரம், சமூக கிளர்ச்சி, மற்றும் பயங்கரவாதம் | 02 | உள்ளடக்கம் நீக்கப்பட்ட.்.புதுப்பிக்கப்படாத காப்புறுதி | 06 | ஏனையவை | 07 |
| கொள்ளைச் சம்பவம் | 07 | முதிர்வுகால நன்மைகள்/ஒப்புவிக்கப்பட்ட பெறுமதி | 21 | | |
| செயலாற்றுகை/முன் கொடுப்பனவு | 07 | ஏனையவை - கடன்கள் | 02 | | |
| தொழிலாளர் இழப்பீடு | 01 | கட்டுப்பண மீளளிப்புகள | 12 | | |
| வெள்ளம் | 03 | முதலீட்டு காப்புறுதிகள் | 10 | | |
| அக்ரஹார/ குரு அபிமாணி | 03 | ஆபத்தான நோய்கள் | 07 | | |
| ஒப்பந்தக்காரர்களின் இடர் | 01 | | | | |
| கடன் பாதுகாப்பு | 02 | | | | |
| குழுமக் காப்புறுதி | 01 | | | | |
| உபகரணங்களுக்கான இடர் | 03 | | | | |

2013 ஆம் ஆண்டின் போது கிடைக்கப் பெற்றதும். தீர்க்கப்பட்டதுமான முறைபாடுகளை வரைபடம் 01 காண்பிக்கின்றது.

***வரைபடம் 01***

***2013 ஆம் ஆண்டின் போது கிடைக்குப் பெற்றதும், தீர்க்கப்பட்டதுமான முறைபாடுகள்***




# தொழிற்பாட்டு மீளாய்வு

2013 ஆம் ஆண்டின் போது கம்பனி ரீதியாக கிடைக்கப்பெற்ற முறைபாடுகளின் பிரதிகளை வரைபடம் 02 காண்பிக்கின்றது

***வரைபடம் 02***


***2013 ஆம் ஆண்டின்போது கம்பனி ரீதியாக கிடைக்கப்பெற்ற முறைபாடுகளின் பிரிவுகள்***




2009 ஆம் ஆண்டில் சபையின் புலனாய்வுப் பிரிவு உருவாக்கப்பட்டது. 2010 ஆண்டில் இது முழுமையான பிரிவாக அமைக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டில் இருந்து ஆண்டு தோறும் கிடைத்த முறைபாடுகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

***வரைபடம் 03***

***2009 ஆம் ஆண்டிவிலிருந்து ஆண்டு தோறும் கிடைத்த முறைபாடுகள்***



# தொழிற்பாட்டு மீளாய்வு

விசாரணைகளின் பின்னர், மீளாய்வின் கீழ்வரும் ஆண்டின் போது மொத்தமாக 43 முறைபாடுகள் தீர்த்து வைக்கப்பட்டன. அத்துடன், இக் கோரிக்கைகளுக்கான ஒட்டு மொத்த பெறுமதியின் தொகை ரூபா 18,276,694 ஆகவும் இருந்தது.

#### ஏனைய நிர்ணயிக்கப்பட்ட பணிகள்

தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடட் கொள்கைகளின் போனஸ் கொடுப்பனவு தொடர்பான அனேக விடயங்கள் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இவ்விடயம் விசாரிக்கப்பட்ட பின்னர், காப்புறுதி வைப்பாளர்களுக்கு ஏற்றவாறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

- மூன்றாவது தரப்பு காப்புறுதி மற்றும் கோரிக்கைகள் மீதான கொடுப்பனவு நடைமுறைகள் என்பவற்றின் செயன் முறைகளை எளிமையானதாக்கும் நோக்கத்துடன், வாகன போக்குவரத்து திணைக்களம் மற்றும் ஏனைய தொடர்புடைய பங்குதாரர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. ஏனைய அதிகார வரம்பிற்குள் பரவலாக செயற்பட்டுக் கொண்டிருந்த பிரயோகங்கள் மற்றும் நடைமுறைகள் என்பவை குறித்த ஆய்வுகளை வாகன போக்குவரத்து சட்டத்திற்குள் கூட்டிணைப்பதற்கான அதன் பிரேரனையை சபை, வாகன போக்குவரத்து திணைக்களத்திற்கு முன்வைத்தது.

- முறைபாடுகளை கையாளும் செயன் முறையின் போது முகவர்கள் மற்றும் அவர்களின் ஆட்சேர்த்தல்கள், பதவி நீக்க நடைமுறைகள் போன்றவை தொடர்பாக அனேக பிரிவுகளில் முன்னேற்றம் தேவைப்படுவதை சபை கவனத்திற் கொண்டது. இலங்கை காப்புறுதி சங்கத்துடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்காக அனேக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- கோரிக்கைகள் கையாளப்படுவது தொடர்பாக, சபை அதன் எழுத்து மூலமான உள்ளக நடைமுகைளை வடிவமைத்தது. இதனூடாக கைக்கொள்ளப்படும் நடைமுறைகளும், செயன் முறைகளும் ஸ்திரமானமாகவும், வெளிப்படைத் தன்மையை கொண்டிருப்பதையும் உறுதி செய்தது.

- சபைக்கு கிடைத்து வரும் பல்வேறு வகையான முறைப்பாடுகளையும் அவதானித்ததன் பின்னர், சபையினால் வெளியிடப்படும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு சாதனங்களின் தயாரிப்பின் போது, பொதுமக்களுக்கு தெரிவிக்க வேண்டிய முக்கிய துறைகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## சந்தை அபிவிருத்தியும் மற்றும் வெளியக உறவுகளும் மீளாய்வு

காப்புறுதி வைப்பாளர்களை பாதுகாக்கும் நோக்கத்துடன் தகவல் அறிந்த பொதுமக்களை கொண்டிருப்பதற்கு, பொதுவான விழிப்புணர்வின் ஊடாக, காப்புறுதி மீதான பொது மக்களின் அறிவாற்றலை முன்னெற்றுவதற்கு சபை முயலுகின்றது.
இந்த நோக்கத்தைக் கருத்திற் கொண்டு, குறிக்கப்பட்ட இலக்கைக் கொண்ட பொது மக்களை அடையும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டில் பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களை சபை பயன்படுத்தியது. அவை பின்வருமாறு தரப்பட்டுள்ளது:

### பிரதேச செயலகங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்

இந்த நிகழ்ச்சித் திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது, மேல் மாகாணம், வட மேல் மாகாணம், சப்ரகமுவ மாகாணம், தென் மாகாணம், மத்திய மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணம் ஆகியவற்றின் பிரதேச செயலகங்கள் சபையின் கீழ் செயற்பட்டன. காப்புறுதி குறித்து நாளாந்த அடிப்படையில் பொது மக்களுடன் நேரடி தொடர்பாடல்களை கொண்டுள்ள பொது மக்கள் பிரதிநிதிகளின் அறிவாற்றலை விருத்தி செய்வது இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும். கிராம சேவகர்கள். வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உதிதியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேச சபை செயலகங்களின் அதிகாரிகள் ஆகியோர் இந்த நிகழ்சித் திட்டங்களில் கலந்து கொண்டனர்.

ஏறத்தாழ 690 கிராம சேவகர், பிரிவுகளை உள்ளடக்கிய பாதுக்க, மினுவாங்கொட, ஆணைமடுவ, குருநாகலை, பலாங்கொட, பேருவளை, மிஹிந்தலை, ஹிக்கடுவ, களுத்துறை மற்றும் குண்டசாலை பிரதேச சபை செயலகங்களில், பத்து (10) விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன.





### கண்காட்சிகளில் பங்கேற்பு

2013 மார்ச் 23 ஆம் திகதியிலிருந்து 29 ஆம் திகதிவரை ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவனம், அம்பாறையில் நடைபெற்ற 65 வது சுதந்திர தின கொண்டாட்டங்களுடன் இணைந்து, 7வது "தயட்ட கிருள" கண்காட்சியில் சபை பங்கேற்றது. ஹார்டி உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வாசிப்பு அறை ஒன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா ஒரு மில்லியனை சபை பங்களிப்பு செய்தது.







காப்புறுதி தொழிலுடன் கிராமிய மக்களுக்கு சிறப்பான இணைப்பை இத்தகைய வருடாந்த தேசிய கண்காட்சிகள் உருவாக்கின. அத்துடன் சபையின் அதிகாரிகளுடன் தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்வதற்கு இந்த கண்காட்சி அறைகளுக்கு வருகை தந்தவர்களுக்கு நல்லதொரு வாய்ப்பையும் வழங்கியது. ஏறத்தாழ 4000 பொது மக்கள் இக்கண்காட்சி அறைகளுக்கு விஜயம் செய்தனர்

சபை அதன் வெகுஜன தொடர்பாடல் உத்திகளால் மின்னியல் மற்றும் அச்சு ஊடகங்களை முக்கியமான உபகரணமாக பயன்படுத்தியது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

#### ஊடக நேர்காணல்கள்

2013 ஏப்பிரல் 9 ஆம் திகதி அன்று இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் "நுக செவன" நிகழ்ச்சித் திட்டத்தில் நேரடி கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றது. சபையின் சட்டத்துறை பணிப்பாளர் மற்றும் இலங்கை காப்புறுதி சங்கத்தின் பிரதிநிதி ஒருவர் ஆகியோரினால், "காப்புறுதியின் ஒழுங்கமைப்பு அம்சங்கள் மற்றும் காப்புறுதிக்கான தேவை" எனும் தலைப்பில் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களிடம் இருந்து நாம் பெறுகின்ற தொடர்ச்சியான விசாரணைகளில் இருந்து, அந்த நிகழ்ச்சித் திட்டத்தை அனேகர் ஏற்றுக் கொண்டுள்ளதை அறிய முடிகின்றது.

#### வெளியீடுகள்

மிளாய்வின் கீழ் வரும் ஆண்டில், சபை பல்வேறு வெளியீடுகளை பிரசுரித்ததுடன் வினியோகமும் செய்தது. இவ்வாறான வெகுஜன தொடர்பு சாதணங்கள்,பொதுமக்கள் காப்புறுதியின் கருப்பொருளை புரிந்து கொள்ள உதவியதுடன், காப்புறுதி உற்பத்திகளை கொள்வனவு செய்வதற்கு அவர்களுக்கு உதவக் கூடியதாக காப்புறுதியின் ஏனைய முக்கிய அம்சங்களையும் கொண்டிருந்தது.

செய்தி பத்திரிகை விளம்பரங்கள், அநுபந்தங்கள், கட்டுரைகள், பத்திரிகை அறிவித்தல்கள், பத்திரிகை வெளியீடுகள் மற்றும் பத்திரிகை நேர்காணல்கள் போன்ற பின்வரும் சாதனங்களை சபை பிரசுரித்தது.

**அ) பத்திரிகை வெளியீடுகள்**

- 2013 ஜுன் மாதத்தில், "2012 ஆம் ஆண்டின் போது காப்புறுதி தொழிலின் செயலாற்றல்கள்" என்ற பத்திரிகை வெளியீடு பிரசுரிக்கப்பட்டது.
- 2013 நவம்பர் மாதத்தில், 2013 ஆம் ஆண்டின் முதல் அரை ஆண்டின் போது காப்புறுதி தொழிலின் செயலாற்றல் என்ற பத்திரிகை வெளியீடு பிரசுரிக்கப்பட்டது.

**ஆ) பத்திரிகை அறிவித்தல்கள்**

- 2013 ஜுன் மாதத்தில் "பதிவு செய்யப்பட்ட காப்புறுதி கம்பனிகளின் பட்டியல்" மூன்று மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தலாக பிரசுரிக்கப்பட்டது.
- 2013 ஜுன் மாதத்தில் "பதிவு செய்யப்பட்ட காப்புறுதி தரகுக் கம்பனிகளின் பட்டியல்" மூன்று மொழிகளிலும் பத்திரிகை அறிவித்தலாக பிரசுரிக்கப்பட்டது.
- 2013 டிசம்பர் மாதத்தில், "கவலைப்படுவதைவிட பாதுகாப்பாக இருப்பது நல்லது" எனும் பத்திரிகை அறிவித்தல் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டது.

**இ) பத்திரிகை கட்டுரைகள்**

- 2013 பெப்ரவரி மாதத்தில், "காப்புறுதி காப்பீடு ஒன்றை பெறும் போது" எனும் தலைப்பில் டெயிலி மிரர் பத்திரிகையின் காப்புறுதி அநுபந்தத்தில் பத்திரிகை கட்டுரை ஒன்று பிரசுரிக்கப்பட்டது.
- 2013 ஜுலை மாதத்தில் "இடர் அடிப்படையிலான மூலதனம் கருத்தரங்கு" குறித்த பத்திரிகை கட்டுரை பிரசுரிக்கப்பட்டது.

**ஈ) பத்திரிகை நேர்காணல்**

- "சிலோன் டுடே" பத்திரிகையின் வர்த்தகப் பிரிவு ஆசிரியர் செய்த கோரிக்கையைத் தொடர்ந்து, 2013 நவம்பர் மாதத்தில் சபையின் பணிப்பாளர் நாயகம், "சிலோன் டுடே" பத்திரிகையுடன் பத்திரிகை நேர்காணல் ஒன்றை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டது.

**உ) சுவரொட்டிகள்**

பொது மக்களுக்கு பரவலாக தகவல்கள் கிடைப்பதற்காக, மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் சபையின் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்தப்பட்டன.

**ஊ) கையேடுகளும், துண்டு பிரசுரங்களும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்)**

பின்வரும் தலைப்புகளிலான கையேடுகள் அச்சிடப்பட்டன.

- சிங்களத்திலும் தமிழிலும் "காப்புறுதி உங்களுக்கு தெரியுமா"?
- சிங்களத்திலும் தமிழிலும் "கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்".
- சிங்களத்திலும் தமிழிலும் "காப்புறுதி பிரேரணை படிவங்கள்".
- சிங்களத்திலும் தமிழிலும் "காப்புறுதி வழங்குளர்களின் பட்டியல்"
- சிங்களத்திலும் தமிழிலும் "காப்புறுதியின் முக்கியத்துவம்"
- சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் "இலங்கை காப்புறுதி சபை"



# தொழிற்பாட்டு மீளாய்வு

### ஏனைய நடவடிக்கைகள்

**அ) சபை குறித்த ஆவணப் படம்**

சபையைப் பற்றி தயாரிக்கப்பட்ட காண் ஒளி ஆவணப்படம் ஆங்கில மொழியின் உபதலைப்புகளை உட்சேர்ப்பதற்காக பதிப்பாக்கம் செய்யப்பட்டன. அத்துடன் சந்தை புள்ளி விபரங்களும் மேலும் நாளதற்கு கொண்டு வரப்பட்டன.

**ஆ) உற்பத்தி இடைவெளி பகுப்பாய்வு**

காப்புறுதி கைத்தொழிலின் வளர்ச்சிக்கு உதவும் நோக்கத்துடன் காப்புறுதி கம்பனிகளின் உற்பத்திகளை சபை மீளாய்வு செய்தது. இதற்கான ஆரம்பகட்ட முயற்சியாக, ஆண்டின் போது வாகன காப்புறுதி காப்பீடுகள் மீளாய்வு செய்யப்பட்டன. முன்னேற்றப்பட வேண்டிய பகுதிகளும் அடையாளம் காணப்பட்டன.

**இ) பொதுமக்களுக்கான ஆலோசனைகள்**

மீளாய்வின் கீழ்வரும் ஆண்டில், காப்புறுதியுடன் தொடர்புடைய தகவல்களை கோருபவர்கள் மற்றும் காப்புறுதியுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் குறித்து விசாரணைகள் செய்யும் பொது மக்கள், காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் பங்குரிமையாளர்கள் ஆகியோரின் பலதரப்பட்ட விசாரணைகளையும். முறைப்பாடுகளையும் சபை கவனத்தில் கொண்டது.

# தொழிற்பாட்டு மீளாய்வு

## நிர்வாக மீளாய்வு

### பணியாட் தொகுதியினர்

எந்த ஒரு நிறுவனத்தின் வெற்றியும் அதன் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட மக்களின் திறமையிலேயே பெரும் அளவில் தங்கி இருக்கின்றது. எனவே, சபையின் வெற்றிகரமான உத்திகளுக்கு முதுகெலும்பாக இருப்பது மனித மூலவளம் என நாங்கள் நம்புகின்றோம்.

சபை நிறுவன கட்டமைப்பு ஒன்றை நிறுவி உள்ளது. காப்புறுதி வைப்பாளர்கள் மற்றும் உத்தேச காப்புறுதி வைப்பாளர்கள் அனைவரது ஆர்வங்களையும் பாதுகாக்கும் நோக்கத்துடன். இலங்கையின் காப்புறுதி கைத்தொழில் நேர்மையுடன் நடத்தப்படுவதை உறுதி செய்யும் ஒட்டு மொத்த நோக்கத்தை அடைவதற்கு தனது கடமையை நிறைவேற்ற அவசியமான நடவடிக்கைகளை அடையாளம் காணுகின்றது.

தேவைப்படும் தொழிற் சார்ந்தவர்களை ஏற்ற நேரத்தில் நியமிப்பதன் ஊடாக, மனித வளத்தை வலுப்படுத்தும் நோக்கத்துடன். மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது அனேக முக்கியமான முன்னெடுப்புகளை சபை எடுத்தது. இத்தகைய முன்னெடுப்புகளை சந்திப்பதற்காக, மீளாய்வின் கீழ் வரும் ஆண்டின் போது நிரந்தர பதவிகளுக்கு ஒரு பணிப்பாளர், ஐந்து நிறைவேற்று அதிகாரிகள், மற்றும் ஒரு செயலாளர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, சபையின் மொத்த பணியாட் தொகுதியினரின் வலு 42 பதவிகளாக இருந்தது.

கீழே உள்ள அட்டவணையில் 2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறான பணியாட் தொகுதியினரின் கல்வி மற்றும் தொழில் சார்ந்த தகைமைகள் காண்பிக்கப்பட்டுள்ளன.

| கல்வி சார்ந்த/தொழில் சார்ந்த தகைமைகள் | பட்டப்பின்படிப்பு பட்டங்களும் முதலாவது பட்டமும், மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப்பின் படிப்பு பட்டங்களும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | பட்டப் பின்படிப்பு மற்றும் முதலாவது பட்டம் | முதலாவது பட்டமும் மற்றும் தொழில் சார்ந்த தகைமைகளும் | முதலாவது பட்டம் | தொழில் சார்ந்த தகைமைகள் |
|---|---|---|---|---|---|---|
| பணியாட் தொகுதியினரின் எண்ணிக்கை | 03 | 03 | 01 | 09 | 11 | 04 |

### பயிற்சி

பணியாளர்கள் தமது செயலாற்றல்களையும், முறைபடுத்தப்பட்ட இலக்குகளையும் சீர்படுத்திக் கொள்வதற்கான அறிவாற்றலை பெற்றுக் கொள்வதற்கும். தொழில் தொடர்பான திறமைகளை கற்றுக் கொள்வதற்கும், அவர்களுக்கு உதவுகின்ற விரிவான கொள்கைகளை கொண்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகளில் கவனம் செலுத்துவது, ஆண்டின்போது பணியாளர்களின் திறமைகளை வலுப்படுத்தவதற்கு என்றும் அத்துடன் புதிய அறிவிப்புகள் உடன் சமமாக உள்நாட்டிலும் அதைப் போன்று வெளிநாடுகளிலும் பயிற்சிகளை பெறும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

| வகைப்படுத்தல் | 2012 (ரூபா) | 2013 (ரூபா) |
|---|---|---|
| நீண்டகால பயிற்சி | 811,321 | 1,535,494 |
| வெளிநாட்டு பயிற்சி | 6,290,479 | 6,287,452 |

### பணியாட் தொகுதியினரின் நலன்கள்

நிறுவனத்தின் பணியாளர்களின் நலன்களில் அக்கறை காட்டுவது, அவர்கள் மத்தியில் ஊக்குவிப்பை உருவாக்குவதிலும் அவர்களின் நேர்மையை அதிகரிப்பதிலும் முக்கிய காரணியாக செயற்படுகின்றது. எனவே, உள்ளேயும், வெளியிலும் கிடைக்கும் மருத்துவத் திட்டங்கள், சுய விபத்து காப்புறுதி காப்பீடு, வாகனம் மற்றும் துயரிடர் கடன் திட்டங்கள், பண்டிகை முற்பணக் கொடுப்பனவுகள் உள்ளடங்களாக கவர்ச்சிகரமான நலன்புரி பொதிகள் ஆகியவற்றை சபை வழங்குகின்றது. மேலும் உள்ளக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வருடாந்த ஒன்று கூடல் போன்றவற்றை ஒழுங்குபடுத்துவதன் மூலம் பணியாட் தொகுதியினருடனும், அவர்களின் குடும்பத்தினருடனும் நல்லுறவுகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளையும் சபை வழங்குகின்றது.

### தகவல் தொழில்நுட்பம்

தகவல் தேவைப்படும் பங்குடமையாளர்களுக்கு, அவை தெளிவாக கிடைக்க வேண்டும் என்பதற்காக, சபை தனது இணைய தளத்தை மீள களம் இறக்கியது.

சபையின் பாதுகாப்பு குறித்த தரத்தை விருத்தி செய்யும் நோக்கத்துடன், சிசிடிவி கமரா (CCTV) அமைப்பு ஒன்று பொருத்தப்பட்டது. தற்போதய தகவல் தொழில் நுட்ப திட்டத்திற்கும் மற்றும் தேடிப் பெற்றுக் கொள்ளல் திட்டத்திற்கும் அமைவாக, சபையின் அனேக கணணி உபகரணங்களுக்கு மாற்றீடாக புதிய கணணி உபகரணங்கள் பெறப்பட்டன.

# தொழிற்பாட்டு மீளாய்வு


## நிதியியல் மீளாய்வு

### காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் (PPF)

காப்புறுதி தொழில் சட்டத்தின் பிரகாரம், காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திற்காக சேகரிக்கப்படுகின்ற, அச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்கும் உடனடியாகத் தேவைப்படாத எந்தவொரு பணமும் (Cess) விவேகமான முறையில் சிறந்த வருவாயை ஈட்டுவதற்காக சபையினால் முதலீடு செய்யப்பட வேண்டும். அதன் பிரகாரம் இவ் ஆண்டு காலத்தின் போது அத்தகைய நிதிகளை உரியவாறு சபை முதலீடு செய்ததுடன், பின்வரும் வரைபடம் 01 செஸ் சேகரிப்பு மற்றும் 2009 இலிருந்து 2013 வரை ஈட்டப்பட்ட வருமானம் ஆகியவற்றை விபரமாக காட்டுகின்றது.

*வரைபடம் 01*

*2009-2013 பகுதிக்கான செஸ் வருமானமும் முதலீட்டு வருமானமும்*




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| செஸ் வருமானம் (ரூ.மி) | 139 | 145 | 217 | 237 | 246 |
| முதலீட்ட வருமானம் (ரூ.மி) | 91 | 76 | 80 | 136 | 236 |


செஸ் வருமானம் (ரூ.மி)

முதலீட்டு வருமானம் (ரூ.மி)

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செஸ் வருமானம் தொடர்பான வளர்ச்சியை மேலே உள்ள வரைபடம் 01 தெளிவாக காண்பிக்கின்றது. முதலீட்டுத் துறையின் பன்முகப்படுத்தலின் காரணமாக 2012 இலிருந்து 2013 வரையான காலப்பகுதியில் முதலீட்டு வருமானம் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை அடைந்தது காட்டப்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடங்களில் காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி அதிகரித்து உள்ளதுடன். அதனை வரைபடம் 02 தெளிவாக காட்டுகின்றுது.

*வரைபடம் 02*

*2009 - 2013 பகுதிக்கான காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் பெறுமதி*





| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்ப நிதியத்தின் மதிப்பு (ரூ.மி) | 755 | 1,012 | 1,276 | 1,622 | 1,778 |

# தொழிற்பாட்டு மீளாய்வு

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு, கீழே தரப்பட்டுள்ளது.

***வரைபடம் 03***

***2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் சொத்துகளின் தொகுப்பு***




**சபையின் வருமானம்**


சபையின் அனைத்தையும் உள்ளடக்கிய வருமானம் பின்வரும் வழிவகைகள் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- காப்புறுதி வழங்குனர் மற்றும் காப்புறுதி தரகுக் கம்பனிகளிடம் இருந்து கிடைக்கும் பதிவுக் கட்டணம்.
- காப்புறுதி கம்பனிகளிடம் இருந்து அறவிடப்படும் வருடாந்தக் கட்டணம்.
- காப்புறுதித் தரகுக் கம்பனிகளின் பதிவுகளை புதுப்பிக்கும் வருடாந்த பதிவு கட்டணம்.
- மிகை நிதியங்களை முதலீடு செய்வதன் மூலமான வட்டி வருமானம்.

2009 இலிருந்து 2013 வரையான காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற அனைத்தையும் உள்ளடக்கிய வருமானத்தின் பிரிவுகளை வரைபடம் 04 காண்பிக்கின்றது.

***வரைபடம் 04***

***2009 - 2013 காலப் பகுதிக்கான சபையின் வருமானம்***




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| ஆண்டிற்கான கட்டணம் (ரூ.மில்) | 29 | 29 | 35 | 61 | 70 |
| பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் (ரூ.மில்) | 2 | 2 | 3 | 5 | 4 |
| ஏனைய வருமானம் (ரூ.மில்) | 9 | 3 | 1 | 2 | 1 |
| கொடைகளின் அங்கீகாரம் (ரூ.மில்.) | 9 | 8 | 6 | 7 | 5 |
| மொத்த வருமானம் (ரூ.மில்) | 49 | 42 | 44 | 75 | 80 |

# தொழிற்பாட்டு மீளாய்வு


**சபையின் செலவினம்**

சபையின் மொத்தச் செலவானது 2009 ஆம் ஆண்டில் இருந்து 2013 ஆம் ஆண்டு வரை அதிகரித்துள்ளது. வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையிலான பற்றாக் குறைக்கு சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தில் இருந்து நிதி அளிக்கப்படுகின்றது.

2009 இலிருந்து 2013 வரையான காலப்பகுதிக்கான சபையின் மொத்த செலவினங்கள் கீழே உள்ள வரைபடம் 05 இல் காட்டப்பட்டுள்ளன.

***வரைபடம் 05***

***2009 - 2013 வரையான காலப்பகுதியில் சபையின் மொத்த செலவினம்***




| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|---|
| மொத்த செலவினங்கள் (ரூ.மி) | 66 | 71 | 74 | 94 | 105 |

# நிதியியல் தகவல்


| | |
|---|---|
| நிதி நிலைமையின் கூற்று | 70 |
| முழுமையான வருமானக் கூற்று | 71 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 72 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று | 73 |
| கணக்கீட்டுக் கொள்கைகள் | 74 |
| நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் | 76 |

# நிதி நிலமையின் கூற்று

| | குறிப்புகள் | 31.12.13 ஆம் திகதி உள்ளவாறு ரூபா | 31.12.13 ஆம் திகதி உள்ளவாறு ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் | 1 | 9,941,815 | 13,165,749 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - வாடகையும் மின்சார வைப்புகளும் | 2 | 11,088,660 | 11,088,660 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்கள் | 3 | 413,051 | 391,138 |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் - முதலீடுகளும் மற்றும் ஏனையவைகளும் | 2 | 1,766,611,670 | 1,610,930,804 |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் | 4 | 15,135,397 | 13,513,443 |
| காசும் காசுக்கு நிகரானவையும் | 5 | 658,301 | 1,530,608 |
| **மொத்த சொத்துக்கள்** | | 1,803,848,894 | 1,650,620,402 |
| **ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | | |
| **ஒதுக்குகள்** | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியம் | 6 | 1,777,700,330 | 1,622,019,464 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லா பொறுப்புகள்** | | | |
| மாணியம் | 7 | 9,941,815 | 13,165,749 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | 8 | 3,345,318 | 1,889,445 |
| | | 13,287,133 | 15,055,194 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| முற்பணப் பெறுகை | | 4,862,417 | 4,727,599 |
| ஏனைய நடைமுறைப் பொறுப்புகள் | 9 | 7,999,014 | 8,818,145 |
| | | 12,861,431 | 13,545,744 |
| **மொத்த ஒதுக்குகளும் பொறுப்புகளும்** | | 1,803,848,894 | 1,650,620,402 |

இந்த நிதியியல் கூற்றுகளின் தயாரிப்பிற்கும் வெளியிடலுக்கும் இலங்கை காப்புறுதி சபையின் அங்கத்தவர்கள் பொறுப்பேற்கின்றனர்.

மேலேயுள்ள ஐந்தொகை பக்கம் 74 இலிருந்து 82 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் குறிப்புகளுக்கு இயைந்ததாக வாசிக்கப்பட வேண்டும்

இலங்கை காப்புறுதி சபைக்காகவும் அதன் சார்பாகவும்

**இந்ராணி சுகததாச**
தலைவி

**எஸ். ஆர் ஆட்டிகல**
அங்கத்தினர்

கொழும்பு இலங்கை
24 பெப்ரவரி 2014

# முழுமையான வருமானக் கூற்று

| | குறிப்புகள் | 31.12.13 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா | 31.12.12 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா |
|---|---|---|---|
| **வருமானம்** | | | |
| வருவாய் | 10 | 74,278,594 | 65,774,167 |
| அங்கீகரிக்கப்பட்ட மாணியங்கள் | 7 | 4,526,970 | 6,662,626 |
| வட்டி வருமானம் | | 1,235,056 | 1,932,676 |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியில் இருந்து மாற்றப்பட்டவை | 6 | 25,090,847 | 19,295,177 |
| ஏனைய வருமானம் | 11 | 167,242 | 172,686 |
| **மொத்த வருமானம்** | | 105,298,709 | 93,837,332 |
| **செலவினம்** | | | |
| பணியாளர் செலவு | 12 | (58,324,541) | (48,661,790) |
| தொழில்சார் கட்டணங்கள் | 13 | (2,178,627) | (994,405) |
| தொழிற்பாட்டு செலவினங்கள் | 14 | (44,480,612) | (43,817,296) |
| நிதியும் ஏனையவையும் | 15 | (166,722) | (125,629) |
| **மொத்த செலவினம்** | | (105,150,502) | (93,599,120) |
| வரிக்கு முன்னரான தேறிய மிகை (பற்றாக்குறை) | | 148,207 | 238,212 |
| வரிவிதிப்பு | | (148,207) | (238,212) |
| வரிக்கு பின்னரான தேறிய மிகை (பற்றாக்குறை) | | - | - |
| **ஆண்டுக்கான தேறிய மிகை** | | - | - |

74 இலிருந்து 82 வரையிலான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காசுப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்புகள் | 31.12.13 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா | 31.12.12 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | | |
| காலத்திற்கான தேறிய அதிகரிப்பு / (குறைப்பு) | | - | - |
| பெறுமான தேய்விற்கான ஏற்பாடு | | 4,526,970 | 6,582,865 |
| ஓய்வூதிய நன்மைக்கான ஏற்பாடு | | 1,698,014 | 55,536 |
| ஓய்வூதிய நன்மை கொடுப்பனவு செய்யப்பட்டது | | (242,141) | - |
| நீக்கப்படுவதன் மீதான இலாபம் / நட்டம் | | - | 79,761 |
| மாணியங்களின் அங்கீகரிப்பு | | (4,526,970) | (6,662,626) |
| வருமான வரி | | 148,207 | 238,212 |
| வட்டி வருமானம் | | (1,235,056) | (1,932,676) |
| செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | 369,024 | (1,638,928) |
| | | | |
| செயற்பாட்டு மூலதனத்தின் மாற்றம் | | | |
| பொருட் பதிவேடுகளில் (அதிகரிப்பு) / குறைப்பு) | | (21,914) | (208,007) |
| கிடைக்க வேண்டியவற்றின் (அதிகரிப்பு) / குறைப்பு) | | (1,643,609) | (2,656,106) |
| முற்பண பெறுகைகளின் (அதிகரிப்பு) / குறைப்பு) | | 134,817 | 457,580 |
| அட்டுறுக்கள் மற்றும் கடன்பட்டோரின் அதிகரிப்பு / (குறைப்பு) | | (819,130) | 3,655,659 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட காசுப்பாய்ச்சல் | | (2,349,836) | 1,249,126 |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிருந்தான தேறிய காசுப்பாய்சச்ல் | | (1,980,812) | (389,802) |
| | | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து / (பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல்** | | | |
| வட்டி வருமானம் | | 1,108,505 | 1,735,251 |
| சொத்து பொறித்தொகுதி மற்றும் கருவிகளின் கொள்வனவு | | (1,303,036) | (7,459,488) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (194,531) | (5,724,237) |
| | | | |
| **நிதியியல் நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்திலிருந்தான மூலதன மாற்றம் | | 1,303,036 | 7,459,488 |
| நிதியியல் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப்பாய்ச்சல்கள் | | 1,303,036 | 7,459,488 |
| | | | |
| காசும் காசுக்கு சமமானவைகளும் இன் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | | (872,307) | 1,345,449 |
| | | | |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமனானவைகளும் | | 1,530,608 | 185,159 |
| | | | |
| வருட இறுதியில் காசும் சாசுக்கு சமனானவைகளும் | | 658,301 | 1,530,608 |
| | | | |
| வங்கி மற்றும் கையிலுள்ள காசு | 5 | 658,301 | 1,530,608 |

74 இலிருந்து 82 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதியியல் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் காசுப்பாய்ச்சல் கூற்று

| | குறிப்புகள் | 31.12.13 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா | 31.12.12 முடிவடைந்த ஆண்டிற்கானது ரூபா |
|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப்பாய்ச்சல் | | | |
| காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் தேறிய அதிகரிப்பு | | * 155,680,866 | 345,634,597 |
| தொழிற்படு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தேறிய அதிகரிப்பு | | 155,680,866 | 345,634,597 |
| தொழிற்படு மூலதனத்தின் மாற்றம் | | | |
| அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகள் மீது கிடைக்க வேண்டிய வட்டியின் (அதிகரிப்பு)/குறைவு | | (82,171,165) | (12,560,479) |
| செஸ் பெறுகைகளின் (அதிகரிப்பு)/குறைவு | | (1,000,000) | (10,000,000) |
| வாடகை வைப்புகளின் (அதிகரிப்பு)/குறைவு | | - | (2,360,070) |
| நிதிய முகாமைத்தவ கணக்கு மீதியின் அதிகரிப்பு/(குறைவு) | | (2,476,670) | - |
| காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தில் இலிருந்து மாற்றப்படக்கூடிய தொகையின் அதிகரிப்பு/(குறைவு) | | 1,193,883 | 702,733 |
| | | (84,453,952) | (24,217,816) |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | 71,226,914 | 321,416,781 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து/(பயன்படுத்தப்பட்ட) காசுப்பாய்ச்சல் | | | |
| அரசாங்க பிணையங்களில் முதலீடு | | 458,601,187 | 212,926,661 |
| நிலையான வைப்புகளில் முதலீடு | | (529,200,000) | (534,000,000) |
| முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு | | (70,598,813) | (321,073,339) |
| காசும், காசுக்கு சமனானவையில் இருந்தும் தேறிய அதிகரிப்பு/(குறைவு) | | 628,101 | 343,442 |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும் | | 371,899 | 28,457 |
| வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவைகளும் | | 1,000,000 | 371,899 |
| வங்கியிலுள்ள காசு | 2 | 1,000,000 | 371,899 |

* திறைசேரியின் கோரிக்கையின் பேரில் திரட்டு நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்பட்ட ரூபா 300,000,000/- இற்கு பின்னர் வந்த ரூபா 155,680,866/-.

74 இலிருந்து 82 வரையான பக்கங்களிலுள்ள கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் நிதியில் கூற்றுகளின் ஒன்றிணைந்த பகுதியாகவுள்ளன.

# கணக்கீட்டு கொள்கைகள்

## 1. முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

### 1.1 தயாரிப்பிற்கான அடிப்படை

சபையின் நிதித்துறை அறிக்கைகள் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டு வரலாற்று அடிப்படையில் கிட்டிய ரூபாவிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

கணக்கீட்டு கொள்கைகள் தேவைப்படும் இடங்களில் தொடர்ந்துவரும் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

### 1.2 இணங்குவிற்பிற்கான அறிக்கை

சபையின் நிதித்துறை கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்ட இலங்கை கணக்கியல் நியமத்திற்கு ஏற்றவிதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அத்தகைய சொல்லப்பட்ட தரப்படுத்தல்களுக்கு இணங்கியும் செயற்படுகின்றன.

### 1.3 அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்குப் பின்னரான சகல நிகழ்வுகளும் கருத்திற்கெடுத்துக்கொள்ளப்பட்டு பொருத்தமான சீராக் கல்கள் அல்லது வெளிப்படுத்தல் என்பனவற்றின் தேவையின் அடிப்படையில் நிதித்துறை அறிக்கைகளில் அவசியமானவை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 1.4 ஒப்பீட்டு இலக்கங்கள்

ஒப்பீட்டு இலக்கங்கள் அனைத்தும் நடப்பு நிதி வருட வெளிப்படுத்தலின் மாற்றங்களுக்கு இணங்கும் வகையில் சீராக்கப்பட்டுள்ளன.

### 1.5 வரிவிதிப்பு

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய வருமான வரிக்கான ஏற்பாடு தயாரிக்கப்பட்டுள்ளது.

பங்கிலாபம் அல்லது வட்டியிலிருந்து கிடைக்கும் இலாபம் அல்லது வருமானம் தவிர்ந்த ஏனையவற்றிற்கு, வருமான வரியிலிருந்து சபைக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 1.6 வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றுதல்

வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனை நடவடிக்கைகள் ஏதாவது இருந்தால், அவை கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட நேரத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நாணயப் பரிவர்த்தனை விகிதத்தின் அடிப்படையில் இலங்கை ரூபாவிற்கு மாற்றப்பட்டுள்ளன.

## 2. ஆதனங்கள் மற்றும் மதிப்பீட்டிற்கான அடிப்படை

### 2.1 ஆதனம், பொறிகள், உபகரணங்கள்

***உரித்துடைய ஆதனம், பொறிகள் உபகரணங்கள்***

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் திரட்டிய பெறுமதி தேய்வு கழிக்கப்பட்டு கிரயத்தில் காண்பிக்கப்பட்டுள்ளன. ஆதனம், பொறிகள், உபகரணங்களின் கொள்விலை என்பது அவற்றை வாங்குவதற்கான பணத்துடன் திட்டமிடப்பட்ட உபயோகத்தில் அவற்றைச் செயற்படு நிலைக்குக் கொண்டுவருவதில் ஏற்பட்ட செலவினங்களையும் உள்ளடக்கியதாகும்.

**பெறுமானத் தேய்வு**

கீழ்க்காணும் விகிதத்தில் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு கணிக்கப்படுகிறது.

| | % வருட விகிதம் |
|---|---|
| மோட்டார் வாகனங்கள் | 25 |
| தளபாடங்கள், பொருத்துகைகள் | 12.5 |
| அலுவலக மற்றும் ஈடிபி (EDP) உபகரணங்கள் | 25 |
| பயிற்சி உபகரணங்கள் | 25 |

சொத்து கொள்வனவு செய்யப்பட்ட திகதியில் இருந்து பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகிறது. அதேவேளை, அகற்றும் திகதிவரை பெறுமானத் தேய்வு கணக்கிடப்படும்.

### 2.2 முதலீடுகள்

அரசாங்க பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் கிரயத்தில் தெரிவிக்கப்பட்டு வருட இறுதியில் வட்டி திரட்டப்படும்.

### 2.3 பதிவேட்டுப் பொருட்கள்

பதிவேட்டுப் பொருட்கள் அனைத்தும் குறைந்தமட்டக் கொள்விலை அல்லது பெறக்கூடிய நிகர பெறுமதி என்பதில் காட்டப்பட்டுள்ளன. முதலில் பெறப்பட்டு முதலில் அகற்றப்பட்டவை அடிப்படையில் பதிவேட்டுப் பொருட்களின் கிரயம் கணக்கிடப்படுகிறது.

### 2.4 பெறுகைகள்

பெறுகைகள் அனைத்தும் மதிப்பிடப்பட்ட உத்தேச பெறுமதியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

# கணக்கீட்டு கொள்கைகள்

### 2.5 காசும் காசுக்குச் சமனானவையும்

காசுப்பாய்ச்சல் அறிக்கையின் நோக்கத்திற்கான காசும் காசுக்குச் சமனானவையும் என்பது, வங்கியிலுள்ள பணம் மற்றும் கையிருப்பிலுள்ள பணம் என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

### 3. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

### 3.1. ஓய்வூதிய நன்மைகள்

### 3.1.1. அறுதியிட்ட நன்மைத் திட்டங்கள் - பணிக்கொடை

“ஊழியர் நன்மை” 19 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு தரப்படுத்தலுடன் ஒத்ததாக வெளி வீச்சுகூறு கட்டணமுறையை பாவித்து, பணிக்கொடைக்கான கணக்கின் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் வருட சேவை முடிவடைந்ததும் சபை பணிக்கொடையை ஏற்பாடு செய்கிறது. இருந்த போதிலும், பொறுப்புகளின் அடிப்படையில் இந்த ஏற்பாடு சீராக்கப்படும்.

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு சட்டத்திற்கு அமைய ஊழியர் ஒருவரின் தொடர்ச்சியான ஐந்து வருடகால சேவை பூர்த்தியடைந்ததும், பணிக்கொடைக்கான பொறுப்பு ஆரம்பமாகும்.

### 3.1.2 அறுதியிடப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

சகல நிரந்தர ஊழியர்களும் சம்பந்தப்பட்ட சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பை வழங்க உரிமையுடையவர்களாவார். ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றுக்கு ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் முறையே 12% மற்றும் 3% பங்களிப்பை சபை வழங்குகிறது.

### 3.2 பொறுப்புகள்

நிதிநிலமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புகள் எனக் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புகள், கோரிக்கையின் பேரில் செலுத்தப்பட வேண்டியவையும் அல்லது அறிக்கையிடும் காலத்திலிருந்து இருந்து ஒரு வருட காலத்தினுள் செலுத்தப்பட வேண்டியவையுமாகும். நடைமுறையல்லாத பொறுப்புகளாவன, அறிக்கையிடும் காலத்திலிருந்து ஒரு வருட காலத்தின் பின்னர் கொடுப்பனவுகளுக்குரிய நிலுவைத் தொகைகளாகும்.

நிதியில் அறிக்கையைத் தயாரிப்பதில் சகல தெரிந்த பொறுப்புகளும் கிரயத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.3 மானியங்கள்

காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட்ட மூலதனச் செலவினங்களும் சிறு காப்புறுதித் திட்டத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்களும் மாணியங்கள் எனக் கருதப்பட்ட சொத்தின் மதிப்பிடப்பட்ட பயனுள்ள உபயோக காலத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 4. வருமானமும் செலவினமும்

### 4.1 வருமான அங்கீகாரம்

வருமானம் திரண்ட அடிப்படையில் இனங்காணப் பட்டுள்ளது.

### 4.2. செலவினங்களை இனங்காணல்

செலவினத்திலும் பார்க்கக் கூடிய அளவிலான வருமானத்தைத் தீர்மானித்து சபையை நடத்துவதில் ஏற்பட்ட சகல செலவினங்களும் வருவாய்க்கு விதிக்கப்பட்டு கணக்கிடப்பட்டுள்ளன.

### 4.3 காசுப்பாய்ச்சல் அறிக்கை

காசுப்பாய்ச்சல் அறிக்கை மறைமுக வழிமுறையை உபயோகித்து தயாரிக்கப்பட்டுள்ளது.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1 சொத்து பொறித்தொகுதியும் உபகரணங்களும்

| | மோட்டார் வாகனங்கள் ரூபா | தளபாடங்கள் பொருத்துக்கள் இணைப்புகள் ரூபா | அலுவலக உபகரணங்கள் (ஈடிபியும் ஏனையவையும்) ரூபா | பயிற்சி உபகரணங்கள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **செலவு** | | | | | |
| 2013 சனவரி 1இல் உள்ளவாறான நிலுவை | 16,317,321 | 12,604,715 | 20,660,336 | 141,450 | 49,723,822 |
| சேர்ப்புகள் | - | 398,491 | 904,545 | - | 1,303,036 |
| நீக்கல்கள் | - | - | (1,054,290) | - | (1,054,290) |
| 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | 16,317,321 | 13,003,206 | 20,510,591 | 141,450 | 49,972,568 |
| **திரட்டிய தேய்மானம்** | | | | | |
| 2013 சனவரி 1 இல் உள்ளவாறான நிலுவை | 10,886,344 | 7,414,655 | 18,115,624 | 141,450 | 36,558,073 |
| ஆண்டுக்கான மாற்றம் | 1,711,019 | 1,502,093 | 1,313,858 | - | 4,526,970 |
| நீக்கல்கள் | - | - | (1,054,290) | - | (1,054,290) |
| 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை | 12,597,363 | 8,916,748 | 18,375,192 | 141,450 | 40,030,753 |
| **2013 திசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி** | 3,719,958 | 4,086,458 | 2,135,399 | - | 9,941,815 |
| **2012 திசம்பர் 31 இல் உள்ளவாறு எழுதப்பட்ட பெறுமதி** | 5,430,977 | 5,190,060 | 2,544,712 | - | 13,165,749 |

| | 31.12.13 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா |
|---|---|---|
| **2 காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியத்தின் முதலீடுகளும் ஏனையவையும்** | | |
| **நடைமுறையல்லா சொத்துகள்** | | |
| வாடகையும் மின்சார வைப்புகளும் | 11,088,660 | 11,088,660 |
| **நடைமுறையிலுள்ள சொத்துகள்** | | |
| அரசாங்க பிணையங்களில் உள்ள முதலீடு | 518,050,000 | 976,651,187 |
| நிலையான வைப்புகள் மீதான முதலீடு | 1,063,200,000 | 534,000,000 |
| அரசாங்க பிணையங்கள் இலிருந்து கிடைக்கக் கூடிய வட்டி | 126,616,550 | 44,445,385 |
| பெறத்தக்க செஸ் வரி | 61,000,000 | 60,000,000 |
| நிதிய முகாமைத்துவ கணக்கு மீதி | 2,476,670 | - |
| வங்கியிலுள்ள நிலுவை | 1,000,000 | 371,899 |
| கழி: | | |
| காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | 5,731,550 | 4,537,667 |
| | 1,766,611,670 | 1,610,930,804 |
| **மொத்த சொத்துக்கள்** | 1,777,700,330 | 1,622,019,464 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | 31.12.13 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா |
|---|---|---|
| **3 பொருட்பதிவேடுகள்** | | |
| அச்சிடுதல், காகிதாதிகள் மற்றும் கணனிப் பாகங்கள் | 367,631 | 303,083 |
| முத்திரைகள் | 45,420 | 88,055 |
| | 413,051 | 391,138 |
| **4 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்** | | |
| வைப்புகள் | 178,594 | 172,122 |
| ஏனைய பெறத்தக்கவைகள் | 167,233 | 114,597 |
| பிடித்து வைத்த வரி அறவீடுகள் | 1,111,985 | 1,049,296 |
| பெறுமதி கூட்டப்பட்ட வரி கட்டுப்பாடு | 668,820 | 502,748 |
| பணியாளர் கடன்கள் * | 3,682,040 | 3,923,116 |
| முற்பணமும் முன் கொடுப்பனவுகளும் | 1,988,800 | 3,038,082 |
| பொருளாதார சேவைக் கட்டணங்கள் | - | 90,815 |
| நிலையான சொத்துகள் கொள்வனவிற்கான முற்பணம் | 445,000 | 85,000 |
| நிதிய முகாமைத்துவ கணக்கு மீதி | 1,161,375 | - |
| காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மாற்றப்பட வேண்டிய தொகை | 5,731,550 | 4,537,667 |
| | 15,135,397 | 13,513,443 |
| *பணியாளருக்கு வழங்கப்பட்ட கடன்கள் | | |
| ஜனவரி 1 ஆம் திகதிஅன்றுள்ளவாறு நிலுவை | 3,923,116 | 3,668,481 |
| ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்பட்ட கடன்கள் | 2,157,000 | 2,942,391 |
| | 6,080,116 | 6,610,872 |
| ஆண்டுகாலப்பகுதியில் மீள் கொடுப்பனவு | (2,398,076) | (2,687,756) |
| டிசம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு நிலுவை | 3,682,040 | 3,923,116 |
| **5 காசும் காசுக்கு சமனானவைகளும்** | | |
| வங்கிகளிலுள்ள காசு | | |
| இலங்கை வங்கி | 658,301 | 1,530,608 |
| | 658,301 | 1,530,608 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | | 31.12.13 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா |
|---|---|---|---|
| 6 | காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் | | |
| | ஆரம்ப நிலுவை | 1,622,019,464 | 1,276,384,867 |
| | வருடத்தின் போது கிடைத்த செஸ் | 245,743,034 | 236,534,917 |
| | திறைசேரி உண்டியல் முதலீடு மீதான வட்டி | 665,374 | 47,865,987 |
| | ரெப்போ மற்றும் அழைப்பு கணக்கு மீதான வட்டி | 58,473,214 | 87,316,447 |
| | நிலையான வைப்புகள் மீதான வட்டி | 177,119,438 | 696,541 |
| | நிதிய முகாமைத்தவ கணக்கின் மீதான வட்டி | 92,109 | - |
| | | 2,104,112,633 | 1,648,798,759 |
| | கழிக்க: | | |
| | செயற்பாட்டு செலவுகளுக்கான மாற்றங்கள் | 25,090,847 | 19,295,177 |
| | மூலதன செலவுகளுக்கான மாற்றங்கள் | 1,303,036 | 7,459,488 |
| | மொத்த மாற்றங்கள் - காப்புறுதி வைப்பாளர்களின் பாதுகாப்பு நிதியம் | 26,393,883 | 26,754,665 |
| | திரட்டு நிதியத்திற்கான பங்களிப்புகள் * | 300,000,000 | - |
| | வங்கி கட்டணங்கள் | 18,420 | 24,630 |
| | | 326,412,303 | 26,779,295 |
| | இறுதி நிலுவை | 1,777,700,330 | 1,622,019,464 |

* 1971 இன் 38 ஆம் இல. நிதிச் சட்டத்திற்கு அமைவாக, திறைசேரியினால் செய்யப்பட்ட கோரிக்கையின் பேரில் திரட்டு நிதிக்கு செய்யப்பட்ட பங்களிப்பை ரூபா. 300 மில்லியன் பிரதிநிதித்தவப்படுத்துகிறது.

| | | 31.12.13 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா |
|---|---|---|---|
| 7 | மாணியங்கள் | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | 13,165,749 | 12,368,887 |
| | காப்புறுதி வைப்பாளர் பாதுகாப்பு நிதியத்திலிருந்து மூலதனச் செலவுகள் | 1,303,036 | 7,459,488 |
| | கழி: வருடத்தின்போது கணக்கிணக்கம் செய்யப்பட்டவை | (4,526,970) | (6,662,626) |
| | வருட இறுதியில் நிலுவை | 9,941,815 | 13,165,749 |

குறிப்பு - மாணியங்கள் இனங்காணல்

இ.க.நி. 20 இன் பிரகாரம் மாணியங்கள் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

பின்வரும் விகிதங்களில் வருமானக் கூற்றில் மாணியங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

| | |
|---|---|
| மோட்டார் வாகனம் | 25% |
| அலுவலக உபகரணம் - ஏனையவையும் ஈடிபியும் | 25% |
| தளபாடம் பொருத்துகளும் இணைப்புகளும் | 12.5% |
| பயிற்சி உபகரணங்கள் | 25% |

| | | 31.12.13 அன்றுள்ளவாறு ரூபா | 31.12.12 அன்றுள்ளவாறு ரூபா |
|---|---|---|---|
| 8 | ஓய்வூதிய நன்மை கடப்பாடுகள் | | |
| | வருட ஆரம்பத்தில் நிலுவை | 1,889,445 | 1,833,909 |
| | ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட ஏற்பாடு | 1,698,014 | 55,536 |
| | (-)ஆண்டுக்காலப் பகுதியில் செய்யப்பட்ட கொடுப்பனவு | (242,141) | - |
| | வருட இறுதியில் நிலுவை | 3,345,318 | 1,889,445 |
| 9 | ஏனைய நடப்பு பொறுப்புகள் | | |
| | திரட்டிய செலவினங்கள் | 6,992,531 | 8,077,508 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.சே.நி. | 571,676 | 489,052 |
| | கொடுக்கப்பட வேண்டிய ஊ.ந.நி. | 85,752 | 73,359 |
| | கொடுக்க வேண்டிய PAYE மற்றும் பிடித்துவைத்த வரி | 246,239 | 84,130 |
| | ஏனையவை | 102,816 | 94,096 |
| | | 7,999,014 | 8,818,145 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | முடிவடைந்த ஆண்டு 31.12.13 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.12 ரூபா |
|---|---|---|
| **10 வருவானம்** | | |
| காப்புறுதிக் கம்பனிகளில் இருந்து வருடாந்த கட்டணம் | 70,079,988 | 61,044,774 |
| பதிவு செய்தலும் பதிவு புதுப்பித்தலும் கட்டணங்கள் | 4,198,606 | 4,729,393 |
| | 74,278,594 | 65,774,167 |
| **11 ஏனைய வருமானம்** | | |
| வாகன கடன் மீதான வட்டி | 29,751 | 31,086 |
| துயரக் கடன் மீதான வட்டி | 94,025 | 94,812 |
| நானாவித வருமானம் | 43,466 | 46,788 |
| | 167,242 | 172,686 |
| **12 பணியாட் தொகுதியினரின் செலவுகள்** | | |
| பணியாட் தொகுதியினரின் சம்பளங்கள் | 31,019,437 | 24,881,974 |
| ஊழியர் சேமலாப நிதியம் 12% | 3,830,332 | 3,095,562 |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் 3% | 957,584 | 773,891 |
| தலைவியின் செலவினம் - படிகள் | 900,000 | 900,000 |
| தலைவியின் செலவினம் - எரிபொருள் | 348,840 | 317,520 |
| வெகுமானம் - ஒப்பந்த ஊழியர் | 32,500 | - |
| மேலதிக வேலை நேரம் | 127,215 | 115,156 |
| ஊழியர் மருத்துவ செலவினங்கள் | 1,363,224 | 1,241,257 |
| ஊழியர் மருத்துவ காப்புறுதி | 560,059 | 639,338 |
| ஆளணியினர் காப்புறுதி | 421,334 | 407,469 |
| ஊழியர் நலன் | 1,369,462 | 1,264,829 |
| ஊழியர் பயிற்சிகளும் சந்தாவும் | 1,535,494 | 811,321 |
| வெளிநாட்டு பயணங்கள் - சபை அங்கத்தினர்கள் | 1,184,546 | 1,490,524 |
| வெளிநாட்டு பயிற்சிகளும் பயணங்களும் - ஊழியர் | 5,102,907 | 4,799,951 |
| வருடாந்த போனஸ் | 1,951,246 | 1,662,580 |
| விளம்பரங்கள் | 70,495 | 393,405 |
| பணிப்பாளர்களின் குடியிருப்பு தொலைபேசிகள் | 164,635 | 183,496 |
| விடுமுறை காசாக்குதல் | 599,941 | 616,660 |
| பணிப்பாளரின் வாகன படி | 3,876,986 | 3,850,000 |
| பணிப்பாளரின் எரிபொருள் படி | 1,210,291 | 1,161,320 |
| பணியாட் தொகுதியினரின் பணிக்கொடை கொடுப்பனவு | 1,698,014 | 55,536 |
| | 58,324,541 | 48,661,790 |
| **13 தொழில்சார் விதிப்பனவுகள்** | | |
| உசாவுகை கட்டணங்கள் | 2,178,627 | 766,444 |
| ஏனையவை | - | 227,961 |
| | 2,178,627 | 994,405 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| | முடிவடைந்த ஆண்டு 31.12.13 ரூபா | முடிவடைந்த ஆண்டு 31.12.12 ரூபா |
|---|---|---|
| **14 செயற்பாட்டு செலவினங்கள்** | | |
| வாடகை | 22,167,658 | 19,580,929 |
| வாகன தரிப்பிட கட்டணம் | 365,825 | 319,446 |
| தொலைபேசி செலவினங்களும் இணையதளமும் | 1,603,557 | 1,776,117 |
| மின்சாரம் | 1,226,881 | 1,143,907 |
| அலுவலக பராமரிப்பு | 442,421 | 357,278 |
| அச்சிடலும் காகிதாதிகளும் | 2,482,807 | 2,564,226 |
| பொதுமக்கள் விழிப்புணர்வு | 4,399,327 | 4,281,143 |
| பொழுது போக்கு | 213,539 | 128,266 |
| பயணங்கள் - உள்ளூர் | 56,158 | 63,440 |
| ஈடிபி மற்றும் ஏனைய அலுவலக உபகரணங்களின் பராமரிப்பு | 1,413,830 | 737,679 |
| ஐஏஐஎஸ் (IAIS) இல் சர்வதேச உறுப்புரிமை | 2,091,794 | 1,961,689 |
| ஐஐஏபி (IIAP) இல் சர்வதேச உறுப்புரிமை | (30,000) | 30,000 |
| விளம்பரங்களும் - ஏனையவையும் | 96,419 | 30,157 |
| சபை அங்கத்தினர் கூட்டங்களுக்கான கட்டணங்கள் | 480,000 | 494,547 |
| கூட்டங்களுக்கான செலவினங்கள் | 309,846 | 263,807 |
| பத்திரிகைகள் மற்றும் நூலக புத்தகங்களுக்கான சந்தா கட்டணம் | 214,007 | 126,976 |
| தபால் மற்றும் தபால் கொண்டு செல்லும் கட்டணங்கள் | 226,448 | 606,641 |
| கணக்காய்வு கட்டணம் - கணக்காய்வாளர் தலைமை அதிபதி | 370,055 | 375,000 |
| கணக்காய்வு கட்டணம் - உள்ளகம் | - | 375,000 |
| பெறுமான தேய்வு | 4,526,970 | 6,582,865 |
| பொதுவான செலவுகள் | 104,959 | 132,434 |
| சட்ட செலவுகள் | 248,672 | 23,559 |
| புலனாய்வு செலவுகள் | 10,560 | 12,170 |
| சிலிங்கோ டக்காபுல் இன் நிர்வாகம் தொடர்பான செலவுகள் | 31,859 | 717,820 |
| மேற்பார்வை செலவுகள் | 129,350 | 19,896 |
| வாகன பராமரிப்பு | 159,587 | 107,609 |
| வாகன காப்புறுதி | 261,217 | 202,902 |
| வாகனம் ஓட்டும் கட்டணம் | 308,155 | 268,077 |
| தேச நிர்மாண வரி | 568,712 | 453,957 |
| அகற்றுவது மீதிலான நட்டம் | - | 79,761 |
| | 44,480,612 | 43,817,296 |
| **15 நிதி மற்றும் ஏனைய செலவினங்கள்** | | |
| வங்கிக் கட்டணங்கள் | 166,422 | 125,629 |
| மேலதிக கட்டணங்களும் மற்றும் அபராதமும் | 300 | - |
| | 166,722 | 125,629 |

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 16. வரி விதிப்புகள்

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு 2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக வருமான வரிக்கான ஏற்பாடுகள் கணனியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## 16.1 இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல் மீதான அரசாங்க பிணையங்கள் மீது பிடித்து வைத்தல் வரிக்கான கோட்பாட்டுக் கடன்

2006 இன் 10 ஆம் இல. உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 137வது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்களிலிருந்த வட்டி வருமானத்திற்கு அதாவது குறிப்பிட்ட மதிப்பீட்டு ஆண்டில் சபையின் வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானத்தின் ஒரு பகுதியாக அத்தகைய வட்டி வருமானம் இருக்கும் பட்சத்தில் கோட்பாட்டு வரி கடன் ஒன்றை பெறுவதற்கு சபைக்கு உரித்துண்டு.

அதற்கமைவாக, அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களிருந்து சபை பெற்ற தேறிய வருமானம், நிதி கூற்றுகளில் ஒட்டு மொத்தமாகக் கணிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டிற்கான கோட்பாட்டு வரி கடனாக ரூபா 106,379/47 இற்கான தொகை 2013 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக் கூற்றுகளில் இனங்காணப்பட்டுள்ளது.

காப்புறுதி வைப்பாளரின் பாதுகாப்பு நிதியத்தின் அரசாங்க பிணையங்களின் இரண்டாந்தர சந்தை கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த வட்டி வருமானம் தேறிய பெறுமதியில் கணக்கிடப்பட்டுள்ளது.

## 17. மூலதனக் கடப்பாடுகள்

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு மூலதன் கடப்பாடுகள் எவையுமில்லை.

## 18. அவசர தேவைக்கான பொறுப்புகள்

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு அவசர தேவைக்கான பொறுப்புகள் எவையுமில்லை.

## 19. அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்

நிதிக் கூற்றுகளில் சீராக்கங்கள் செய்வதற்கு அல்லது வெளிப்படுத்துவதற்கு அறிக்கையிடும் காலத்திற்கு பின்னர் எவ்வித சந்தர்ப்பமும் ஏற்படவில்லை.

## 20. தொடர்புடையவர்களின் ஈடுபாடுகள்

2013 ஆம் ஆண்டு முழுவதும், திருமதி இந்ராணி சுகததாச (தலைவி) திரு. பி. டி. டப்ளியு. எ. சில்வா, திரு. எஸ். ஆர் ஆட்டிகல (வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தினர்) ஆகியோர் சபையில் பதவி வகித்தனர்.

2013 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில். வெளியில் இருந்து வருகை தரும் அங்கத்தினராக திரு. டி. என். ஆர். சிறிவர்தன நியமிக்கப்பட்டார். 2013 ஜுன் 05 ஆம் திகதியும் ஜுலை 30 ஆம் திகதியும் முறையே திரு. சமந்த குமாரசிங்கவும் மற்றும் திரு. நலின் ஆட்டிகலவும் நியமிக்கப்பட்டனர்.

பதவி காலம் நிறைவடைந்ததை தொடர்ந்து, முறையே 2013 ஏப்பிரல், 2013 ஜுலை, 2013 ஜுலையில் இருந்து திரு. ஜி. குணவர்தன, திரு. நவாஸ் ரஜாப்டீன் மற்றும் திரு. காமினி கோஹன்ன ஆகியோர் சபை அங்கத்தினர் பதவியில் இருந்து நீங்கினர்.

# நிதியியல் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

ஆண்டின் போது, சபையின் அங்கத்தினர்களால் வகிக்கப்பட்ட பதவிகளை, பின்வரும் அட்டவணை காண்பிக்கின்றது.

| அங்கத்தினர் பெயர் | தொடர்புடைய நிறுவனங்களின் பெயர் | பதவி |
|---|---|---|
| திருமதி இந்ராணி சுகததாச | களுபோவிட்டியான தேயிலை ஆலை லிமிடட்<br>தேசிய அபிவிருத்தி வங்கி (பிஎல்சி.) | பணிப்பாளர்<br>2013 அக்டோபர் 04ஆம் திகதியில் இருந்து பணிப்பாளர் (சுயாதீனம் மற்றும் நிறைவேற்று அதிகாரம் அற்றவர்) |
| திரு. பி.டி.டப்ளியு.ஏ. சில்வா | இலங்கை வங்கியாளர் நிறுவனம்<br>இலங்கை கடன் தகவல் பணியகம்<br>அபி வெனுவென் அபி முகாமைத்து சபை<br>இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம்<br>பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு விசேட நிலையியர் அமைச்சரவை<br>-தேடி பெற்றுக் கொள்ளல் குழுவில் நியமனம்<br>வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடட் | தலைவர்<br>தலைவர்<br>சபை அங்கத்தினர்<br>சபை அங்கத்தினர்<br>அங்கத்தினர்<br><br>சபை அங்கத்தினர் |
| திரு. எஸ். ஆர். ஆட்டிகல | இலங்கை துறைமுக அதிகார சபை<br>இலங்கை வங்கி<br>உச்ச நீதிமன்ற கட்டிடத் தொகுதி முகாமைத்துவ சபை<br>தேசிய சேமிப்பு வங்கி<br>முதலீட்டுச் சபை | பணிப்பாளர் (2013 செப்ரம்பர் வரை)<br>பணிப்பாளர் (2013 ஏப்பிரல் வரை)<br>அங்கத்தினர்<br>பணிப்பாளர் (2013 ஏப்ரல் 23 இலிருந்து)<br>அவதானிப்பாளர் (2013 ஏப்ரல் வரை) |
| திரு. டி. என். ஆர். சிரிவர்தன | இலங்கை பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணையகம்<br>இலங்கை கணக்கீட்ட மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை<br>இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் | வெளியிலிருந்து வரும் அங்கத்தினர்<br>வெளியிலிருந்து வரும் அங்கத்தினர்<br>வெளியிலிருந்து வரும் அங்கத்தினர் |
| திரு. நலின் ஆட்டிகல | குறிப்பிட்ட பிரதேசம் மற்றும் தொழில் பயிற்சி கல்வி ஆணையம்<br>இலங்கை கணக்கு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்பு சபை<br>இலங்கை குடும்ப கட்டுப்பாட்டு சங்கம்<br>இலங்கை வர்த்தகம் மற்றும் கைத்தொழில்கள் சம்மேளனம் | ஆணையக அங்கத்தினர்<br>சபை அங்கத்தினர்<br><br>கவுன்சில் அங்கத்தினர்<br>செயலாளர் நாயகம்/பி.நி.அ. |
| திரு. சமந்த குமாரசிங்க | நேட்சர்ஸ் பியுட்டி கிரியேஷன் லிமிட்டட்<br>மல்டி கெமி இன்டநெஷனல் லிமிட்டட்<br>மல்டி கெமி எக்ஸ்போர்ட் பிரைவட் லிமிட்டட்<br>எக்கோ ப்ரொடெக்ட் என்ஜினியரிங் பிரைவட் லிமிட்டட்<br>டி.பி. மதனாயக்க & கம்பனி பிரைவட் லிமிட்டட் | தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>தலைவர்/முகாமைத்துவ பணிப்பாளர்<br>பணிப்பாளர் |
| திரு. கிரேடியன் குணவர்தன (2013 ஏப்ரல் வரை) | ஹேண்டஸ் இன்டர்நஷனல் (பிரை) லிமிடட்<br>ஹேண்டிஸ் டிப்பிங்ஸ் (பிரை) லிமிடட்<br>21 சென்ட்சுவரி ஹோம்ஸ் (பிரை) லிமிடட்<br>லங்கா லெசர் ரிசோர்ட் ஹோல்டிங் (பிரை) லிமிடட்<br>கிட்கெயர் ஹோம் ரூ ரெசிடன்ட் ஸ்கூல் டிரஸ்ட் | தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர்<br>தலைவர் |
| திரு. நவாஸ் ரஜாப்டீன் (2013 ஜூலை வரை) | ரஜாப்டீன் & சன்ஸ் லிமிடட்<br>ஏற்றுமதி அபீவிருத்தி சபை | தலைவர் (2013 ஜூன் வரை)<br>சபை அங்கத்தினர் |
| திரு. காமினி கோஹன்ன (2013 ஜூலை வரை) | புலஸ்தி எக்ஸ்போர்ட்ஸ் (பிரை) லிமிடட் | பணிப்பாளர் |

ஆண்டின் போது சொல்லப்பட்ட நிறுவனங்களுடன், சந்தை வீதங்களிலான சாதாரண வியாபார நடவடிக்கைகளின் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த வேறு எந்தவொரு கொடுக்கல்வாங்களும் பதிவு செய்யப்படவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. } எப்ஆர்(2)/ஐ/ஐபீஎஸ்எல்/1/13/18 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 2014 திசெம்பர் 29

தலைவர்
இலங்கை காப்புறுதிச் சபை

**இலங்கை காப்புறுதிச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை காப்புறுதிச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலவரக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2000 இன் 43 ஆம் இலக்க இலங்கை காப்புறுதித் தொழிலை நெறிப்படுத்துதல் அதிகாரச்சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு 2014 செத்தெம்பர் 15 ஆந் திகதி வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை காப்புறுதிச் சபையின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் அமுல்படும் வகையில் விசேடமாகக் குறிப்பிடப்பட்ட முயற்சியினால் முதல் தடவையாக பின்பற்றப்பட வேண்டிய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் அரசாங்க சேமிப்பு பத்திரங்களிலும் நிலையான வைப்புக்களிலும் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,581,250,000 தொகையான நிதிசார் பத்திரங்கள், நிதிச் சொத்தாக இனங்காணப்பட்டு அதற்குரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் சபையின் ரூபா 23,762,974 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு அந்த மீள் கணிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடு

மீளாய்வாண்டின் போது ரூபா 113,100 பெறுமதியான ஒரு புத்தகத்தை உள்ளடக்கிய ரூபா 214,007 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் வெளியீடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் சபையினால் 2005 முதல் 2013 வரை அவ்வாறு புத்தகங்கள் மற்றும் வெளியீடுகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 953,470 தொகை செலவிடப்பட்டிருந்தது. புத்தகங்களின் பெறுமதி மற்றும் தன்மை என்பவற்றை கவனத்திற்கொள்ளாமல் அந்த செலவினங்கள் மிகைச் செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் மூலதனமாக்குவதற்கு நடிவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய புத்தகங்கள் மாத்திரம் மூலதனமாக்க முடியுமென சபையின் தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வின் போது பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணங்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரிசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நிதிப்பிரமாணம் 454 மற்றும் 757(1) | பொருட்பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 2008 ஆம் ஆண்டு தொடக்கம் நிராகரிக்கப்பட்ட 13 காசோலைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 89,780 கூட்டுத்தொகை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 9.14 ஆம் பந்தி | நிருவாகக் கைநூல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகளின் சம்பளம் மற்றும் படிகளை தீர்மானிப்பதற்கு உரிய நிறுவனம் உருவாக்கப்பட்ட அதிகாரச்சட்டங்களில் பல்வேறு ஏற்பாடுகள் காணப்பட்ட போதிலும், அந்த நியதிச்சட்ட ஏற்பாட்டில் சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் சிபார்சு மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அமுல்படுத்த முடியாதிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமின்றி சபையினால் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் சபையின் உத்தியோகத்தர்களின் சம்பளம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2012 ஆம் ஆண்டின் போதும் 2013 ஆம் ஆண்டின் போதும் முறையான அங்கீகாரமின்றி முறையே ரூபா 2,600,438 தொகையும் ரூபா 5,221,448 தொகையும் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சபையினால் ஊக்குவிப்புப்படி உத்தேசத்திட்டம் தயாரிக்கப்பட்டு நிதியமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திராத போதும் மீளாய்வாண்டின் போது நிறுவனத்தின் 42 ஊழியர்களுக்காக மாதச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ரூபா 1,951,256 தொகை ஊக்குவிப்புப் படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அங்கீகாரத்திற்காக திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிருவாகக் கைநூலின் நியமங்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது சபையின் உத்தியோகத்தர்களுக்காக விடுமுறை தினச் சம்பளம் ரூபா 599,941 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிருவாகக் கைநூலிற்கான அங்கீகாரம் 2014 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருக்கவில்லை.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் வரிக்கு முந்திய நிதி விளைவு ரூபா 148,207 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரோத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 238,211 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதிவிளைவுகளில் ரூபா 90,004 அல்லது 38 சதவீத குறைவைக் காணக்கூடியதாக இருந்தது. சபையின் ஒட்டுமொத்த வருமானம் ரூபா 11,461,378 இனால் அதிகரித்திருந்த போதிலும் பதவியணியினர் கிரயம் மற்றும் தொழிற்தகைமைக் கட்டணம் முறையே ரூபா 9,662,751 இனாலும் ரூபா 1,184,222 இனாலும் அதிகரித்தமை, இந்த மிகை குறைவடைந்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறும் காணப்பட்ட தொழிற்படு மூலதன விகிதம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விகிதம் | 2013 | 2012 |
|---|---|---|
| நடைமுறை / திரவ | 139:1 | 120:1 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,782,818,419 தொகையான நடைமுறைச் சொத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதியில் 99 சதவீதம் அல்லது ரூபா 1,766,611,670 தொகை 2000 இன் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை நெறிப்படுத்தும் அதிகாரச்சட்டத்தின் 103 ஆவது பிரிவின் பிரகாரம் உருவாக்கப்பட்ட “காப்புறுதி உரித்துடையவர்களின் பாதுகாப்பு நிதியத்தின்” முதலீட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தியது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

சபையின் 2013 இன் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ஒவ்வொரு பிரிவினாலும் ஆண்டின் போது அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு சபை இயலாதிருந்தது.

(அ) சட்டப் பிரிவு
இந்தப் பிரிவின் கீழ் பலமான காப்புறுதி நியதிச் சட்டரீதியான பிரிவொன்றை ஏற்படுத்தும் நோக்கத்தில் பின்வரும் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அச்யெற்பாடுகள் 2014 ஏப்பிரல் 30 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

- (i) காப்புறுதிக் கட்டுப்பாட்டாளரினால் 1987 இன் போது விநியோகிக்கப்பட்ட பிரமாணங்களைத் திருத்துதல்.
- (ii) சபையில் உள்ள மேற்பார்வை மற்றும் புலனாய்வு அதிகாரங்கள் தொடர்பான சட்டத்தினைத் திருத்துதல்.
- (iii) இழப்பு நட்டங்களை ஈடுசெய்பவர்களைப் பதிவு செய்யும் முறையான திட்டமொன்றை தயாரித்தல்.
- (iv) அது தொடர்பான செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கின்ற காப்புறுதி முகவர்களின் பதிவினைத் தீர்மானிப்பதற்காக முறையான திட்டமொன்றைத் தயாரித்தல்.
- (v) ஆபத்தினை அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தை ஸ்தாபிப்பதற்காக வசதிகளை வழங்குதல் தொடர்பாக முறையான திட்டமொன்றைத் தயாரித்தல்.

(ஆ) புலனாய்வுப் பிரிவு
அதன் கீழ் காப்புறுதிப் பூட்கைகளைச் செய்தவர்களும் எதிர்காலத்தில் காப்புறுதிப் பூட்கைகளைச் செய்பவர்களும் நம்பிக்கையுடன் தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில்

- (i) ஆண்டின் போதும் வெளிநாட்டு நீதிமன்ற எல்லை மற்றும் தொழிலின் கருத்துரை ஆய்வு அறிக்கையைத் தயாரித்தல்.
- (ii) சபையினால் புலனாய்வு வசதிகள் வழங்க வேண்டிய வெளிநிறுவனங்களை இனங்காணுதல் மற்றும் அவர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடல்.

என்பன திட்டமிடப்பட்டிருந்த போதிலும் ஒரு வெளி நிறுவனத்தை இனங்காணல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) மேற்பார்வைப் பிரிவு
இதன் கீழ் வினைத்திறனை மேற்பார்வை முறைமையின் ஊடாக இலங்கை காப்புறுதித் தொழிலின் நிலைத்திருத்தல் நோக்கத்துடன்,

- (i) காப்புறுதிக் கம்பனியிலிருந்து தெரிவு செய்யப்படுகின்ற பிரிவுகளுக்காக 07 களப்பரிசோதனைகளை நடாத்துதல்.
- (ii) முகாமைத்துவ தகவல் முறைமை தயாரித்தல்.
- (iii) காப்புறுதிக் கம்பனியின் நிதி ஆபத்துக்கள் மற்றும் செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக உரிய கம்பனியின் மாதாந்த அறிக்கை மேற்பார்வை, மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தல்.

என்பன திட்டமிடப்பட்டிருந்த போதிலம், 4 களப்பரிசோதனைகள் மற்றும் 4 காப்புறுதிக் கம்பனிகளின் மாதாந்த அறிக்கைகளின் பகுப்பாய்வு மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன.

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

(ஈ) நிதி மற்றும் நிருவாகப் பிரிவு
இதன் கீழ் பின்வரும் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2013 ஆம் ஆண்டின் போது உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு சபையினால் இயலாதிருந்தது.

(i) ஊழியர் நலன்புரியின் கீழ் மருத்துவப் படிகளைச் செலுத்தும் முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்.

(ii) சபையின் பயிற்சிச் செலவினத்தை மிகவும் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்வதற்காக துறைகளுக்குரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு மாத்திரம் உத்தியோகத்தர்களைப் பங்குபற்றச் செய்வதற்கான நடிவடிக்கை எடுத்தல்.

(iii) எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் உள்நாட்டுப் பயிற்சிக்காக நிதியேற்பாடு செய்யப்பட்ட ரூபா 2,250,000 இல் ரூபா 1,535,494 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் காப்புறுதித் துறைக்கு நேரடியான பங்களிப்புக் கிடைக்காத உயர் கல்விப் பாடநெறிகள் மற்றும் ஊழியர் நலன்புரிகளுக்காக முறையே ரூபா 636,000 மற்றும் ரூபா 694,520 தொகைகள் செலவிடப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்தவ செயற்திறனின்மைகள்**

2007 மார்ச் 15 ஆந் திகதி முதல் 2009 ஆகஸ்ட் 05 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய பிழையாகப் பயன்படுத்தப்பட்டவையாக இனங்காணப்பட்ட ரூபா 107,800 தொகையான வங்கியிலிடப்படாத வருமானத்தையும் உள்ளடங்கிய சேவையிலிருந்து விலகிச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 112,420 தொகையும் மீளாய்வாண்டின் இறுதித் தினம் வரையிலும் கிடைக்கவேண்டிய பணமாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

2007 மே 09 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 55,000 கிரயமான கணனி மொனிட்டர் மற்றும் ரூபா 4,500 கிரயமான கணனி அச்சிடல் இயந்திரம் கண்டறிய முடியாத சொத்தாக நிலையான சொத்துப்பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள**

சபையினால் பயன்படுத்தப்படாத 5 தொலைபேசிகளுக்காக மீளாய்வாண்டின் போது சேவைக்கட்டணம் மற்றும் அதற்குரிய 20 சதவீத தொலைபேசி வரி மற்றும் செஸ் வரியை உள்ளடக்கி ரூபா 53,400 செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 44 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான எண்ணிக்கை 42 ஆனமையால் 03 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரான 03 உதவிப்பணிப்பாளர் பதவிகள் 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்திருந்து வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் அந்தப் பதவிகளை மீளாய்வாண்டின் போதும் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினங்களுக்கிடையே 52 சதவீதம் தொடக்கம் 336 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுபாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(i) பாதீடு

(ii) பதவியணியினர் நிருவாகம்

(iii) நிலையான சொத்துக்கள்

ஒப்பம்: டபிள்யூ. பீ. சீ. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

# கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய விடயங்களுக்கு சபையின் பதில் அளிப்பு

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் பதில் அளிப்பு |
|---|---|---|
| **2.2** | **நிதிக்கூற்றுகள் மீதான கருத்துரைகள்** | |
| **2.2.1** | **இலங்கைக் கணக்கீட்டு நியமம்** | |
| **(அ)** | 2012ம் ஆண்டில் இருந்து அமுலுக்கு வருமாறு விசேடமாக குறிப்பிடப்பட்டிருந்த முயற்சியினால் முதல் தடவையாகப் பின்பற்றப்பட வேண்டிய இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 (SLFRS 1) ஆனது நிறுவனமொன்று முதன் முதலில் புதிய கணக்கீட்டு நியமத்தினை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தில் என்பதுடன், இலங்கை காப்புறுதிச் சபை 2012ம் ஆண்டு இந்த புதிய கணக்கீட்டு நியமத்தின் படி நிதிக்கூற்றினைத் தயாரித்துள்ளதுடன், 2012ம் ஆண்டு கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தினால் எங்கள் நிறுவனம் தொடர்பாக 'தகைமையற்ற கருத்து (unqualified openion)' வெளியிடப்பட்டுள்ளது.<br><br>இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 (SLFRS 1) இன் 38வது பந்திக்கு அமைவாக இலங்கை காப்புறுதிச் சபையின் 2013ம் ஆண்டுக்கான கடந்து வருட ஒப்பீட்டு புள்ளிவிபரங்கள் மட்டும் உள்ளடக்கப்பட்டு நிதிக்கூற்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்க. |
| **(ஆ)** | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07இன் பிரகாரம் அரச சேமிப்பு பத்திரங்களிலும் (பிணையங்கள்) மற்றும் நிலையான வைப்புகள் என்பவற்றின் மீது முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 1,581,250,000 பெறுமதியான நிதிசார் பத்திரங்கள், நிதிச் சொத்தாக இனங்காணப்பட்டு அதற்குரிய விடயங்கள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | இது தொடர்பாக நேரடியாக தொடர்புபடுவது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 39 ஆவதுடன், இதற்கமைவாக நிதிச் சொத்து பிரதான நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இந்த நான்கு பிரிவுகளில் சபையின் முதலீடுகள் உரித்தாவது, முதிர்வடையும் வரையில் வைத்திருக்கும் முதலீட்டு (Held to Maturity investment) தொகுதிக்காவதுடன், அதற்குரிய முதலீடு ஆரம்பத்தில் உரிய கொடுக்கல் வாங்கல் நடைபெறும் நியாயப்பெறுமதிக்கு (Fair Value) அமைவாக அடையாளம் காணப்படுதல் வேண்டும். அதன் பின்னர் கிரமமாக குறைப்பு ஆகுசெலவு (Amortized Cost) முறையின் கீழ் தாக்கமுறு வட்டி வீத (Effective Interest Rate) அடிப்படையில் பெறுமதியிடப்படுதல் வேண்டும். அதன்படி சபையின் நிதிச் சொத்து அதன் ஆகுசெலவு மற்றும் அட்டுறு வட்டியை அடிப்படையாகக் கொண்டு பெறுமதியிடப்படுதல் வேண்டும்.<br><br>சபை இதன்போது ஆகு செலவிற்கு உரிய சொத்தினை அறவிட்டுக்கொண்டு அட்டுறு வட்டியினை வேறாக அடையாளம் கண்டு நிதிக்கூற்றில் வெளிப்படுத்தி உள்ளதுடன், கணக்காய்வில் கருதப்பட்டவாறு தகைமையற்றதாக கருதும் வகையிலான தாக்கமொன்று நிதிக்கூற்றில் நிகழவில்லை என நாம் நம்புகின்றோம். |
| **(இ)** | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம், சபையின் ரூபா 23,762,974 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் கணிப்பீடு செய்யப்பட்டு, அந்த மீள் கணிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம்.<br><br>எதிர்காலத்தில் நிறுவனத்தை செயற்படுத்துவதற்கு உரிய தொழில்முயற்சி வளங்களை திட்டமிடும் செயற்பாடுகளின் போது (Enterprise Resource Planning- ERP) உரிய பிரத்தியோகப்படுத்தலை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். |
| **2.2.2** | **கணக்கீட்டுக் குறைபாடு** | |
| | மீளாய்வுக்குட்பட்ட வருடத்தினுள் ரூபா 113,100 பெறுமதியான புத்தகம் உட்பட ரூபா 214,007 பெறுமதியான புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகள் கொள்வனவு செய்யப் பட்டிருந்ததுடன், சபையினால் 2005இல் இருந்து 2013 வரை இவ்வகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 953,470 செலவிடப்பட்டிருந்தது. புத்தகங்களின் பெறுமதி மற்றும் அதன் தன்மை என்பவற்றைக் கவனத்தில் கொள்ளாது அந்த செலவு மிகைச் செலவாக மேற்கொள்ளப்பட்டு, அச்செலவு பதிவளிக்கப்பட்டிருந்ததுடன், அதனை மூலதனச் செலவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இருந்த போதிலும் எதிர்காலத்தில் ரூபா 100,000 மேற்பட்ட பெறுமதியான புத்தகங்கள் மட்டும் மூலதனப் படுத்த முடியும் என சபையின் தலைவரால் கணக்காய்வுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | எங்கள் நூலகத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும் அனேக புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளின் (மத்திய வங்கி அறிக்கை போன்று) தன்மையைக் கவனத்தில் கொண்டால் அவை மூலதனப்படுத்துவதற்கு பொருத்தமற்றவை. இந்தப் புத்தகங்கள் அனைத்தும் கையிருப்பேட்டில் பதியப்பட்டுள்ளது. எனினும் எதிர்காலத்தில் ரூபா 100,000 தைவிட பெறுமதி கூடிய புத்தகங்கள் மட்டும் மூலதனப்படுத்தப்படும். |
| **2.3** | **சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை** | |
| **(அ)** | **இலங்கை ஜனநாய சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம்** | |
| **(i)** | நிதிப் பிரமாணம் 454 மற்றும் 757(1) பண்டக் கையிருப்பேடு பராமரிக்கப்படாமை | பண்டக் கையிருப்பேடு எனும் பெயரில் பதிவேடு இருக்கவில்லை என்றபோதிலும், கொள்வனவு செய்யப்பட்ட அனைத்துப் பொருட்களும் பதியப்பட்டிருந்தது (GRN). எனினும் எதிர்காலத்தில் பண்டக் கையிருப்பேட்டினைப் பராமரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ii)** | நிதிப் பிரமாணம் 396 (ஈ)<br>2008ம் ஆண்டில் இருந்து இரத்துச் செய்யப்பட்ட 13 காசோலைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ரூபா 89,780 தொடர்பாக உரிய ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை | ஏற்றுக்கொள்ளவில்லை.<br>நிதிப் பிரமாணம் 396 (ஈ) (111) இல் குறிப்பிட்டுள்ளது என்னவெனில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் இருக்குமாயின் அந்தப் பெறுமதியினை பொறுப்பாக லொட்ஜர் பதிவேட்டில் குறிப்பிடுதல் வேண்டும் என்பதாகும்.<br>எனினும் உரிய நபர்களுக்கு இது தொடர்பாக பலதடவை அறிவித்த போதிலும், அவர்களினால் அதற்கான முயற்சி எடுக்கப்படவில்லை என்பதனால், பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக்கொண்டு அந்தத் தொகையினை பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

# கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய விடயங்களுக்கு சபையின் பதில் அளிப்பு

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் பதில் அளிப்பு |
|---|---|---|
| **2.3** | **சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை** | |
| **(அ)** | 2003 ஜூன் 02ம் திகதி 12ம் இலக்க அரச வியாபார சுற்றுநிருபத்தின் சரத்து 9.14<br><br>நிர்வாகக் கைநூல் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அரச வியாபாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்ளவில்லை<br><br>நிர்வாகக் கைநூல், அரச வியாபாரத் திணைக்களத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட ஆலோசனைகளுக்கு அமைவாக உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றது. |
| **2.4** | **போதியளவு அதிகாரத்தினைக் கொண்டிராத கொடுக்கல் வாங்கல்கள்** | |
| **(அ)** | முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்திற்கு அமைவாக, அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் என்பவற்றின் சம்பளம் மற்றும் கொடுப்பனவு என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கு நிறுவனத்தை உருவாக்கிய சட்டத்தில் ஏற்பாடுகள் இருந்த போதிலும், அந்த நியதிச்சட்ட ஒதுக்கீட்டு சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழு மற்றும் முகாமைத்துவத் திணைக்களம் என்பவற்றின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாமல் செயற்படுதல் கூடாது என்றபோதிலும், அவ்வாறான அனுமதியின்றி சபையினால் 2012ம் ஆண்டில் இருந்து சபை ஊழியர்களின் சம்பளம் 25 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருந்தது. அதன்படி 2012 மற்றும் 2013ம் ஆண்டுகளில் இவ்வாறான உரிய அனுமதியின்றி ரூபா2,600,438 மற்றும் ரூபா 5,221,448 செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள் எனும் தொகுதிக்குள் அடங்காத ஒழுங்குபடுத்தல் (Regulation) நிறுவனமான எங்கள் சபையினால் இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டது நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் அனுமதி மற்றும் பணிப்பாளர் சபையின் பூரண அங்கீகாரத்துடனாகும்.<br><br>2012 நவம்பர் மாதம் 12ம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சி ஆலோசனைக் கூட்டத்தில் இந்தக் கேள்வி கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டதுடன், அச்சமயத்தில் எங்களால் வழங்கப்பட்ட விளக்கத்திற்கு அமைவாக இவ்விடயத்தை நீக்குமாறு பொது தொழில்முயற்சிகள் ஆலோசனைச் சபை தலைவரினால் கணக்காய்வுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது என்பதையும் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். |
| **(ஆ)** | சபையினால் ஊக்குவிப்பு கொடுப்பனவுத் திட்டமொன்றின் முன்மொழிவு நிதி அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை. எனினும் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் நிறுவனத்தின் 42 ஊழியர்களுக்கு மாதாந்த வருமானத்தை கருத்தில்கொண்டு ரூபா 1,951,246 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் உரிய கொடுப்பனவு வழங்கப்பட்டது அமைச்சரவை ஆலோசனைகளுக்கு அமைவாக தாயாரிக்கப்பட்ட செயற்பாட்டு மதிப்பீடு மற்றும் விடுமுறை தினம் என்வற்றின் முன்னேற்றத்தினைக் கருத்தில்கொண்டாகும்.<br><br>அத்துடன் 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதிக் கைத்தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக பணிப்பாளர் சபையின் உரிய அனுமதி பெறப்பட்டுள்ளது. |
| **(இ)** | அனுமதிக்காக திறைசேரிக்கு வழங்கப்பட்டிருந்த நிர்வாகக் கைநூல் நியமங்களுக்கு அமைவாக, மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் ஊழியர்களுக்கு விடுமுறை தினக் கொடுப்பனவாக ரூபா 599,941 வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்வாக கைநூலுக்கான அனுமதி 2014 ஒக்டோபர் 30ம் திகதி வரை கிடைக்கப்பெறவில்லை. | |
| **3.** | **நிதி மீளாய்வு** | |
| **3.1** | **நிதிப் பெறுபேறு** | |
| | சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்கு அமைவாக, மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் வரிக்கு முன்னரான நிதிப் பெறுபேறு ரூபா 148,207 ஆக இருந்துடன், அதற்கு முன்னைய வருடத்தில் மிகை ரூபா 238,211 ஆக இருந்ததனால், இவ்வரு வருடங்களையும் ஒப்பிடுகையில் நிதிப் பெறுபேறானது ரூபா 90,004 இனால் குறைவடைந்து அதனாவது 38 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததை அவதானிக்க முடிந்தது. சபையின் மொத்த வருமானதட ரூபா 11,461,378 இனால் அதிகரித்திருந்த போதிலும் சபையின் பணிக்குழுவிற்கான ஆகு செலவு மற்றும் தொழில்கட்டணம் என்பன ரூபா 9,662,751 மற்றும் ரூபா 1,844,222 வினால் அதிகரித்திருந்தமை இதற்கான காரணமாக அமைந்திருந்தது. | |

# கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய விடயங்களுக்கு சபையின் பதில் அளிப்பு

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் பதில் அளிப்பு |
|---|---|---|
| 3.2 | பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு | |
| | சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கு அமைவாக 2013 டிசம்பர் 31ம் திகதி மற்றும் 2012 டிசம்பர் 31ம் திகதி என்பவற்றில் காணப்பட்ட செயற்பாட்டு மூலதன வீகிதம் கீழே காட்டப்பட்டுள்ளது.<br><br>விகிதம் 2013 2012<br>நடைமுறை / உடனடி 139:1 120:1<br><br>மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதியில் நிதிக்கூற்றில் ரூபா 1,728,818,419 நடைமுறைச் சொத்துக்களாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன், இந்தப் பெறுமதியில் 99 சதவீதமான ரூபா 1,766,611,670 ஆனது 2000ம் ஆண்டு 43ம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 103வது சரத்திற்கு அமைவாக நிறுவப்பட்டிருந்த 'காப்புறுதி உரித்துடையவர்களின் பாதுகாப்பு நிதியம்' எனும் முதலீட்டினை பிரதிநிதித்துவப்படுத்தியது. | |
| 4. | செயற்பாட்டு மீளாய்வு | |
| 4.1 | செயலாற்றல் | |
| | சபையின் 2013ம் ஆண்டு வருடாந்த செயற்பாட்டு திட்டத்திற்கு அமைவாக, ஒவ்வொரு அலகினாலும் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்பார்த்த பணிகளை நிறுவனத்தினால் செயற்படுத்த முடியாமல் போயிருந்தது. | |
| (அ) | **சட்டப் பிரிவு**<br>இந்த அலகின் கீழ் பலமிக்க காப்புறுதி நியதிச் சட்டரீதியான பிரிவொன்றை உருவாக்கும் நோக்கத்துடன் கீழ் வரும் பணிகளை நிறைவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், இப்பணிகளை 2014 ஏப்பிரல் 30ம் திகதியிலும் கூட நிறைவுறுத்தப்படவில்லை. | இறுதிக்குள் அவற்றினை பணிப்பாளர் சபை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய பணிகளின் முன்னேற்றம் கீழ்வருமாறு அமைகின்றது. |
| | (i) காப்புறுதி நிர்வாகத்தினரினால் 1987ம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த பிரமாணங்களைத் திருத்தம் செய்தல். | (i) 1987ம் ஆண்டு விநியோகிக்கப்பட்டிருந்த பிரமாணங்களைத் திருத்தம் செய்தல் - பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இறுதி நடவடிக்கைகள் இவ்வருடத்தினுள் பூர்த்திசெய்யப்படும். |
| | (ii) சபைக்கு இருக்கும் மேற்பார்வை மற்றும் விசாரணை அதிகாரம் தொடர்பாக சட்டத் திருத்தத்தினை மேற்கொள்ளுதல். | (ii) மேலே கூறியவாறு |
| | (iii) இழப்பு நட்டங்களை ஈடுசெய்பவர்களைப் பதிவுசெய்யும் நடைமுறைறைக்கு தகைமையான நடைமுறையை தயாரித்தல். | (iii) இழப்பு நட்டங்களை ஈடுசெய்பவர்களைப் பதிவுசெய்தல் - நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு சபையின் ஆலோசனைக்கு அமைவாக பொது மக்களின் கருத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. |
| | (iv) அந்தந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள காப்புறுதி முகவர்களின் பதிவு தகைமையைப்படுத்துவதற்காக உரிய நடைமுறையைத் தயாரித்தல். | (iv) காப்புறுதிப் முகவர்களைப் பதிவு செய்தல் - பணிகள் நிறைவடைந்துள்ளது. உரிய வர்த்தமானி அறிவித்தல் 2014.05.10ம் திகதி வெளியிடப்பட்டுள்ளது. |
| | (v) ஆபத்தினை அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தை நிறுவுவதற்கு வசதிகளை வழங்குதல் தொடர்பாக உரிய நடைமுறையை தயாரித்தல். | (v) ஆபத்தினை அடிப்படையாகக் கொண்டு மூலதனத்தை நிறுவுவதல் - உலக வங்கியினால் உதவி வழங்கப்படும் கருத்திட்டமாகும். அனைத்து நடவடிக்கைகளும் தற்போது பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன், சட்டத்தை உருவாக்குவதற்கு சட்ட வரையுனர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

# கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய விடயங்களுக்கு சபையின் பதில் அளிப்பு

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் பதில் அளிப்பு |
|---|---|---|
| 4. | செயற்பாட்டு மீளாய்வு | |
| 4.1 | செயற்பாடுகள் | |
| (ஆ) | **விசாரணைப் பிரிவு**<br>இதன் கீழ் உள்ள காப்புறுதிப் பூட்கைகளைச் செய்தவர்களும் மற்றும் எதிர்காலத்தில் காப்புறுதி பூட்கைகளைச் செய்பவர்களும் நம்பிக்கை மற்றும் கைத்தொழிலின் முன்னேற்றத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், | உரிய நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தது உலக வங்கியின் தொழில்நுட்பத்துடனான விசேட கருத்திட்டமாக செயற்படுத்தப்படுவதற்காகும். எனினும் இந்தக் கருத்திட்டத்திற்கான அனுமதி கிடைக்கப்பெறாமையினால் அதனை செயற்படுத்த முடியாது போனது. இது எமது கட்டுப்பாட்டுக்குள் அமையாத விடயமாகும். |
| | (i) வருடத்தினுள் வெளிநாட்டு நீதிமன்ற வரையறை மற்றும் கைத்தொழிலின் கருத்துரை ஆய்வு அறிக்கையினைத் தயாரித்தல். | |
| | (ii) சபையினால் விசாரணை வசதிகளை வழங்கக்கூடிய வெளிவாரி நிறுவனங்களை அடையாளம் காணுதல் மற்றும் அவர்களுடன் ஒப்பந்தத்திற்கு வருதல். | |
| | திட்டமிட்டிருந்த போதிலும் ஒரு வெளிவாரி நிறுவனம் மட்டும் அடையாளம் காணப்பட்டிருந்தது. | |
| (இ) | **மேற்பார்வைப் பிரிவு**<br>இதன் கீழ் வினைத்திறன் மேற்பார்வை முறைமையின் ஊடாக இலங்கை காப்புறுதிக் கைத்தொழிற்துறையின் நிலைத்திருப்பை திறமையாகக் கையாளும் நோக்கத்துடன், | |
| | (i) காப்புறுதி கம்பனியில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரிவுகளுக்கு 07 களப் பரிசோதனைகளை நடாத்துதல். | களப் பரிசோதனைகள் 7இல் 3இனை மேற்கொள்வதற்கு முடியாமல் போனதற்கு காப்புறுதி நிறுவனமொன்றின் நடைபெற்ற மோசடி தொடர்பாக திட்டமிடாத விசேட களப் பரிசோதனையொன்றினை மேற்கொள்வதற்கு பிரிவில் உள்ள வரையறுக்கப்பட்ட அலுவலர்களுக்கு அதிக காலத்தினை செலவழிக்க வேண்டியிருந்ததனால் ஆகும். எதிர்பார்க்காத இந்நிகழ்வு காரணமாக திட்டமிட்ட பணியினை பிற்போடுவதற்கு நேர்ந்தது. |
| | (ii) முகாமைத்துவ தகவல் முறைமையினை தயாரித்தல். | |
| | (iii) காப்புறுதி நிறுவனங்களின் நிதி ஆபத்துக்கள் மற்றும் செயலாற்றலை மதிப்பிடுவதற்காக உரிய நிறுவனங்களின் மாதாந்த அறிக்கையை மேற்பார்வை, மீளாய்வு மற்றும் பகுப்பாய்வு செய்தல். | கம்பனிகளில் இருந்து மாதாந்த அறிக்கையைப் பெற்றுக்கொள்வததற்கு, அது முன்னர் திட்டமிடாத யாதேனும் கம்பனியின் முன்னேற்றம் பின்னடைவு அடைந்துள்ளது என சபை தீர்மானம் எடுத்தால் மாத்திரமே மேற்கொள்ளப்படும். அத்துடன், மேற்பார்வைப் பிரிவின் அலுவலர்கள் 21 காப்புறுதி நிறுவனங்களில் இருந்து பெற்றுக்கொண்ட காலாண்டு மற்றும் வருடாந்த அறிக்கை அனைத்தும் பகுப்பாய்வு செய்யப்பட்டது. |
| | திட்டமிட்டிருந்த போதிலும், களப் பரிசோதனை 4ம் மற்றும் 4 நிறுவனங்களின் மாதாந்த அறிக்கை பகுப்பாய்வு மட்டுமே மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஈ) | **நிதி மற்றும் நிர்வாகப் பிரிவு**<br>இதன் கீழ், கீழ்வரும் பணிகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்திருந்த போதிலும், 2013ம் ஆண்டு உரிய பணிகளை நிறைவுசெய்வதற்கு நிறுவனத்தினால் முடியாது போனது. | |
| | (i) ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளின் கீழ் மருத்துவ கொடுப்பனவை ஒழுங்குபடுத்தவதற்கு நடவடிக்கை எடுத்தல். | மருத்துவ கொடுப்பனவு வழங்குவது தொடர்பாக ஒழுங்குமுறையில் அமைந்த நடைமுறையொன்று தற்போதும் பின்பற்றப்படுகின்றது. |
| | (ii) சபையின் பயிற்சி செலவை செயற்திறனாக்குவதற்கு துறைக்கு உரிய பயிற்சிகளுக்கு மட்டும் அலுவலர்களை பங்குபற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல். | நிறுவனத்தினால் ஊழியர்களை பயிற்றுவித்தல் தொடர்பாக இதற்கு முன்னர் விளக்கமளித்தவாறு அனைத்து பயிற்சி பாடநெறிகளும் காப்புறுதித் துறைக்கு நேரடியாக தொடர்புபடும் பாடநெறியென்பதை மீளவும் குறிப்பிடுகின்றோம். |
| | (iii) எனினும் மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் உள்நாட்டு பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 2,250,000வில் ரூபா 1,535,494 செலவிடப்பட்டிருந்ததுடன், காப்புறுதி துறைக்கு நேரடிப் பங்களிப்பு வழங்காத உயர் கல்வி பாடநெறிகளுக்கு மற்றும் ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளுக்கு ரூபா 636,000 மற்றும் ரூபா 694,520 செலவழிக்கப்பட்டிருந்து. | சபையின் செயற்பாட்டுக்கு அவசியமானது காப்புறுதிக் கைத்தொழிற்துறைக்கு மட்டுமான அறிவுமட்டுமல்ல. சட்டம், நிதி, தாபன நிர்வாகம், முகாமைத்துவம், காப்புறுதிக் கணக்கு, ஊழியர் ஊக்குவிப்பு, தொடர்பாடல், நம்பிக்கையை கட்டியெழுப்பல் மற்றும் தலைமைத்துவம் போன்ற அனைத்து விடயங்களும் நிறுவனப் பணிகளுக்கு நேரடியாக தாக்கத்தை விளைவிக்கும். |

# கணக்காய்வாளர் நாயகம் எழுப்பிய விடயங்களுக்கு சபையின் பதில் அளிப்பு

| | கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | இலங்கை காப்புறுதிச் சபையின் பதில் அளிப்பு |
|---|---|---|
| **4.2** | **முகாமைத்துவ செயற்திறனின்மைகள்** | |
| | 2007 மார்ச் 15ம் திகதியில் இருந்து 2009 ஒகஸ்ட் 05ம் திகதி வரையான காலப்பகுதிக்கு உரிய தவறாகப் பயன்படுத்தப்பட்டதாக அடையாளம் காணப்பட்ட ரூபா 107,800 வங்கியில் வைப்பிலிடாத வருமானம் உட்பட சேவையில் இருந்து விலகிய ஊழியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 112,420 மீளாய்வுக்குட்பட்ட வருடத்தின் இறுதி தினத்தில் பெறப்பட வேண்டிய தொகையாக குறிக்கப்பட்டிருந்ததுடன், அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை | ஏற்றுக்கொள்ளவில்லை.<br><br>இந்த விடயம் தற்போது நீதிமன்றத்தில் உள்ள வழக்குக்கு உரியவராதாகும். அதன்படி எங்கள் சபை தலையிட்டு கணக்கீட்டுக்கு முன்னர் தீர்க்கப்பட முடியாததனால், இது எங்கள் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக அமையாத விடயம் என்பதைக் குறிப்பிடுகின்றோம். |
| **4.3** | **தொழிற்பாட்டு வினைத்திறனின்மை** | |
| | இந்த விடயம் தற்போது நீதிமன்றத்தில் உள்ள வழக்குக்கு உரியவராதாகும். அதன்படி எங்கள் சபை தலையிட்டு கணக்கீட்டுக்கு முன்னர் தீர்க்கப்பட முடியாததனால், இது எங்கள் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக அமையாத விடயம் என்பதைக் குறிப்பிடுகின்றோம். | 2007ம் ஆண்டு கொள்வனவு செய்யப்பட்ட இந்த உபகரணங்கள் இரண்டையும் கண்டறிவதற்கு பலவருடங்களாக முயற்சி செய்த போதிலும், அம்முயற்சியானது தோல்வியடைந்தள்ளது. சபையின் உரிய அனுமதியைப் பெற்றுக்கொண்டு இந்தப் பெறுமதியினை நிலையான சொத்துக்கள் லெட்ஜரில் இருந்து பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கை இவ்வருட இறுதியினுள் எடுக்கப்படும் |
| **4.4** | **பொருளாதாரமல்லாத கொடுக்கல் வாங்கல்** | |
| | சபையினால் பயன்படுத்தப்படாத 5 தொலை பேசிகள் தொடர்பாக மீளாய்வுக் குட்பட்ட வருடத்தினுள் சேவைக் கட்டணம் மற்றும் அதற்குரிய 20 வீத தொலைபேசி வரி மற்றும் செஸ் வரி உட்பட ரூபா 53,400 செலுத்தப்பட்டுள்ளது. | இந்த 5 தொலைபேசிகளும் பயன்படுத்தப்படாதவை எனக்குறிப்பிடப்படுவதற்கு நாம் உடன்படவில்லை.<br>தொலைபேசி அழைப்பினை பெற்றுக்கொள்ளல் மாற்றல் ஊடாக நடைபெற்ற போதிலும், உரிய பணிப்பாளர்களுக்கு வெளியில் இருந்து கிடைக்கும் அழைப்புகள் பெரும்பாலும் இத் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவே கிடைக்கப்பெற்றது. |
| **4.5** | **பதவியணியினர் நிர்வாகம்** | |
| | கீழ்வருவன அவதானிக்கப்பட்டது. | |
| **(அ)**<br><br><br><br><br>**(ஆ)** | 2013 டிசம்பர் 31 திகதியில் அனுமதியளிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 44ஆக இருந்த போதிலும், உள்ளபடியான எண்ணிக்கை 42ஆக இருந்ததனால் 03 வெற்றிடங்கள் காணப்பட்டது.<br>அனுமதியளிக்கப்பட்ட சபையின் உதவிப் பணிப்பாளர் பதவிகள் 03, 2013ம் ஆண்டில் இருந்து வெற்றிடமாக காணப்பட்ட போதிலும், இப்பதவிகள் மீளாய்வுக்குட்பட்ட வருடம் வரை நிரப்புவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் இருந்தது. | உங்கள் அவதானிப்பு சரியானது அல்ல. 2013.12.31ம் திகதியில் சபையின் 02 உதவிப் பணிப்பாளர் பதவிகள் மட்டுமே வெற்றிடமாகக் காணப்பட்டது. காப்புறுதிக் கணக்காளர் உதவி பணிப்பாளர் பதவியினை நிரப்புவதற்கு தேவை ஏற்பட்டது சுடீளு கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு ஆரம்பித்ததன் பின்னர் ஆகும். பதவியினை இல்லாதொழித்தால் மீண்டும் இப்பதவியினை உருவாக்குவது கடினம் என்பதனால் அவ்வாறு செய்யப்படவில்லை. மற்றய உதவிப் பணிப்பாளர் பதவியை பூர்த்திசெய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகத் தேர்வு நடத்தப்பட்ட போதிலும், தகைமையுடைய நபரை தேர்ந்தெடுக்க முடியாமல் போனது. வருங்காலத்தில் அதனை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். |
| **5.** | **கணக்களிப் பொறுப்பும் மற்றும் நல்லாளுகையும்** | |
| **5.1** | **பாதீட்டுக் கட்டுப்பாது** | |
| | வரவுசெலவுத்திட்ட செலவுகள் மற்றும் உண்மைச் செலவுகள் என்பவற்றுக்கிடையில் 52% இருந்து 336% வரையிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டதற்கு வரவுசெலவுத்திட்ட ஏடு வினைத்திறனுடன் நிதி நிர்வகக் காரணியாகப் பயன்படுத்தப்படவில்லை. | காப்புறுதிக் கணக்கு அலுவலருக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு மேற்பார்வை அலகின் கீழ்வரும் செலவுகளில் எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தினால் 336% வேறுபாடு உருவானது. ஆதனால் மேற்பார்வை அலகின் இந்தச் செலவு (ரூபா 2,178,627) அந்த அலகின் செலவாக எடுத்துக்கொள்ளப்படாத காரணத்தினால் இவ்வாறான வேறுபாடு உருவானது.<br>எனினும் 2015 வரவுசெலவு ஏட்டினை குறைந்த வேறுபாட்டுடன் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| **6.** | **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்** | |
| | கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளில் உள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவத்தலைவரின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழ் வரும் நிர்வகத்துறைகள் தொடாபாக விசேட கவனம் எடுக்கப்படுதல் வேண்டும்.<br><br>(i) வரவு செலவுத்திட்டம்<br>(ii) பதவியணியினர் நிர்வாகம்<br>(iii) நிலையான சொத்துக்கள் | எங்களினால் சரிசெய்யப்பட வேண்டிய துறைகள் தொடாபாக உங்களின் ஆலோசனைகள் கருத்தில் கொள்ளப்பட்டு விசேட கவனம் எடுக்கப்படும். |

# பின்னிணைப்பு I

2013 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு 2000 இன் 43 ஆம் இல. காப்புறுதி கைத் தொழில் ஒழுங்கமைப்பு சட்டத்தின் கீழ், பதிவு செய்யப்பட்டுள்ள காப்புறுதிக் கம்பனிகள்

| இல. | காப்புறதியாளரின் பெயர் | காப்புறுதியின் வகை |
|---|---|---|
| 1 | ஏஐஏ இன்ஸ்யூரன்ஸ் லங்கா பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 2 | ஏஐஜி இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 3 | அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொது காப்புறுதி |
| 4 | அலையன்ஸ் லைப் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| 5 | அமானா டக்காபுல் பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 6 | ஆர்பிகோ இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | நீண்டகாலம் காப்புறுதி |
| 7 | ஏசியன் அலையன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகாலம் காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 8 | சிலிங்கோ இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 9 | சிலிங்கோ டக்காபுல் லிமிடட்* | பொது காப்புறுதி |
| 10 | கொண்டினென்டல் இன்ஸ்யூரன்ஸ் லங்கா லிமிடட் | பொது காப்புறுதி |
| 11 | கோர்பரெடிவ் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 12 | எச்என்பி அஸ்யூரன்ஸ் பீஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 13 | ஜனசக்தி இன்ஸ்யூரன்ஸ் பீஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 14 | லைப் இன்ஸ்யூரன்ஸ் கோர்பரேசன் (லங்கா) லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| 15 | எல்ஒஎல்சி இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 16 | எம்பிஎஸ்எல் இன்ஸ்யூரன்ஸ் கம்பனி லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 17 | நெசனல் இன்ஸ்யூரன்ஸ் டிரஸ்ட் ப(f)ண்ட் போர்ட் | பொது காப்புறுதி |
| 18 | ஓரியன்ட் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 19 | பீபல்ஸ் இன்ஸ்யூரன்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 20 | சீமாசகித சனச ரக்ஷன சமாகம | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 21 | இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் லிமிடட் | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |
| 22 | யூனியன்ஸ் இன்ஸ்யூரன்ஸ் பிஎல்சி | நீண்டகால காப்புறுதி |
| | | பொது காப்புறுதி |

* 2009 ஆகஸ்ட் 5 இலிருந்து காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு சிலிங்கோ டக்காபுல் லிமிடட்டிற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

# பின்னிணைப்பு II

2000ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதிக் கைத்தொழில் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் - 2013 டிசம்பர் 31 இல் உள்ளவாறு

| இல | காப்புறுதித் தரகரின் பெயர் | காப்புறுதி வியாபாரத்தின் வகை |
|---|---|---|
| 1 | ஏஎம்டபிள்யு. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | பொது காப்புறுதி |
| 2 | ஏடிஇஸட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 3 | எய்ட்க்ன் ஸ்பென்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 4 | அல்பின்கோ இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 5 | அலையன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 6 | அக்கியுலைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 7 | அசெட் ஐ இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறதி |
| 8 | அசெட்லைன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 9 | பிரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 10 | சியக்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | பொது காப்புறுதி |
| 11 | செலான் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் கம்பனி (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 12 | சினர்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 13 | சிஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 14 | கொலம்போரே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 15 | கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 16 | தயா சரண இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 17 | டெல்மேஜ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 18 | ஈஏபி - ஆர்எம்எஸ் இன்சூரன்ஸ் புரோகர்ஸ் (பிரை) லிமிட்டட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 19 | ஈகுவிட்டி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 20 | ஈஸாஜி கரிம்ஜி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 21 | ஃபின்லே இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 22 | போர்சைட் இன்ஸ்யூரன்ஸ் & ரி. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 23 | ஜோர்ஜ் ஸ்டுவர்ட்ஸ் இன்சூரன்ஸ் பரோகர்ஸ் (பிரை) லிமிட்டட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறதி |
| 24 | க்ளோபல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ & சேர்விசஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 25 | கிரான்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 26 | கார்டியன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 27 | இன்டஸ்ட்ரியல் அன்ட் கொமர்ஷல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 28 | ஜே இன்சூரன்ஸ் புரோகர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 29 | ஜேஎப் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 30 | களனி யுனி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 31 | எல்எம் அன்ட் ஏ. இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் அன்ட் கன்ஸல்டன்ட்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 32 | லக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 33 | லைப் அன்ட் ஜெனரல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் சிலோன் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 34 | மக்வூட்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 35 | மக்ஸ்வெல் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 36 | மோர்கன்டைல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |

# பின்னிணைப்பு II தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 37 | நேஷன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 38 | பயனியர் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 39 | பிளசிட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 40 | புரொகெயார் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 41 | புரொடெக்ஷன் அன்ட் அசூவரன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 42 | புரொடெக்ஷன் அன்ட் அட்மோஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 43 | ரெட்மோ ஸ்விஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 44 | ரிலையன்ஸ் இன்சூரன்ஸ் ஏஜஜி லங்கா (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 45 | ரிலியன்ஸ் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 46 | ரின்கூன் லங்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 47 | ரோ-பா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 48 | சம்சன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 49 | சேனாரத்ன இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 50 | செங்கடகல இன்சூரன்ஸ் புரோக்கர் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 51 | சதர்ன் மேர்ச்சன்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 52 | ஸ்ட்ரஜிக் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 53 | டிரஸ்ட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 54 | யூஎன் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 55 | யுனைடட் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | பொது காப்புறுதி |
| 56 | வெரசிடி இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட். | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 57 | விக்டர் இமானுவெல் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகால மற்றும் பொது காப்புறுதி |
| 58 | வொலன்கா இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |
| 59 | ஸெனித் இன்சூரன்ஸ் புரோக்கர்ஸ் (பிரை) லிமிடட் | நீண்டகாலம் மற்றும் பொது காப்புறுதி |

# அருஞ்சொல் விளக்கம்

**திரட்டல்**

ஒரே கம்பனியில் காப்புறுதி செய்யப் பட்டிருக்கும் அல்லது மீள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் கணிசமான அளவிலான இடர்கள் ஓர் இழப்பு நிகழ்வினால் ஒரே நேரத்தில் பாதிக்கப்படுதல்.

**கையகப்படுத்தும் செலவுகள்**

புதிய காப்புறுதி ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தற்போதைய காப்புறுதி ஒப்பந்தங்களைப் புதுப்பித்தல் (உதாரணமாக, தரகுக் கட்டணங்கள்) என்பனவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதான மான அனைத்துச் செலவுகளும்.

**கணிப்பீட்டாளர்**

காப்புறுதி, முதலீடுகள், நிதி முகாமைத்துவம் மற்றும் குடிசனவியல் என்பன தொடர்பான நிகழ்தகவு மற்றும் பிரச்சினைகளுக்கான புள்ளிவிபரக் கோட்பாட்டினைப் பிரயோகிக் கும் ஒரு நிபுணர்.

**நிர்வாகச் செலவுகள்**

தவணைக் கட்டணச் சேகரிப்பு, காப்புறுதிப் பத்திர நிர்வாகம், ஆளணிச் செலவுகள், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன தொடர்பான தேய்மான ஒதுக்கீடுகள் என்பவற்றில் இருந்து ஏற்படும் செலவுகளையும் உள்ளடக்கிய நிர்வாக இயல்பைக் கொண்ட செலவுகள்.

**அனுமதிக்கத்தக்க ஆதனங்கள்**

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் நியதி பூர்வமான கடன் தீர் ஆற்றலை நிர்ணயிப்பதில் உள்ளடக்கக் கூடிய ஆதனங்கள். அத்தகைய சொத்துகள், என்பவை 2000 மாவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளன.

**ஆண்டுதோறும் வழங்கப்படும் தொகை**

குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப்பிரிவுக்கு அல்லது காப்புறுதிதாரரின் ஆயுள் காலத்தின்போது, காலத்திற்குக் காலம் வருமான அனுகூலங்களைச் செலுத்தும் ஒரு காப்புறுதித் திட்டம். எதிர்காலத்தில் ஏதாவது ஒரு கட்டத்தில் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது ஒத்திவைக்கப்பட்ட வருடாந்த கொடுப்பனவாகும். உடனடியாக வருடாந்த கொடுப்பனவு ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆரம்பத்திலேயே கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்படும்போது அது உடனடியான வருடாந்த கொடுப்பனவு ஆகும்.

**பயனாளி**

காப்புறுதிப் பத்திரதாரரின் மரணத்தின் போது, காப்புறுதி செய்யப்பட்ட தொகையையும், கிடைக்க வேண்டிய ஏனைய பயன்களையும் பெற்றுக்கொள்ள வேண்டியவர் எனக் காப்புறுதிதாரரினால் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் நபர்.

**இணங்குபவர்**

ஒரு மீள் காப்புறுதிக் கம்பனியின் வாடிக்கையாளர் (முதன்மை காப்புறுதிக் கம்பனி)

**கோரிக்கைகள்**

காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் நிகழ்வு சம்பவிக்குமிடத்து, ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய தொகை. அதாவது, சொத்துகள் அழிதல் அல்லது சேதமடைதல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட மரணம் அல்லது காயங்கள், மருத்துவமனைச் செலவுகள் அல்லது மருந்துச் செலவுகள் ஏற்படுதல், காப்புறுதி செய்யப்பட்ட நபரின் மரணம் அல்லது உடல் ஊனம், ஒரு காப்புறுதிப் பத்திரம் முதிர்ச்சியடைதல், ஓய்வூதிய வயதை அடைதல், போன்றவை காப்புறுதிப் பத்திரத்தைக் கையளிக்கும் போது செலுத்தப்பட வேண்டிய தொகை.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட செலவு**

கணக்கீட்டுக் காலத்தின்போது பணம் செலுத்தப்பட்ட அனைத்துக் கோரிக்கை களினதும் மொத்தத் தொகை, கோரிக்கைகளைக் கையாளும் செலவு களும் இதில் அடங்கும். பொருத்தமானவிடத்து, கணக்கிட்டுக் காலத்தின் ஆரம்பத்தின் போதும், முடிவின் போதும் நிலுவையிலிருந்து வரும் கோரிக்கைகளுக்கு செய்யப்படும் சீராக்கங்கள்.

**கோரிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட அறிவிக்கப்படாத செலவுகள்**

ஏற்பட்டிருக்கும் ஆனால் இதுவரையில் காப்புறுதி வழங்குநருக்கு அறிவிக் கப்பட்டிராத எதிர்பார்க்கப்படும் இழப்புக்களின் செலவை உள்ளடக்கும் பொருட்டு, சொத்து, பொறுப்பு மற்றும் ஏனைய காப்புறுதிகள் என்பன தொடர்பாக கணக்கீட்டுக் காலத்தின் முடிவின்போது வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஒதுக்கு.

**நிலுவையில் இருக்கும் கோரிக்கைகள் ஒதுக்கு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

ஐந்தொகைத் திகதிக்குள் இடம் பெற்றிருக்கும் நிகழ்வுகளில் இருந்து தோன்றும் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கான மதிப்பிடப்பட்ட செலவுகளை உள்ளடக்கும் பொருட்டு ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை. இது அறிவிக்கப்படாத (ஐடீசே) ஆனால், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் கோரிக்கைகள் தொடர்பான செலவுகள், கோரிக்கைகளைக் கையாளும் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குவதுடன், அக்கோரிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே செலுத்தப்பட்டிருக்கும் தொகைகள் இதிலிருந்து கழிக்கப்படுகின்றன.

**இணை காப்புறுதி**

ஓர் நட்ட இடரை குறித்துரைக்கப்பட்ட தவணைக் கட்டணத்தில் உடன்பட்டிருக்கும் விகிதத்தில் உள்ளடக்கும் பொருட்டு காப்புறுதி செய்பவருடன் இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட காப்புறுதி வழங்குநர்கள் தனியொரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளும் ஓர் ஏற்பாடு.

**தரகுக் கட்டணம்**

காப்புறுதி வழங்குநர் ஒருவரின் காப்புறுதி திட்டங்களை விற்பனை செய்தமைக்காக மற்றும் சேவைகளை வழங்கியமைக்காக, ஒரு தரகருக்கு அல்லது காப்புறுதி முகவருக்குச் செலுத்தப்படும் கொடுப் பனவு.

**ஒத்திவைக்கப்பட்ட கையகப்படுத்தல் செலவு - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

வருடாந்த கணக்கீட்டு அடிப்படையின் கீழ் ஐந்தொகைத் திகதியில் செல்லுபடியான ஒப்பந்தங்களின் முதிர்ச்சியடையாத நட்வச்சக் காலம் தொடர்பான கையகப்படுத்தல் செலவுகள் இவை ஒரு கணக்கீட்டுக் காலப் பிரிவிலிருந்து, அடுத்துவரும் கணக்கீட்டுக் காலப் பிரிவுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

**தவணைக் கட்டண காப்புறுதி பெறுகை**

கணக்கீட்டுக் காலத்தின் ஆரம்பத்திலும், முடிவிலும் பெறப்படாத தவணைக்கட்டண ஒதுக்குகளின் மூலம் சீராக்கம் செய்யப்பட்ட எழுதப்பட்ட தவணைக் கட்டணங்கள்.

**பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

தீ, கடல், மோட்டார் வாகன அல்லது நானாவித காப்புறுதி வர்த்தகத்தை தனியாகவோ, ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றுடன் இணைந்து மேற்கொள்ளல். கிடைத்த, மொத்த தவணைக் கட்டணங்கள் அல்லது அனைத்து மூலங்களில் இருந்தும் கிடைக்க வேண்டிய தவணைக் கட்டணங்கள். இவை கணக்கீட்டுக் காலப் பிரிவின் போது பொதுக் காப்புறுதி வர்த்தகம் தொடர்பாகக் கருதப்பட்ட மீள் காப்புறுதிக்கான கட்டணங்களையும் உள்ளடக்குகின்றன.

**காப்புறுதி இடர்**

காப்புறுதி செய்யப்பட்ட நிகழ்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு, காப்புறுதிக் கோரிக்கையின் அளவு அல்லது கோரிக்கைக் கொடுப்பனவுகளைச் செலுத்த வேண்டிய காலம் என்பன தொடர்பான நிச்சயமற்ற நிலை.

**மொத்த தவணைக் கட்டணம்**

கழிவுகள், மீள் திருப்பப்பட்ட தொகை, மற்றும் தள்ளுபடிகள் ஆகியவை கழிக்கப்பட்டதன் பின்னரான தவணைக் கட்டணமாயினும், இது எந்தவொரு தவணைக் கட்டண செலுத்துதல்கள் அல்லது காப்புறுதி வழங்குனர் ஒருவரின் மீள் காப்புறுதி வாடிக்கையாளர்களுக்கு வழற்கப்பட வேண்டிய கொடுப்பனவுக் என்பவை கழிக்கப்படுவதற்கு முன்னரான தாக இருக்கும்.

**காப்புறுதி வழங்குநர்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒரு பொதுக் கம்பனியாகக் கூட்டிணைக்கப்பட்டதும், 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் கீழ் ஒரு காப்புறுதி வழங்குநராக தன்னைப் பதிவு செய்து கொண்டிருக்கும் கம்பனி.

**நீண்டகாலக் காப்புறுதி வர்த்தகம்**

மனித ஆயுள் தொடர்பான காப்பீட்டு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல் அல்லது பராமரித்தல் தொடர்பான வர்த்தகம். அத்தகைய ஒப்பந்தங்கள் மரணத்தின் போது அல்லது மனித வாழ்க்கையில் ஏதெனும் திடீர் நிகழ்வுகள் இடம்பெறும் போது, பணக் கொடுப்பனவு உத்தரவாதப் படுத்தப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும், மனித வாழ்க்கையில் ஏற்படக்கூடிய ஓர் அவசர நிலைக்கென தவணைக் கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களையும் உள்ளடக்குகின்றன.

**முதிர்ச்சி**

ஒரு நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டிருக்கும் கொடுப்பனவுத் தொகை அதன் காலப் பிரிவின் முடிவின் போது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய காலம்.

**நிகர கோரிக்கைகள் விகிதம் அல்லது நிகர இழப்பு விகிதம்**

நிகர இழப்புச் செலவுகளை நிகர வருமானத்துடன் தொடர்புபடுத்துவதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்

# அருஞ்சொல் விளக்கம்

படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதி களைக் கழித்த பின்னர்)

$$\frac{\text{நிகர கோரிக்கை கொடுப்பனவுகள்}}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} \times 100$$

**நிகர இணைந்த விகிதம் - பொதுக் காப்புறுதி வியாபாரம்**

இது காப்புறுதி வழங்குநரின் தொழிற் பாடுகளின் இலாபத் தன்மையைக் காட்டுகின்றது. தேறிய நட்ட விகிதத்தையும் தேறிய செலவு விகிதத்தையும் இணைத்துக் கணிக்கப்படுகின்றது. இது முதலீட்டு வருமானத்தைக் கவனத்தில் எடுப்பதில்லை.

**நிகர கோரிக்கை**

$$\frac{\text{செலவுகள்} \times 100}{\text{நிகர தவணைக் கட்டண பெறுகைகள்}} + \frac{\text{செலவுகள்} + 100}{\text{நிகர தவணைக் கட்டண செலவுகள்}}$$

**தேறிய தவணைப் பெறுகைகள் - பொதுக் காப்புறுதி வர்த்தகம்**

மீள் காப்புறுதி தவணைக் கட்டணம் மற்றும் பெறப்படாத தவணைக் கட்டணங் களுக்கான அதிகரிப்பு மற்றும் குறைவு என்பனவற்றுக்கென சீராக்கம் செய்யப்பட்ட மொத்த எழுதப்பட்ட தவணைக் கட்டணம்.

**தேறிய செலவு விகிதம் - பொது காப்புறுதி வர்த்தகம்**

கையகப்படுத்தல் மற்றும் நிர்வாகச் செலவுகளைக் குறிப்பிடுவதற்கென காப்புறுதிக் கம்பனிகளினால் பயன் படுத்தப்பட்டு வரும் ஒரு வழிமுறை. (உதாரணம், தரகுக் கட்டணம், வரிகள், ஆளணி, விற்பனை மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்).

**தேறிய இழப்பு விகிதம் - பொது காப்புறுதி வர்த்தகம்**

பெறப்பட்ட தேறிய தவணைக் கட்டண வருமானத்துடன் நிகர கோரிக்கைகளை சம்பந்தப்படுத்திப் பார்ப்பதற்கென காப்புறுதி வழங்குநர்களினால் பயன்படுத்த பட்டு வரும் ஒரு வழிமுறை. (அதாவது, சம்பந்தப்பட்ட மீள் காப்புறுதிகளைக் கழித்த பின்னர்).

**பங்கேற்காத காப்புறுதிப்பத்திரம் - நீண்டகால காப்புறுதி வர்த்தகம்**

சம்பந்தப்பட்ட ஆயுள் காப்பீட்டு நிதியத்தின் மிகையைப் பகிர்ந்து கொள்வதற்கு பத்திரதாரர்கள் ஒப்பந்த ரீதியான உரித்தினைக் கொண்டிராத ஆயுள் காப்புறுதி வர்த்தகம்.

**காப்புறுதிப் பத்திரம்**

காப்புறுதி ஒப்பந்தம் ஒன்றின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் என்பனவற்றை கொண்டுள்ள ஓர் ஆவணம்.

**காப்புறுதி பத்திர வைப்பாளர்**

காப்புறுதி வழங்குநருடனான ஒப்பந்தத் தைப் பெற்றுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத் தில் காப்புறுதிப் பத்திரத்தை அச்சமயத்தில் சட்டபூர்வமாக வைத்திருக்கும் ஒரு நபர்.

**காப்பீட்டு பத்திரக் கடன்**

நீண்டகால காப்புறுதிப் பத்திரத்தின் ஒப்படைப்புப் பெறுமதியைப் பிணையாக கொண்டு காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதி வைப்பாளர் ஒருவருக்கு வழங்கும் கடன். இக்கடன் காப்புறதிப் பத்திரத்தின் தற்போதைய ஒப்படைப்புப் பெறுமதியின் குறிப்பிட்டதொரு சதவீதத் திற்கு பொதுவாக வரையறுக்கப் பட்டிருப்பதுடன், இத்தகைய கடன்கள் மீது வட்டி அறவிடப்படுகின்றன.

**முதன்மை காப்புறுதி வழங்குநர்**

ஒரு காப்புறுதி தவணைக் கட்டணத்திற்குப் பதிலாக, இடர்களைப் பொறுப் பேற்பதுடன், காப்புறுதிப் பத்திரத்தை வைத்திருப்பவருடன் ஒரு நேரடி ஒப்பந்த ரீதியான தொடர்பினை வைத்திருக்கும் காப்புறுதிக் கம்பனிகள் (தனியார், தனி நபர், நிறுவனம், அல்லது ஸ்தாபனம்)

**செயற்பாட்டு இலாபம்**

முதலீட்டு வருமானம், தேறிய மூலதன ஆதாயங்கள் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொண்ட பின்னர், பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் இலாபம்.

**மீள் காப்புறுதி**

ஒரு தரப்பு (மீள் காப்புறுதி வழங்குநர்) ஒரு தவணைக் கட்டணத்தைக் கருத்திற்கொண்டு, மற்றொரு தரப்புக்கு (ஆரம்ப காப்புறுதி வழங்குநருக்கு) மீள் காப்புறுதிப்பத்திரம் அல்லது பத்திரங்களின் கீழ் ஏற்கப்பட்டிருக்கும் பொறுப்பின் ஒரு பாகத்திற்கு எதிராக அல்லது மொத்தப் பொறுப்புக்கும் எதிராக நட்ட உத்தரவாதம் வழங்குவதற்கு உடன்படும் ஓர் ஏற்பாடு.

**மீள் காப்புறுதி தரகுக் கட்டணம்**

மீள் காப்புறுதி வழங்குநர் ஒருவருக்குச் செலுத்தப்பட்ட அல்லது செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணங்கள் தொடர்பாக கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தரகுக் கட்டணம்.

**உள்நோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர் களை ஏற்றுக்கொள்ளல்.

**வெளிநோக்கிய மீள் காப்புறுதி**

மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ் இடர்களை வைத்தல்.

**மீள் காப்புறுதி தரகு கட்டண இலாபம்**

மீள் காப்புறுதி வழங்குநர்களினால் மீள் காப்புறுதி ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்ட (மீள் காப்புறுதி ஒப்பந்தத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு) தேறிய இலாபத்தின் அடிப்படையில், மீள் காப்புறுதி செய்தவருக்கு (ஆரம்பக் காப்புறுதி வழங்குநருக்கு) கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய மீள் காப்புறுதி மற்றும் தரகுக் கட்டணம்.

**பிடித்து வைத்திருத்தல்**

காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்குநர் மீள் காப்புறுதி வழங்காது இருக்கும் பொறுப்பேற்றுக் கொண்ட இடரின் ஒரு பகுதி. அதாவது, சொந்தக் கணக்கிற்கென வைத்துக்கொள்ளப்பட்ட தேறிய தொகை.

**கடன் தீர் எல்லை - நீண்டகால காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடையிலான வித்தியாசம். இது 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழிற்துறையை ஒழுங்குமுறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் பிரகாரம், (நீண்டகால காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கும். அளவில் கீழ் நீண்டகால காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**கடன் தீர் எல்லை - பொதுக் காப்புறுதி**

சொத்துக்களின் பெறுமதி மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி என்பனவற்றுக்கு இடை யிலான வித்தியாசம். இது, 2000 ஆவது ஆண்டின் 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில்துறையை ஒழுங்கு முறைப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் உருவாக்கப்பட்ட 2004 ஆவது விதிகளின் பிரகாரம் (பொதுக் காப்புறுதி) கடன் தீர் எல்லை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருக்கும் அளவின் கீழ் பொதுக் காப்புறுதித் தொழிலை மேற்கொண்டு வரும் காப்புறுதி வழங்குநர்களினால் பராமரிக்கப்படுவது.

**ஒப்படைப்புப் பெறுமதி**

ஒரு காப்புறுதிப் பத்திரம் அதன் கால எல்லை முதிர்ச்சியடைவதற்கு முன்னர் முடிவடையும் போது ஆயுள் காப்புறுதி தொடர்பாக காப்புறுதி வழங்குநர் ஒருவர் காப்புறுதிப் பத்திரதாரருக்குச் செலுத்த வேண்டிய தொகை. ஒப்படைப்புப் பெறுமதி ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, ஒரு காப்புறுதிப் பத்திரம் குறைந்தது மூன்று வருடகாலப் பகுதிக்கு தொடர்ச்சியாக வலுவில் வந்திருத்தல் வேண்டும்.

**இலாபத்திற்கான நட்ட உத்தரவாதம்**

இது முதலீட்டு வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பனவற்றைக் கவனத்திற் கொள்ளாது பொதுக் காப்புறுதி வர்த்தகத்தை மேற்கொள்வதன் மூலம் உருவாக்கப்படும் தொழில்சார் இலாபமாகும்.

**பெற்றுக்கொள்ளப்படாத தவணைக் கட்டணம்**

இது, கிடைக்க வேண்டிய தொகைகள் என ஏற்கனவே கணக்குகளில் பதிவு செய்யப் பட்டிருந்த போதிலும். ஐந்தொகைத் திகதியை அடுத்து வரும் காலகட்டத்துடன் சம்பந்தப்பட்ட தவணைக் கட்டணங்களின் ஒரு பகுதியைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.

**வருவாய் ஈட்டாத தவணைகட்டன ஒதுக்கு**

ஈட்டப்படாத தவணைக் கட்டண ஒதுக்கு ஏற்கனவே வலுவில் இருந்து வரும் காப்புறுதிப் பத்திரங்களின் கீழ் எதிர்காலத்தில் தோன்றக்கூடிய கோரிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு, பொதுக் காப்புறுதி வழங்குநர் ஒருவரினால் பராமரிக்கப்படும் ஒரு நிதியம்.

**காலாவதியாகாத இடர் ஒதுக்கு**

நிதியாண்டின் முடிவின் பின்னர், அத் திகதிக்கு முன்னர் முடிவாக்கப்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து தோன்றக்கூடிய கோரிக்கைகள் மற்றும் செலவுகள் என்பனவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதியை மதிப்பீடு செய்த தொகைகள். அவற்றின் மதிப்பிடப்பட்ட பெறுமதி பெற்றுக் கொள்ளப்படாத தவணைக் கட்டணங்களுக்கான ஒதுக்கினை மதிப்பிட்டுக் காணப்படும் நிலை (ஒத்திவைக்கப்பட்ட எவையேனும் கையகப் படுத்தப்பட்ட செலவுகளைக் கழித்த பின்னர்)

# பொதுத் தகவல்கள்

### அலுவலக முகவரி
தளம் 11, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக நிலையம்
கொழும்பு 1
இலங்கை
தொலைபேசி : +94 11 2396184-9
தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : infor@ibsl.gov.lk
இணையத்தளம் : www.ibsl.gov.lk

### சட்டபூர்வ நிலைமை
2000 ஆம் ஆண்டு 43 ஆம் இலக்க காப்புறுதித் தொழில் ஒழுங்கமைப்புச் சட்டத்தின் பிரகாரம் இலங்கையில் நியம சபையாக நிறுவப்பட்டது.
2001 பெப்ரவரி 23 ஆம் திகதிய 1172/27 ஆம் இலக்க அரசாங்க வர்தமானி அறிவித்தலை அடுத்து 2001 மார்ச் 01 ஆம் திகதி நடவடிக்கைகளை மேற்கொண்ட சட்டபூர்வமான அந்தஸ்தைக் கொண்ட நிறுவனம் ஆக்கப்பட்டது.

### சபையின் நோக்கமும் பொறுப்புக்களும்
காப்புறுதியாளர்களினதும், உத்தேச காப்புறுதியாளர்களினதும் நன்மைகளைப் பாதுகாக்கும் நோக்கத்தில், இலங்கையில் காப்புறுதித் தொழிலை நேர்மையாகவும், தொழில்சார் அடிப்படையிலும், விவேகமாகவும், இலங்கையில் காப்புறுதித் தொழில் நடத்தப்படுவதை உறுதிப்படுத்துவது சபையின் நோக்கமும், பொறுப்புக்களுமாகும்.

### கணக்கீட்டு ஆண்டு
டிசம்பர் 31

### கணக்காய்வாளர்கள்
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

### வங்கியாளர்கள்
இலங்கை வங்கி

### கணக்காய்வுக் குழு
திரு. எஸ். ஆர். ஆட்டிகல - தலைவர்
திரு. சமந்த குமாரசிங்க
திரு. நளின் ஆட்டிகல

INSURANCE
BOARD OF SRI LANKA

தளம் 11, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக நிலையம்
கொழும்பு 1
இலங்கை

தொலைபேசி : +94 11 2396184-9
தொலைநகல் : +94 11 2396190
மின்னஞ்சல் : info@ibsl.gov.lk
**இணையத்தளம் : www.ibsl.gov.lk**

Designed & Printed by Ceylon Printers PLC